சுபமஸ்து.

# கிராமமுன்சீபுச்சட்டம்.

சென்னபட்டணத்து இராஜதானியோடுசேர்ந்த தேசங்களில்

சிவில், மேஜஸ்திரேட்டு, ரிவின்யூ அதிகாரங்களுள்ள

கிராமமுன்சீபுகள்

விவகாரங்களை

விசாரித்துத் தீர்மானிக்கும்விஷயத்தில்

அவர்கள் நடந்துகொள்ளவேண்டியதற்கு

ஆவசியகமான

சட்டங்கள், ஆக்ட்டுகள், உத்தரவுகள்,

போலீசு சர்க்கியூலர்உத்தரவு முதலானவைகள்

**வ - கீ - இராகவாசாரியரவர்களால்**

ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு;

**பூ - வேங்கடராவ் அவர்களால்**

அவரது

வர்த்தமானதரங்கிணீ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.

௧௮௬௯௵ அக்டோபர்௴

# முகவுரை.

இந்த இராஜதானியைச்சேர்ந்த ஜில்லாக்களில் வஸிக்கும் ஜனங்கள் சுவல்பலாவாதேவி சண்டை சச்சரவுமுதலிய சில்லரை விவகாரங்களைக்குறித்து மேலான அதிகாரிகளிடத்துக்குப்போய் வியாச்சியமாடுவதனாலே பலவிதமாகிய சங்கடங்களுண்டாகுமென்று துரைத்தனத்தார் ஆலோசனைசெய்து அந்தந்தகிராமங்களுக்கு கிராமஅதிகாரி (என்றால் கிராமமுனிசீப்பு) ஒருவரைநேமித்து, ரொக்கலாவாதேவியோடுசேர்ந்த -௰- ரூபாய்க்குட்பட்ட தொகையுள்ள வியாச்சியங்களை சொந்தமாகவும், வாதிப்பிரதிவாதிகளின் சம்மதியின்பேரில் நூறுரூபாய்க்கு உட்பட்ட வியாச்சியங்களை தர்மகர்த்தராகவும்பிடித்து தீர்ப்புசெய்யவும்; தொகை நிஷ்கர்ஷையில்லாத ஜங்கமாஸ்தியைக்குறித்த வியாச்சியங்களைத் தீர்மானிக்கும்பொருட்டு பஞ்சாயத்தாரைநேமிப்பதற்கும், ஒருரூபாய்க்குட்பட்ட சுவல்பசுவபாவமுள்ள திருட்டுத்தனங்களை விசாரணைசெய்து குற்றவாளிகளைத் தெண்டிக்கவும்; ரிவினியூ இலாகா சில்லரைவியாச்சியங்களை பயிசல்செய்யவும்; கிராமபேரீஜை கிஸ்திபந்திப்படிக்கு வசூல்செய்து தாலூகாவுக்கு இருசால்செய்யவும்; சாகுபடிவகைரா கணக்குகளின் வாஸ்தவத்தை தெரிவிக்கவும்; கிராமாபிவிருத்தியைக்குறித்தும், ஜனங்களின் க்ஷேமங்களைக்குறித்தும் தங்களுக்குள்ள அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறார்கள்.

௨. இப்படிப்பட்ட உத்தரவாதமுள்ள கிராமாதிகாரிகளில் அனேகர் தங்கள்உத்தியோகத்தின் கிரமமிப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளாமலும் தங்களுக்காக ஜாரிசெய்யப்பட்டிருக்கிற சட்டங்களும் உத்தரவுகளும் இன்னின்னதென்று விசாரித்து அவைகளிலுள்ள தாத்பரியங்களை அறிந்துகொள்ளாமலும் கிராம அதிகாரமாத்திரம் கிடைத்ததேயென்கிற சந்தோஷத்தோடு குடிகளுக்கு சர்க்காராருடையமூலமாய் ரயாத்து செய்யவேண்டியவிதம் இன்னதென்று தெரிந்துகொள்ளாமலுமிருப்பதனாலே குடிகளுக்கு சுலபமாய் நியாயம்கிடைப்பது துர்லபமாயிருக்கிறபடியினாலே ஷை குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு கிராமமுனிசீப்புகளுக்கு வேண்டியசட்டங்களையும் ஆக்ட்டுகளையும், உத்தரவுமுதலியவைகளையும் ஒன்றாய்ச்சேர்த்து "கிராமமுனிசீப்புசட்டம்" என்னும் பெயரினாலே இந்தபுஸ்தகம் பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

## முகவுரை.

ஆகையினாலே பிரதிகிராமமுனிசீப்பும் இந்தபுஸ்தகத்தை வாங்கிவாசித்து தங்களுக்குள்ள அதிகாரமிப்படிப்பட்டதென்று தெரிந்துகொண்டு - தன்கிராமசரகத்துக்குள் விவகரிக்கவேண்டியதுமல்லாமல் வாரந்தோறும் பிரசித்தஞ்செய்துவரும் ஜில்லாகேஜட்டுகளை அழைப்பித்துக்கொண்டு அப்போதைக்கப்போது ஜாரிசெய்யப்படும் உத்தரவுமுதலாகியதுகளை தெரிந்துகொண்டால் தன் அதிகாரத்தைக் கிரமமாய்ச்செலுத்துவதற்கு வேண்டியசாமார்த்தியங்களை சுலபமாய் அடையலாமென்று தெரிவிக்கலாயிற்று.

௧௮௬௫ ௵
அக்டோபர் ௴
௨௨.

# அட்டவணை.


| | | பக்கம் |
|---|---|---|
| ௧௮௧௬ ௵த்து ௪ - வதுசட்டம். | பத்துரூபாயிக்கு உட்பட்டரொக்கலாவாதேவியோடுசேர்ந்த வியாச்சியங்களை சொந்தமாகவும், வாதிப் பிரதிவாதிகளின் சம்மதியின்பேரில் நூறுரூபாய்க்கு உள்பட்ட ரொக்கலாவாதேவியோடு சேர்ந்த வியாச்சியங்களை தர்மகர்த்தாவாகவுமிருந்து கிராமமுனிசிபுகள் விசாரணைசெய்து தீர்மானிப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டது. | முதல் - வரைக்கும். ௧ - ௨0. |
| சதரதாலத்துக் கோர்ட்டு உத்தரவுகள். | கிராமமுனிசிபுகள் தமக்குள்ள அதிகாரத்தை செலுத்தும்விஷயத்தில் நடந்துக்கொள்ள வேண்டியதற்காக செய்யப்பட்டதுகள். | ௨0 - ௨௧. |
| ௧௮௧௬ ௵த்து ௫ - வதுசட்டம். | கிராமமுனிசிபுகளும் பஞ்சாயத்தாரும் இவ்வளவென்று நிபந்தனையில்லாமல் அசையும்பொருளைக்குறித்தவியாச்சியங்களை பைசல்செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்டது. | ௨௧ - ௩௫. |
| ௧௮௧௬ ௵த்து ௧௨ - வதுசட்டம். | கிராமபஞ்சாயத்தாரிடத்திலும் தாலூகா பஞ்சாயத்தாரிடத்திலும், நிலங்களைக் குறித்தாவது பயிர்களைக்குறித்தாவது எல்லைத்தகராரைக்குறித்தாவது தண்ணீர்பாய்ச்சுகிறதைக் குறித்தாவதுண்டாகும்விவாதங்களை கலெக்டர் அனுப்பி பரிஷ்காரஞ்செய்யும்படிக்கு ஷை பஞ்சாயத்தாருக்கு அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிற சட்டம். | ௩௫ - ௪௩. |
| ௧௮௧௬ ௵த்து ௧௧ - வதுசட்டம். | அடிபிடிசண்டைமுதலிய சில்லரைவியாச்சியங்களில் கிராமமுனிசிபுகள் குற்றவாளிகளைப்பிடித்து விசாரணைசெய்யும்படி ஏற்படுத்தப்பட்டது. | ௪௩ - ௪௬. |
| விதிகள். | கிராமமுனிசிபுகள் நடந்துகொள்ளவேண்டியதற்காக மதிராஸ் ஜில்லா கலெக்ட்டரவர்களால் ஏற்படுத்தப்பட்ட விதிகள். | ௪௬ - ௫௨. |
| பவுஜ்தாரி கோர்ட்டாருடைய உத்தரவுகள். | கிராமமுனிசிபுகளுக்கு ஸம்பந்தப்படுகிறவளாயில். | ௫௨ - ௫௩. |

# அட்டவணை.


| | | பக்கம். முதல் - வரைக்கும். |
|---|---|---|
| மொப்சல் போலீசு உத்தரவுகள். | நெம்பர் - ௧ - ௨ - ௫ - ௧௩ - ௧௫ - ௧௭ - ௧௮ - ௨௧ - ௨௫ - ௨௬ - ௨௭ - ௩௮ - ௪௪ - ௫௧ - ௭௨ - ௮௨ - ௮௩ - ௮௫ - ௮௭ - ௮௯ - ௯௦ - ௯௫ - ௯௮ - ௧௦௧ - ௧௦௨ - ௧௦௩ - ௧௦௭ - ௧௧௩ - ௧௨௯ - ௧௩௨ - ௧௩௩ - ௧௩௬ - ௧௪௫ - ௧௫௫ - ௧௫௬ - ௧௫௭ - ௧௬௭ - ௧௭௦ - ௧௭௪ - ௧௮௬ - ௧௯௦ - ௧௯௧ - ௧௯௬ - ௧௯௮ - ௨௦௪ - ௨௦௮ - ௨௧௩ - ௨௧௪ - ௨௨௫ - ௨௨௬ - ௨௨௯ - ௨௩௩ - ௨௪௩ - ௨௪௪ - ௨௪௭. | ௫௩ - ௧௦௮. |
| போலீசு சர்க்கியுலர் மிமோராண்டம். | நெம்பர் - ௬௩ - ௨௭௨ - ௨௭௩ - ௧௮௬௩ ௵த்திய - நெம்பர் - ௧௦௫௮ - ௧௭௬ - ௧௮௬ - ௨௪௯ - ௩௦௫ - ௪௮௯ - ௪௯௫ - ௩௧௧ - ௫௧௧ - ௫௬௫ - ௬௩௪ - ௬௧௭ - ௭௧௭ - ௮௨௩ - ௧௮௬௫ ௵த்தி௮௧ - வது - நம்பர். | ௧௦௮ - ௧௨௪. |
| தோப்புரூல்கள். | தோப்புமரங்கள் வைக்கவேண்டியதைக்குறித்த நிபந்தனைகள். | ௧௨௪ - ௧௨௭. |
| ௧௮௫௭ ௵த்து ௩ - வது ஆக்ட்டு. | பட்டியாய்த்திரிந்துகொண்டுப யிர்களையும் மற்றவிளைவுகளையும் சேதப்படுத்துகிற கால்நடைகளைப்பிடித்து தெண்டிப்பதற்காக உண்டாகியது. | ௧௨௭ - ௧௩௮. |
| ௧௮௬௧ ௵த்து ௨௨ - வது ஆக்ட்டு. | ஷை | ௧௩௮ - ௧௪௦. |
| ௧௮௫௮ ௵த்து ௧ - வது ஆக்ட்டு. | வெள்ளத்தினால் சேதம்நேரிடவொட்டாமல் ஏரி கால்வாய் அணைக்கட்டுமுதலியதின் வேலைகளை கட்டாயம்செய்து செய்விப்பதற்காக உண்டாகியது. | ௧௪௦ - ௧௪௩. |
| ௧௮௫௯ ௵த்து ௧௪ - வது ஆக்ட்டு. | வியாச்சியங்களை இவ்வளவுகாலத்திற்குள்ளாகக் கோர்ட்டுக்குக்கொண்டுவரவேணுமென்பதைக்குறித்துஉண்டாகிய காலநிர்ணயச்சட்டம். | ௧௪௪ - ௧௫௮. |
| ௧௮௬௪ ௵த்து ௨ - வது ஆக்ட்டு. | சர்க்கார் தீர்வைபாக்கியை சீராய் வசூலசெய்யும்படி ஏற்படுத்தப்பட்டது. | ௧௫௮ - ௧௭௯. |

# அட்டவணை.


| | | பக்கம் முதல் - வரைக்கும். |
|---|---|---|
| ௧௮௯௪ ௵த்து ௪ - வது ஆக்ட்டு. | கிராம ஊழியமேனாக்குவதிலாய் மேனாத்திர்வையை - வாங்கும்படி செய்வதற்கான ஆக்ட்டு. | ௧௭௯ - ௧௮௩. |
| ௧௮௩௨ ௵த்து ௧௧ - வது சட்டம். | நிக்ஷேபம் அகப்படும்போது அதைக்குறித்து நடந்துகொள்ள வேண்டிய நிபந்தனை. | ௧௮௩ - ௧௮௭. |
| ௧௮௯௪ ௵த்து ௧௬ - வது ஆக்ட்டைக்திருத்த விளம்பரம். | தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர்செய்வதைப்பற்றி ஏற்படுத்திய நிபந்தனைகள். | ௧௮௭ - ௧௯௧. |
| ௧௮௯௫ ௵த்து ஜூலைமீ ௧௧௨ விளம்பரம். | தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர்செய்யவேண்டியதைக்குறித்து ஏற்படுத்தப்பட்ட கட்டணங்கள். | ௧௯௧ - ௧௯௪. |


## முத்திரைக்கடிதாசுவிஷயமான ஸ்ட்டாம்பு ஆக்ட்டு.


| | | |
|---|---|---|
| ௧௮௯௨ ௵த்திய ௧0 - வது ஆக்ட்டின் சங்கிரகம். | உடம்படிக்கை. | ௧௯௪ - ௧௯௫. |
| | உண்டி - செக்கு - பிராமிசொரிநோட் - அசையும்பொருளின் சொதுவைபத்திரம். | ௧௯௫ - ௧௯௬. |
| | பாண்டு - கடன்பத்திரம் - சொதுவைபத்திரம். | ௧௯௬ - ௧௯௭. |
| | விக்கிரயபத்திரம் - தானசாசனம் - சீதனபத்திரம் - பரிவர்த்தனை - நிரந்தாமாய் அனுபவிக்கும்படி எழுதிக்கொடுக்கும் குத்தகைச்சீட்டு. | ௧௯௭ - ௧௯௮. |
| | கூட்டுவியாபாரம். | ௧௯௮ - |
| | குத்தகை வாடகைச்சீட்டு அதற்கு எதிரிடை. | ௧௯௮ - ௧௯௯. |
| | பாரீகத்து. | ௨00 - |
| | ரசீது. | ௨00 - ௨0௪. |
| | முக்த்தியார்நாமா - வகாலத்துநாமா. | ௨0௧ - |
| பயிசல் சாபிதாவுக்கு நமுனா. | சிவில் வியாச்சியங்களைக்குறித்தது. | ௨0௧ - |
| ஷை. | மேஜிஸ்திரேட்டு விவகாரங்களைக்குறித்தது. | ௨0௨ - |

கிராமமுன்சீபுகளைக்

குறித்த

# ௲௮௱௰௬ வருஷத்து -௪- வது சட்டம்.

~~~~~~~~~~~~~~~

பீடிகை.

கிராம பெரியதனக்காரர்கள் தங்கள் தங்கள் கிராமங்களிலே இவ்வளவென்றுசொல்லப்படுந் தொகையையுடைய பணம் முதலான அசைக்கப்படுஞ்சொத்தைக்குறித்த வியாச்சியங்களைவிசாரித்துத் தீர்ப்பதற்கு முன்சீபுஅதிகாரம் பெற்றவர்களென்று தெரியப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய அதிகாரவரம்பு இவ்வளவென்று விவரித்துக்காட்டுகிறதற்காகவும்விதிக்கப்பட்டசட்டம். இது சாலிவாகனசகாப்தம் ௲எ௱௩௰அ-வது தாது வருஷம் வைகாசிமீ ௫உக்கும் இஜரி ௲௨௱௩௰௧-வது வருஷம் ஜமாதி ஒசானிமீ ௰௮உக்குஞ்சரியான ௲௮௱௰௬ வருஷம் மேமீ ௰௭வ சென்னபட்டணத்துக்கோட்டை ஆலோசனைசபையில் கவர்னரவர்களாலே விதிக்கப்பட்டது.

க.—ஜில்லா நியாயசபைக்காரியங்களைக் குறைவுபடுத்துகிறதற்காகவும் சிறுதொகை வியாச்சியச்செலவுகளை சுலுவுபடுத்துகிறதற்காகவும் அந்தவியாச்சியஞ் சீக்கிரத்தில் தீர்க்கப்படும்படி உதவிசெய்வதற்காகவும், விவகாரத்திலே சம்பந்தப்பட்டவர்கள் தாங்களிருக்கு மிடத்தைவிட்டுப்போய் நெடுநாள் காத்திருக்கும் பிரயாசம் அவர்களுக்கு உண்டாகாம லிருப்பதற்காகவும், சென்னபட்டணத்து அதிகாரத்துக்குள்பட்ட தேசங்களிலே உறுதியாய்நடக்கும்படி இதற்கடியில்வருகிற நிபந்தனைகளை ஆலோசனைசபையில் கவர்னரவர்கள் நியமித்தார்கள்.

உ. கிராமங்களிலிருக்கும் பெரியதனக்காரர்கள் தங்களுடைய பெரியதனத்தினாலே தங்கள் கிராமங்களுக்கு முன்சீபு உத்தியோகஸ்தர்களாவார்கள்.
~~~~~~~~~~~~~~~

௫. முதலாவது உட்பிரிவு. எந்தகிராமமாகிலும் சாசுவித பேரீஜாயாவது, குத்தகையாயாவது, துரைத்தனத்தார் வசமாயாவதிருந்து அந்தகிராமத்திலே பட்டேல் - ரெட்டி - 'பெத்தகாபு - எசமானன் - குத்தகைக்காரன் - மற்றும் இப்படியான பெயர்பெற்றவர்கள் ஒருவனுக்கதிகமாயிருந்தால் - அப்போது எவன் அந்த கிராமத்து வரிப்பணத்தை அறுவிட்டுச் செலுத்துகிறவனாகவும் அந்தகிராமத்து ஊழியக்காரர் தனக்குட்பட்டு நடக்கத்தக்கவனாகவுமிருக்கிறானோ அவனே அந்தகிராமத்துப் பெரியதனக்காரனென்று எண்ணப்படுவான். எவனொருவன் அந்தகிராமத்திலே வழக்கமாய்க்குடியிராதவனோ அவன் அந்தக் கிராமத்துப்பெரியதனஞ் செய்யத்தக்கவனாகான். யாதொருகிராமத்திலே குத்தகைக்காரர்களி லொருவன் வழக்கமாய்க்குடியிருப்பானேயாகில் அவனே அந்தகிராமத்துக்குப் பெரியதனக்காரனென்று எண்ணப்படத்தக்கவனாவான். யாதொருகிராமத்திலே குத்தகைக்காரன் குடியிராமற்போனால், அவனுக்குட்பட்டிருக்கிற உட்குத்தகைக்காரனாவது கிராமகாரியம் பார்க்கிறவனாவது அந்தகிராமத்துக்குப் பெரியதனக்காரனென்றெண்ணப்படத்தக்கவனாவான்.

இரண்டாவது உட்பிரிவு. எப்பொழுதானாலும் ஒருவேளை ஒருபட்டாவிலே கிராமப்பெரியதனக்காரனென்றாவது - குத்தகைக்காரனென்றாவது - இருவருடையபெயராவது இருவருக்கதிகமானவர்களுடைய பெயராகிலுங் கர்ணப்பட் டிருப்பதினாலாகிலும், மற்றும் யாதொரு ஏதுவினாலேயாகிலும் - பெரியதனக்காரனாகிறவன் எவனென்று சந்தேகம்வந்தால், அப்பொழுது கலெக்ட்டர் ஒருவனைதெரிந்தெடுத்து நியமப்படுத்தி அவனுக்கு அந்தஊர் பெரியதனமாகிய அதிகாரஞ்செலுத்துகிறதற்குப் பட்டாகொடுக்கவேண்டியது.

௬. முதலாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் உத்தியோகத்துக்குச் சத்தியஞ்செய்யவேண்டுவதில்லை.

இரண்டாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் தாங்கள் செலுத்தும் முன்சீபு அதிகார விஷயத்தைக்குறித்துத் தாலூகா முன்சீபுமுன்பாக உத்தரவாதஞ் செய்யும்பொருட்டாய் எந்தவிதத்திலும் வரவழைக்கப்படத்தக்கவர்களாகார்கள்.

மூன்றாவது உட்பிரிவு. * கிராமமுன்சீபுகள் தங்கள்பேரிலே லஞ்சம்முதலான. கெட்டகுற்றங்களைச் சுமத்துகிறதினாலேயும், இந்தச்சட்டப்படிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினாலே இவ்வளவென்று விதித்திருக்கிறதற்கு அதிகமாய் அபராதம் வாங்குகிறதினாலேயும், சிறைக்கூடத்திலே வைக்கிறதற்குச்சொல்லியிருக்கிற காலநியமத்துக்கு அதிகமாய் காவலிலே வைக்கிறதினாலேயும், ஜில்லாநியாயாதிபதிகள் முன்பாக உத்தரவாதம் பண்ணும்பொருட்டாய் வரவழைக்கப்படத் தக்கவர்களேயல்லாமல், மற்றைப்படி யாதொருயேதுவைக் குறித்தாகிலும் வரவழைக்கப்படத்தக்கவர்களாகார்கள்.

௫. முதலாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் தங்கள் முன்பாகதொகையிலே பத்து ஆர்க்காட்டு ரூபாயிக்காவது மதிப்பிலே பத்து ஆர்க்காட்டுரூபாயிக்கு மேற்படாத அசைக்கப்படுஞ்சொத்தைக் குறித்தாவது கொண்டுவரப்படுஞ் சகலவியாச்சியங்களையும் தங்களுடைய சொந்த அதிகாரத்தினாலே கேட்டுவிசாரித்துத் தீர்ப்புசெய்யலாம். அதற்குமேல் அப்பீலில்லை.

இரண்டாவது உட்பிரிவு, ஆனால் இதற்குமுந்தின உட்பிரிவில் கிராமமுன்சீபுகளாலே தீர்மானிக்கும்படி சொல்லியிருக்கப்பட்ட வியாச்சியங்கள் - ௲அ௱௨ - ம் ௵த்து-௨ - வது சட்டம் ௰அ - வது பிரிவு ௪ - வது உட்பிரிவில் கண்ட நிபந்தனையின்படிக்கு வியாச்சியமூலம் † ௰௨ ௵த்துக்குள்ளாயிருந்தால் அங்கிகரிக்க வேண்டியது - அந்த ௰௨ ௵த்துக்கு மேற்பட்டகாலமாயிருந்தால் அடிக்கடி வாதிகேட்டதற்கு பிரதிவாதி தருகிறேனென்று சொன்னதாயாவது, அல்லது அந்தவாதியானவன் அந்த ௰௨ ௵த்திய கெடுவுக்குள்ளே பிரதிவாதிபேரில் எந்த நியாயஸ்தலத்திலாவது பிரியாதுசெய்து அந்த பிரியாது இவ்விதகாரணத்தினாலே நடத்தக் கூடாமையாயிருந்ததென்றாவது, அல்லது பாலியனாயிருந்தது முதலான

---

* ௲அ௱௰௯ ௵ மார்ச்சி௴ ௨௰யுள்ள சதர்தாலத்துக்கோர்ட்டு சர்க்கியுலர் உத்தரவு.

† காலநிஷ்கர்ஷை நிபந்தனையைப்பற்றி ௲அ௱௫௰௯ ௵த்திய - ௰௪ - வது ஆக்ட்டின்படி கணக்குசெய்யவேண்டியது. ஷை ஆக்ட்டின் - ௧ - வதுபிரிவில் கடன் வகைறாக்களைப்பற்றி - ௩ - வருஷகெடுவு நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறது.

ஹேதுக்களினாலே நியாயத்தைப் பெற்றுக்கொள்ள திறமையில்லாதவனா யிருந்தானென்றாவது இதுமுதலாகிய ஒப்புக்கொள்ளும்படியான நல்ல தகுதியான காரணத்தினாலே ருசுவு பண்ணப்பட்டாலொழிய அங்கீகரிக்கக்கூடாது.

௬. எந்த ஹேதுவைப்பற்றியானாலும் ஒருவனுக்கு மற்றொருவனாலே நேரிட்ட சரீரதுன்பம் மானநஷ்டம் இதுகளைக்குறித்த வியாச்சியங்களை கிராமமுன்சீபுகள் அங்கிகரிக்கவும் விசாரிக்கவும் தீர்ப்புசெய்யவுங்கூடாது.

௭. கிராமமுன்சீப்புகள் யாதொரு விவகாரத்திலே தாங்களாவது தங்களுக்கு உட்பட்ட ஊழியக்காரர்களாவது சம்பந்தப்பட்டிருக்கிற வியாச்சியத்தில் பிரவேசித்து விசாரிக்கவுந் தீர்ப்புசெய்யவுங்கூடாது.

௮. கிராமமுன்சீபுகள் தங்களுடைய எல்லைக்குள்ளே நிலையாய்க்குடியிராதவன்பேரில் ஒருவன் பிரியாதுகொண்டுவந்தால் அதை அங்கீகரித்து விசாரித்துத் தீர்ப்புசெய்யக்கூடாது.

௯. முதலாவது உட்பிரிவு. வாதிகளும் பிரதிவாதிகளும் தங்களுடைய வியாச்சியங்களை கிராமமுன்சீபுக்கு முன்பாகப்பேசுவதற்கு தங்களுடைய பந்துசனமா யிருக்கிறவனையாவது, தங்களுக்குட்பட்டிருக்கிற காரியஸ்தனையாவது, தங்களை அனுசரித்துக்கொண் டிருக்கிறவனையாவது, இவன் எனக்கு இன்னவிதத்தினாலே சம்பந்தப்பட்டவனென்றும் இவன் இன்ன காரியத்தைச் செய்கிறதற்காக ஏற்படுத்தப்பட்டவ னென்றும் வகாலத்துநாமா எழுதிக்கொடுத்து வக்கீலாக ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டாவது உட்பிரிவு இதற்குமுந்தின உட்பிரிவில் இப்படிப்பட்டதென்று விவரித்துச்சொல்லிய வகாலத்துநாமாவை எவனாவது கொண்டுவந்து தங்களுக்குக் காண்பிக்காவிட்டால் அவனை ஒருவருடைய வியாச்சியத்தை பேசும்படி கிராம்முன்சீபுகள் எந்தவிதத்தினாலும் வக்கிலாக ஒப்புக்கொள்ளக்கூடாது.

௧௦. முதலாவது உட்பிரிவு. விவகாரங்களை அங்கீகரிக்கிறதும் விசாரிக்கிறதும் தீர்ப்புசெய்கிறதும் ஆகிய இந்தமூன்

றுவகை காரியங்களிலேயும், கிராமக்கணக்கனுவது - தற்காலத்துக்கு கணக்கனுடைய வேலையைப்பார்த்து வருகிறவனுவது - கிராமமுன்சீபுகளுக்கு ஒத்தாசையாக இருந்துகொண்டுவியாச்சியத்தில் நடக்கிற விசாரணைவிவரங்களை எழுதுகிறதும்வேண்டும்பொழுது தனக்குத்தோற்றுகிற யோசனைகளை முன்சீபுகளுக்குச் சொல்லுகிறதுமாகிய இந்தகாரியங்களை தன்னுடைய காரியத்தில் இதுவும் ஒருகாரியமென்றெண்ணி செய்யவேண்டியது; ஆனால் முன்சீபுகளுடைய அபிப்பிராயம்கணக்கனுடைய யோசனைக்குச் சரிப்பட்டிருந்தாலும் சரிப்படாமலிருந்தாலும் அந்தமுன்சீபுகள் தங்களுடைய யுக்தப்படியே விவகாரத்தைத் தீர்ப்புசெய்யவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகளுக்கு முன்பாகக்கொண்டுவரப்படும் சகலவியாச்சியங்களையும் அந்தவியாச்சியங்கள்வருகிற கிரமப்பிரகாரம் கணக்கர்கள் தஸ்தரத்தில்எழுதிவைக்கவேண்டியது.

௧௧. பிரியாது காகிதத்திலே வியாச்சியத்துக்கு ஹேதுஇன்னதென்றும், வியாச்சியமூலம்பிறந்தது இன்னதேதியென்றும், யார்பேரில் பிரியாதுசெய்யப்பட்டதோ அவர்களுடையபெயர் இன்னதென்றும், அவர்கள் வாசமாயிருக்கிறஇடம் இன்னதென்றும், பிரியாதுக்காரன் கேழ்க்கிற சொத்தின்மதிப்பாவது தொகையாவது இவ்வளவென்றும், இதுமுதலாகியதுகளையும் அந்தவியாச்சியவிஷயத்தில் இன்னம் எழுதவேண்டிய எல்லாவற்றையும் விளங்கத்தெரியும்படி சரியாய் விவரித்து எழுதவேண்டியது.

௧௨. முதலாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் - தங்களிடத்தில் ஒருவன்பிரியாதுக்கடிதாசியை எழுதிக்கொடுத்ததின்பேரில் அந்தபிரியாதுக்கு உத்தரவுசொல்லும்பொருட்டு உடனேயாவது - ௨ - நாளையகெடுவுக்குள்ளேயாவது தங்கள்முன்பாக சுதாவாயாகிலும் வக்கீல் முகாந்திரமாயாகிலும் ஆஜராகும்படி பிரதிவாதிக்கு வாய்மொழியாய் சம்மன் அனுப்பவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. அந்தசம்மன் - எப்பொழுதும் வழக்கமாய் சமாசாரங்களைக்கொண்டுபோகும் கிராமத்துஊ

ழியக்காரன்போய் பிரதிவாதிக்குச் சொல்லவேண்டியது - அந்தஊழியக்காரனுடனேகூட - பிரதிவாதியைக் காண்பிக்கிறதற்காகவும், அந்த பிரதிவாதிபேரில் இருக்கிறவியாச்சியம் இன்னதென்று அவனுக்கு அறிவிக்கவேண்டியதற்காகவும், வாதியாவது அவனுடைய வக்கிலாவது போகவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. மேற்சொல்லியபிரகாரம் பிரதிவாதிக்கு சம்மனானபின்பு அவன் அந்தசம்மனை ஒப்புக்கொண்டு, நிச்சயித்தகாலத்துக்குள்ளே வராமற்போனாலும்வருகிறதில்லையென்று நிராகரித்தாலும், அப்பொழுது கிராமமுன்சீபானவர். மேற்படி ஊழியக்காரன் பிரதிவாதி யிடத்தில் அந்த சம்மனைசெலுத்தினதற்கு அவனை பிரமாணம் பண்ணச்சொல்லி, அதற்குமேல் வாதியினுடைய சாதனங்களையும் சாக்ஷிகளையும் பரிசோதித்து தீர்ப்புபண்ணவேண்டியது.

௧௩. பிரதிவாதியானவன் சம்மன் பிரகாரம் வந்து ஆஜரானால் அவனுக்கு பிரியாதுகடிதாசியை வாசிக்கவேண்டியது- அந்தபிரதிவாதியானவன் வாதியினுடைய தாவா நியாயமென்றுஒப்புக்கொண்டால் அப்பொழுது நீங்களிருவருஞ் சமாதானமாய் தீர்ப்புசெய்து கொள்ளுங்களென்று கிராமமுன்சீபு அவ்விருவருக்குந் தெரியச்சொல்லி அறிவிக்கவேண்டியது. அப்படியே. அந்த பிரதிவாதி வாதியை சமாதானப்படுத்திக்கொண்டால் அப்பொழுது இன்னபடிபிரதிவாதிசெய்த சமாதானத்துக்கு வாதிசம்மதித்தானென்பதற்கு அந்தவாதியைக்கொண்டே ஒரு ராஜீநாமா எழுதுவித்து அதுதனக்குமுன்பாக எழுதப்பட்டதென்று உறுதிப்படத்தக்கதாக மேற்படி கிராமமுன்சீபு தன்னுடைய கையெழுத்துப்போட்டு அந்தராஜிநாமாவை மேற்படிபிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டியது.

௧௪. முதலாவது உட்பிரிவு. பிரியாதுக்கடுதாசியை பிரதிவாதிக்கு வாசித்துக்காண்பித்ததின்பேரில் அவன் அதை ஒப்புக்கொள்ளாமலும் உபயவாதிகளுஞ் சமாதானமாய் தீர்மானம்செய்துகொள்ளாமலும் போனால், அப்பொழுது கிராமமுன்சீபானவர் அந்த பிரியாதுக்கடுதாசிக்கு ' ஒருநகலையெழுதி பிரதிவாதிகையில்கொடுத்து அதற்குஉடனேயாவது அல்லது பிரியாதுக்கடுதாசியை பிரதிவாதிகையில் கொடுத்தநாள்முதல்.

௫- நாளைக்குள்ளே ஒருநாளை ஏற்படுத்தி அந்தகெடுவுக்குள்ளேயாவது உத்தரவுகொடுக்கச்சொல்லி திட்டம்பண்ணவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. அந்தபிரியாது சங்கதியைக்குறித்து பிரதிவாதி தானெழுதவேண்டிய ஆக்ஷேபங்களையும் காரணங்களையும் ஒன்றும் விடாமல் தான்கொடுக்கும் உத்தரவில் தானே எழுதிக்கொடுக்கவேண்டியது - கிராமமுன்சீபும் அதைக்குறித்து சொல்லியிருக்கிற அந்த உத்தரவன்றியில் வேறொரு உத்தரவையும் வாங்கக்கூடாது.

மூன்றாவது உட்பிரிவு. பிரதிவாதி உத்தரவைக் கொடுத்தபின்பு கிராமமுன்சீபு உடனேயாவது அல்லது தன்னிடத்திலிருக்கிற விவகாரகாரியங்களை யோசித்து கூடினமட்டுக்கும் அடுத்த ஒருநாளை ஏற்படுத்தி அன்றைபதினத்திலாவது, பிரியாதினுடைய நிசத்தை விசாரிக்கவேண்டியது. உபயவாதிகளும் சாக்ஷிவேண்டாமலே தீர்ப்புக்கு ஒப்பினால் அப்பொழுதுகிராமமுன்சீபு மேற்படிபிரியாதையும் உத்தரவையும் மற்றும் அந்த உபயவாதிகள் காண்பிக்கிற சாதனங்களையும் பரிசோதித்துயோசனைபண்ணி தீர்ப்புசெய்யவேண்டியது - அல்லது உபயவாதிகளும் - வாதியாவது பிரதிவாதியாவது செய்யும்சத்தியப்பிரகாரம் தீர்ப்புசெய்யவேண்டிய தென்று ஒப்பினால் அப்பொழுது மேற்படி கிராமமுன்சீபு அந்த சத்திய விவரப்படிக்கே தீர்ப்பு செய்யவேண்டியது.

௧௫. முதலாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் தங்களுடைய எல்லைக்குள்ளே குடியிருக்கும் எவனாகிலும் ஒருவன்வியாச்சியக்காரர்களிலே எவன் பக்ஷத்திலானாலுஞ் சாக்ஷியாகக் கோரப்பட்டால், அவன் இன்னதினத்தில் ஆஜராகவேண்டியதென்று ஒருநாளை நிஷ்கர்ஷைசெய்து, அந்ததினத்தில் அவன்ஆஜராய்வரும்படியாக வாய்மொழிபுத்தரவினாலே கிராமத்து ஊழியக்காரனைக்கொண்டு அழைப்பிக்கிறதற்கு ஷெ முன்சீபுகளுக்கு அதிகாரமுண்டு.

இரண்டாவது உட்பிரிவு. எப்போதும்வழக்கமாய் உத்தரவுகளைச்செலுத்தும் கிராமத்து ஊழியக்காரன் - சாக்ஷிகளைக் காண்பிக்கிறதற்கு வியாச்சியக்காரர்களையாவது அவர்களுடை

யவக்கீல்களையாவது அழைத்துக்கொண்டுபோய் மேற்படி சாக்ஷிகள் வரவேண்டியதைக்குறித்து கிராமமுன்சீபு செய்த உத்தரவை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. எந்தசங்கதிகளிலே சாக்ஷிகளைசத்தியஞ் செய்விக்கவேணுமென்று கிராமமுன்சீபுக்குத் தோற்றுகின்றதோ அந்த சங்கதிகளிலே சத்தியஞ் செய்விக்கிறதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.

[௲௮௱௪௰ - ம் வருஷத்திய - ௫ - வது ஆக்ட்டு முதலாவதுபிரிவில் சொல்லியிருக்கிறபடிக்கு சத்தியஞ்செய்யவிக்கவேண்டிய விவரம்.

"சர்வவல்லமையுள்ள தெய்வத்துக்கு முன்பாக நான்சொல்லுகிறது நிஜமென்றும், முழுதும் நிஜமென்றும், நிஜமேயல்லாமல் மற்றொன்றுமல்லவென்றும், நான் பயபக்தியோடு உறுதியாய்ச்சொல்லுகிறேன்." இவ்விதமாய் சாக்ஷிகளை சத்தியஞ் செய்விக்கவேண்டியது. இந்தப்படிக்கு சத்தியஞ் செய்விக்கும்போது சத்தியஞ்செய்தும் பொய்சொன்னால் குற்றவாளிகளை விசாரிக்கிற கோர்ட்டுகளில் விசாரிக்கப்படுவீர்களென்று தெரியப்படுத்த வேண்டியது இவ்விதமாய் தெரியப்படுத்தி சத்தியஞ்செய்வித்தும், மனதறிந்து பொய்சொன்னதாக கிராமமுன்சீபுக்கு உறுதியாய் தெரியவந்தால், அப்படிபொய் சொன்னவனை - ௲௮௱௬௰ வருஷத்திய - ௪௰௫ - வது ஆக்ட்டாகிய இந்தியன்பினல்கோடின் ௧௯௩ - வது பிரிவுபடிக்கு அதைக்குறித்தசாட்சி ருசுவுடனே தம்முடைய அபிப்பிராயத்தையுங்கண்டு குற்றவாளியை குற்றவிசாரணை நியாயாதிபதியாகிய கிரிமினல் ஜட்ஜியினிடத்துக்கு அனுப்பவேண்டியது.] *

நான்காவது உட்பிரிவு. கிராமமுன்சீபு யாதொருசாட்சியைவிசாரணை செய்வதற்குமுன்னமே அவனை நீ உள்ளபடி

---

* ஜூடிஷியால் விவகாரங்களில் மனதறிந்துவேணுமென்று தப்பு சாக்ஷியம் சொன்னதற்கு இந்தியன்பினல்கோடின் - ௧௧ - வது அத்தியாயம் - ௧௯௩ - வது பிரிவுபடிக்கு பிரியாதுசெய்யப்பட்டால் அந்த பிரதிவாதி தெரியப்படுத்தின சாக்ஷியம் பிரமாணத்தின்பேரில் தெரியப்படுத்தின மைத்தொரு சாக்ஷியத்துக்கு விரோதமாய் காண்பிக்கிறதுமாத்திரம் போதுமானதல்ல. ஆனால் - அப்படி தெரியப்படுத்தியது அசத்தியமென்பதையும் அது அப்பேர்கொத்ததென்று பிரதிவாதி தெரிந்துகொண்டிருப்பதையும் ருசுப்படுத்தவேண்டியது. ௲௮௱௬௨ வருஷம் ஏப்ரல்மீ ௨௨ உ யுடைய சதர்க்கோர்ட்டு புரொசீடிங்சு.

சாக்ஷி சொல்லுகிறதில்லையென்று எனக்குத்தோற்றும் பொழுது உன்னைசத்தியஞ்செய்விப்பதற்கு எனக்கு அதிகாரமுண்டாயிருக்கிறதென்று அவனுக்கு அறிவிக்கவேண்டியது. அந்த அதிகாரத்தை மேற்படிமுன்சீபு தன்னுடைய யுக்தப்படி செலுத்தவேண்டியது.

ஐந்தாவது உட்பிரிவு. சாக்ஷிக்காரர் சொல்லுகிறதை எந்தசங்கதியிலேயும் எழுதிவாங்கவேண்டிய நிமித்தமில்லை.

ஆறுவது உட்பிரிவு. முன்சீபினால் அழைப்பிக்கப்பட்ட சாக்ஷிக்காரன் வருகிறதில்லையென்று நிராகரித்தாலும், வந்தும் சாக்ஷிசொல்லுகிறதில்லை யென்று சொன்னாலும், அப்படிப்பட்ட பிரதி தப்பிதத்துக்கும் அ௫ரூபாய்க்கு மேற்படாமல் முன்சீபுனுடைய யுக்கதப்படிக்கு அவனுக்கு அபராதம்விதிக்கலாம்.

[கிராமமுன்சீபுகளின் முன்பாக வரவழைக்கப்பட்ட சாக்ஷிகளுடைய உத்தியோகத்துக்கும் மேன்மைக்குந் தக்கபடி அவர்களுக்கு மரியாதைசெய்யவேண்டியதென்று ௲அ௨௩ ௵ ஆக்ஸ்ட்டு ௴ ௨௰௨ உ சதர் அதாலத்துக்கோர்ட்டாருடைய சர்க்கியுலர் ஆர்டரில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது.]

௯. முதலாவது உட்பிரிவு. ஒருவியாச்சியத்திலே ஆவசியமாய் வேண்டியசாட்சி சிலநாளையில் வருகிறதாய் அந்த கிராமத்தைவிட்டு அப்புறம்போயிருந்தால் அவன்வருகிறவரைக்கும் அந்தவியாச்சியத்தை நிறுத்திவைக்கவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. எப்போதானாலும் ஒருவேளை இரண்டுகோஸ்தூரத்துக்குள்பட்ட மற்றொருகிராமத்திலே வாசமாயிருக்கிறவன் சாட்சி சொல்லவேண்டியிருந்தால் அந்தசாட்சிவேண்டிய கிராமமுன்சீபு மேற்படி சாட்சிக்காரன் பெயருக்கு சம்மனெழுதி, அதிலே அந்தவியாச்சியத்தின் வாதி பிரதிவாதிகளுடைய பெயரையும் சாட்சிக்காரன் வரவேண்டியதற்கு நிச்சயித்ததேதியையும் காலத்தையும் கண்டெழுதி, அந்த சம்மனை அந்தசாட்சி குடியிருக்குங்கிராமத்து முன்சீபுனிடத்துக்கு அனுப்பவேண்டியது - அந்த கிராமமுன்சீபு அந்தசம்மனை தன்னுடைய கிராமத்து ஊழியக்காரனாலே அந்தசா

ட்சிக்காரனுக்கு தகுந்தபடி காண்பிக்கச்செய்து, அந்தசம்மனின்பின்னாலே சாட்சிக்காரனுக்கு அந்த உத்தரவுகாண்பிக்கப்பட்டதென்றும், அந்தசம்மனில் கண்டகாலத்தில் ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டதென்றும், அதற்கு அந்தசாட்சி வருகிறேனென்று சொன்னகாலத்தையும், விவரமாய்க் கண்டெழுதி, அதின்கீழே அந்த கிராமமுன்சீபு கையெழுத்துசெய்து, அந்தசம்மனை அனுப்பின கிராமமுன்சீபினிடத்துக்கு அதை மறுபடியும் அனுப்பவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. மேற்சொல்லிய உத்தரவின்பிரகாரம் யாதொருசாட்சி வருகிறதில்லையென்று நிராகரித்தாலும், வருகிறேனென்று ஒப்புக்கொண்டு வராமற்போனாலும், அப்படிப்பட்ட தப்பிதத்துக்காக அவனுக்கு அரைரூபாய் அபராதம்விதித்து அதை வசூல்செய்யவேண்டியது - அப்படிப்பட்ட அபராதத்தை சம்மனனுப்பிய கிராமமுன்சீபு விதித்து, அந்தசாட்சி குடியிருக்கிற கிராமமுன்சீபுக்குத் தெரியப்படுத்தினதின்பேரில், மேற்படி சாட்சி குடியிருக்கும் கிராமமுன்சீபு அந்தஅபராதத்தை அந்தசாட்சிக்காரனிடத்தில் வசூல்செய்யவேண்டியது.

நான்காவது உட்பிரிவு. கிராமமுன்சீபு - யாதொருவியாச்சியத்தில் சம்பந்தப்பட்டிருக்கிற சாட்சிக்காரன் அந்தகிராமத்தினுடைய இரண்டுகோசுதூரத்துக்கு அப்புறத்திலே இருந்தால், அப்பொழுது அந்த வியாச்சியத்தின் உபயவாதிகளாவது அவர்களுடைய வக்கீல்களாவது எழுதிக்கொடுத்த கேள்விகளை ஒரு கடுதாசயில்வைத்து அந்தகேள்விப்பிரகாரம் கேட்டு வாக்குமூலம் எழுதிவாங்கச் சொல்லி அந்தசாட்சி குடியிருக்கும் கிராமமுன்சீபின்பேருக்குக் கடுதாசிஎழுதி அதற்குக்கையெழுத்துபோட்டு அனுப்பவேண்டியது. அந்த கிராமமுன்சீபு தனக்கு எழுதிவந்த பிரகாரம் கண்டெழுதிய சாட்சிகளை விசாரணைசெய்து, அந்தசாட்சிகளில் ஒவ்வொருவன் கொடுத்த சாட்சிவாக்குமூலங்களுக்குத் தனித்தனியே கையெழுத்துபோட்டு, அந்தவாக்குமூலங்களை அனுப்பச்சொல்லிய கெடுவுபடிக்கு அந்தவியாச்சியத்தை விசாரணை செய்துகொண்டிருக்கிற மேற்படி கிராமமுன்சீபு னிடத்துக்கு அனுப்பவேண்டியது. அந்த கிராமமுன்சீபு அப்படி தான்காகிதமுன்னிலையாய் அ

ழைப்பித்த எல்லா வாக்குமூலங்களையும் உறுதியான சாட்சியாகவொப்புக்கொள்ளவேண்டியது.

ஐந்தாவது உட்பிரிவு. குலத்தினலேயாவது மேன்மையினலேயாவது அழைப்பிக்கத்தகாத யோக்கியதையுள்ள ஸ்திரீகளைக் கிராமமுன்சீபுகள் தங்கள்முன்பாக வரவழைக்கக்கூடாது; அப்படிப்பட்ட ஸ்திரீகள் சொல்லுஞ் சாட்சி தேவையாயிருந்தால், சாட்சிவாக்குமூலம்எழுதி அதிலே அந்த ஸ்திரிகளுடைய கையெழுத்தும் அந்தவாக்குமூலத்தை அந்தஸ்திரீ சொல்லக்கேட்டு எழுதினவர்களுடைய சாட்சிலகையெழுத்தும் போட்டு கொடுக்கும்படிசெய்யவேண்டியது. அந்தவாக்குமூலத்தில் சொல்லியிருக்கிற சங்கதி வாஸ்தவமென்று சத்தியஞ்செய்யச்சொல்லிகேட்டால், அப்படி சத்தியஞ்செய்ய சித்தமாயிருக்கிறேனென்று அந்தஸ்திரீ தன்னுடைய வாக்குமூலத்தில் தெரியப்படுத்தவேண்டியது.

கஎ. கிராமமுன்சீபுகள் தங்களிடத்தில் பைசலாகாமலிருக்கும் எல்லாவியாச்சியங்களிலும் பிரதிவாதிகளிடத்தில் எவ்விதமான ஜாமீன்களையும் வாங்கவேண்டுவதில்லையென்று இதனலே உறுதியாய் விதிக்கப்பட்டது.

கஅ. முதலாவது உட்பிரிவு. வியாச்சிய விசாரணை செய்வதற்கு ஏற்படுத்தின தினத்தில் வாதிவராமற்போய் பிரதிவாதிமாத்திரம் முன்சீபின்முன்பாக ஆஜராய் காத்திருந்தால், அந்தவியாச்சியந் தள்ளப்படவேண்டியது - அந்தவாதியானவன் தான் வராமற்போனதற்குத் தகுந்த ஹேதுக்களைக்காண்பித்தால், அந்த வியாச்சியத்தை மறுபடியும் அங்கீகரிக்கலாமேயல்லாமல், மற்ற எந்த விதத்தினலும் அங்கீகரிக்கக்கூடாது.

இரண்டாவது உட்பிரிவு. பிராதுக்குப் பிரதிவாதி உத்தரவுசொல்லாமல்போனலும், அல்லது வியாச்சிய விசாரணைசெய்வதற்கு ஏற்படுத்தின தினத்தில் வராமற்போனலும், அப்பொழுது கிராமமுன்சீபு இந்த சட்டத்து - யஉ - வது பிரிவு - ரு - வது உட்பிரிவின் விதிப்படி வாதியினுடைய சாதனங்களையும் சாட்சிகளையும் பரிசோதித்து தீர்ப்புபண்ணவேண்டியது.

௧௯. விவகாரிகளாவது அவர்களுடைய வக்கீல்களாவது சாட்சிகளாவது கிராமமுன்சீபுகளுக்கு அவமரியாதை செய்தால், அணாரூபாயிக்கு மேற்படாமல் அபராதங் கொடுக்கத் தக்கவர்களாவார்கள்.

௨௦. கிராமமுன்சீபுகள் உபயவாதிகள் சொல்லுகிறதைக் கேட்டு, அவர்களுடைய சாதனங்களை அங்கீகரித்துப் பரிசோதித்து, மேற்படி உபயவாதிகளுடைய சாட்சிகளையும் விசாரித்து நியாயப்படிக்கும் உண்மைப்படிக்கும் தீர்ப்புபண்ணவேண்டியது.

௨௧. தீர்ப்பிலே விவகாரிகளுடைய பெயர்களையும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளுடைய பெயர்களையும், பரிசோதித்த சாதனங்களின் வகை இன்னின்னதென்றும், பின்னையும் அந்த தீர்ப்புக்குள்ள ஆதாரங்களும் ஹேதுக்களும் இன்னின்னதென்றும் சுருக்கமாய்க் கண்டெழுதுவது மல்லாமல் - தீர்ப்பு செய்யப்பட்டது பணமாகில், அதினுடைய தொகையையும், மற்றுமுள்ள அசைக்கப்படுஞ் சொத்தாகில் அதினுடைய மதிப்பையும் சரியாய் இவ்வளவென்று கண்டெழுதி, அந்தத்தீர்ப்பிலே தீர்ப்புசெய்த கிராமமுன்சீபும்கணக்கனும் தங்களுடைய கையெழுத்தாவது சைகையாவது போட்டு அதினுடனே முத்திரையும்போட்டு தீர்ப்புபண்ணினதேதியுங் கண்டிருக்கவேண்டியது.

௨௨. ௲௮௱௫௰௫ ௨௮ - வது ஆக்ட்டினால் ரத்துசெய்யப்பட்டு அதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்;-

(௸ ஆக்ட்டு ௨ - வது பிரிவு.)

[வட்டிக்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தில் கட்சிக்காரர்களுககுள் வட்டி ஏற்பட்டிருந்தால் அந்த வீதப்பிரகாரமும் ஏர்பட்டிராவிட்டால் கோர்ட்டாருக்கு நியாயமாய்த் தோற்றுகிறபடிக்கும் வட்டி தீர்மானிக்கலாம்.

௪. [பணம் கடனாக வாங்கிக்கொண்டு வட்டிக்குப்பதிலாக உற்பத்தியை அனுபவிக்கும்படி எழுதிக்கொடுத்த கொதுவை அல்லது உடன்படிக்கை ஸ்திரப்படுத்தப்படும்.]

௨௫. கிராமமுன்சீபுகள் தாங்கள் செய்த தீர்ப்புகளை நிறைவேற்றுகிறதற்காக அவசியமாய்தோற்றுகிற விஷயங்களில் ௫ - மர்சத்துக்கு மேற்படாமல் நியாயமானகெடுவை ஷை தீர்ப்புகளில் ஏற்படுத்தலாம்.

௨௬- முதலாவது உட்பிரிவு. கிராமமுன்சீபுகள் தீர்ப்புபண்ணின மூன்று நாளைக்குள்ளே கிராமகணக்கனைக்கொண்டு அந்தத்தீர்ப்புக்கு இரண்டு நகல்களை, எழுதுவித்து வாதிக்குஒரு நகலும் பிரதிவாதிக்கு ஒருநகலும் கொடுக்க வேண்டியது; அப்படி வாதிக்கும் பிரதிவாதிக்கும் எந்த தேதியில் தீர்ப்பு நகல் கொடுக்கப்படுகின்றதோ அந்ததேதியை அந்தநகல்களில் எழுதி கிராமமுன்சீபும் கணக்கனுங் கையெழுத்துபோட்டுக் கொடுக்கவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. அந்த தீர்ப்பு நகல்களை வாங்கிக்கொள்ள வாதியாவது பிரதிவாதியாவது அவர்களுடையவக்கீல்களாவது வராமற்போனாலும், கொடுக்கும்போது அதை வாங்கிக்கொள்ளாமற் போனாலும், அந்ததீர்ப்பின் பின்புறத்திலே அந்த விவரத்தை எழுதி கிராமகணக்கன்வசமாய் வைத்து வைக்கவேண்டியது - அதை அவர்கள் எப்போது கேட்கிறார்களோ அப்போது கொடுக்கவேண்டியது.

௨௭. கிராமமுன்சீபு தன்முன்பாக இருக்கிற வியாச்சியங்களில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரனையாவது, வக்கீலையாவது, சாட்சிக்காரனையாவது, இந்தசட்டத்து ௧௫ - வது பிரிவு ௬ - வது உட்பிரிவிலும், ௧௬ - வது பிரிவு ௩ - வது உட்பிரிவிலும், ௧௯ - வது பிரிவிலும் ஏற்பட்டிருக்கிற விதிகளின்பிரகாரம் சிட்சிக்கலாமேதவிர மற்ற எந்தவிதமாயும் சிட்சிக்கக்கூடாது. ஆனால், கட்சிக்காரனாவது வக்கீலாவது, சாட்சிக்காரனாவது, தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தாமற்போனாலும், செலுத்த அவனுக்குச் சக்தியில்லாமற்போனாலும், அப்பொழுது கிராமமுன்சீபுனுடைய யுக்தப்படிக்கு அபராதத்துக்குப்பதிலாய் அவர்களை அந்த கிராமத்துச்சாவடியில் - ௧௨ - மணிகாலமாகிய - ௪ - ஜாமம் காவலில்வைக்கலாம்.

உசு. எந்தவியாச்சியத்திலாவது கிராமமுன்சீபு சம்பந்தப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட வியாச்சியத்தை மற்றொரு கிராமமுன்சீபாவது அதிகாரத்தைப்பெற்ற மற்றொருவனாவது விசாரிக்க வேண்டியதேயல்லாமல், அப்படிப்பட்ட கிராமமுன்சீபு எவ்வளவும்விசாரிக்கக்கூடாது.

உஎ. மதிப்பிலேயாவது தொகையிலேயாவது -க00- ஆற்கட்டுரூபாய்க்கு மேற்படாத தொகையுள்ள பணம் முதலான அசைக்கப்படுஞ் சொத்தைக்குறித்த வியாச்சியத்தை உபயவாதிகளும் சம்மதித்து தாங்கள்குடியிருக்குங் கிராமமுன்சீபினிடத்திலாவது மற்றொரு கிராமமுன்சீபினிடத்திலாவது கொண்டுவந்து தருமகர்த்தராகத் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டு அந்த கிராமமுன்சீபு தீர்மானிக்கும் தீர்ப்புப்படிக்கு ஒப்புக்கொண்டு நடந்துகொள்ளுகிறதாய்ச்சொல்லி நம்பத்தகுந்த இரண்டுசாட்சிகள் முன்பாகவாவது, இரண்டுபேருக்கு அதிகமானசாட்சிகள் முன்பாகவாவது முச்சலிக்காஎழுதி, அதிலேஅந்தசாட்சிகளுடைய கையெழுத்து போடுவித்துக் கொடுத்தால், அப்பொழுது மேற்படி கிராமமுன்சீபு அப்படியே தருமகர்த்தராக அந்த வியாச்சியத்தைக்கேட்டு விசாரித்து தீர்ப்புசெய்யலாம்.

உஅ. கிராமமுன்சீபுகள் இதற்குமுந்தின பிரிவில் கண்டிருக்கிற வியாச்சியங்களை விசாரிக்கும்போது, அந்தவிசாரணைக்கு - இந்தசட்டத்து ரு - வது பிரிவில்கண்ட விதிப்படி அசைக்கப்படுஞ் சொத்தைக்குறித்து - க0 - ரூபாய்த்தொகைக்கு தங்களிடத்தில் கொண்டுவரப்படுகிற வியாச்சியவிசாரணை விஷயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளை எந்தமட்டுக்குந் தகுதியாய் உபயோகப்படுத்திக் கொள்ளவேணுமோ அந்தமட்டுக்கும் உபயோகப்படுத்திக்கொண்டு அந்தநிபந்தனைகளை அனுசரித்து நடந்துகொள்ளவேண்டியது.

உகூ. கிராமமுன்சீபுகள் - முன்சீப்பதிகாரத்தினலேயாவது தருமகர்த்தர் அதிகாரத்தினலேயாவது தாங்கள்செய்த தீர்ப்புகளுக்கு நகலை உபயவாதிகளுக்காகிலும்அவர்களுடைய வக்கீல்களுக்காகிலும் கொடுத்தநாள்முதற்கொண்டாவது கொடுக்கக் காண்பித்தநாள்முதற்கொண்டாவது - ௩0 - நாளைக்குள்ளே

அந்த தீர்ப்புப்பிரகாரம் நிறைவேற்றக்கூடாது. கிராமமுன்சீபு லஞ்சம்வாங்கிக்கொண்டாவது பக்ஷபாதமாயாவது நியாய விரோதமாய் தீர்ப்புசெய்ததாக உபயவாதிகளில் எவனுக்காகிலும் தோற்றினால், அவன் மேற்படி - ௩௦ - நாளைய கெடுவுக்குள்ளே ஜில்லா நியாயாதிபதியிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளவேண்டியது; அந்த விண்ணப்பத்தின்பேரில் ஜில்லா நியாயாதிபதி அந்த தீர்ப்புப்படிக்கு நடப்பியாமலிருக்கும்படி உத்தரவுசெய்யவேண்டியது. அப்பால், நம்பிக்கையுள்ளவர்களாய், குறைந்தது இரண்டுசாட்சிகள் பிரமாண பூர்வகமாய்ச் சொன்னசாட்சியத்தினாலே, முன்சீபு லஞ்சம்வாங்கிக்கொண்டாவது பட்சபாதமாயாவது மேற்படி வியாச்சியத்தை நியாயவிரோதமாய்த் தீர்ப்புசெய்தானென்று ஜில்லாநியாயாதிபதிக்கு ருசுவானால், அந்ததீர்ப்பை அவர் தள்ளிப்போடவேண்டியது.

௩௦. முதலாவது உட்பிரிவு - வியாச்சியத்தின் உபயவாதிகளுக்காவது அவர்களுடைய வக்கீல்களுக்காவது தீர்ப்புநகலைக் கொடுத்த நாள்முதற்கொண்டு அல்லது கொடுக்கக் காண்பித்த நாள்முதற்கொண்டு ௩௦ - நாளைக்குள்ளேயாகிலும் தீர்ப்பிலே கண்டெழுதிய கெடுவுக்குள்ளேயாகிலும் பிரதிவாதிகொடுக்கும்படி தீர்ப்புசெய்யப்பட்ட சொத்தையாவது தொகையையாவது அவன் கொடாமற்போனால் அப்பொழுது தீர்ப்புபெற்றுக்கொண்டவன் கிராமமுன்சீபுக்கு எழுத்தின் மூன்னிலையாய் தெரிவித்துக்கேட்டுகொண்டதின்பேரில், அவர் வியாச்சியத்தில் தோற்றவனுடைய ஆஸ்தியிலே தீர்ப்புதொகைக்குப் போதுமானசொத்தை ஜப்திபண்ணிவைத்து, அதை ஏலத்தில்விற்கிரயம் பண்ணுகிறதற்கு ஒருதினத்தை நிஷ்கரிஷை செய்து, தாலூகாமுன்சீபுக்கு ஜப்திபண்ணின சங்கதியையும் ஏலம்போடுகிறதற்கு நிச்சயித்ததேதியையும் உடனே தெரியப்படுத்தவேண்டியது. அந்த தாலூகாமுன்சீபு ஏலம்போடுகிறதற்கு விளம்பரத்தில் நிச்சயித்த கெடுவானதற்குமேல், மேற்படி ஜப்திபண்ணிவைத்த சொத்தை அந்த கிராமமுன்சீபின்முன்பாக பயிரங்கமான ஏலத்தில் விற்கிரயம் பண்ணுகிறதற்கு ஒருசேவகனை அனுப்பவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. தாலூகாமுன்சீபினால் அனுப்பப்பட்ட சேவகன் கிராமமுன்சீபு ஜப்திபண்ணிவைத்திருந்த சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டியதில்லை. மேற்படி சேவகன் செய்யவேண்டிய காரியமென்ன வென்றால், கிராமமுன்சீபாலே ஜப்திசெய்து வைக்கப்பட்டிருக்கிற சொத்தை ஏலத்தில் விற்கிரயம்பண்ணி, அந்த பணத்தைவாங்கி தீர்ப்பைப்பெற்றவனுக்கு தீர்ப்பிலுள்ளபடி பணத்தைச்செலுத்தி, அந்தபணத்தை அவன் பற்றிக்கொண்டதற்கு அவனிடத்தில் ரசீதுவாங்கிக்கொண்டு, அதில்கிராமமுன்சீபுனிடத்திலும் கணக்கனிடத்திலும் சாட்சிகையெழுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. மேற்சொல்லியசேவகன் அந்தகாரியத்திலிருக்கிறவரைக்கும் நாளொன்றுக்கு இரண்டணாவிழுக்காடு படி வாங்கிக்கொள்ளத்தக்கவன். அந்த விற்கிறயத்தைக் குறித்துச் சேவகனுடைய படியையும் இன்னம் இதரமான எல்லாச்செலவுகளையும் வியாச்சியத்தில் தோற்றவன் கொடுக்க வேண்டியது. அல்லது மேற்படி படிமுலான எல்லாச்செலவுவகையிலும் கூடியமொத்தம் சரிதானென்று கிராமமுன்சீபும் கணக்கனும் எழுதிக்கொடுத்தபின்பு அந்தசெலவுபணத்தை மேற்படி விற்கிரயப்பணத்திலே எடுத்துக்கொள்ளவேண்டியது.

நான்காவது உட்பிரிவு. தீர்ப்புக்காரனுக்கு தீர்ப்பில்கண்டபணமும் சேவகன் படி முதலான செலவுபணமுஞ்சேர்ந்து கொடுத்ததுபோக, மேற்படி விற்கிரயப்பணத்தில் எவ்வளவாகிலும் மீதியாயிருந்தால் அதை வியாச்சியத்தில் தோற்றவனுக்குக்கொடுத்து, அவன் அதை பற்றிக்கொண்டதற்கு அவனிடத்தில் சேவகன் ரசீதுவாங்கிக்கொண்டு கிராமமுன்சீபினிடத்திலும் கணக்கனிடத்திலும் அதில் சாட்சிகையெழுத்துவாங்கிக்கொள்ளவேண்டியது. பின்பு அந்த ரசீதையும், மேற்சொல்லிய தீர்ப்புக்காரன்கொடுத்த ரசீதையும், படிமுதலான செலவைக்குறித்து கிராமமுன்சீபு தீர்மானம் பண்ணி எழுதிக்கொடுத்த செலவுகணக்கையும், இதுகளையெல்லாம் அந்தச்சேவகன் தனக்கு உத்தரவுபண்ணின காரியத்திலே தான்

செம்மையாய் நடந்துகொண்டதற்கு ருசுவாக மேற்படிதாலூகா முன்சீபினிடத்தில் கொடுக்கவேண்டியது.

ஐந்தாவது உட்பிரிவு. எப்போதாகிலும் தீர்ப்புப்பிரகாரம் நடப்பிக்கிறதற்காக சொத்து ஜப்தி பண்ணப்பட்டால், அதை ஏலம்போடுகிறதற்கு ஐந்துநாளைக்குமுன்னமே இன்ன சொத்தை விற்கிரயம் பண்ணுகிறோமென்று கிராமமுன்சீபு அந்தகிராமமுழுதும் அறியும்படி தண்டோரா மூலமாய்த்தெரியப்படுத்தவேண்டியது. மேலும், வியாச்சியத்திலே தோற்றவன் - ஜப்திபண்ணிவைத்திருக்கிற சொத்தை ஏலம்போடுகிறதற்கு நிச்சயித்திருக்கிற கெடுவுக்குள்ளே எப்போதானாலும் தீர்ப்புப்பிரகாரம் பணத்தை கிராம முன்சீபினிடத்திலாவது, அல்லது ஜப்திசொத்தை ஏலம்போட தாலூகா முன்சீபினிடத்திலிருந்து வந்திருக்கிற சேவகனிடத்திலாவது செலுத்தலாம் - அப்படி அந்தத் தீர்ப்புப்படிக்கு தோற்றவன்பணத்தைச் செலுத்துப்போது, சேவகன் படிமுதலான செலவைக்குறித்து கிராமமுன்சீபு ஏற்படுத்திக் கொடுக்கிறகணக்குப்படிக்கு பணத்தைக் கொடுத்தபின்பு ஜப்தியிலிருக்கிறசொத்தை கிராமமுன்சீபு விடுதலைசெய்து உடையவனுக்கு கொடுத்துவிடவேண்டியது.

ஆறுவது உட்பிரிவு. கிராமமுன்சீப் உத்தரவுசெய்து ஜப்திபண்ணிவைத்த சொத்தை விற்கிரயப்படுத்துகிற காரியத்துக்கு எவனொருவன் விரோதம்பண்ணுகிறானோ அவன் கலகக்காரனாக தெண்டிக்கப்படுவான்.

௰௧. கிராமக்கணக்கர்கள் தங்கள் தங்கள் கிராமங்களிலே தீர்ப்புப்படிக்கு நடப்பிக்கிறதற்காக போடப்படும் சகலமான ஏலங்களுக்கும் ஒருரிஜிஸ்தர் வைக்கவேண்டியது. அதில் இன்னதேதியில் விக்கிரயம் பண்ணப்பட்டதென்றும், விக்கிரயப்படுத்தினசொத்துக்கள் இன்னின்னதென்றும், விற்கிரயமானதொகை இவ்வளவென்றும், ஏலத்தில் வாங்கிக்கொண்டவன் இன்னானென்றும்; அவன் இன்னஇடத்தில் இருக்கிறவனென்றும் விவரமாய் எழுதிவைக்கவேண்டியது.

௰௨. கிராமமுன்சீபுகளிடத்தில் கொண்டுவரப்படும்வியாச்சியங்களைக்குறித்து, இந்தசட்டத்து - ௰௭ - வது பிரிவில்

விதித்திருக்கிற செலவுகள்தவிர, முத்திரைக்காகிதத்தீர்வை மற்ற ருசூமு படிச்செலவு இதுமுதலாகிய எந்த செலவையும் வசூல் பண்ணக்கூடாது.

௩௩. எல்லா கிராமமுன்சீபுகளும் தங்களாலே வாங்கப்படும் அபராதபணத்தை அந்தந்த மாசக்கடைசியில் தாலுகா முன்சீபுகளிடத்துக்கு அனுப்பவேண்டியது - அதனுடன் அபராதங்கொடுத்தவனுடைய பெயரும் உத்தியோகமும், அபராம் விதித்ததற்குள்ள ஹேதுவும்கண்டு ஒருஜாபிதாவை அனுப்ப வேண்டியது.

௩௪. முதலாவது உட்பிரிவு. உடன்படிக்கைச்சீட்டு, சாஸனம், பத்திரம், இதுமுதலான சகல அசல் தஸ்தாவேசுகளாவது, நகல்களாவது, சட்ட நிபந்தனைப்பிரகாரம் முத்திரைக்கடுதாசியிலாகிலும், முத்திரைஓலையிலாகிலும் எழுதியிருக்கவேண்டியதை வெற்றுக்காகிதத்திலாவது, ஓலையிலாவது எழுதியிருந்தால், அப்படிப்பட்ட தஸ்தாவேசுகளை சாதனமாயும் ருசுவாயும் கிராமமுன்சீபுகள் அங்கீகரிக்கவும் பரிசோதிக்கவுங்கூடாது- [ இந்தநிபந்தனையில் கண்ட சாஸனங்கள் - ௧௮௬௨ ஹூ த்திய- ௰ - வது ஆக்ட்டின் - எ - ( A ) குறிப்புஜாபிதாவில் கண்ட ஏற்பாட்டின்படி எழுதியிருக்கவேண்டியது.]

இரண்டாவது உட்பிரிவு. கலெக்ட்டர்கள் தங்கள்ஜில்லாக்களுக்கு உட்பட்ட கிராமங்களின் முன்சீபுகளுக்கு உதவியாய் அந்தந்த கிராமகணக்கருக்கு முத்திரைக்கடுதாசி முத்திரை ஓலை இதுகளினுடைய விதிப்படிக்கு தீர்வை இவ்வளவென்றும், அதுகளை விற்கிரயிக்க நிச்சயித்ததேதி இன்னதேதியென்றும் விவரமாய் ஒருஜாபிதாவை எழுதிக்கொடுக்கவேண்டியது.

முத்திரைக்காகிதங்களை உபயோகிக்கவேண்டிய விவரத்தைக்குறித்து [ ௲அ௬உ ஹூத்திய - ௰ - வது ஆக்ட்டின் ( எ ) குறிப்பு ஜாபிதாவைப்பார்க்க.]

௩௫. முதலாவது உட்பிரிவு. விவகார விசாரணையில் லஞ்சம்வாங்கிக்கொண்டு -பக்ஷபாதமாய்செய்த தீர்ப்பினாலே நியாயத்தை அடையாத வாதியாவது பிரதிவாதியாவது செய்துகொள்ளுகிற விண்ணப்பத்தைக்குறித்தும், அதிகார ஒழுங்கு

தப்பி நடந்ததினாலே துன்பத்தையடைந்தவன் செய்துகொள்ளும் விண்ணப்பத்தைக்குறித்தும் கிராமமுன்சீபுகள் ஜில்லா நியாயாதிபதியினுடைய அதிகாரத்துக்கு உள்படத்தக்கவர்களாவார்கள்; அந்த நியாயாதிபதி விசாரணையில் அந்தகுற்றங்கள் சரியென்று சம்மதமாகும்படி ருசுவு காணப்பட்டால், அப்போது - லஞ்சம்வாங்கினது பணமாகில் அதினுடையதொகைக்கும், மற்றுமுள்ளசொத்தாகில் அதினுடைய மதிப்புக்கும் ஒன்றுக்கு மூன்றத்தனையாக வியாச்சியச்செலவுடனே பிருதுக்காரனுக்கும், அதிகாரநியமம்தப்பி நடந்ததினாலே துன்பத்தையடைந்த மனுஷியனுக்குண்டான நஷ்டத்தையும் செலவையும் புக்தப்படி துன்பப்பட்டவனுக்கும் மேற்படி கிராமமுன்சீபுகள் கொடுக்கும்படி மேற்படிஜில்லா நியாயசபையார் தீர்ப்புசெய்யவேண்டியது. இவ்விதமாய் கிராமமுன்சீபுகளின்பேரில் பிரியாது வந்தசங்கதியில் ஜில்லா நியாயாதிபதிக்கு ருசுவாகாமற்போனாலும் அந்த சங்கதிநடந்த மூன்றுமாசத்துக்குள்ளே பிரியாது செய்துகொள்ளாமற்போனாலும் அப்போது கிராமமுன்சீபுகள்பேரில் மேற்படி நியாயாதிபதிகள் யாதொரு உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது. விவகார விசாரணையில் யாதொரு ஒழுங்குதப்பைக்குறித்தாவது ஆலோசனைதப்பைக்குறித்தாவது கிராம முன்சீபுகள்பேரில் வியாச்சியந் தொடரக்கூடாது.

இரண்டாவது உட்பிரிவு. கிராமமுன்சீபு லஞ்சம்வாங்கினதாகச் செய்யப்பட்ட பிராதுசங்கதி விசாரணையில், உபயவாதிகளிலே எந்தகட்சிக்காரனாவது அவனுடைய அனுமதியின்பேரில் அவனுக்காக சம்பந்தப்பட்ட மற்றெவனாவது லஞ்சங்கொடுத்ததாகத் தெரியவந்தால் - முன்சீபு லஞ்சம்வாங்கினதாய் ருசுவான தொகைக்குச் சரியான தொகையையாவது, வஸ்துவாயிருந்தால் அதின் மதிப்புக்குச்சரியான தொகையையாவது அபராதமாக அந்த கட்சிக்காரனைக் கொடுக்கும்படி, தீர்ப்புசெய்யவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. யாதொரு கிராமமுன்சீபின்பேரில் லஞ்சம்வாங்கினதாக சுமத்தின குற்றம் ஜில்லா நியாயாதிபதிக்கு திருப்தியாகும்படி ருசுவாகாமற்போனால் அப்போது அந்த வியாச்சியத்தைக் குறித்துண்டான முழுச்செலவையும்

அதிலுண்டான மானநஷ்டத்துக்கு தகுந்ததொகையையும் வாங்கி அந்த கிராமமுன்சீபுக்குக் கொடுக்கும்படி மேற்படி நியாயாதிபதி தீர்ப்புசெய்யவேண்டியது; மேலும் அப்படி விணுகப் பிரியாதுபண்ணினவன்,- லஞ்சம்வாங்கின தொகை எவ்வளவென்றுசொன்னுனோ அந்த தொகைக்குமேற்படாமல் அந்தபிரியாதுக்காரன் கையில் அபராதம் வாங்கவேண்டியது.

ருகா - ரு௰ - ருஅ - வது பிரிவுகள் ௧அஉஅ ௵ த்திய -௬ - வது சட்டம் - உ - வது பிரிவுனல் ரத்துசெய்யப்பட்டன.

கிராமமுன்சீபுகள் அறிந்துகொள்ளுவதற்காக - இந்தசட்டத்தின் ஒருபிரதியை அந்தந்தகிராமக்கணக்கப் பிள்ளையிடத்திலும் கொடுக்கவேண்டியது. அவர்கள் அதை ஜாக்கிரதையாய் வைத்திருக்கவேண்டியது.

௧அ௧௬ ௵ த்திய - ௪ - வது சட்டம்முற்றிற்று.

---

[கிராமமுன்சீபுகள் அதிகாரஞ்செலுத்தும் விஷயத்தில் சதாதாலத்துக்கோர்ட்டாரால் செய்யப்பட்ட உத்தரவுகள்.—]

நஷ்டத்துக்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை விசாரணைசெய்ய கிராமமுன்சீபுகளுக்கும் தாலூகா பஞ்சாயத்தாருக்கும் கிராம பஞ்சாயத்தாருக்கும் அதிகாரமில்லை. (௧அஉ௪ - ௵ மார்ச்சிமீ - ௰௬உ சதர்புரொசிடிங்ஸ்)

கிராமமுன்சீபுகள்செய்கிற டிக்ரிகளை கடன்பட்டவனுடைய அசையும்பொருளின்பேரில் நிறைவேற்றலாமேயல்லாமல் நபரின்பேரில் நிறைவேற்றக்கூடாது. (௧அஉ௬ ௵- டிசம்பர்மீ - உ௪உ சதர்புரொசிடிங்ஸ்.)

கிராமமுன்சீபுகளினுடைய டிக்ரிகளை அவ்விடத்திய தாலூகா முன்சீபுதவிர வேறேயாதொரு அதிகாரியும் நிறைவேற்றக்கூடாது. (௧அஉ௬ ௵ - டிசம்பர்மீ - உ௪உ சதர்புரொசிடிங்.)

௧அ௧௬ ௵ ௪ - வது சட்டம் உரு - வது பிரிவின் தாற்பரியம் என்னவென்றால்;— கிராம முன்சீபினுடைய டிக்ரி

யை நிறைவேற்ருமல் வாதிக்கு நஷ்டமுண்டாகும்படி மூன்றுமாசத்திற்கு அதிகமாக நிறுத்திவைக்கக் கூடாதென்பதேயல்லாமல், வாதிகோரினாலும் கோராவிட்டாலும் அந்தகாலத்திற்குள் பலவந்தமாய் நிறைவேற்றுவிக்க வேணுமேயல்லாமல்காலநிர்ணய சட்டத்திலே ஏற்பட்டிருக்கிற கெடுவிற்குள் எப்போதாவது அந்த டிக்ரியைநிறைவேற்றலாம். (௧௮௫௧௵ - மார்ச்சி௴ - ௨௭௨ சதர்புரொசிடிங்ஸ்.)

கிராமமுன்சீபுனுடைய டிக்ரியிலே கணக்கப்பிள்ளை கையெழுத்துப் போடமாட்டேனென்று சொல்வதினலே அந்த டிக்ரி கெட்டுப்போகமாட்டாது; அவன் அப்படி பிடிவாதமாய்ச் சொல்வதை - அவனை உத்தியோகத்திலிருந்து தள்ளிப்போடும்படிக்கு கலெக்ட்டருக்குத் தெரிபப்படுத்த வேண்டியது. (௧௮௪௯௵ - நவம்பர்௴ - ௨௫௨ சதர்கடிதம்.)

வகாலத்துநாமா சட்டப்படிக்கு அவ்வளவு முக்கியமான விதமாய் ஊர்ஜிதப்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை - ஆகையால் கிராமமுன்சீப்பாவது, அதிகாரமுள்ள மற்றெவராவது, ஷை தஸ்தாவேஜு உண்மையானதென்று எழுத்துமூலமாய் நிச்சையிப்பதற்கு ஆட்சேபமில்லை. (௧௮௫௨௵ பிப்பிரவரி௴ ௨௧௨ சதர் புரொசிடிங்ஸ்)

---

கிராமபஞ்சாயத்தைக்

குறித்த

# ௲௮௱௰௬௵த்து - ௫ - வது சட்டம்.

பீடிகை.

மதிப்பிலேயாவது பணத்திலேயாவது இவ்வளவென்று தொகைநிபந்தனையில்லாத பணம் முதலான அசைக்கப்படுஞ் சொத்தைக்குறித்த வியாச்சியங்களை தங்கள் எல்லைக்குள்ளே விசாரித்துத் தீர்க்கும்படி கிராமபஞ்சாயத்தாரை கூட்டிவைக்கிறதற்கு கிராமமுன்சீபுகளுக்கு அதிகாரத்தை உண்டாக்குகிறதற்காகவும், அந்த பஞ்சாயத்தாருடைய அதிகாரம் இப்ப

டிப்பட்டதென்று விவரித்துக் காட்டுவதற்காகவும் விதிக்கப்பட்ட சட்டம்.— இது ௲அ௱௰௬ ௵ மே௴ ௩௨ சென்னபட்டணத்துக் கோட்டை ஆலோசனைசபையில் கவர்னரவர்களாலே விதிக்கப்பட்டது.

க. வியாச்சியத்துக்குப் பிடிக்கும்படியான செலவுகளைக் குறைப்பதற்காகவும், பெரியகுடித்தனக்காரர்களாயும் புத்திசாலிகளாயுமிருக்கிற குடிகளைக்கொண்டு அவர்களுடைய அக்கம்பக்கத்தாருக்கு நியாயபரிபாலனஞ்செய்வித்து அதின்முன்னிலைக்கு அவர்களை உபயோகமும் மேன்மையுமுள்ளவர்களாகச் செய்வதற்காகவும், சென்னபட்டணத்து ராஜதானிக்குட்பட்ட தேசங்களிலிருக்கும் குடிகளுக்குண்டாகுஞ் சீவில் வியாச்சியங்கள் பைசலாகும்பொருட்டு - அதுகளை பஞ்சாயத்துச் சபையாரிடத்துக்கு அனுப்பவேண்டியதென்றும், அப்படி அனுப்புவதற்கு உபயவாதிகளுஞ் சம்மதித்து கிராம முன்சீபுகளிடத்தில் மனுவுகொடுத்துக்கொண்டால் - அப்பேர்க்கொத்த வியாச்சியங்களைக் கேட்டு விசாரணைசெய்து தீர்மானிக்கும்பொருட்டு பஞ்சாயத்தாரைக்கூட்டி வியாச்சியத்தை அவர்களிடத்துக்கு அனுப்புவதற்காக கிராமமுன்சீபுகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டியதென்றும், இந்தவேலைகளை நிறைவேற்றிவருவதில் லஞ்சம்வாங்கினார்களென்று கொண்டுவரப்பட்ட பிரியாதுசிவாய் மற்ற நடத்தையைக்குறித்து பஞ்சாயத்தார் ஜவாபுதாரிகளாக வேண்டியதில்லையென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியினாலே; அதற்காக இதற்கடியில்வருகிற நிபந்தனைகளை ஆலோசனை சபையில் கவர்னரவர்கள் நியமித்தார்கள்.

உ. முதலாவது உட்பிரிவு. இந்தபிரிவின் - உ - வது உட்பிரிவிலே சொல்லப்படும் இரண்டுவிதங்களிலும், பணத்திலாவது மதிப்பிலாவது இவ்வளவென்று தொகை நியமமில்லாமல் எவ்வளவுக்காவது, பணமுதலான அசைக்கபடுஞ் சொத்தைக்குறித்த வியாச்சியங்களை விசாரணைசெய்வதற்காக தங்கள் தங்கள் கிராமங்களிலே பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கிறதற்கு முன்சீபுகளுக்கு அதிகாரம் உண்டென்று இதனால் அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது உட்பிரிவு. விவாதப்பட்ட விஷயத்தைக்கு றித்து வாதி பிரதிவாதிகளிருவரும் அப்பீலுக்குப்போகாமல் பஞ்சாயத்தார் முடிவானதாகச்செய்யுந் தீர்ப்புக்கே சம்மதிக் கிறதாய் ஒப்புக்கொண்டு பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கவே ணுமென்று கிராமமுன்சீபுக்கு எழுதிக்கொடுத்து கேட்டுக் கொள்ளும்போது, அந்தமுன்சீபு அந்தஉபயவாதிகளுங் குடி யிருக்கிற கிராமத்துமுன்சீபாயிருந்தாலும், மற்ற எந்தகிராம முன்சீபாயிருந்தாலும் பஞ்சாயத்தாரை கூட்டிவைக்கலாம் - ஒருவேளை கட்சிக்காரர்களில் ஒருவன்மாத்திரம் பஞ்சாயத்தா ரைக் கூட்டவேண்டியதென்று எழுதிக்கொடுத்தால், மற்றொரு கட்சிக்காரன் அந்தகிராமத்து குடியாயிருக்கிறபட்சத்தில் அவ னுக்கு சம்மன் அனுப்பினதின்பேரில் அவன் ஆஜராய், பஞ் சாயத்தாரைக் கூட்டுவது சம்மதிதானென்று எழுதிக்கொடுத் தால், அப்பொழுது கிராமமுன்சீபு பஞ்சாயத்தாரைக்கூட்டி வைத்து, அந்தவிவகாரத்தை தீர்மானிக்கும்படி செய்யவேண் டியது.

மூன்றுவது உட்பிரிவு. மேற்கண்ட உட்பிரிவுபடிக்கு வாதி பிரதிவாதிகளிருவரும் சம்மதித்து எழுதிக்கொடுத்து கேட்டுக்கொள்ளும் வியாச்சியமானது * - ௰௨ - வருஷத்துக்கு உள்பட்ட வியாச்சியமாயிருக்கவேணும்; அந்த காலத்துக்கு மேற்பட்டிருந்தால், வாதியானவன் பிரதிவாதியை அடிக்கடி கேட்டு பிரதிவாதி ஒப்புக்கொண்டதற்காவது, எந்த நியாயஸ் தலத்திலாவது பிரியாதுசெய்யப்பட்டு அதை இன்னகாரணத் தினாலே நடத்தக்கூடாமல்போய்விட்டதென்பதற்காவது, அல் லது பாலியனாயிருந்தது முதலான ஹேதுக்களினாலே நியாய த்தைப் பெற்றுக்கொள்ளக்கூடாமலிருந்த தென்பதற்காவது, நல்ல தகுதியான காரணங்களை ருசுப்படுத்திவையாதபட்சத்தில் அந்தப்பிரியாதை அங்கிகரிக்கக்கூடாது.

௩. முதலாவது உட்பிரிவு. கிராமபஞ்சாயத்தார் ஐந்துபே ருக்குக் குறையாமலும், பதினொருபெயருக்கு உயராமலும் ஒற் றைப்படையாகவே எப்போதும் இருக்கவேணும்; அவர்களுக்கு ள்ளே ஜாஸ்தி தொகைப்பட்டவர்களுடைய அபிப்பிராயப்படிக்

---

*இந்த காலநிர்ணயத்தைக்குறித்து - ௲அ௱௪௵ௐ௲ - ௧௪ - வது ஆக்டைப்பார்க்க.

கே தீர்ப்புசெய்யவேண்டியது - [மேலும், ௲அசம்ஹிதிய - அ - வது ஆக்ட்டின்படிக்கு பஞ்சாயத்தார் செய்யுந் தீர்ப்பிலே அவர்களில் குறைந்த தொகையுள்ளவர்கள் கையெழுத்து பண்ணமாட்டோமென்றால், ஜாஸ்தி தொகையுள்ளவர்கள் கையெழுத்துசெய்வதேபோதும், ஆனால், குறைந்ததொகையுள்ளவர்கள் கையெழுத்துசெய்யாமல் போனதற்குள்ள நியாயத்தை அந்தத்தீர்ப்பின்பேரில் எழுதி, தங்களுடைய கையெழுத்தாவது கைநாட்டாவது செய்யவேணுமென்றால், அதை ஜாஸ்தி தொகையுள்ளவர்கள் அங்கீகரிக்கவேண்டியது.]

இரண்டாவது உட்பிரிவு. மேற்படி பஞ்சாயத்துக்கு நேமிக்கப்பட்ட மனுஷியாள அந்தகிராமத்தில் குடியிருக்கிறவர்களில் யோக்கியாளாய இருக்கவேணும் - அப்படிப்பட்டவர்கள் - கக - பேருக்கு அதிகமாயிருந்தால், அவர்களை பஞ்சாயத்து காரியத்துக்கு கிராமமுன்சீபு முறைவட்டமாய் அழைப்பிக்கவேண்டியது - அப்படிப்பட்டவர்களில் எவனாவது ஒருவன் பஞ்சாயத்துக்கு இருக்கமாட்டேனென்றால், அவனுக்கு முன்சீபானவர் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி - ரு - ஆற்காட்டு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கவேண்டியது - அதை அவன் செலுத்தாமற்போனால்; ௲அஎம்ஹி - ச - வது சட்டம் - ங௰ - வது பிரிவில் தீர்ப்புத்தொகையை வசூல்செய்யவேண்டியதற்காக விதித்திருக்கிற நியமப்படிக்கு அந்த அபராதரூபாய் ரு - க்கும்போதுமானவளாயில் அவனுடையசொத்தை ஜப்திசெய்வித்து தாலூகாமுன்சீபுக்குத் தெரியப்படுத்தி அவராலே அனுப்பப்படுகிற சேவகனைக்கொண்டு ஏலத்தில் விற்கிரயஞ் செய்வித்து மேற்படி அபராதத்தை வசூல்செய்யவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. ஒருகிராமத்திலே குடியிருக்கிறயோக்கியனானவன் அதற்கடுத்த மற்றொரு கிராமத்து பஞ்சாயத்துக்கு இருக்கிறேனென்று சம்மதித்தால் அவனை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

நான்காவது உட்பிரிவு. வாதி பிரதிவாதிகளிருவரும் ஜாதியிலுந் தொழிலிலும் வேறுபட்டிருந்தால், அவ்விதஜாதியும் தொழிலுமுடையவர்களை சரிக்குச்சரியாய் சாத்தியமானமட்டுக்கும் நியமித்து, பஞ்சாயத்துத்தொகை சரிப்பட வேண்டியதற்காக மேற்படி இரண்டுஜாதிக்குந் தொழிலுக்கும்வேறுபட்ட ஒருத்தனையாவது பலபேர்களையாவது வேண்டியமட்டும் ஏற்படுத்தி, பஞ்சாயத்துத்தொகையைச் சரிப்படுத்திவைக்கவேண்டியது.

ஐந்தாவது உட்பிரிவு. கிராமபஞ்சாயத்தாராக நியமிக்கப்பட்டவர்களிலே எவர்களையாவது - உபயவாதிகளில் ஒருவன் சம்மதியில்லையென்றுசொன்னால், அது கிராமமுன்சீபுக்கு நியாயமாய்காணுகிறபட்சத்தில் அவர்களுக்குப்பதிலாக வேறே மனிதர்களை ஏற்படுத்தவேண்டியது.

ஆறாவது உட்பிரிவு. உபயவாதிகளுந் தனித்தனியே - ௨ - பேரை ஏற்படுத்திக்கொண்டால், அப்போது கிராமமுன்சீபு மேற்படி உபயவாதிகளுக்கும் சம்மதியாயிருக்கிற ஒருவனை ஏற்படுத்தி பஞ்சாயத்துத்தொகையைச் சரிப்படுத்தவேண்டியது - அப்படி உபயவாதிகளும் ஏற்படுத்திக்கொள்ளாதபட்சத்தில் பஞ்சாயத்துமுழுதும் கிராமமுன்சீபினாலேயே ஏற்படுத்தப்படவேண்டியது; சாத்தியமானபோதெல்லாம் கட்சிக்காரர்கள் இரண்டுபேர்களை ஏற்படுத்திக்கொள்ளுகிறவழக்கத்தை நிவர்த்திக்கவேண்டியது.

௪. முதலாவது உட்பிரிவு. மேற்கண்டபடிக்கு கூட்டிவைத்த பஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்பப்படுகிற வியாச்சியங்களைக்குறித்து இதற்கடியில் சொல்லியிருக்கிற நிபந்தனைகள் பிரகாரம் நடப்பிக்கவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார் - விசாரணைக்கு முன்னதாக உபயவாதிகளிடத்திலேயும் தாங்கள் செய்யும் தீர்ப்புப்படிக்கு நடந்துகொள்ளுகிறதாக முச்சிலிக்கா எழுதிவாங்கிக்கொள்ளவேண்டியது - அதில் பஞ்சாயத்தாருடைய பெயர்களையுங்கண்டு, அதற்கு கிராமமுனிசீபுங் கணக்கனும், சாட்சியாய் கையெழுத்துப்போடவேண்டியது - அது எந்ததேதியில் எழுதப்பட்டதோ அந்ததேதியே அதில் போட்டிருக்கவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார் தங்களிடத்திலே உபயவாதிகளுக்கும் பதிலாக வழக்குகளைப் பேசுவதற்கு வக்கீல்களை ஏற்றுக்கொள்ளலாம் - அந்த வக்கீல்கள் ஷெ உபயவாதிகளுடைய பந்துவாயாவது, காரியஸ்தர்களாயாவது அவர்களை அனுசரித்துக்கொண்டிருக்கிற வர்களாயாவது இருக்கவேணும்: அப்படிப்பட்டமனுஷியாள் - இன்னவித சம்பந்தமுள்ள இன்

ணமனுஷியனை இன்னகாரியத்துக்காக நாங்கள் வக்கீலாகநேமி த்துக்கொண்டோமென்று மேற்படி உபயவாதிகளும் வகாலத் துநாமா எழுதிக்கொடுத்து ஏற்படுத்தப்பட்டவர்களாக இருக் கவேண்டியது - அந்தவக்கீல்கள் அந்தவழக்கத்தைக்குறித்து யாதொருகாரியமும் நடப்பதற்கு முன்னதாக அந்த வகால த்துநாமாவை பஞ்சாயத்தாருக்குக் காண்பிக்கவேண்டியது.

நான்காவது உட்பிரிவு. உபயவாதிகளாவது அவர்களுடை யவக்கீல்களாவது வந்து ஆஜரானபின்பு பஞ்சாயத்தார் வாதி யிடத்தில் பிராதுக்கடிதாசியை வாங்கிக்கொள்ளவேண்டியது- அந்த பிராதுக்கடிதாசியில் வியாச்சியத்துக் குண்டான ஏது இன்னதென்றும், வியாச்சியமூலம் பிறந்தகாலம் இன்னதென் றும், ஆர்பேரில் பிராது பண்ணப்பட்டதோ அவர்களுடை யபெயர்களும் அவர்கள் வாசமாயிருக்கிற இடமும் இன்னதெ ன்றும், பிராதுக்காரன் தாவாசெய்கிற சொத்து இன்னதென் றும், அதின்தொகையாவது மதிப்பாவது இவ்வளவென்றும் இதுமுதலாகிய அந்த வியாச்சியத்துக்கு வேண்டிய எல்லாச ங்கதிகளும் ஒன்றும்விடாமல் விவரித்து எழுதியிருக்க வேண் டியது.

ஐந்தாவது உட்பிரிவு. அந்த பிராதுக்கடிதாசியை பிரதி வாதிக்காவது அவனுடைய வக்கீலுக்காவது வாசித்துக்காட்ட வேண்டியது - அதற்கு தக்ஷணமே உத்தரவுகொடுக்க எத்தன ப்பட்டிருந்தால், அப்படியேயாவது அல்லது ஒருவாரத்துக் குள்ளே நிச்சயித்த தினத்திலாவது மேற்படி பிராதுக்கு உத் தரவு கொடுக்கும்படி பஞ்சாயத்தார் கட்டளை யிடவேண் டியது.

ஆறுவது உட்பிரிவு. அந்த உத்தரவில் பிரதிவாதி எழுத வேண்டிய எல்லா ஆக்ஷேபனைகளையும் ஒன்றும்விடாமல் அது வேமுடிவானதாக எழுதிக்கொடுக்கவேண்டியது - பின்பு ஏதா வது எழுதிக்கொடுத்தால் அதை பஞ்சாயத்தார் ஒப்புக்கொள் ளக்கூடாது.

ஏழாவது உட்பிரிவு. பிரதிவாதி அந்த உத்தரவைக்கொ டுத்தபின்பு கிராமபஞ்சாயத்தார் உபயவாதிகளுடைய சாசனத் தையும். சாட்சிகளுடைய ஜாபிதாவையும் வாங்கிக்கொண்டு

உபயவாதிகளுக்கும் சாக்ஷிகளுக்கும் இருக்கிற சந்தர்ப்பத்தை ஆலோசித்து மேற்படி வியாச்சியத்தை விசாரணைசெய்ய அடுத்தஒருதினத்தை ஏற்படுத்தவேண்டியது.

எட்டாவதுஉட்பிரிவு. அப்படி விசாரணைக்கு நிச்சயித்த தினத்தில் சாட்சிகள் ஆஜராகவேண்டியதைக்குறித்து சாட்சிஜ்ஞாபிதாவுடனேவிசாரணைக்கு நிச்சயித்ததினத்தை கிராமமுனிசீபுக்குபஞ்சாயத்தார் அறிவிக்கவேண்டியது - அப்படி அறிவித்தவுடனேகிராமமுன்சீபானவர் பஞ்சாயத்தார் விசாரணைக்கு நிச்சயம் பண்ணியிருக்கிறதினத்தில் சாக்ஷிக்காரரை ஆஜராய்வந்துகாத்திருக்கும்படி செய்யவேண்டியது.

ஒன்பதாவது உட்பிரிவு. வியாச்சியத்தின் சொத்து - உ௰ ஆற்காட்டு ரூபாய்க்கு மேற்பட்டதாயிருந்தால் உபய்வாதிகளுடைய முன்னிலையில் அந்தந்தசாக்ஷிகளுடைய ஜாதிமரியாதைக்குத்தக்கபடி தனித்தனியே ஓலையிலாவது காகிதத்திலாவது சாட்சிவாக்குமூலத்தை எழுதிவாங்கி அவர்களுக்கு வாசித்துக்காண்பித்து அதில் அவர்களுடைய கையெழுத்தாவது சைகையாவது போடும்படி செய்யவேண்டியது.

பத்தாவது உட்பிரிவு. வியாச்சியத்தின்சொத்து - உ௰ - ஆற்காட்டுரூபாய்க்கு குறைவாயிருந்தால் அப்படிப்பட்டவிஷயத்தில் கிராமபஞ்சாயத்தார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி சாட்சி வாக்குமூலங்களை எழுதியாவது வாங்கலாம்அல்லது வாய்மொழியாகவாவது கேட்கலாம்.

பதினோராவது உட்பிரிவு: சாட்சிக்காரனை அவசியமாய் சத்தியம் பண்ணுவிக்க வேணுமென்று கிராமபஞ்சாயத்தாருக்கு தோற்றும்போது அப்படி பண்ணுவிக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு.

பன்னிரண்டாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார் சாட்சிகளை விசாரணைசெய்யும்போது தங்கள் கேள்வியினாலேயே இந்தப்படி பதில் சொல்லவேண்டியதென்று தெரிந்துகொள்ளும்படியான கேள்விகளைக் கேட்கக்கூடாது - உண்மைவெளிப்படும்படியான கேள்விகளெதுவோ அதுகளைக்கேட்டு அதின்பே

ரில் தெரிந்துகொள்ளவேண்டியது - மேலும் சாட்சிக்காரனை விசாரணை செய்வதற்கு முன்னமே நீ உள்ளபடி சாட்சிசொல்லாமற்போனால் உன்னை சத்தியம் பண்ணுவிக்கிறதற்கு எங்களுக்கு அதிகாரமுண்டென்று தெரியப்படுத்தி சத்தியஞ்செய்வித்தாவது செய்வியாமலாவது பஞ்சாயத்தார் யுக்தப்படிக்கு நடத்தலாம்.

பதின்மூன்றாவது உட்பிரிவு. விசாரணைக்கு ஏற்படுத்தின தினத்தில் உபயவாதிகளாவது அவர்களில் எந்தகட்சிக்காரனாவது வக்கீலாவது ஆஜராகாமற்போனால் அந்தவிசாரணையை நிறுத்திவைத்து கிராமமுன்சீபுக்கு அறிவிக்க வேண்டியது - அதற்குமேல்அந்தகிராமமுன்சீபு அந்தவியாச்சியம் இன்னதேதியில் விசாரிக்கப்படுமென்று ஒருவிளம்பரம் எழுதி அந்த விளம்பரத்தை அந்தஊரில் எல்லாரும் பார்க்கும்படியான ஓரிடத்தில் ஒட்டிவைக்கவேண்டியது - அப்படி அந்தவிளம்பரத்தில் விசாரணைக்கு ஏற்படுத்திய நாள் அதுமுதல் ஐந்துநாளைக்கு உட்பட்டதாயிருக்கக் கூடாது.

பதினாலாவது உட்பிரிவு. மேற்படி விளம்பரத்தில் கண்டெழுதியதினத்தில் வாதியாவது அவனுடைய வக்கீலாவது ஆஜராகாமற்போனால் கிராமபஞ்சாயத்தார் வியாச்சியத்தைத் தள்ளிப்போடவேண்டியது - அப்படி வராமற்போனதற்கு தகுமான ஏதுவைக்காண்பித்தால் மறுபடியும் அங்கீகரிக்கவேண்டியது - தகுந்த ஏதுவைக்காண்பியாதவிஷயத்தில் அங்கீகரிக்கவேண்டியதில்லை.

பதினைந்தாவது உட்பிரிவு. பிரதிவாதியானவன் பிரியாதுக்கு உத்தரவுசொல்லாமற்போனாலும், வியாச்சியத்தை விசாரணைசெய்யவேண்டியதற்காக விளம்பரத்தில்குறித்த நாளில் ஆஜராகாமற்போனாலும், அப்போது கிராமபஞ்சாயத்தார் வாதியினுடைய சாதனங்களையுஞ் சாட்சிகளையும் பரிசோதித்து தீர்ப்புபண்ணவேண்டியது.

௫. சாட்சிக்காரன் வராமற்போனாலும், வந்தும் சாட்சிசொல்லமாட்டேனென்றாலும், அல்லது மேற்படி சாட்சிகளாவது வாதி பிரதிவாதிகளாவது அவர்களுடைய வக்கீல்களாவது

கிராமபஞ்சாயத்தாருக்கு அவமரியாதைசெய்தாலும், அந்தகிராமமுன்சீபு எல்லைக்கப்புறத்திலிருக்கிறவனுடைய சாட்சியம் தேவையாயிருந்தாலும், குலத்திலும் மேன்மையிலும் அழைப்பிக்கத்தகாதவர்களுடைய சாட்சியம் தேவையாயிருந்தாலும், அப்போதுகிராமபஞ்சாயத்தார் கிராமமுன்சீபுக்கு அந்தசங்கதியை தெரியப்படுத்தவேண்டியது - அதின்பேரில் கிராமமுன்சீபானவர் ௲அ௱௰௬௵ய ௪ - வது சட்டம் ௰௫ - ௰௬ - ௰௯ - வது பிரிவுகளின் தாற்பரியப்படிக்கு மேற்படி சங்கதிகள் தன்முன்பாக நடந்தால் எவ்விதமாய் நடப்பிப்பாரோ அந்தப்படிக்கே மேற்படி நியந்தனைப்பிரகாரம் சாட்சிகளை ஆஜர் செய்யவேண்டியதற்கும், சாட்சியத்தை சம்பாதித்துக் கொடுக்கவேண்டியதற்கும், அவமரியாதைக்கு தெண்டிக்கவேண்டியதற்கும், அவருக்கு இதனால் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

௬. உபயவாதிகளைக்கேட்டு ருசுக்களையெல்லாம் விசாரித்து அறிந்தபின்பு கிராமபஞ்சாயத்தார் மேற்படி உபயவாதிகளையும் சாட்சிகளையும் அப்புறத்திலே போகச்சொல்லி, தாங்கள் நியாயப்படிக்கும் உண்மைப்படிக்கும் தீர்ப்பை எழுதவேண்டியது.

௭. கிராமபஞ்சாயத்தார் செய்யுந் தீர்ப்பிலே கட்சிக்காரர்களுடைய பெயரும், விசாரணையான சாட்சிகளுடைய பேயரும், வாசித்தறிந்த சாதனங்களின் வகை இன்னதென்றும், பின்னையும் அந்தத்தீர்ப்பிலே முக்கியமான மூலமும் எதுவுமின்னதென்றுஞ் சுருக்கமா யெழுதவேண்டியதுமல்லாமல், தீர்க்கப்பட்டது பணமாகில் அதினுடைய தொகையும், மற்றுமுள்ள அசைக்கப்படுஞ் சொத்தாகில் அதினுடைய மதிப்பும் சரியாய் இவ்வளவென்றுங் கண்டெழுதி, அந்தத்தீர்ப்பிலே தீர்ப்புபண்ணின கிராமபஞ்சாயத்தார் தங்களுடைய கையெழுத்தாவது கைநாட்டாவது போட்டு தீர்ப்புபண்ணினதேதியையுங் கண்டெழுதவேண்டியது. (மூன்றாவது - பிரிவுமுதலாவது உட்பிரிவைப்பார்க்க.)

௮. கிராமபஞ்சாயத்தார் தாங்கள் செய்யுந்தீர்ப்புக்கு இரண்டுநகல் எழுதுவித்து லிபாபாபண்ணி முத்திரைபோட்டு

கிராமமுன்சீபினிடத்தில் கொடுக்கவேண்டியது - மேற்படி முன்சீபு அந்தக்ஷணமேயாவது, அல்லது பஞ்சாயத்தார் தீர்ப்புகொடுத்தநாள்முதல் மூன்றுநாளைக்குள்ளே ஒரு நாளிலாவது உபயவாதிகளையும் பஞ்சாயத்தாரையுங் கூடும்படிசெய்து, உபயவாதிகளின் முன்பாக மேற்படி முன்சீபு மேற்படி பஞ்சாயத்துத் தீர்ப்பின் லிபாபாவின்பேரில் போட்டிருக்கிற முத்திரையை உடைத்து, அந்தத்தீர்ப்பின் ஒவ்வொரு நகலின் பின்புறத்திலே இன்னதேதியில் கொடுக்கப்பட்டதென்று கணக்கனைக் கொண்டெழுதுவித்து, அதற்குத் தானும் கணக்கனும் பஞ்சாயத்தாரில் ஒருவனும் சாட்சியாக கையெழுத்துபோட்டு, அவ்விரண்டு தீர்ப்புநகலையும் தன்முன்பாக மேற்படி இரண்டு கட்சிக்காரருக்கும் தனித்தனியே பஞ்சாயத்தாரைக் கொடுக்கும்படி செய்யவேண்டியது. ஆனால் மேற்படி தீர்ப்புகொடுக்கப்படுவதற்கு முன்னமே அந்த தீர்ப்பின் மர்ம்மம் இப்படிப்பட்டதென்று முன்சீபுக்காவது கட்சிக்காரருக்காவது தெரியும்படி செய்யக்கூடாது.

௯. வாதியாவது பிரதிவாதியாவது அவர்களுடைய வக்கீல்களாவது தீர்ப்பின்நகலை வாங்கிக்கொள்வதற்கு ஆஜராகாமற்போனாலும், ஆஜராயும் நகலைப்பெற்றுக்கொள்ள நிராகரித்தாலும், அப்படிப்பட்ட கட்சிக்காரனுக்கு கொடுக்க தயார்செய்யப்பட்ட தீர்ப்புநகலின் பின்புறத்தில் அவனாகிலும் அவனுடைய வக்கீலாகிலும் ஆஜராகாமற்போனதையாவது, அல்லது ஆஜராயும் வாங்கிக்கொள்ள நிராகரித்ததையாவது தேதிசகிதமாய் கிராமமுன்சீபு கணக்கனைக்கொண்டெழுதுவித்து, அதில் தான் கையெழுத்துபோட்டு, அதற்கு சாட்சியாக கணக்கனும் பஞ்சாயத்தாரில் ஒருவனும் கையெழுத்துப்போடும்படி செய்யவேண்டியது. அப்பேர்க்கொத்த தீர்ப்பை கட்சிக்காரர் கேட்கும்போது கொடுப்பதற்காக கிராமகணக்கன்வசத்தில் வைத்திருக்கவேண்டியது.

௧௦. கிராமபஞ்சாயத்தார் செய்யும் விசாரணைவிவரங்களையெல்லாம் அவர்களில் ஒருவனாவது கிராமகணக்கனாவது எழுதவேண்டியது. பிராதுக்கும் அந்த பிராதுக்குச் சொல்லும் உத்தரவுக்கும் விவகாரகாரியங்களை நடப்பிக்கிறதற்காக எழுதும் கட்டளைகளுக்கும் முத்திராக்கடுதாசி வேண்டுவதில்லை.

௧௧. முதலாவது உட்பிரிவு. இந்தசட்டப்படி பஞ்சாயத்தார்செய்யுந் தீர்ப்புகளின்பேரில் அப்பீல்செய்துக்கொண்டால் அது பிடிக்கப்படாது - ஆனால் மேற்படி பஞ்சாயத்தார் மிகவும் பட்சபாதம்செய்தால் உபயவாதிகளிலே எந்த கட்சிக்காரனானாலும், அந்த பட்சபாதத்தைக்குறித்து செய்யும்பிராதை தன்னுடைய விவகாரமூலத் தொகையைக்குறித்து எவ்வளவு கிரயத்தையுடைய முத்திரைக்கடுதாசியில் எழுதவேண்டியிருக்குமோ அவ்வளவு கிரயத்தையுடைய முத்திரைக் கடுதாசியில்எழுதி ஜில்லா நியாயாதிபதி இடத்தில் கொண்டுபோகலாம்.

இரண்டாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார்செய்யும் எந்ததீர்ப்பின்பேரிலானாலும் கட்சிக்காரர் ஜில்லா ஜட்ஜியினிடத்தில் பிரியாது செய்துகொள்ளும்போது அந்த தீர்ப்புநகலுடனே பிரியாது செய்துகொள்ளவேணும் - அப்படிப்பட்ட பிரியாதை - உபயவாதிகளுக்காவது அவர்களுடைய வக்கீல்களுக்காவது ஷை தீர்ப்புநகலைக்கொடுத்த அல்லது கொடுக்கக் காண்பித்த நாள்முதற்கொண்டு முப்பதுநாளைக்குள்ளே செய்துகொள்ளவேணும் - அப்படிக்கில்லாத பிரியாதை ஜில்லா நியாயாதிபதி ஒப்புக்கொள்ளவேண்டியதில்லை.

மூன்றாவது உட்பிரிவு. அந்த பிரியாதை நியாயாதிபதி அங்கீகரித்தால் அந்தப்பிராதின் விசாரணை முடிவாகிறவரைக்கும் தீர்ப்புப்பிரகாரம் நடப்பியாமல் நிறுத்திவைக்கும்படி அந்த நியாயாதிபதி செய்யவேண்டியது.

நான்காவது உட்பிரிவு. கிராமபஞ்சாயத்தார் பக்ஷபாதஞ்செய்தார்களென்பது - நம்பத்தக்க இரண்டுபெயருக்குக் குறையாத சாட்சிகள் சத்தியத்தின்பேரில் சொல்லும் ருசுவினாலே நியாயாதிபதிக்குச் சரியாகத்தோற்றினால், விவகாரமூலச்சொத்து - தொகையிலாவது மதிப்பிலாவது எவ்வளவாயிருந்தாலும், அதைக்குறித்து நியாயாதிபதி தாம்செய்த விசாரணை விவரங்களையும் அதில் தமக்குத்தோற்றுகிற அபிப்பிராயத்தையும் பிறேவின்சையால் * நியாயசபையாருக்கு அறியப்படுத்தவே

[ * இப்போது ௲அ௱௬௯ஹ்த்திய - எ - வது ஆக்ட்டின்படிக்குபிறேவின்சையால் நியாயாதிபதிகளின் அதிகாரத்தை ஜில்லாஜட்ஜிகளே பெற்றிருக்கிறபடியால், அவர்களே அந்த பஞ்சாயத்தார் செய்யும் பக்ஷபாதத் தீர்ப்பைத் தள்ளிப்போடலா ]

ண்டியது. மேற்படி நியாயாதிபதி அறியப்படுத்தின விவரங் களினாலே அந்த பக்ஷபாதமாகிய குற்றம் அந்த பிரேரேவின் சையால் நியாயசபையாருக்கு ருசுவினாலே திருப்தியானால், அவர்கள் அந்தத்தீர்ப்பைத் தள்ளிவிடவேண்டியது - மேற்படி விவகாரிகள் தங்கள்வியாச்சியத்தை மற்றொரு பஞ்சாயத்தாரி டத்துக்காவது, அதை விசாரிக்கத்தக்க மற்றெந்த அதிகாரஸ்த ரிடத்துக்காவது கொண்டுபோகலாம்.

ஐந்தாவது உட்பிரிவு. ஆனால் மேற்சொல்லிய வியாச்சி யத்தின் பஞ்சாயத்தார்தீர்ப்புக்கு இரண்டாவது பஞ்சாயத்தா ர்செய்யுந் தீர்ப்பு ஒத்திருந்தால் அப்போது அந்த இரண்டா வதுதீர்ப்பே முடிவானதாக இருக்கவேண்டியது.

ஆறாவது உட்புரிவு. இந்தபிரிவின்படிக்கு ஜில்லாநியாயா திபதிக்குக் கொடுக்கும் பிராதுக்கடிதாசியை கட்சிக்காரனாவ து அவனுடைய அதிகாரம்பெற்ற கோர்ட்டு வக்கீலாவது கொ டுக்கவேண்டியது - அந்த வக்கீலுக்கு கட்சிக்காரன் ருஸ-௩-மு-௬ - அணா கொடுக்கவேண்டியது, அதுதவிர மற்றொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை.

௧உ. ஒருவனாலேயுண்டான சரீரதுன்பத்தைப் பற்றியநஷ்டி டத்தைக்குறித்து கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை கிராம முன்சீபு தான்அங்கிகரிக்கவும் பஞ்சாயத்தாரிடத்துக்கு விசா ரணைக்கு அனுப்பவுங்கூடாது.

௧௩. கிராமபஞ்சாயத்தார் - தாங்கள் விசாரிக்கிற விவகா ரங்களிலே நடந்தவிசாரணை விவரமுந் தீர்ப்புமெழுதப்பட்ட கடிதாசி அல்லது ஓலையினுடைய கிரயத்தைத் தீர்ப்பிலேசே ர்த்து வியாச்சியத்திலே தோற்றவனிடத்தில் வசூல் செய்யவே ண்டியதேதவிர, மற்றைப்படி ருசுமு, முத்திரைகாகிதக்கிரயம், சேவகன்படி இதுமுதலான எவ்விதசெல்வுகளையும் வசூல் செய்யக்கூடாது.

- ௰௪. து அாயிகுவேஸ்த்திய - ௪ - வது சட்டம் - ௨௨ - வது பிரிவுபடிக்கு கிராமமுன்சீபுகள் எவ்வளவுவட்டியை கூட்டிக் கொடுக்கும்படி அதிகாரத்தைப்பெற்றிருக்கிறார்களோ அதற்கு

ஜாஸ்தியாய் கிராமபஞ்சாயத்தார் தாங்கள்செய்யுந் தீர்ப்பிலே வட்டியை கூட்டிக்கொடுக்கக்கூடாது.

௧௫. பத்திரம் - சாஸனம் - இதுமுதலான தஸ்தாவேசுகளை அங்கீகரிக்கும் விஷயத்தில் - ௲அ௱௰௯(ஞ)த்திய - ௪ - வது சட்டம் - ௩௪ - வது பிரிவில்கண்ட நிபந்தனைகளின்படிக்கு கிராமபஞ்சாயத்தார் நடந்துகொள்ளவேண்டியது.

௧௬. முதலாவது உட்பிரிவு. இந்தசட்டப்பிரகாரங் கிராமபஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்பப்பட்ட வியாச்சியங்களில் அவர்கள் செய்யுந் தீர்மானங்கள் - ௱ - ஆற்காட்டு ரூபாய்க்கு மேற்படாமல் பணம் முதலான அசைக்கப்படுஞ் சொத்தைக் குறித்ததாயிருந்தால், அப்படிப்பட்ட தீர்மானங்களை - ௲அ௱௰௯(ஞ)த்திய - ௪ - வதுசட்டம் ௩௰ - வது பிரிவில்கண்ட நிபந்தனைகளின்படிக்கு கிராம முன்சீபுகள் நிறைவேற்றவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. ௱ - ரூபாய்க்குமேற்பட்டு-௨௱- ரூபாய்வரையிலும் இருக்கிற பணமுதலான அசைக்கப்படுஞ் சொத்தைக்குறித்த வியாச்சியங்களில் கிராமபஞ்சாயத்தார் செய்யுந் தீர்மானங்களை நிறைவேற்றவேணுமென்று கட்சிக்காரன் கேட்டுக்கொண்டால், அந்தப்படிக்கு தாலூகாமுன்சீபு நடப்பிக்கவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. மேற்சொல்லியிருக்கிற தொகையையுடைய தீர்ப்புகள்தவிர கிராமபஞ்சாயத்தாராலே தீர்க்கப்படும் மற்ற எல்லாதீர்ப்புகளும் ஜில்லா ஜட்ஜியவர்களால் சட்டப்படிக்கு நிறைவேற்றப்படவேண்டியது.

௧௭. மேற்கண்டபஞ்சாயத்தார் செய்ததீர்ப்பை நிறைவேற்றும்படி, தீர்ப்புத்தொகையை பெறவேண்டிய கட்சிக்காரன் ஜில்லாஜட்ஜிக்கு கொடுக்கவேண்டிய விண்ணப்பத்தை தீர்ப்புத்தொகையை அனுசரித்து நிர்ணயமான விலையுள்ள முத்திரைக்கடிதாசியில் எழுதிக்கொடுக்கவேண்டியது. அந்தவிண்ணப்பத்தை கட்சிக்காரர்கள் சுதாவாயாவது, அதிகாரம்பெற்ற கோர்ட்டு வக்கீல்மூலமாயாவது ஜில்லாஜட்ஜிக்குக் கொடுக்கலாம்; ஆனால், அந்தவக்கீலுக்கு கட்சிக்காரன் - ௪ - அணா ருசும்மாத்

திரங் கொடுக்கவேண்டியதேதவிர அதிகமாய் கொடுக்கவேண்டியதில்லை - மேற்படி விண்ணப்பத்தைக்குறித்து வேறே எவ்விதமான செலவும் வாங்கக்கூடாது.

௧அ. முதலாவது உட்பிரிவு. கிராம பஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்பப்பட்ட வியாச்சியங்களில் அவர்களில்யாராவது லஞ்சம்வாங்கிக்கொண்டு நம்பிக்கைக்கு விரோதமாய் நடத்தினர்களென்று ஜில்லா ஜட்ஜியிடத்தில் உபயகட்சிக்காரர்களில் ஒருவன் பிராதுசெய்தால், அதற்கு அப்படி நடத்தினவர்கள் உத்தரவுசொல்லத் தக்கவர்களாவார்கள். அப்படிக்கு லஞ்சம் வாங்கினர்களென்றுகொண்டுவரப்பட்ட தாவா, ஜில்லாஜட்ஜிக்கு திருப்திகரமாய் ருசுவாகிறபட்சத்தில், அப்படிப்பட்டகுற்றவாளி லஞ்சம்வாங்கின தொகைக்கு மூன்றத்தனைதொகையை கோர்ட்டுச்செலவுடனே பிரியாதிக்குக் கொடுக்கும்படி ஜில்லா ஜட்ஜி தீர்மானிக்கவேண்டியது - ஆனால் கிராமபஞ்சாயத்தார் - வியாச்சியவிசாரணையுநு் தீர்ப்பிலும் ஆலோசனை தப்பைக் குறித்தாவது ஒழுங்கு தப்பைக்குறித்தாவது செய்யப்பட்டபிரியாதுக்கு உத்தரவு சொல்லத்தக்கவர்களல்ல; மேற்படி பஞ்சாயத்தார் லஞ்சம்வாங்கினதாக கட்சிக்காரர் ஜில்லா ஜட்ஜியிடத்தில் செய்யும்பிராது மேற்படி நியாயாதிபதிக்குச் சரியானதென்று நினைக்கத்தகுந்த காரணம் காணப்படாமற் போனாலும், பிரியாது செய்யப்பட்டகாரியம் எந்தகாலத்தில் நடந்ததோ அதற்கு மூன்றுமாசத்திற்குள்ளே அந்தபிரியாது கொடுக்கப்படாமற்போனாலும், அப்போது பஞ்சாயத்தார்பேரில் நியாதிபதிகள் யாதொரு உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

இரண்டாவது உட்பிரிவு. லஞ்சம்வாங்கின சங்கதியைக்குறித்து செய்யப்படும் விசாரணையிலே, எந்த கட்சிக்காரனாவது அவனுக்காக மற்றொருவனாவது லஞ்சங்கொடுத்திருந்துஅதை அந்த கட்சிக்காரன் ஒப்புக்கொண்டால் அப்போது பஞ்சாயத்தாருக்கு லஞ்சம் கொடுத்தசொத்து அல்லது தொகைக்குச் சரியானதொகை அந்த கட்சிக்காரனுக்கு நியாயாதிபதி அபராதம்போடவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார்பேரில் லஞ்சம்வாங்கினதாக செய்யப்படும் பிராதை ஜில்லா நியாயாதிபதிக்குருசு

ப்படுத்திவையாத கட்சிக்காரனை அந்த வியாச்சியத்திலுண்டாகிய எல்லாச்செலவுகளையும், மானநஷ்டத்தைக்குறித்து யுக்தமாய்த்தோற்றுகிற தெவ்வளவோ அவ்வளவையும் பஞ்சாயத்தாருக்குக்கொடுக்கும்படி நியாயாதிபதி தீர்ப்பு செய்யவேண்டியது. மேலும் பஞ்சாயத்தார் எவ்வளவு லஞ்சம்வாங்கினதாக அந்தகட்சிக்காரன் சொன்னனோ அவ்வளவு தொகையை அவனிடத்தில் அபராதமாக வாங்கவேண்டியது.

---

பஞ்சாயத்தைக்குறித்த

# ௲௮௱௰௬ ஹு௵த்து - ௧௨ - வது சட்டம்.

## பீடிகை.

நிலங்களைக்குறித்தாவது பயிர்களைக்குறித்தாவது தாவா செய்யப்பட்டால் அந்ததாவா எல்லைத்தகராரைப் பரிஷ்காரஞ் செய்வதினால் நிச்சயப்பட வேண்டியதாயிருக்கிற பட்சத்தில் அப்படிப்பட்ட தாவாவையும், நிலத்தின் அனுபோகத்தைக்குறித்தும் சாகுபடி செய்வதைக்குறித்தும் தண்ணீர் பாய்ச்சுகிறதைக்குறித்தும் உண்டாகிற சிலவிவாதங்களையும் விசாரித்துத்தீர்க்கும்படி கிராம பஞ்சாயத்தாரிடத்துக்கும் தாலூகா பஞ்சாயத்தாரிடத்துக்கும் அனுப்புவிக்கிறதற்கு கலெக்டர்களுக்கு அதிகாரங் கொடுக்கிறதற்காகவும், ஷை விவகாரங்களை இன்னபடி விசாரணை செய்யவேணுமென்பதற்கும் பஞ்சாயத்தார் செய்யுந்தீர்ப்பை இன்னபடி நிறைவேற்றவேணுமென்பதற்கும் நிபந்தனைகளேற்படுத்துவதற்காகவும் உண்டாகிய சட்டம். இது ௲௮௱௰௬ ஹு௵ செப்டம்பர் ௴ ௰௯௨ ஆலோசனைசபையிலுள்ள மிகவுங் கனம்பொருந்திய கவர்னரவர்களால்ஜாரிசெய்யப்பட்டது.

௧. விவாதப்பட்ட நிலங்களைக்குறித்தும் பயிர்களைக்குறித்தும் உண்டாகிய வியாச்சியங்களை ௲௮௱௨ ஹு௵ - ௩௰௨ - வது சட்டம் - * ௨ - வதுபிரிவில் கண்டிருக்கிறபடிக்கு விசாரணை

---

* ௲௮௱௨ ஹு௵ - ௩௰௨ - வது சட்டமானது - ௲௮௱௨௰ ஹு௵ - ௫ - வது சட்டம் - ௰ - வது பிரிவினால் ரத்துசெய்யப்பட்டது.

நடத்துவதினாலே கட்சிக்காரர்களுக்குப் பிரயாச முண்டாகிறதென்று தோற்றுகிறபடியினாலும், சாஸ்வதமாயாவது சிலவருஷத்திற்காவது பேரீஜு நிஷ்கரிஷையான ஜில்லாக்களிலே நிலத்துக்குடையவர்களாயும் நிலக் குத்தகைதாரர்களாயும்இருக்கிறவர்களுக்கும் அவர்களுக்குட்பட்ட குடிகளுக்கும் நிலத்தின் அனுபோகத்தைக் குறித்தும் சாகுபடி செய்வதைக்குறித்தும் தண்ணீர் பாய்ச்சுகிறதைக்குறித்தும் உண்டாகிறவியாச்சியங்கள் ஜில்லாக்கோர்ட்டில் விசாரிக்கப்படுவதினாலே மேற்சொல்லியபடியே கட்சிக்காரர்களுக்குப் பிராயச முண்டாகிறதென்று தோற்றுகிறபடியினாலும்; அப்படிப்பட்ட வியாச்சியங்களைவிசாரித்துத் தீர்க்கிறதற்கு பின்னுஞ் சிலநிபந்தனைகள் ஏற்படுத்துவதும் - அந்தவியாச்சியங்களை கிராம பஞ்சாயத்தாரிடத்துக்கும் தாலூகா பஞ்சாயத்தாரிடத்துக்கும் விசாரணைக் கனுப்பும்படி கலெக்டர்களுக்கு அதிகாரங் கொடுப்பதும் தகுதியாயிருக்கிறபடியால், சென்னபட்டணத்து துரைத்தனத்துக்குட்பட்ட ஜில்லாக்களிலே வழங்கும்படி ஆலோசனை சபையிலுள்ளகவர்னரவர்களால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்;—

௨. இந்தசட்டப்படி கிராமமுன்சீபு மூலமாயும் தாலூகா முன்சீபு மூலமாயும் ஜில்லா கலெக்டர்களால் அனுப்பப்படுகிற வியாச்சியங்களை கிராமபஞ்சாயத்தாரும் தாலூகாபஞ்சாயத்தாரும் விசாரித்துத் தீர்ப்புசெய்யலாம். †

† பஞ்சாயத்தாருக்கு ஜில்லா ஜட்ஜியானவர் யாதொரு உத்தரவு பிறப்பிக்கலாமென்றும், பஞ்சாயத்தில் கட்சிக்காரர்கள் ராஜிநாமா தாக்கல்செய்யலாமென்றும், ௲௮௱௨௮௵ பிப்பரவரிமீ ௨௮௳ சதர்க்கோர்ட்டு சர்க்கியுலர் உத்தரவில் கண்டிருக்கிறது; பஞ்சாயத்தாரில் ஒருவர் இறந்துபோனால், அந்த பஞ்சாயத்துமுழுதும் தள்ளுபடி யாகுமென்று - ௲௮௱௨௮௵ மார்ச்சிமீ ௨௭௳ சதர்க்கோர்ட்டு சர்க்கியுலர் உத்தரவில் கண்டிருக்கிறது.

[குத்தகை அல்லது சர்க்கார் கிஸ்திபாக்கியைக்குறித்தாவது பணமாகவாகிலும் தானியமாகவாகிலும் செலுத்தவேண்டிய மேல்வாரவீதத்தைக்குறித்தாவது, தானியத்தைப் பங்கிடவேண்டிய வீதத்தைக்குறித்தாவது, நிலம் அல்லது பயிரின் அனுபோகத்தைக் குறித்தாவது தன்னிடத்துக்குவருகிற எல்லாவியாச்சியங்களையும், கலெக்டரானவர் - உபயவாதிகளும் சம்மதிக்கிற பட்சத்தில், தாலூகாபஞ்சாயத்தாரிடத்துக்காவது கிராமபஞ்சாயத்தாரிடத்துக்காவது விசாரணைக்கு அனுப்பலாமென்றும், கலெக்டரானவர் - தன்னிடத்துக்குவருகிற வியாச்சியங்களில் - ௲௮௱௰௬௵. ௫ - வது - ௭ - வது சட்டங்க

ளால் கிராமமுன்சீபுகளுக்கும் தாலூகா முன்சீபுகளுக்கும் உண்டாகிய அதிகாரங்களை தானே செலுத்தலாமென்றும், ௲௮௱௨௰௨௵ - ௫-வதுசட்டம் - ௰௫ - வது பிரிவில் விதித்திருக்கிறது.]

௩. இந்தசட்டப்படி ஜில்லா கலெக்ட்டர்க ளிடத்திற்குக் கொண்டுவரப்படும் வியாச்சியங்களில் வாதி பிரதிவாதிகள் - தங்களுக்கு பதிலாக வியாச்சியத்தை நடத்துவதற்கு தங்களுடைய பந்துவாயிருக்கிறவனையாவது தங்களுக்குட்பட்ட காரியஸ்தனையாவது தங்களைச்சார்ந்தவனையாவது வக்கிலாக ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படி ஏற்படுத்திக் கொள்ளும்போது, தாலூகா முன்சீபுகளிடத்துக்குக் கொண்டுவரப்படுகிற வியாச்சியங்களில் - ௲௮௱௰௩௵ ௩ - வது சட்டம் ௰௪ - வதுபிரிவு ௨ - வது ௩-வது உட்பிரிவுகளில் சொல்லியிருக்கிற நிபந்தனைப்படிக்குச் செய்யவேண்டியது.

[அந்தநிபந்தனை என்னவென்றால்;—வாதி பிரதிவாதிகள் மேற்சொல்லியபடி வக்கிலை யேற்படுத்திக்கொள்ளும் போது, அந்தவக்கில் தங்களுக்கு இன்னவிதத்தில் பாத்தியஸ்தனென்றும், இன்னவியாச்சியத்தை நடத்த அவன் வக்கிலாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டானென்றும் வகாலத்துநாமா எழுதி அவனுக்குக் கொடுக்கவேண்டியது. அந்தமனிதன் அப்படிப்பட்ட வகாலத்துநாமாவைக் கொண்டுவந்து காட்டாவிட்டால், அவன் வக்கிலாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டான்.]

௪. முதலாவது உட்பிரிவு. சாஸ்விதமாய் பேரீஜு நிஷ்கரிஷை செய்யப்பட்டாவது செய்யப்படாமலாவது இருக்கிற ஜில்லாக்களிலே நிலங்களைக்குறித்தாவது பயிர்களைக் குறித்தாவது தாவாசெய்யப்பட்டால், அந்த தாவா - தகராரிலிருக்கிற எல்லையைக்குறித்துத் தீர்மானஞ்செய்வதினாலே நிச்சயிக்கப்படவேண்டியதா யிருக்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட வியாச்சியங்களையும், சாஸ்விதமாயாவது சிலவருஷத்துக்காவது பேரீஜு நிஷ்கரிஷையாயிருக்கிற ஜில்லாக்களிலே நிலத்தின் அனுபோகத்தைக்குறித்தும் சாகுபடி செய்வதைக்குறித்தும், தண்ணீர் பாய்ச்சுவதைக்குறித்தும், நிலத்துக்குடையவர்களாயாவது குத்தகைக்காரர்களாயாவது இருக்கிறவர்களுக்கும் அவர்களுக்குள்பட்ட குடிகளுக்கும் உண்டாகிற வியாச்சியங்களையும், வியாச்சியக்காரர்கள் - சுதாவாகவாவது வகில் மூலமாகவாவது அந்த விவாதப்பட்ட நிலம் எந்தஜில்லாவி லிருக்கிறதோ அந்த ஜில்லா கலெக்ட்டரிடத்துக்குக் கொண்டுபோகலாம்.

[சாஸ்வீதபேரீஜூ ஏற்பட்டாவது ஏற்படாமலாவது இருக்கிறஜில்லாக்களிலே நிலத்தின் அனுபோகத்தைக்குறித்தும் சாகுபடிசெய்வதைக்குறித்தும் தண்ணீர் பாய்ச்சுவதைக்குறித்தும் குடிகளில் ஒருவரோடொருவருக்கு உண்டாகிற விவாதங்களையும் மேற்சொல்லியபடி கலெக்ட்டரிடத்தார்க்குக் கொண்டுபோகலாமென்று - ௲அ௱உ௰ - ௫ - வது சட்டம் - ௰அ - வது பிரிவில் சொல்லியிருக்கிறது.]

இரண்டாவது உட்பிரிவு. நிலத்தைக்குறித்து பிரியாது செய்யப்பட்டால், அந்த பிரியாதுக்கடிதாசியிலே - அந்தநிலமிருக்கிற இடமும், அதின் எல்லையும், அளவும், அதில் வருஷித்திலேகண்டு முதலாகிறமாசூலின் மதிப்பும், அதற்கு வரியிறை உண்டோ யில்லையோ அதுவும், அந்த வியாஜ்யமூலம் உண்டானகாலமும், பிரதிவாதிகளுடைய பேரும் இருப்பிடமும், மற்றுமுள்ள முக்கியமான சங்கதிகளும் விவரமாயெழுதி யிருக்கவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. தண்ணீரைக்குறித்து பிரியாதுசெய்யப்பட்டால், அந்த பிரியாதுக்கடிதாசியிலே தண்ணீர்பாய்ச்சவேண்டிய நிலத்தைக்குறித்து மேற்கண்ட விவரப்படி எழுதவேண்டியது மல்லாமல், அந்த விவாதநிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவதைக்குறித்து கிராமத்திலுண்டான மாமூல் என்னமோ அதையும் எழுதவேண்டியது.

௫. [ஒன்றுமுதல் ஐந்தாவது உட்பிரிவுவரையில் கலெக்ட்டர்கள் சம்மன் அனுப்புகிறது முதலான சங்கதிகளைச்சொல்லி யிருப்பதால் இங்கே விட்டுவிடப்பட்டது.]

ஆறாவது உட்பிரிவு. பிராது நிஜமல்லவென்று பிரதிவாதிசொன்னால், அப்போது கலெக்ட்டர் - அந்தவியாச்சியத்தைக்கிராம பஞ்சாயத்தார் விசாரித்துத் தீர்ப்பது உங்களிருவருக்குஞ் சம்மதமாவென்று உபயவாதிகளைக் கேட்கவேண்டியது. இன்ன கிராமபஞ்சாயத்தார் விசாரித்துத் தீர்ப்புபண்ணும்படி செய்தால் எங்களுக்குச் சம்மதந்தானென்று அவர்கள் எழுதிக்கொடுத்தால் கலெக்ட்டர் - அந்தப்பிரியாது அர்ஜியையும் அதினுடனே அந்தவியாச்சியத்தை விசாரித்துத் தீர்க்கும்படி தாமசப்படுத்தாமல் பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கிறதற்காகப் பிறப்பிக்கும் உத்தரவையும் அந்தக் கிராமமுன்சீபினிடத்துக்கு அனுப்புவிக்கவேண்டியது.

ஏழாவது உட்பிரிவு. வியாச்சியத்தைக் கிராமபஞ்சாயத்தா ரிடத்துக்கு அனுப்புவிக்க இரண்டுகட்சிக்காரர்களில் எவனாவது சம்மதிக்காமல் தாலூகா பஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்புவிக்கும்படி அர்ஜியெழுதிக்கொண்டால், அப்படி அனுப்புவிப்பதற்கு மற்றொரு கட்சிக்காரன் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும், கலெக்ட்டரானவர் - விவாதப்பட்ட சொத்து எவ்விடத்திலிருக்கிறதோ அந்ததாலூகா முன்சீபினிடத்துக்கு ஷெ பிராதையும், வியாச்சியத்தை விசாரித்து தீர்ப்புசெய்கிறதற்கு பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கும்படி பிறப்பிக்கிற உத்தரவையும் அனுப்புவிக்கவேண்டியது; அந்த உத்தரவிலே - அதுவந்துசேர்ந்த பதினைந்து நாளைக்குள்ளாக பஞ்சாயத்தைக் கூட்டிவைக்கவேணுமென்று கண்டெழுதவேண்டியது.

எட்டாவது உட்பிரிவு. தாலூகா பஞ்சாயத்தாரிடத்துக்கு வியாச்சியத்தை அனுப்புவிக்கிறது உபயவாதிகளுக்குஞ் சம்மதப்படாமற் போனால், அந்தவியாச்சியத்தைக் கலெக்ட்டர் தள்ளிப்போடவேண்டியது - பின்பு அந்த கட்சிக்காரர்கள் ஜில்லாகோர்ட்டுக்காவது வேறே தகுந்த யாதொரு அதிகாரியினிடத்துக்காவது அந்த வியாச்சியத்தைக் கொண்டுபோகலாம்.

௯ முதலாவது உட்பிரிவு. கிராமபஞ்சாயத்தாரையும் தாலூகா பஞ்சாயத்தாரையுங் கூட்டிவைக்கிறதற்கு விதித்திருக்கிற நிபந்தனைகளின்படி, அவர்களைக் கூட்டிவைக்க வேண்டியது. அந்த பஞ்சாயத்தார் - இந்த சட்டப்பிரகாரம் தங்களிடத்துக்கு அனுப்பிவிக்கப்பட்ட வியாச்சியங்களை விசாரணைசெய்கையில் - ௲அாயகூ௵ - ௫ - வது சட்டத்திலும் - எ - வது சட்டத்திலும் * அவர்கள் நடந்துகொள்ள வேண்டியதைக்குறித்துச் சொல்லியிருக்கிற பொதுவான நிபந்தனைகளையும், இதற்கடியில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளையும் அனுசரித்து நடந்துகொள்ளவேண்டியது.

[இரண்டாவது உட்பிரிவு. இது தாலூகா பஞ்சாயத்தைக் குறித்துமாத்திரஞ் சொலலியிருக்கிறபடியால் இங்கே விட்டுவிடப்பட்டது.]

---

* ௲அாயகூ௵ - எ - வது சட்டமானது தாலூகா பஞ்சாயத்தாரைக் குறித்துச் சொல்லியது.

மூன்றாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார் தீர்ப்புசெய்து, அந்ததீர்ப்புக்கு இரண்டு நகலெழுதினவுடனே, அதை உபயவாதிகளையும் வைத்துக்கொண்டு வாசித்துக் காட்டவேண்டியது. பின்பு அந்த இரண்டு நகல்களையும் லிபாபாசெய்து முத்திரைபோட்டு முன்சீபினிடத்தில் ஒப்பிக்கவேண்டியது - அந்தமுன்சீபு - முத்திரையுடனே அது தன்னிடத்துக்கு எப்படி வந்ததோ அந்தப்படிக்கே அதை கலெக்ட்டரிடத்துக்கு அனுப்பவேண்டியது.

நாலாவது உட்பிரிவு. இந்த சட்டப்படி கலெக்ட்டரால் அனுப்பப்படுகிற வியாச்சியங்களிலே கிராமபஞ்சாயத்தாரும் தாலூகாபஞ்சாயத்தாரும் செய்கிறதீர்ப்பை கலெக்ட்டர் உறுதிப்படுத்துகிறவரையில் அந்தத் தீர்ப்புப்பிரகாரம் நடப்பிக்கவுங்கூடாது; பஞ்சாயத்தார் மிகவும் பட்சபாதஞ்செய்தார்களென்கிற ஏதுவைப்பற்றியல்லாமல் வேறே யெந்த ஏதுவைப்பற்றியாவது அந்தத்தீர்ப்பைத் தள்ளிப்போடவுங் கூடாது.

எ. மேற்படி தீர்ப்பு முத்திரைபோட்டு எப்படி கட்டி வந்ததோ அந்தப்படியே அதை கலெக்ட்டரானவர் இருபது நாள்வரைக்கும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருந்து, அந்த இருபதுநாளைக்குள்ளே உபயவாதிகளில் யாராவது பஞ்சாயத்தார் மிகவும் பட்சபாதஞ்செய்தார்களென்று பிராது பண்ணமற்போனால், அவர் அந்தக்கட்டைப்பிரித்து, அதிலிருக்கிற இரண்டு நகல்களிலும் தன்கையெழுத்தும் முத்திரையும்போட்டு தீர்ப்பை உறுதிப்படுத்தி, அதுகள் யாரிடத்திலிருந்துவந்ததோ அந்த முன்சீபினிடத்துக்கு மறுபடியும் அனுப்புவிக்கவேண்டியது.

அ. முதலாவது உட்பிரிவு. அப்படி கலெக்ட்டர் மறுபடியும் அனுப்புகிற தீர்ப்புநகல்களை முன்சீபானவர் வரப்பற்றிக்கொண்டதின்பேரில், அவர் உபயவாதிகளையும் அழைப்பித்து அவர்களுக்கு அந்த நகல்களில் ஒவ்வொன்று கொடுக்கவேண்டியது.

இரண்டாவது உட்பிரிவு. அந்தத் தீர்ப்புநகலை வாங்கிக்கொள்ளுவதற்கு வாதியாவது பிரதிவாதியாவது அவர்களுடைய வக்கீலாவது வராமற்போனாலும், வந்தும் - அந்த நகலை

வாங்கிக்கொள்ள மாட்டோமென்றாலும், அந்தசங்கதியை தே திகண்டு அந்தநகலின் பின்புறத்தில் முனிசீபானவர் எழுது வித்து, அதில் தன்கையெழுத்துபோட்டு நம்பத்தகுந்த இரண் டுசாட்சிகளுடைய கையெழுத்தும் போடுவிக்க வேண்டியது. அப்படிப்பட்ட நகலை அந்த கட்சிக்காரன் பின்பு வந்துகே ட்கும்போது அவனுக்குக் கொடுக்கும்படியாக - அது தாலூ கா பஞ்சாயத்துத் தீர்ப்புநகலானால் தாலுகா முனிசீபினிடத் திலும், கிராமபஞ்சாயத்துத் தீர்ப்புநகலானால் கிராமகணக் கனிடத்திலும் வைத்திருக்கவேண்டியது.

க. முதலாவது உட்பிரிவு. மேற்கண்ட இருபதுநாளை க்குள்ளே உபயவாதிகளில் யாராவது பஞ்சாயத்தார் மிகவும் பட்சபாதஞ் செய்தார்களென்று பிரியாது செய்துகொண்டா ல், அந்தப்பிரியாது - குறைந்தது இரண்டு நம்பிக்கையுள்ள சாட்சிகள் பிரமாணபூர்வகமாய்ச் சொல்லுகிற சாட்சியத்தினா லே பூர்த்தியாய் ருசுவாகிற பட்சத்தில், வியாச்சியத்தின் தொகையாவது மதிப்பாவது எவ்வளவா யிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், கலெக்டரானவர் - அந்தப்பிரியாது சங்க தியில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளையும் அதைக்குறித்து த னக்குண்டாகிய அபிப்பிராயத்தையும் எழுதி புரோவின்ஷி யால் கோர்ட்டுக்கு †, அனுப்பவேண்டியது. அந்தக்கோர்ட் டார் - அந்தநடவடிக்கைகளினாலே அந்தப்பிரியாது ருசுவாகிற பட்சத்தில், அந்தத்தீர்ப்பை ரத்துசெய்யவேண்டியது. பின்பு அந்தகட்சிக்காரர்கள் தங்கள் வியாச்சியத்தை வேறொரு பஞ் சாயத்தா ரிடத்துக்காவது கொண்டுபோகலாம், யாதொரு த குந்த அதிகாரரியினிடத்துக்காவது கொண்டுபோகலாம்.

இரண்டாவது உட்பிரிவு. ஆனால், மேற்சொல்லிய வியா ச்சியத்தைக்குறித்து முந்தின பஞ்சாயத்தார் செய்ததீர்ப்புப்பி ரகாரம் இரண்டாவது பஞ்சாயத்தாரும் தீர்ப்புசெய்தால், அ ந்த இரண்டாவதுதீர்ப்பே முடிவானதாகும்.

மூன்றாவது உட்பிரிவு. பஞ்சாயத்தார் பட்சபாதம் பண் ணினார்களென்று செய்யப்பட்டபிரியாது - கலெக்டருக்குத்

---

† ௲அ௭௱௬௲௫ - எ - வது ஆக்ட்டின்படி புரொவின்ஷியால் கோ ர்ட்டுக்கு வதிலாக ஜில்லாகோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது.

திருப்தியாகும்படி ருசுவாகாவிட்டால், அந்த பஞ்சாயத்தார் செய்ததீர்ப்பை - இந்தசட்டம் - ௭ - வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்கு கலெக்ட்டரானவர் உறுதிப்படுத்தி, அப்படி வீணுகப் பிராதுபண்ணினவனிடத்திலே நூறு ஆற்காட்டு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம்வாங்கவேண்டியது.

௧௦. இந்தசட்டப்படி கிராம பஞ்சாயத்தாரிடத்துக்கும் தாலூகா பஞ்சாயத்தாரிடத்துக்கும் அனுப்பப்படுகிற வியாச்சியங்களிலே எவன்பட்சத்தில் அவர்கள் தீர்ப்பு செய்கிறார்களோ அந்த கட்சிக்காரனானவன் அந்த தீர்ப்புப்பிரகாரம் நடப்பிக்கவேணுமென்று அர்ஜி யெழுதிக்கொண்டால், அதின் பேரில் கலெக்ட்டராவது, தாலூகா தாசில்தாராவது, இந்ததேசஸ்தனாகிய பிரதான ரிவினியூ உத்தியோகஸ்தனாவது அந்த தீர்ப்பை நிறைவேற்றவேண்டியது. எப்படிக்கென்றால், எல்லைத் தகராரைக்குறித்து வியாச்சியங் கொண்டுவந்திருந்தபட்சத்தில், கிராமமுன்சீபையும் கணக்கனையும் கிராமத்துப் பெரியகுடிகளிலே இரண்டு அல்லது பலபேரையும் கூடவைத்துக் கொண்டு அந்த எல்லைக்கு அடையாளம் போடுவிக்கவேண்டியது. இதுதவிர மற்றெல்லா வியாச்சியங்களிலும், நிலத்தை ஒப்பிக்கும்படி தீர்ப்பில் கண்டிருந்தால் - அந்தப்படியே நிலத்தைவிடும்படி செய்யவேண்டியது; தண்ணீர்பாய்ச்சும்படி தீர்ப்பில் கண்டிருந்தால் அந்தப்படியே தண்ணீர்பாய்ச்சும்படி செய்யவேண்டியது.

௧௧. இந்தசட்டப்படி கலெக்ட்டரிடத்துக்கு வியாச்சியங்கொண்டுவந்தால்; அதற்கு முத்திரைக்கடுதாசி செலவு எவ்வளவுமில்லை. அந்த வியாச்சியம் கிராமபஞ்சாயத்தாராலே தீர்க்கப்பட்டால், ௲அ௱௰௬ ஸ்ரு - ௫ - வது சட்டத்தில் கண்டிருக்கிற செலவுகளையும், தாலூகா பஞ்சாயத்தாராலே தீர்க்கப்பட்டால் - ௲அ௱௰௬ ஸ்ரு - ௭ - வது சட்டத்தில் கண்டிருக்கிறசெலவுகளையும் கொடுக்கவேண்டியதே யல்லாமல் வேறொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை.

௧௨. இந்தசட்டப்படி பஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்பப்பட்ட வியாச்சியங்களிலே, அவர்கள்செய்யுந் தீர்ப்புகளை

கிராமமுன்சீபுகளும் தாலூகா முன்சீபுகளும் மாசமாசம் தாங்களனுப்புகிற ரிபோர்ட்டுகளில் கண்டெழுதவேண்டியது.

௧௬. அந்தந்த கிராமக்கணக்கனுக்கு இந்தசட்டத்தின் பிரதிகளிலே ஒவ்வொன்று கொடுக்கவேண்டியது - அந்தகணக்கப்பிள்ளைகள் அதுகளை பத்திரமாய்வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் கிராமமுன்சீபுக்கு விவரமாய்த் தெரிவிக்க வேண்டியது.

---

௲அ௱ம௲௩ஹு௰த்து

௧௧ - வது சட்டத்திலுள்ள

# கிராமபோலீசுநிபந்தனைகள்.

---

அ. * கிராமப் பெரியதனக்காரர்கள் - தங்கள் தங்கள் கிராமங்களிலே குற்றம் நடத்திருக்கிறதாகவும், திருடர்கூட்டமாவது அனுமானிக்கப்பட்டவர்களாவது வந்து மறைந்திருக்கிறதாகவும் கேள்விப்படுகிற சமாசாரங்களை ஒருவருக்கொருவர் அறிவிக்கவேண்டியது. மேலும், குற்றஞ்செய்தவர்களைப் பிடிக்கும்படியாகவும் குடிகளுக்கு சவுக்கியமுண்டாகும்படியாகவும் செய்யவேண்டிய எல்லாகாரியங்களிலும் கிராமப்பெரியதனக்காரர்கள் ஒத்துநடக்கவேண்டியது.

௯. கிராமப் பெரியதனக்காரர்கள் - தங்கள் கிராமங்களிலே - அனுமானிக்கப்பட்டவர்கள் வந்திருக்கிறதையும் அவர்களைக்குறித்து தாங்கள் அறிந்துகொண்ட சமாசாரத்தையும் தாலூகாபோலீசு அதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

௰. முதலாவது உட்பிரிவு. திட்டுதல் சுவல்ப்பமான அடிபிடிசண்டை இந்த அற்பகுற்றங்களைக்குறித்து கிராமப்பெரியதனக்காரர்கள் வாய்மொழியாக விசாரணைசெய்து, ருசுவாகாவிட்டால் பிரியாதைத் தள்ளிப்போடலாம் - ருசுவாகி குற்ற

---

* ௧ - முதல் - ௭ - வது பிரிவுவரையில் ௲அ௱ம௲௨ஹு௰த்து - ௧௭ - வது ஆக்ட்டினால் ரத்துசெய்யப்பட்டிருக்கிறது.

வாளியை தெண்டிக்கவேண்டியதுதானென்று தோற்றினல், அவனை கிராமத்துச் சாவடியிலே பன்னிரண்டுமணி நேரத்துக்கு மேற்படாமல் காவலில்வைக்கலாம்; அந்தக் குற்றவாளி ஈனசாதியானுயிருந்து தொழுவில் மாட்டத்தக்கவனுனல், ஆறுமணி நேரத்துக்கு மேற்படாமல் அவனைத் தொழுவில் மாட்டிவைக்கலாம்.

இரண்டாவது உட்பிரிவு. கிராமப் பெரியதனக்காரர்கள் மேற்சொல்லிய முதலாவது உட்பிரிவின்படி எந்தெந்த பிரியாதுகளில் தாங்கள் தெண்டனை நடப்பிக்கிறுர்களோ அதுகளை தாலூகாபோலீசு அதிகாரிக்கு அறிக்கை செய்யவேண்டியது. ஆனல் தாங்கள் விசாரித்துத் தள்ளிப்போடுகிற பிரியாதுகளை அறிக்கை செய்யவேண்டியதில்லை.

(ஃ அ ா உ ய க ஞு - ச - வது சட்டம் - சு - வது பிரிவு.) *

[முதலாவது உட்பிரிவு. மேலும், சென்னபட்டணத்து ரூபாய் ஒன்றுக்கு அதிசப்படாத யாதொருசொத்தை எவனுகிலும் திருடினல், அந்தத்திருட்டு பலமானகுற்றத்தில் சேராததாகவும் பழயதிருடனல் செய்யப்படாததாகவும் இருக்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட அற்பதிருட்டைக்குறித்து ஷை ய - வது பிரிவு முதலாவது உட்பிரிவின்படி கிராமப்பெரியதனக்காரர்கள் தெண்டனைவிதிக்கலாம்.

இரண்டாவது உட்பிரிவு. அப்படி எந்தெந்தபிரியாதுகளில் கிராமப்பெரியதனக்காரர்கள் தெண்டனை நடப்பிக்கிறுர்களோ அதுகளையெல்லாம் தாலூகா போலீசு அதிகாரிக்கு அறிக்கை செய்யவேண்டியது.]

கக - வது பிரிவு. †

கஉ - வது பிரிவு. ×

---

* க அ சு ் ஞு டிசம்பர் மீ உஅஉ- அ௲-வது நம்பருள்ள மொபசல் போலீசு உத்தரவைப்பார்க்க.

† க அ சு உ ஞு த்து - கஎ - வது ஆக்ட்டினல் ரத்துசெய்யப்பட்டது.

× பட்டியாத்திரிகிற கால்நடைகளைக்குறித்து செய்யப்பட்டிருக்கிற சஅடுஎ ஞு த்து - ௲ - வது ஆக்ட்டினல் ரத்துசெய்யப்பட்டது. அந்த ஆக்ட்டை யித்துடன் சேர்த்திருக்கிறது.

௧௩. முதலாவது உட்பிரிவு. யாரையாவது கொலைசெய்துபோட்டிருக்கிறதாகத் தெரியவந்தால், கிராமப் பெரியதனக்காரனானவன் கணக்கனையும் யோக்கியமான இரண்டுமூன்றுகுடிகளையும் கூட்டிக்கொண்டு அந்தப் பிணங்கிடக்கிற இடத்துக்குத் தக்ஷணமேபோய், அவர்களையும் வைத்துக்கொண்டு, அந்தப்பிணம் அகப்பட்டதைக்குறித்தும், அகப்படும்போது இன்னவிதமா யிருந்ததென்பதைக்குறித்தும், கொலைசெய்து போட்டதாயிருந்தால் அந்த கொலையைக்குறித்தும், சாட்சி சொல்லத்தக்கவர்க ளெல்லாரையும் விசாரணைசெய்யவேண்டியது.

[துர்மரணத்தைக் குறித்தும், அகஸ்மாத்தான சாவைக்குறித்தும் கிராமமுனிசீப்புகள் விசாரணைசெய்து அருகாமையிலிருக்கும் மாஜிஸ்திரேட்டுக்கு அறிக்கைசெய்யவேண்டியதென்று ௧அ௬௧௵த்து - ௨௫ - வது ஆக்ட்டின் - ௧௬௧ - வது பிரிவில் விதித்திருக்கிறது.]

இரண்டாவது உட்பிரிவு. கிராமப் பெரியதனக்காரர்கள் ஷை சமாசாரந் தங்களுக்குத் தெரிந்தவுடனே, அதை தாமசப்படுத்தாமல் தாலூகாபோலீசு அதிகாரிக்கு அறிக்கைசெய்யவேண்டியது. அந்த அதிகாரியானவர் சீக்கிரமாய் அவ்விடத்திற்குவந்தால் ஷை விசாரணையை அவரே நடத்தவேண்டியது.

மூன்றாவது உட்பிரிவு. விசாரணைசெய்கிறதற்குப் போலீசு அதிகாரி வராமற்போனால், அப்போது கிராமப்பெரியதனக்காரனானவன் - சாட்சிக்காரருடைய வாக்குமூலங்களையும் அந்தப்பிணத்தினிடத்தில் காணப்பட்ட முக்கியமான அடையாளங்களையும் கிராமக்கணக்கனைக்கொண்டு எழுதுவித்து அந்தவிசாரணையில் நடந்த விவரங்களைக்குறித்து ரிபோர்ட்டு தயார்செய்வித்து அதில் தன்கையெழுத்துப் போட்டு, விசாரணைசெய்யும்போது கூடஇருந்த குடிகளில் இரண்டு அல்லது பலபேருடைய கையெழுத்தும் கிராமகணக்கன் கையெழுத்தும்வாங்கி, அந்த ரிபோர்ட்டையும் ஷை வாக்குமூலங்களையும் போலீசு அதிகாரிக்கு அனுப்பவேண்டியது.

நாலாவது உட்பிரிவு. கிராமப் பெரியதனக்காரனானவன் தான் அப்படி விசாரணைசெய்வதினாலே, கொலைசெய்திருப்பதாக தன்கிராமத்தில் இருக்கிற எவர்கள்பேரிலாகிலும் அனுமா

னம் தோற்றினால் அவர்களை உடனேபிடித்து தாலுகாபோலீசு அதிகாரியினிடத்துக்கு அனுப்பவேண்டியது.

௰சா. இந்தசட்டத்து - ௰ - வது பிரிவின்படி கிராமப்பெரியதனக்காரர்களாலே காவல்ப்படுத்தப்பட்டவர்களைக் குறித்து கிராமக்கணக்கர்கள் அட்டவணை யெழுதவேண்டியது. அந்த அட்டவணைகளை மாசமாசம் மேஜிஸ்திரேட்டுக்கு அனுப்புவிக்கும்படியாய் கிராமப்பெரியதனக்காரர்கள் தங்கள் தங்கள் தாலூகா போலீசு அதிகாரியினிடத்துக்கு அனுப்பவேண்டியது.

கஅஉக ஆக்ட்து - ச - வது சட்டத்தின் - ரு - வது பிரிவு - க - வது - உ - வது உட்பிரிவு தவிர மற்றப் பிரிவுகளெல்லாம் கஅருஉ ஆக்ட் த்திய - எ - வது ஆக்டினாலே ரத்துசெய்யப்பட்டிருக்கிறது ஷை பிரிவுகளைக்குறித்து - சச - வது பக்கத்தைப்பார்க்க.

---

## கிராமமுனிசீபுகள் நடந்துக்கொள்ள வேண்டியத்துக்காக ஏற்படுத்தப்பட்டவிதிகள்.

க—வது. கிராம முன்சீபுகளுக்கும் போலீசாருக்கும் இருக்கப்பட்ட சம்மந்தத்தை அடியில்கண்ட சங்கதிகள் தெரிவிக்கிறபடியால் அதை அவர்கள் தெரிந்துக்கொண்டு நடந்துக்கொள்ள வேண்டியதற்காக அடியில்கண்ட விதிகள் யேற்படுத்தப்பட்டது.

உ—வது. மேஜிஸ்திரேட்டுக்குரிய அதிகாரங்களில் யாதாமொரு அதிகாரத்தைச் செலுத்துகிற யெல்லா மனிதர்களும் மேஜிஸ்திரேட்டுகளென்று கிரிமினல் புரோசீடியர் கோடிலும் போலீசு ஆக்ட்டிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ங—வது. கிராமமுன்சீபுகள் தங்களுடைய கிராமசாஹத்துக்குள்ளே குற்றங்களைத் தடுக்கிறவிஷயத்திலும் கண்டுபிடிக்கிறவிஷயத்திலும் மேஜிஸ்திரேட்டுக்குள்ள அதிகாரங்களிலும் கடமைகளிலும் அனேகத்தை செலுத்துகிறவர்களா யிருக்கிறார்களாகையால் சட்டப்படிக்கு அவர்கள் மேஜிஸ்திரேட்டுகள் தான்; மேற்படி அதிகாரத்தை உறுதியாய் செலுத்துவதற்கும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சட்டத்தில் அவர்களை நேராய் ஜவாபுதாரியாக்கப்பட்டிருக்கிறது.

௪—வது. போலீசு ஆக்ட்டின் முகவரியில் எல்லாவகுப்பு போலீசாரும் தங்களுடைய சரஹத்துக்குள் குற்றங்களைத் தடுக்கும் விஷயத்திலும் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் மேஜிஸ்திரேட்டாருடைய வசத்திலிருக்கிறார்களென்று சொல்லியிருக்கிறதுமன்றி போலீசு ஆக்ட்டின் - ௨௧ - வது பிரிவுபடிக்கு மேஜிஸ்திரேட்டாராலே செய்யப்பட்ட எல்லா உத்தரவுகளுக்கும் உடனே கீழ்ப்பணிந்து நடந்துக்கொள்ள வேண்டியது போலீசாருடைய கடமையாகயிருக்கிறது.

௫—வது. போலீசாரென்றால் ஜனல் போலீசாரென்றும் கிராமபோலீசாரென்றும் யாதொருபோலீசு தொழில் நடத்துகிற யெல்லா உத்தியோகஸ்தாளென்றும் அர்த்தமாகிறது.

௬—வது. ஆகையால் அவர்களெல்லாம் கிராமமுனிசீபுகளுடைய வசத்திலிருக்கிறார்கள்; மேற்படி போலீசாரை அழைப்பிக்கவேண்டியதும், அந்தந்தகிராமத்திய சரகத்துக்குள் குற்றங்களை தடுக்கிறதற்கும் அனுமானமுள்ள நபர்களின்பேரில் நிகாவைப்பதற்கும் தாங்கள் யென்ன அபிப்பிராயப் படுகிறார்களோ அதை மேற்படி போலீசாருக்குத் தெரிவிக்கவேண்டியதும், கிராமத்தாருடைய நன்மைக்காக தாங்கள் முனிசீபுவேலைக்கு யேற்படுத்ததப்பட்ட படியினாலே அவர்களுடைய பிரயோஜனார்த்தம் மேற்கண்டபடி போலீசார் நடக்கவேணுமென்று பிடிவாதம் செய்யவேண்டியதும், முனிசீப்புகளுடைய கடமையாயிருக்கிறது.

௭—வது. குற்றம் நடந்தவுடனே அந்த ஸ்தானத்தில் மேஜிஸ்திரேட்டாயிருக்கிற கிராமமுன்சீபு தன் உத்தியோகமுறைமையை அனுசரித்தும்,கிரிமினல் புரொசிடியூர்-௯௮-வது பிரிவை * அனுசரித்தும் மேற்படிகுற்றத்தை கண்டுபிடிக்க

* இந்தியன் பினல்கோடின் - ௩௮௨ - ௩௯௨ - ௩௯௩ - ௩௯௪- ௩௯௫ - ௩௯௬ - ௩௯௭ - ௩௯௮ - ௩௯௯ - ௪0௨ - ௪௩௫ - ௪௩௬- ௪௪௯ - ௪௫0 - ௪௫௬ - ௪௫௭ - ௪௫௮ -௪௫௯-அல்லது -௪௬0 வது பிரிவுபடிக்கு தெண்டனை விதிக்கப்படத்தக்க யாதொருகுற்றஞ்செய்யப்பட்டிருக்கிறது யெவனுக்குத் தெரியவந்திருக்கிறதோ அவன் - அதைக்குறித்து அறிக்கைசெய்யாவிட்டால் குற்றஞ்செய்தவன் ஒருவேளை நியாயப்பிரகாரம் தெண்டனை அடையும்படி விசாரணைக்குக் கொண்டு வரப்படமாட்டா னென்றாவது ஒருவேளை ஓடிப்போய் விடுவானென்றாவது நம்புவதற்கு ஏதுவிருக்கிறபட்சத்தில் சமீபத்திலிருக்கிற போலீசு உத்தியோஸ்தனிடத்திலே அந்தகுற்றம் நடந்தசங்கதியைத் தெரிவிக்கவேண்டியது. (௧௮௬௧ ஹூ ௨௫-வது ஆக்ட்டின் ௧௩௮-வ'துபிரிவு.)

வேண்டியதற்காக சமீபத்திலிருக்கிற ஸ்டேஷனுக்கு உடனே ரிபோர்ட்டு அனுப்பி போலீசாரை தட்சணம் அழைப்பிக்க வேண்டியது. தன்னுடைய உத்திரவுப்படிக்கு போலீசாரை நடக்கும்படியாய் கிராமமுனிசிப்பு பிடிவாதம் செய்யவேண்டியது.

௮—வது. அதேகாலத்தில் கிராமமுன்சீபு நடந்த குற்றத்தின் சங்கதிகளை நன்றாய் விசாரிக்க வேண்டியது; அப்படி விசாரணை செய்வதற்கு கிராமபோலீசாரை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்தவிசாரணையின் முடிவை ஆலசியப்படுத்தாமல் சப்மேஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

௯—வது. தான் அழைப்பித்தபடி போலீசார் வந்தவுடனே தன்னுடைய அதிகார முறைமையினாலும் தனக்குசங்கதிகள் தெரிந்திருக்கிறதினாலும் போலீசாருக்கு தன்னால்கூடிய கும்மக் செய்யவேண்டியது முனிசீப்பினுடைய கடமையாயிருக்கிறது. குற்றஞ்செய்தவர்களென்று தான் அனுமானிக்கும் நபர்களை அவர்களுக்குக் காண்பிக்கவேண்டியது; சாட்சி சம்பாதிக்கும் விஷயத்தில் தனக்கு யென்னமெல்லாம் தெரியுமோ அது அவாளுக்குத் தெரிவிக்கவேண்டியது. தன்னால்கூடியமற்றகும்மக் செய்யவேண்டிய தல்லாமல் யோசனையும் சொல்லவேண்டியது. குற்றத்தைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் கிராமமுனிசீபு தான் போலீசாருக்கு யோசனை சொல்லுகிறவராயிருக்கிறார்; மேலும் தன்வசத்திலிருக்கிற தமேருபஸ்து போலீசாருடைய கும்மக்குடனே அந்தயிடத்தில் குற்றத்தை கண்டுபிடிக்கும் அதிகாரியாயுமிருக்கிறார்.

௰—வது. கிராமமுனிசீபு சாட்சியாய்வரும்படி அவசியம்நேரிட்டாலொழிய யாதொரு முனிசீப்பையும் தன்னுடைய சரகத்தைவிட்டு வரும்படியாய்செய்ய போலீசாருக்கு யாதொரு அதிகாரமுமில்லை. கிராம முனிசீப்புகள் வேண்டும்போது போலீசு உத்தியோகஸ்தர்கள் நேராய்ப்போய்ஆஜராகிறதற்கு அவாளுக்குவேண்டிய கருவிகள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் குற்றம் நடந்திருக்கிற யிடத்துக்குப்போய் விசாரணை நடத்தவேண்டியது அவாளுடைய கடமையாயுமிருக்கிறது. ஆகிலும் மேஜிஸ்திரேட்டு ஷேறாதாவை வகித்த கிராமமு

னிசீப்புகள் தங்களுடைய சரகத்துக்குள்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் தடுக்கும் விஷயத்திலும் மாத்திரமேயல்லாமல் சுற்றுப்பக்கத்தி லிருக்கும் கிராமங்களில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் தங்களால் கூடிய கும்மக் செய்யவேணுமென்று கியாபகத்தில் வைக்க வேண்டியது; ஆகையால் போலீசார் குற்றத்தை தடுக்கிறதற்காக என்ன யேற்பாடுகள் செய்கிறார்களோ அதற்கு அவாள் உதவிசெய்யவேண்டியது. ஒரு கிராமத்தில் பலமான குற்றம் நடந்தால் சுற்றுப்பக்கத்து கிராமமுனிசீபுகள் அவ்விடத்துக்குபோய் அந்த கிராமத்து முனிசீபுடனேகூட போலீசாருக்கு ஒத்தாசை செய்யவேண்டியதும் விசாரணை பூர்த்தி செய்ய வேண்டியதற்கு தங்களாலான உதவிசெய்யவேண்டியதும் அவாளுடைய கடைமையாயுமிருக்கிறது.

கக—வது. சட்டப்படிக்கும் கவரன்மெண்டாருடைய அபிப்பிராயப்படிக்கும் கிராம மேஜிஸ்திரேட்டுகளாகிய முனிசீபுகள் போலீசாரிடத்தில் பெற்றுக்கொள்ளவேண்டியவேலையெதுவென்றால், பின்வருகிற மூன்று விஷயங்களிலும் போலீசாருடைய முயர்ச்சிகளையும் சக்தியையும் நன்றாய் உபயோகப்படுத்திக் கொள்வதேயாம். முனிசீபுகள் கியாபகத்தில் வைக்கவேண்டியது.

மேல்கண்ட மூன்று விஷயங்களாவன.

முதலாவது. குற்றத்தைத் தடுக்கிறது.

இரண்டாவது. குற்றத்தைக்கண்டுபிடித்து குற்றவாளிகளை சிக்ஷைக்கு உள்படுத்துகிறது.

மூன்றுவது. கிராமத்தில் குற்றத்தையும் சமாதானத்தையும் சேர்ந்த யெல்லா சங்கதிகளையும் சேகரித்து தெரிவிக்கிறது.

மேல்கண்ட கடைமைகளை நிறைவேற்றுவதில் கிராமமுனிசீபுகள் தங்களாலான ஒத்தாசைசெய்து ஆலோசனையும்சொல்லவேண்டியது.

கஉ—வது. முதல்விஷயமான குற்றத்தைத் தடுப்பதைக்குறித்து துன்மார்க்கர்கள் தாங்கள்குற்றஞ்செய்ய எத்தனித்தால்

நிச்சயமாய் கண்டுபிடிக்கப்படுவோம் யென்னும் பயம் அவாளுக்குள் உண்டாகும்படியாய் கிராமமுனிசீபுமூலமாயும் ஜெனரல்வகைரா கிராமபோலீசுமூலமாயும் ஊரில் பந்தோபஸ்து செய்தால் குற்றம் தடுக்கப்படும்; இப்படி துன்மார்க்கர்களுக்கு பயம் உண்டாகும்படியாய் அதிசுலபத்தில் செய்யலாம். குற்றம்நடக்காமல் தடுப்பதற்கு இதுமிகவும் உபயோகமான செய்கைகளில் ஒன்றாயிருக்கிறது. நாளுக்குநாள் நிமிஷத்துக்கு நிமிஷம் போலீசாரும் மேஜிஸ்திரேட்டு அதிகாரியும் தங்கள்பேரில் நிகாவைத்துவருகிறார்களென்று துன்மார்க்கர்களுக்குத் தெரியவருமேயாமானால் அவர்களில் அனேகர் தங்களுடைய தீநெறியை விட்டுவிடுவார்கள். போலீசார் இப்படி நிகாவைத்துவருக்கிறார்களாவென்றும் அவர்களைப்பார்த்து துர் எண்ணமுடையவர்கள் பயப்படுகிறார்களாவென்றும் முனிசீபுகள் கண்ணோக்கம்வைக்கவேண்டியது. அப்படியில்லையென்று முனிசீபுகளுக்குத் தெரியவந்தால் அதைமேலான அதிகாரிகளுடைய நோட்டைசுக்கு கொண்டுவரவேண்டியது. மேல்கண்டபடி நடப்பதற்காக பப்ளிக்கு ரோட்டுகளின்பேரில் போலீசார் எந்நேரமும் பாராகொடுத்துக்கொண்டும் கூடியவரையில் அடிக்கடி பிரதிகிராமத்தைப் போய்பார்த்துக்கொண்டு மிருக்கவேண்டியது.

போலீசு உத்தியோகஸ்தன் கிராமத்துக்குவந்த உடனே அனுமானமுடைய பிரதி நபரினுடைய நடத்தையைக்குறித்து ஷை போலீசு உத்தியோகஸ்தனுக்கு தெரிவித்து அவனுடனேகூட ஷை நபர்களைக்கண்டு அவர்களுக்கு நல்ல புத்தி சொல்லவேண்டியதுமல்லாமல் மேலான மேஜிஸ்திரேட்டதிகாரிகளுக்கும் போலீசு அதிகாரிகளுக்கும் வேண்டியிருக்கிற யெல்லா சங்கதிகளையும் அவனுக்குச் சொல்லவேண்டியது; போலீசு சேவகன் தன் மேலதிகாரியை மோசம் செய்யாமலிருக்கவேண்டியதற்காக மேற்படிசேவகன் வந்ததையும் குற்றத்தை தடுக்கிறதற்கும் கண்டு பிடிக்கிறதற்காக மேஜிஸ்திரேட்டாருக்கும் போலீசாருக்கும் தெரியப்படுத்தவேண்டிய சங்கதிகளையும் முனிசீபு ஒரு ஓலையில்யெழுதி ஷை சேவகன்கையில் கொடுக்கவேண்டியது.

௧௫—வது. இரண்டாவது விஷயமாகிய குற்றவாளிகளை தெண்டனைக்கு உள்படுத்துவதைக்குறித்து சரியான சாட்சி

சம்பாதிக்கவேண்டும்; போதுமானசாவகாசத்தோடு நிதானமாயும், ஜாக்கிறதையாயும் முனிசீபுவகைரா கிராமபோலீசாருடைய ஒத்தாசையோடுதேடினால் சாக்ஷியம் அகப்படும்; இதில் கொஞ்சமாவது பொய்கலக்காமலிருக்கும்படியாய் ஜாக்கிறதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. பொய்சாக்ஷிகளை ஹாஜர்செய்தும் பொய்சங்கதிகளை கல்பித்தும் அனுமான்நயனாயும் கோர்ட்டாராயும் மோசஞ்செய்ய யெத்தனப்படக்கூடாது. மேல்கண்டபடி தான் செய்யாமலிருக்கிறதுமல்லாமல் போலீசாரும் அப்படி செய்யாமலிருக்கும்படியாய் கிராமமுனிசீபு பார்த்துக்கொள்ளவேண்டியது.

கச—வது. மூன்றுவது விஷயத்தைக்குறித்து கிராமமுனிசீபுகள்யெல்லா குற்றத்தைக்குறித்தும் போலீசாருக்கு உடனே சமாசாரம் தெரியப்படுத்தவேண்டியதுமல்லாமல் அவாள் தங்களுடைய மேலான அதிகாரிகளுக்கும் மேஜிஸ்திரேட்டாருக்கும் தெரியப்படுத்துவதற்காக சமாசாரம் தெரிந்துக்கொள்ளும் விஷயத்தில் அவாளுக்கு கும்மக் செய்யவேண்டியது.

கரு—வது. கிராமபோலீசு உள்பட எல்லாவகுப்பு போலீசாரும் ஜனங்களுடைய சவுக்கியத்துக்காகவும் அவாளைக் காப்பாத்தும்பொருட்டும் ஏற்படுத்தப்பட்டவர்களாகையால் எல்லாஜாதியாரும் அவாளை நல்லவர்களென்று சொல்லும்படியாயும் மதிக்கும்படியாயும் அவர்கள் நடந்துக்கொள்ள வேண்டியதென்று கிராமமுனிசீபுகள் கியாபகத்தில் வைக்கவேண்டியதுமல்லாமல் மேலான போலீசு அதிகாரிகளுக்கும் கிராமத்திலிருக்கிற முக்கியமான மிராசிதாரர்களுக்கும் பரிச்சியம்செய்வித்து அவர்கள் ஒருவருக்கொருவர் சிநேஹமாயிருக்கும்படியாய்செய்து தங்களுடைய சவரட்சணர்த்தம் யேற்படுத்தப்பட்ட போலீசாரிடத்தில் நம்பிக்கைவைத்து அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளும்படியாயும் ஜனங்களுக்கு தங்களுடைய சொந்த நடத்தையினாலே தெரியப்படுத்தவேண்டியது. மேலும் கிராமபோலீசாரும் ஜனரல் போலீசாரும் ஒருவருக்கொருவர் அதிசிநேஹமா யிருக்கிறார்களாவென்பதையும் முனிசீபுகள் பார்த்துவரவேண்டியது.

கசு—வது. குற்றங்களைத் தடுக்கிறதற்கும் கண்டுபிடிக்கிறதற்கும் போலீசாருக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறபடியால்

அவாள் தங்களைச்சேர்ந்த வேலைகளையும் ஜவாப்தாரியையும் கிராமமுனிசீபுகள்பேரில் போட்டுவிடக்கூடாது மற்ற மேஜிஸ்திரேட்டுகளிடத்திலிருந்து அவாளவாள் அந்தஸ்துக்குத்தக்கபடி சட்டப்படிக்கு எவ்வளவு கும்மக் பெற்றுக்கொள்ளப்படுகிறதோ அவ்வளவுமாத்திரந்தான் போலீசார் கிராம முனிசீபுகளிடத்தில் பெற்றுக்கொள்ளவேண்டியது, ஆகையால் மேலெழுதிய சங்கதிகளைக்கண்டு கிராமமுனிசீபுகள் பயப்படவேண்டியதில்லை; மேலே சொல்லிக்கொண்டுவந்ததெல்லாம் இதுவரையில் கிராமமுனிசீபுகள் செய்யும்படியாய் கொடுத்திருந்த வேலையேயொழிய வேறல்ல; இப்போ அவர்கள்வசத்தில் அனேகம் சேவகரை நல்ல சம்பளம்கொடுத்து வைத்திக்கிறபடியினலேயும் அவர்களெல்லாம் கிராமமுனிசீபுகளுடைய சொல்படிக்கு நடக்கவேண்டியவர்களானபடியாலும் மேற்படி முனிசீபுகளுக்கு முன்னிருந்த சிரமத்தைப்பார்க்கிலும் இப்போது கொஞ்சமாகவே இருக்கிறது.

௧௭—வது. மூல்கிவிஷயங்களிலும் பலமான குற்றமல்லாத கேசுகளிலும் போலீசார் பிரவேசிக்கக்கூடாதென்று பரிஷ்காரமாய்தடுக்கப்பட்டிருக்கிற விஷயத்தை முனிசீபுகள் முக்கியமாய் ஞாபகத்தில்வைக்கவேண்டியது. டிரஸ்பாஸ்கேசுகள் தாக்குதல் நிலத்தகரூர் தண்ணிதகரூர் மஹாசூல்தகரூர் முதலானவிஷயங்களில் போலீசார் பிரவேசிக்கக்கூடாதாகையால் அப்படிப்பட்டவிஷயங்களில் அவாள் பிரவேசிக்காம லிருக்கும்படியாய் கிராமமுனிசீபுகள் பார்த்துக்கொள்ளவேண்டியது.

[ இந்தநிபந்தனைகள் மதிராஸ் ஜில்லா கிராமமுனிசீப்புகளுக்கு வந்த உத்தரவிலிருந்து சேர்க்கப்பட்டன. ]

---

பவுஜதாரிகோர்ட்டாருடைய உத்தரவுகள்.

பாராவிலிருக்கிற ஒருவன் இறந்துபோனல், அப்படிப்பட்டவனுடைய சவத்தை தாசில்தாரர்களும் ௧௮௧௬ (ஹூ) ௲௧௧-வது சட்டத்தின் ௧௩ - வது பிரிவுபடிக்கு கிராம எஜமான்களும் விசாரணைநடத்தவேண்டியது. (௧௮௨௪ (ஹூ) மார்ச்சிமீ உ௫உ பவுஜ் - அ - கோ - சர் - உத்தரவு.)

தாசில்தாரர்கள் அனுவலின்பேரில் அந்தந்த கிராமங்களுக்

குவருகிறபோது தவிர, கிராமஎஜமான்கள் சட்டத்தின்படி தங்களுக்கு உண்டாயிருக்கும் அதிகாரத்தை அனுசரித்து தங்கள் எல்லைக்குள்பிரதிகேசையும் விமர்சைசெய்யவேண்டியது. (௧௮௱௧ ௵ ஏப்பிரல்மீ ௧௧௨ பவுஜ் அ·கோர்-சர்-உத்தரவு.)

கிராமபோலீசுகளாலே சுவல்பகுற்றங்களைக்குறித்து தெண்டிக்கப்பட்ட மனிதர்களின் தொகையைக்குறித்தும், தெண்டிக்காமல் விட்டுவிடப்பட்ட மனிதர்களுடைய தொகையைக்குறித்தும் அச்சிட்டஸ்ட்டேட்டுமெண்டின் அந்தந்த தலப்பின்கிழே எழுதும்படி மாஜிஸ்திரேட்டுகள் பந்தோபஸ்துசெய்யவேண்டியது. (௧௮௱௨ ௵ ஏப்பிரல்மீ ௩௦௨ பவு-அ-சர்க்-உத்தரவு.)

---

# போலீசுகட்டளைகள்.

## நம்பர் ௧.

குடிகளுடைய நிலம் தோட்ட முதலானவைகளில் நுழைகிற ஆடு மாடுகளைப் பிடித்துத் தொட்டியில் அடைக்கும் விஷயத்தில் போலீசு உத்தியோகஸ்தர்கள் பிரவேசிப்பதாக——இன்சூப்பெரிண்டெண்டாண்டு ரிப்போர்ட்டு செய்திருக்கிறார்.

௧. பிடிக்காமல் விலக்கிக்கொள்ளவாவது, தப்புவிக்கவாவது முயற்சிசெய்தால், அதைத்தடுப்பதற்கு உதவியாய் நிற்கும்படி போலீசு உத்தியோகஸ்தனை வரவழைப்பினும் அழைக்கலாம்; ஆயினும் தோட்டமுதலியவைகளில் நுழைகிற ஆடு மாடுகளை அந்தத்தோட்டத்தில் பயிர் செய்தவனாவது, நிலத்தை அனுபவிப்பவனாவது பிடிப்பது அல்லது பிடிப்பிப்பதே முறைமை. அவ்வித ஆடு மாடுகளைப் பிடித்துத் தொட்டியில் ஒப்பிப்பதற்கு உரியவன் அவனே.

---

## நம்பர். ௨.

௧. தேசத்தில் ஊர்கோலம் உற்சவம் முதலியவைகளின் பொருட்டாய்க் கூடும் ஜனசமூகங்களைக் குறித்துப் போலீசார் வெகுஜாக்கிறதையா யிருக்கவேண்டும். பிரஜைகள் தங்களுக்கு மதசம்பந்தமாகவும், தேசாசார சம்பந்தமாகவும் சாதாரணமாயுள்ள சுதந்தரங்களைச் சுயாதீன சிந்தையுடையவர்களாய்க் கட்சிவிரோதமின்றி ஜன அமரிக்கையைக் கெடுக்காமல் கைக்கொண்டு

அனுபவிக்கும்படி, அவர்களுக்கு உதவிசெய்து துணைநிற்பது தங்கள் கடமையென்பதைப் போலீசார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஜன அமரிக்கையை மாத்திரம் காத்துக்கொள்ளவும்——அது கெடாதிருக்கும்படி முன்னதாகப் பந்தோபஸ்து செய்யவும் வேண்டும். இப்படிச் செய்யும்பொருட்டு, போலீசார் கூடுவதற்கு எத்தனமாயிருக்கும் ஊர்கோலம் முதலிய ஜன சமூகத்தைத் தடுப்பது அவசியமுமல்ல, தகுதியுமல்ல; கூடிநடந்தேறி வருகையில் தடுப்பது சிறிதாயினும் தகாது; இராத்திரி காலத்தில் வெகு ஜனங்கள் கூடி ஊர்கோலம், உற்சவம் முதலியவைகள் நடக்கும்பொழுதெல்லாம் இரண்டொரு போலீசு சேவகர் ஆஜராயிருக்கவேண்டும்; ஆயினும ஜன அமரிக்கைக்குக் கெடுதிவருவதாகத் தோன்றுகிற பட்சத்தில் அதைக் காத்துக்கொள்வது மாத்திரமே அவர்கள் கடமை - அவ்வித சமயங்களில் போலீசார் நாலுபேரும் காணத்தக்க பகிரங்கமான இடத்தில் பின்னிட்டு நின்று கருததாய்க் கண்டறியவேண்டும்; ஜனங்களுடைய காரியத்தில ஒருபொழுதும் பிரவேசிக்கக்கூடாது.

௨. அடாதென்று அனுமானிப்பதற்கு ஏதுவான, அல்லது முன்னொருபொழுது மில்லாத நூதனமாகிய ஜனசமூகம் கூடுவதற்கு எத்தனமாயிருக்கும்பொழுதாவது, அமரிக்கை கெடுக்கப்படுமென்று எண்ணுவதற்கு ஏதுவான காரணங்களைப் போலீசார் காணும்பொழுதாவது அவ்விடத்திற்குச் சமீபமாயிருக்கும் மாஜிஸ்திரேட்டு உத்தியோகஸ்தருக்குச் சங்கதி தெரிவித்து அவர்செய்யும் உத்தரவுப் பிரகாரம் காரியம் நடத்துவதே அவர்கள் கடமையாம். ஷை ஊர்கோலம் முதலிய கூட்டம் நடந்தேறும்படி உத்தரவாகிற பட்சத்தில, ஆஜராயிருக்கும் போலீசு உத்தியோகஸ்தர்கள் நடக்கும் சங்கதிகளை கருத்தாய்க் கண்டறிவதும், ஜன அமரிக்கையைக் காப்பதற்கும், கூடின ஜனசமூகத்திலாவது, ஜன அமரிக்கைக்கு யாதொருகெடுதி செய்வதிலாவது, அமரிக்கை கெடுதலில் உண்டாகும் வேறு அக்கிரமத்திலாவது முக்கியமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கும் யாதொரு நபர்களைச் சிக்ஷைக்கு உள்ளாக்குவதற்கும் பந்தோபஸ்து செய்வதும் அவர்கள் கடமைதான். உத்தியோகத்தில் யதார்த்தமாய் ஜாக்கிரதையுள்ள போலீசார் கும்புகூட விருக்கும்பொழுதெல்லாம் முன்னதாகவே சங்கதி தெரிந்து கொள்வார்கள்; இன்ஸ்பெக்டரும் மேலான உத்தியோகஸ்தர்களும் அவ்விதக் கூட்டத்தைச் சேர்த்து நடத்தும் தலைவர்கள் செய்யும் முயற்சியால் ஜன அமரிக்கை கெட்டுப்போகிற பட்சத்தில் என்ன அபாயம் உண்டாமென்றும், கூட்டத்தில் சே

ரும் யாவருக்கும் என்ன ஆபத்து வருமென்றும் தமக்குத் தோன்றுகிறதோ, அவைகளை அந்தத் தலைவர்களுக்குச் சமயங்கண்டு மரியாதைத் தாழ்வின்றி வற்புறுத்திச் சொல்லவேண்டும்.

ங. ஒருமாஜிஸ்திரேட்டினுடைய சட்டளை பெற்றாவது, தங்கள் சுவய உத்தரவாதத்தின் பேரிலாவது போலீசார் காலதாமதம் செய்யாமல தக்ஷணமே தவருமல் காரியம் நடத்தும்படியான சந்தர்ப்பங்கள் நேரவும் கூடும்——அப்படியாகுமிடத்தில், இன்ஸ்பெக்டர்களும் மேலான உத்தியோகஸ்தர்களும தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி நடத்தவேண்டும். அன்றியும் தாங்கள் அவ்வாறு காரியம நடத்துவதனுலாகும் பயயங்களுக்குத் தாங்களே உத்தரவாதிகளென்று எண்ணி யோசனையோடு நடக்கவேண்டும். அவர்கள் பொறுத்துப் புத்திபூர்வமாகவும், சித்தியுண்டாக்கத்தக்க உற்சாகத்தோடும் காரியம் நடத்தவேண்டும்.

ச. இவ்விதச்சமயத்தில் போலீசு உத்யோகஸ்தர்கள் காரியம் நடத்தவேண்டிய முறைமையை உணர்த்தும் சட்டத்தின் பிரிவு-க அடிக்குறிப்பு - உஉ - வது சட்டத்தின் சகூ - வது.

---

நம்பர். ரு.

க. அமரிக்கையைக்கெடுக்காதிருக்கும் மரியாதையுள்ள ஜனங்களின்விஷயத்தில் போலீசு உத்தியோகஸ்தர்கள் அவசியமின்றி வலியப்பிரவேசித்தார்களென்று அவர்கள்மேல் பிரியாதுகள் செய்யப்பட்டதுண்டு. மேலும் அவர்கள் அப்போதப்போது ஜனங்களுக்கு வெறுப்புண்டாகும்படி உத்தியோக அகந்தை காண்பித்து, தங்கள்கடமையைக் கொடுமையாகவும், மரியாதைத்தாழ்வாகவும் நடத்துவதாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

உ. இவ்விதநடக்கை அடாதென்று திட்டமாய் நிபந்தனைசெய்யப்பட்டிருக்கின்றது; இப்படிப்பட்டவர்களுக்குக் கடினதெண்டனைசெய்யப்படும். எந்தப்போலீசு உத்தியோகஸ்தனுவது தனக்குளதிரிலே சர்க்கார்சட்டத்தை மீறுதிருக்கின்ற யாதொருவனேயாகிலும், சட்டத்தைமீறினதாகத் தனக்குமுன் பிரியாதுசெய்யப்படாதிருக்கின்ற ஒருவனையாகிலும், சட்டத்தைமீறினுன் என்றாவது, மீறுவதற்கு எத்தனிக்கிறுனென்றாவது நம்புவதற்குத் தகுதியான ஏதுக்களில்லாதிருக்கின்ற ஒருவனையாகிலும் சந்தித்து அதைச் சுட்டிப்பேசுவதற்கென்கிலும், அவன்விஷயத்தில் வலியப்பிரவேசிப்பதற்கென்கிலும் அவனுக்கு எவ்விதத்திலும் உரிமை

யில்லை. ஆதலால் ஒரு போலீசுஉத்தியோகஸ்தன் எந்தவகுப்பான ஜனங்களின் விஷயத்திலாவது வலியப்பிரவேசிப்பதற்கு நிமித்தம் உண்டாவது மிகவும்அரிது.

௩. போலீசுஉத்தியோகஸ்தன் அலுவல் நடத்திக்கொண்டிருக்கையில், முறைமையாய் அவசியமாகும்பொழுதன்றி, மற்றபடி யாதொருவரைச் சந்தித்து வார்த்தைசொல்லவாவது, பேசவாவது கூடாது. அப்படிப்பேசவேண்டியிருந்தால், மரியாதையும் கௌரவமுமான சொற்களை அனுசரித்துப்பேசவேண்டும்; அனுவசியமாய் அளவிற்குஅதிகம் பேசவொண்ணுது; அடக்கமாகவும், அடிக்கொருவிதமாய்ப் புரளாமல் உறுதியாகவும் நடக்கவும் வேண்டும். போலீசுஉத்தியோகஸ்தர்கள் கண்ணுக்குஎதிரே நடக்குஞ்சங்கதிகளைக் கண்டறியவேண்டும். கூடுமானல் ஒருபொழுதும் வாய்திறந்துபேசவொண்ணுது; யாதொருவனைத் தீண்டுவதாவது, பிடிப்பதாவது பின்னும்தகாது. ஜனஅமரிக்கையைக் கெடுக்காதிருக்கும், குடித்தனக்காரர்கள் இராத்திரியில் எவ்வேளையிலாயினும் அங்குமிங்கும் வீதியில் போக்குவரவுசெய்யும்பொழுது, இராக்காவற்போலீசுசேவகன் முதலாய் அதிகாரத்தோடு அவர்களுடன் பேசுவதாவது, அவர்கள்விஷயத்தில் பிரவேசிப்பதாவது ஒருவிதத்திலும் நியாயமானசெய்கையாகாது.

௪. ஒருவன் சட்டத்தைமீறுவதற்கு எண்ணங்கொண்டிருப்பதாக அனுமானிப்பதற்கு ஏது உண்டாயிருக்கிறபட்சத்திலும், அவனுடைய நடக்கையைக் கருத்தாய்க்கண்டறிவதும், அவனைக் குறித்து அனுமானமாயிருக்கிறதை அவன் உள்ளத்தில் உணரும்படி வகைசெய்வதுமேயொழிய, இதற்குமிஞ்சி ஏதாயினும் செய்வது பெரும்பாலும் அவசியமாகாது. இப்படிச்செய்தால், எவர்களாயினும் குற்றம்செய்யத்துணிவது அரிது. நியாயமாய் அனுமானிக்கப்படுகிறவர்கள் பதுங்கித் திரிவதைக்கண்டால், போலீசுஉத்தியோகஸ்தன் பதருமல், அப்படிப்பட்டவர்கள் சட்டத்தை மீறும்படி எண்ணங்கொண்டிருப்பதைத் தவருமல் தெரிவிக்கும் யாதொரு குற்றத்தைச்செய்கிறவரையில் அவர்களைத்தொடர்ந்து, அவர்கள் நடக்கையைக் கவனமாய்க் கண்டறிவதொழிய மற்றொன்றும் செய்யவொண்ணுது.

---

நம்பர் ௧௯.

௧௮௬௦ஆம் மார்ச்சிமீ ௧௦வ.

௧. ஒருபிரேதம் காணப்படும்பொழுது, கிராமப்போலீசுஉத்தியோகஸ்தன் ௧௮௧௬ - ம் - வருஷத்து ௧௧ - வது சட்டத்தின்

கக - வது பிரிவு நிபந்தனைப்படிக்கும், ஸி - கோ - பு - இன் கசுக் - வது பிரிவு நிபந்தனைப்படிக்கும் பஞ்சாயத்தை வரவழைத்துப் பிரேதவிசாரணைசெய்து அதன்நிலைமையைக்குறித்து மஹாஜர்நாமாஎன்னும் விவரப்பத்திரம் எழுதுவதற்கு உரியஉத்தியோகஸ்தனாகிய மாஜிஸ்திரேட் முன்ஷிப்புக்கு † உடனேதெரியப்படுத்தவேண்டும். மேலும் பிரேதத்தின்தோற்றத்தையும், அறிந்தமட்டும் மரணம்உண்டான காரணகாரிய தாற்பரியங்களையுங் குறித்துச் சுருக்கமான அறிக்கைஎழுதித் தக்ஷணமே டாணுச்சாவடிக்குச் செய்திஅனுப்பவேண்டும்.

*உ. மேற்படி அறிக்கை டாணுச்சாவடியின் தலைமை உத்தியோகஸ்தனிடத்தில் சேர்ந்தவுடனே அவ்வுத்தியோகஸ்தன் அதைச் சமீபத்திலுள்ள மாஜிஸ்திரேட்டுக்குத் தெரியப்படுத்துவதுமன்றி (கிரிமினல்புரோசீடியூரின் கசுக - வதுபிரிவு), (சாத்தியப்படுமானல்) அந்தப்பிரேதத்தைப் பார்க்கவும், அதைக்குறித்து விசாரணைநடக்கும்பொழுது ஆஜராயிருக்கவும் தக்கதாகத் தக்ஷணமே அவ்விடத்திற்குபோகவும்வேண்டும். அறிக்கையை மேலெழுச்சியாய்ப்பார்க்குமிடத்தில் அனுமானிப்பதற்குச் சிறிதாயினும் ஏது இருந்தால், தனது இன்ஸ்பெக்டரும் அவ்விடத்தில் ஆஜராகும்படிசெய்வதற்குத் தாமசமின்றி வகைபார்க்கவேண்டும்.

ந. இந்தப்போலீசு உத்தியோகஸ்தர்களில் ஒருவராவது, இருவருமாவது போய்ச்சேர்ந்தவுடன் பஞ்சாயத்தார் நடப்பிக்கும் நடவடிக்கைகளை நுணுக்கமாய்க்கண்டு, பிரேதத்தைப் பரீட்சிப்பதுமன்றி, அவ்வேளையில் அதன்நிலைமை இன்னதென்று உள்ளபடி நிதானமாய்த் தங்கள்கையெழுத்தில் குறிப்புஎழுதிவைக்கவும் வேண்டும் பிரேதத்தின் தோற்றம் பிற்பாடு மிகவும்திட்டமாய் அவர்கள் ஞாபகத்தில் பதியத்தக்கதாக வேண்டும்பொழுது பார்வையிடுவதற்கு அந்தக்குறிப்பு அவர்களுக்கு உதவியாகும். அவர்கள் கிரி. பு. இன் கசுக - வது பிரிவு நிபந்தனையின்பொருளைச் சார்ந்து நடக்கவேண்டும்.

ச. கொலைத்தொழில் செய்யப்பட்டதென்று நியாயமாய் அனுமானிக்க இடம்இருந்தால், அனுமானிக்கப்பட்ட பெயர்களை

† சஅசுக௵ ஜனவரிமீ உஉ கூ0 நம்பர் மொப்சல் ப்ொலீசு கட்டளையைப்பார்க்க.

அவ்வுத்தியோகஸ்தர்கள் சட்டப்படி தக்ஷணமேபிடித்துச் சாட்சி க்காரரிடத்தில் சாக்ஷியம்கேட்டெழுதவேண்டும்.

ரு. அனுமானத்திற்கு ஏதுவானவிஷயங்களிலே, பிரேதவி சாரணை நிறைவேறுமுன் அவர்கள், சாத்தியப்படுமானால், ஒரு தாலூகா மாஜிஸ்திரேட்டை ஆஜராகும்படி அழைப்பதுமன்றி, அ தேபிரகாரம் கிராமமுன்சிப்புக்குச் சொல்லிவைக்கவும்வேண்டும். தாலூகாமாஜிஸ்திரேட்டு வந்திருக்கிறபக்ஷத்தில், நடவடிக்கைகளை ஜாக்கிரதையாய்க்கண்டு கேட்டுக் குறிக்கும்விஷயத்தில் அவர்கள் மேற்சொல்லிய திட்டப்படி செய்வதுந்தவிர, அவருக்குத் தங்க ளால் ஆகத்தக்கஉதவிகள் அனைத்தும்செய்து, தயாராயிருந்து அ வர்சொல்லும் கிரமப்படி நடக்கவேண்டும்.

---

நம்பர். கரு.

கஅகூ௦ஸு மேமீ கஉ.

க. எந்த வகுப்பான மாஜிஸ்திரேட்டுகளாவது தங்கள் உத் தியோக இலாக்காக்களில் அங்கங்கே போகப் புறப்படும் பொழு து, போலீசு உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு வேண்டிய காவ ற்சேவகரைக் கொடுக்கவேண்டும்.

உ. சூப்பெரிண்டெண்டாண்டின் உத்தரவுப்பிரகாரம் துக்கு டி இன்ஸ்பெக்டர்கள் அவசியமான ஒழுங்குகள் அனைத்தும் செ ய்யவேண்டும்; ஆயினும் ஏற்றஅளவுக்கு அதிகமானபெயரை வி ணிலே அனுப்பாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

---

நம்பர் கஎ.

கஅகூ௦ஸு மேமீ கூஉ.

க. ஜில்லா சூப்பெரிண்டெண்டாண்டுகள் கிரிமினல்புரொசிடி யூரின் கஙரு-வதுபிரிவை விசேஷமாய்ச் சிந்திக்கவேண்டும். அற் பகாரியங்களில் போலீசார் சம்பந்தப்படவொண்ணாதென்று சட்ட த்தில் நிபந்தனைசெய்யப்பட்டிருக்கின்றது. சட்டம் பலமாய்நிறை வேற்றப்படவேண்டும். இந்தநிபந்தனை பூர்த்தியாய் நிறைவேற்றப் படவில்லை யென்று மாஜிஸ்திரேட்டுகள் சிலர் சொல்லியிருக்கி றார்கள்.

உ. பழையபோலீசார் எவ்வகையான முகாந்தரங்களின்பேரிலும் சனங்களுடன் வலியச்சம்பந்தப்படுவது வழக்கமாயிருந்தது. இதுதான அவர்களிடத்தில் விளங்கிய பாரமான அக்கிரமம். அலுவல்நடத்தவேண்டுமென்று சட்டத்தில் கற்பிக்கப்பட்டிருக்கின்ற விஷயத்திலன்றி, வேறுவிஷயங்களில் சிறிதாயினும் வலியப் பிரவேசியாதிருப்பதே புதுபபோலீசார் முக்கியமாய் அனுசரிக்க வேண்டியகிரமமாம்.

ந. மிகக்கொடிய பாரமானகுற்றங்கள் நடக்கும்பொழுது போலீசார் செய்யவேண்டிய கிரமம் இன்னதென்பது பூர்த்தயாய்த்தெளியத்தோன்றும். பாரமானகுற்றங்களை நிவர்த்திபபதற்காவது, குற்றவாளிகளைக்கண்டு வெளிப்படுத்துவதற்காவது பலமாகவும் காரியசித்தியாகவும் அலுவல்நடத்துகிற போலீசாருடன் மாஜிஸ்திரேட்டுகளன்றி, குடிகளும் அனுதபிப்பார்கள். அற்பசொற்பமான துர்நடத்தை, லேசானகுற்றங்கள், சட்டத்தைமீறுதல் என்னும் இவ்விஷயங்களிலே போலீசார் நேராகப் பிரவேசித்து அதிகாரம்செலுத்த இடம்பெறுமல் கண்டிப்பாய்த் தடுக்கப்பட வேண்டும், இதுவிஷயத்தில் போலீசார், குடிகள் ஆகிய இருதிறத்தாரும் பேதமின்றிப் பழையவழக்கத்தினின்று விடுவிக்கப்பட வேண்டும். போலீசார் "விதிக்கப்பட்டநிபந்தனை"யைச் சார்ந்து நடக்கவேண்டும்; பிரஜைகள் தங்கள்பிராதுகளை மாஜிஸ்திரேட்டுகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

ச. எத்தேசத்திலும் போலீசுசேவகர் குடிகளுடைய காரியங்களில் தகாதவிதமாய்ச் சம்பந்தப்படுவது அவர்கள்பிரகிர்தி. இத்தேசத்தில் உத்தியோகஸ்தர்கள் சற்றும் கட்டுக்கு அடங்காதவர்கள்போல வழக்கமாய்ப் பிறர்காரியத்தில் வலியப்பிரவேசிக்கிறார்கள். ஆழமாய் வேரூன்றியவிருக்ஷம்போல் அத்தனை ஸ்திரப்பட்டிருக்கின்ற இந்த இடைஞ்சலை மிகவும்கண்டிப்பாகச் சிக்ஷித்துநிவர்த்திக்கவேண்டும். ஆதலால், சாவதானமாகச்செயலற்று நிற்பதனுல் நீதிதவறுமல் நடந்தேறுவதற்குச் சற்றே தாமசம் நேரிடுவதாயிருக்கிறவிஷயங்களிலும், வலியப்பிரவேசியாதிருப்பது தோஷமல்ல முக்கியமான சங்கதிகள் நடக்கும்பொழுதும் அவைகளில் பிரவேசித்து அலுவல்நடத்தும்படி சட்டம்கற்பிக்கிறதா, இல்லையாவென்பதாகப் போலீசுசேவகன் ஒருவனுக்குச் சந்தேகம் தோன்றுகிறபட்சத்தில், பிரவேசிக்காமல் நடக்கும் சங்கதிகளைக்கண்டு, கிரிமினல்புரொசிடியூரின் ருஅ - வது பிரிவின்படி நடப்பிக்கத்தக்கதாக, மாஜிஸ்திரேட்டுக்குக் குற்றபத்திரிகையில் ரிப்போர்ட்டெழுதி அனுப்புவது உத்தமமென்று அவனுக்குக் கட்டளையிடவேண்டும்.

௫. குடிகளும், தமக்குள்உண்டாகும் சகல அற்பமானசண்டை சச்சரவுகளையும், சரீரத்திற்குரிய தீங்குகளையும், மர்மங்களையும் விசாரிப்பது போலீசாருடைய கடமையல்லவென்றும், போலீசார்செய்து நிறைவேற்றுவதற்குரிய பாரமான சர்க்கார்அலுவல அவர்களுக்கு உண்டென்றும் அறிந்துகொள்ளவேண்டும். இந்தியபிரஜைகளைப்போல எத்தேசத்துப் பிரஜைகளாவது பகையாயினும் பழியாயினும் சாதிக்கும்பொருட்டு, தமக்குள்உண்டாகும் ஒவ்வொரு அற்பச் சச்சரவுகளிலும் சர்க்கார்உத்தியோகஸ்தர் பிரவேசிக்கும்படி நாடுகிறதில்லை; இந்தக்குணத்தைப் போலீசார் தங்களால் ஆனமட்டும் உறுதியாகத்தடுத்து, பிரியாதுக்காரர், தங்கள் பிராதை மாஜிஸ்திரேட்டுகளிடத்தில் சொல்லிச் சட்டப்பிரகாரம் சகாயம்பெறுவதற்கு அவர்களை வழிப்படுத்தவேண்டும்.

௬. போலீசார் நேராய் உத்தியோக காரியம் நடப்பிக்கவொண்ணுத எந்தவிஷயத்திலாவது அப்படிச் செய்ததுண்டானுல், அந்த விஷயங்களைக குற்றபத்திரிகையில் விவரக்குறிப்பு எழுதுவதனுல் உத்தியோக ரீதியாகத் தமக்கு நேரே தெரியப்படுத்தும்படி சூப்பெரிண்டெண்டாண்டுகள் மாஜிஸ்திரேட்டுகளிடத்தில் கேட்டுக்கொள்ளவேண்டும்.

---

## நம்பர். ௧௮.

### ௧௮௬0ஹு மேமீ ௬௨

௧. ௧௮0௨-ம் வருஷத்து உ௭-வது சட்டத்தின் ௨0-வது பிரிவின்படிக்கு, கிஸ்தி பாக்கிசுகாகச் சொத்துஎடுக்கும்படி உதவிசெய்வதற்குக் கன்ஸ்டேபில்களை அழைக்கலாமாஎன்று ஜில்லாவின் சூப்பெரின் டெண்டாண்டு கேட்டதற்கு உத்தரம்,—

௨. உதவிக்குவரக் கேட்கும்பொழுது, அப்படிக் கேட்பவன், சந்தடிஉண்டாகுமென்று தோன்றுகிறபட்சத்தில், சமீபத்தில் உள்ள மாஜிஸ்திரேட்டினிடத்தில் கேட்கவேண்டுமென்தாகப் போலீசு உத்தியோகஸ்தர் அவனுக்குச்சொல்லவேண்டும். மாஜிஸ்திரேட்டு எழுத்துமூலமாய்க் கட்டளை பிறப்பித்தால்மாத்திரம் கன்ஸ்டேபில் உத்தியோகஸ்தர் உதவிசெய்யலாம்.

---

## நம்பர். உக.

### ௧அகூ௦ஆவது மேமீ ௧௦௨.

எந்த முகாந்தரத்தின் பொருட்டாகவாயினும் வகுப்பிற்காக வாயினும் வேலைக்காரரையாவது, வண்டியையாவது, சாமக்கிரியைகளையாவது சேகரித்துக்கொடுப்பதில் உதவிசெய்யவும் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கின்ற விதமாயன்றி வேறுவிதமாய் யாதொரு வகுப்பான குடிகளின் சரீரவிஷயத்திலாயினும் சொத்துவிஷயத்திலாயினும் எவ்விதமான காரணத்தின்பேராலாவது வலியச் சம்பந்தப்படவும் கூடாதென்று சமஸ்த அந்தஸ்திலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் கண்டிப்பாய் நிபந்தனை செய்யப்படுகின்றது.

---

## நம்பர். உரு.

### ௧அகூ௦ஆவது மேமீ உ௩௨.

௧. திருடினகுற்றத்தை எப்பொழுதாயினும் சிறு குற்றங்களில் ஒன்றுசப்பாவித்து அதில் போலீசார் பிரவேசிககாதிருக்கலாகுமாவென்று டிஸ்திரிக்டின் சூப்பெரின்டெண்டாண்டு கேட்ட கேள்விக்கு உத்தரம்;—

உ. எவ்வகையான திருட்டும் பெலோனிஎன்னும் குற்றவகுப்பைச் சேர்ந்ததே - திருட்டுக்குற்றத்தில் உட்படடிருக்கிறவர்களைப் பிடிப்பதற்குப் போலீசாருக்கு எந்தமட்டும் சம்பந்தம் உண்டோ, அந்தமட்டும் அவர்கள் அக்குற்றத்தைப் பாரமான குற்றமாகக்கண்டு நடக்கவேண்டும். இத்தேசத்தில் வழங்கும் சட்டபுஸ்தகங்களில் திருட்டுக்குற்றத்துக்குப் பேதம்கண்டெழுதப்பட்டிருக்கின்றது. ஆயினும் அந்தப்பேதம் விசேஷமாய் தெண்டனை இவ்வளவென்பதையும், அக்குற்றத்தைப் பரிசிலனை செய்யத்தக்க அதிகாரமுடைய உத்தியோகஸ்தர் இன்னாரென்பதையும் குறிப்பதேதவிர, போலீசு ரீதியாகப் பார்க்குமிடத்தில் குற்றத்தின் சகசமான தன்மை இன்னதென்று குறிப்பதல்ல.

௩. சிறியகுற்றங்கள் என்பவை சண்டைபோடுவது, அற்பமாகத் தாக்கவருவது, நிந்தனையாய்ப்பேசுவது, பழிதூற்றுவது, அநுத்தமாய்க் குறை கூறுவது, நுழைவது, ஆடுமாடுகளுக்குச் சொற்பகெடுதிசெய்வது ஆகிய இவைகளே.

---

நம்பர். உகூ.

கஅசுரு௵ மேமீ ருஉ௳.

க. சடங்குகளைக்குறித்தும் ஊர்கோலம் உற்சவமுதலானவைகளைக் குறித்தும் வலங்கை இடங்கைக் கட்சியார்களுக்குள் உண்டாயிருக்கின்ற பேதத்தால் ஜன அமரிக்கைக்குக் கெடுதி நேரிடுவதாகத் தோன்றுகிறபட்சத்தில், போலீசார் செய்யவேண்டிய கிரமம் என்னவென்றும், அப்படிப்பட்ட விஷயங்களில் போலீசு சட்டத்தின் சகூ-வது பிரிவு நிபந்தனைப்படி செய்யலாகுமாவென்றும்—டிஸ்திரிக்டின் சுப்பெரின்டெண்டெண்டு கேட்டதற்கு உத்தரம்.—

உ. எவ்வகைக் காரணத்தாலாவது ஜன அமரிக்கை கெடாதிருக்கும்படி தடுத்துக்கொள்வதே போலீசார் செய்யவேண்டிய முதன்மையும் முக்கியமுமான உத்தியோகமென்பதாகச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஜன அமரிக்கை கெட்டுப்போகிறவிஷயத்தில் போலீசார் தங்கள் அலுவலைச்செய்யாமல் விட்டார்களென்று பரிஷ்காரமாய்த் தோன்றும் எவ்விடத்தில் ஜன அமரிக்கைக்குக் கெடுதி நேரிடுவதாகப் போலீசாருக்குத் தோன்றுகிறதோ, அவ்விடத்தில் அதைக் கெடாமல் அமைதியாகவும் தீர்ப்பாகவும் காத்துக்கொள்ளும்பொருட்டுஅவர்கள் போதுமான பெயர்கள் கூடி ஆஜராகவேண்டும்; அல்லது கட்சியார் கைகலந்து சண்டைபிடிப்பது அநிவாரியமா யிருக்கிறபட்சத்தில், போலீசார் சந்தடிசெய்யும் யாவரையும் இன்னாரென்று நிச்சயித்துக் காரியசித்தியாய்ப் பந்தோபஸ்துச் செய்யவேண்டும்.

௩. மேலே கேட்டகேள்வியில் குறித்தபொருளுக்கு ஒரே உத்தரம் உண்டு. அது ஜனங்கள் குற்றமில்லாத பிரதிகாரியங்களையும் செய்துகொண்டிருக்கையில் அவர்களைக் காப்பதும், அவர்களுடைய சுயாதீனத்தைத் தாங்கள் குறைக்காமலும், அதில அநாவசிகமாகச் சம்பந்தப்படுவதற்குப் பிறருக்கு இடங்கொடுக்காமலும் இருப்பதும் போலீசாருடைய அலுவல் என்பது. மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் எழுதிய ஒருகுறிப்பினின்று இதன் அடியில்எடுத்துக்காட்டிய வரலாறுகளைக்கொண்டு போலீசார் அனுசரிக்கத்தகும் கிரமம் இன்னதென்று ஐயம்திரிபின்றி அறியலாம்:—

" அப்படிப்பட்ட விஷயங்களில் அனுசரித்து நடக்கவேண்
" டிய திட்டமான விதி இன்னதென்று பரிஷ்காரமாய்த் தோன்
" றும். மஹாராணியவர்களுடைய பிரஜைகள் சாதாரணமாயுள்
" ள தங்கள் தொழில் முகாந்தரமாகவன்றி, தோஷமில்லாத சட
" ங்குகள் விநோதச் செய்கைகளின் முகாந்தரமாகவும் ராஜ பா

“தைகளில் போக்குவரவுசெய்வதற்குப் பாத்திய முடையவர்க
“ள் இந்தப்பாத்தியதையைச் செலுத்துவதில் ஜனங்களுக்குஆ
“தரவுகள் செய்வது தேச அதிகாரிகளுடைய கடமையாம்.
“வெவ்வேறு சாதியார் சுஜாதி யபிமானமுடையவர்களாய்த் த
“காத ஆட்சேபம் பண்ணுவதற்கு இடங்கொடுத்தால், அவர்க
“ளுக்குள் உண்டான சண்டைகள் விரோதங்கள் ஒருக்காலும்
“ஒழியாது. அதற்கு இடங்கொடாமல் யாவரும் தாரதம்மிய
“மின்றிச் சமமான சுயாதீன முடையவர்களாகும்படி இடங்
“கொடுத்தால், பழைய விவாதத்தால் உண்டாகும் வர்மமும்
“மனவெழுச்சியும் சென்னபட்டணமுதலான இடங்களில் ஒழி
“ந்ததுபோல் மற்றிடங்களிலும் சீக்கிரம் ஒழிந்துபோம். ஆயி
“னும் பலரும் போக்குவரவுசெய்யும் பகிரங்கமான பாதை
“களைக்காக்கும்பொருட்டு, பலமான போலீசுவகுப்பாரை ஏற்
“படுத்துவது அவசியம். அயர்லாந்து தேசத்தில் ஒன்றுக்கொ,
“ன்று விரோதமாகிய மதங்களை அனுசரித்த ஒரொஞ்சுமென்,
“ரோமான்கத்தோலிக்கர் என்பவர்களை ஒருவரோடொருவர்மு
“ரணவொட்டாமல் அடக்குவதற்குத் தகுந்ததாயிருந்தஏற்பா
“டு தென் இந்தியாவில் சஞ்சரிக்கும் பிரதி மதஸ்தர்களையும்
“ஜாதியார்களையும் கிரமமாய் அடக்கிக் காப்பதற்கு ஏற்ற ஏற்
“பாடாகாமல்இராதே. கன்ஸ்டேபில் வகுப்புச் சேவகருக்குரா
“ணுவசிட்சை பயிற்றுவதும், ஒன்றாகத்திரண்டு உறுதியாய்க்
“காரியம் நடத்துவதற்கு அவர்களுக்கு உண்டான திராணியும்
“இப்படிப்பட்ட சமயங்களில் உபயோகமாய்க் காணப்படும்.

௪. யாவருக்கும் உபயோகமாகத்தக்க இந்த ஆதாரவிதிகளைச் சுயாதீனசிந்தையோடு பலிப்பிக்கவேண்டும். ஒருவன் செய்யும் குற்றமில்லாத சுயாதீனச்செய்கைகளில் மற்றொருவன் வலியப் பிரவேசிப்பதற்கு இடங்கொடுக்கப்படாது என்பதை அக்கிரமஞ்செய்வதற்கு எண்ணங்கொண்டிருப்பவர்கள் உள்ளத்தில்கண்டு உணரும்படிசெய்தால், பெரும்பாலும் அக்கிரமச்செய்கைகளுக்கு எத்தனிப்பது ஒழிந்துபோம்.

௫. போலீசு வகுப்பைச்சேர்ந்த பிரதி உத்தியோகஸ்தர்களும் சாத்தியப்படுமானால், தங்கள் சுவய யுத்தி புத்தி உத்தரவாதங்களைமாத்திரம் சார்ந்து ஒன்றும் செய்யாதிருப்பது அவசியமாகும். இதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். போ

லீசு உத்தியோகஸ்தன் பெரும்பாலும் மாஜிஸ்திரேட்டின்உத்தரவுகேட்டு அதேபிரகாரம் செய்யலாகும். கூடுமானால் எப்பொழுதும் அப்படியே செய்யவேண்டும். மாஜிஸ்திரேட்டானவர் தமது விசாரணைக்கு உட்பட்ட போலீசு வகுப்புத்தலைவருக்குத் தாம்விதிக்கும் கட்டளைகளை இந்தக் கொள்கைகளை அனுசரித்தே விதிக்கவேண்டும். போலீசு வகுப்புத் தலைவனும் தன்னால் ஆகத்தக்க எவ்வகையினாலும் மாஜிஸ்திரேட்டை ஆதரிக்கவேண்டும். நேராக மாஜிஸ்திரேட்டினுடைய ஆதரவும் கட்டளைகளும்பெற்றுப் போலீசார் செய்வதெல்லாம் நன்றாய்ப் பலித்து அபிவிர்த்தியாகும். மாஜிஸ்திரேட்டைக் காணக்கூடாதிருக்கிறபட்சத்தில், போலீசு உத்தியோகஸ்தன் தனது உத்தியோகநிலைமை எவ்வளவு அதிக உத்தரவாதமுள்ளதாயிருக்கிறதோ அதையும், ஏதும் செய்யத்தொடங்குமுன் எல்லாச்சிந்தனைகளையும் எவ்வளவு சாவதானமாய்ச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமோ அதையும் சிந்தையில் வைத்துக்கொண்டு, தனக்கு யுக்தமாகத்தோன்றுகிறபடி செய்யவேண்டும்.

௯. உற்சவம் ஊர்கோல முதலானவைகளை ஒரு மாஜிஸ்திரேட்டைக்கொண்டு ஒழுங்காக் குவிக்கக்கூடுமானால் போலீசு உத்தியோகஸ்தர்கள் ௬௬-வது பிரிவின்படி செய்யவேண்டுவதில்லை. பொதுவாய் ஒழுங்குசெய்வது அவசியமென்பதை அவர்கள் சமயம்வருமுன்னதாகவேகாணமாட்டுவார்கள்! அவர்கள்ஒழுங்குகளைச்சித்தஞ்செய்து எழுதி, மாஜிஸ்திரேட்டின் அனுமதிபெறும்படி அவரிடத்திற்கு ஒரு பிரதியும் டெப்டி இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கு ஒருபிரதியும், அனுப்பவேண்டும்.

---

நெம்பர் - ௨௭.

௧௮௬௦ வரு - ஜூன்மீ ௮௨

௧. இப்பொழுது போலீசு வகுப்புடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற கிராமத்தலையாரிகள் கிராமத்துக்குடிகளின் விஷயத்தில் சாதாரணமாயுள்ள தங்கள்கடமைகளைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. பொதுவாய் இந்தக் கடமைகள் போலீசு சட்டத்திற்கும், அவர்கள் தற்கால உத்தியோகத்திற்கும் தகுதியானவைகளே.

௨. அவர்கள் சர்க்கார் ரெவெனியு அலுவல் செய்யவேண்டுவதில்லை.

(௧௮௬௫ ௵த்து ௨௪-வது சட்டத்தின் ௪-வது பிரிவு.)

---

நெம்பர்-௬௮.

௧௮௬0 ௵ ஜூலைமீ ௨௫உ

௧. சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் அலுவல் முகாந்தர "மாய்ப் பிரயாணம்போகயில் அடியில்வருகிறபடி அறிக்கை "செய்தார்:—"சரீரக்காவலின் பொருட்டு நான்கொண்டுபோ "ய் வைத்திருந்த ஆயுதங்களைக்கண்டு, புதுப்போலீசு உத்தி "யோகஸ்தர்கள் அதற்கு உத்தரவுச்சீட்டுக் காட்டும்படி கேட் "டார்கள்."

௨. ஆயுதம் கொண்டுபோகக் கருதும் அவர்கள் அதற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று யுத்தாயுதங்களைக்குறித்து ஏற்பட்டசட்டத்தில் இருக்கும் நிபந்தனை ஜில்லாக்களில் செல்லாது ஆனதினால் (சிலர்தவிர) மற்றெல்லாரும் உத்தரவுப்பத்திரமின்றி யுத்தாயுதம்கொண்டு போவதற்கு இடம் உண்டு.

௩. அனுமானிக்கப்படுவதற்கு ஏதுவான ஒழுக்கமுள்ளவர்கள் யுத்தாயுதங்கள் கொண்டுபோனால், அவர்களைத் திட்டமாய்ப் பார்த்துப் பரீட்சிப்பது ஆவசிகந்தான். ஆயினும் மானஸ்தர்களையும் பகிரங்கமாய்த் தெரிந்தபெயர்களையும் தடைசெய்யவொண்ணாது.

---

நெம்பர்-௪௪.

௧௮௬0 ௵ செப்டெம்பர்மீ ௪உ

௧. சில டிஸ்திரிக்டுகளில் இன்ஸ்பெக்டர்கள்தங்கள் இலாக்காவுக்கு உள்ளிட்டிருக்கும் கிராமங்களைப்போய்ப் பார்க்கவேண்டிய கடமையைப் பூரணமாய் நிறைவேற்றுகிறதில்லையென்பதாக இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குத் தெரியவந்தது.

உ. தன்விசாரணைக்கு உள்ளிருக்கும் கிராமப்போலீசுசேவகனை இடைக்கிடை ருஜுவிலே கண்டு கலந்து சம்பாஷிக்காதிருக்கிற போலீசு இன்ஸ்பேக்டர் எவனுவது தன் அலுவலைத் தகுதியாய் நிறைவேற்றுவது சாத்தியப்படாதே. இந்தக்கடமையை எவ்வளவும் தவருமல் செய்யவேண்டுமென்று இன்ஸ்பெக்டர்களுக்கு அழுத்தி வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. மேலும் இவ்விஷயத்தைச் சுப்பெரிண்டெண்டாண்டுகள்மிகவும் ஜாக்கிரதையாய் விசாரணைசெய்யவேண்டும்.

௩. கன்ஸ்டேபில் உத்தியோகஸ்தர்கள் கிராமப் போலீசு உத்தியோகஸ்தர்களை அவரவர் எல்லைக்கு அப்புறம் எவ்விதத்திலும் வரவழைக்கப்படாது. கிராமங்களில் நடக்கும் திட்டங்களை ஸ்டேஷன்சாவடி உத்தியோகஸ்தர்களுக்குத் துறையாய்த் தெரியப்படுத்தும் பொருட்டு, கன்ஸ்டேபில் உத்தியோகஸ்தர்கள் கிராமங்களினின்று ஸ்டேஷன் சாவடிகளுக்கும், வெளிடாணுக்களுக்கும் கிராமக்காவற்காரர்மூலமாக அறிக்கை அனுப்பலாமேதவிர, மற்றப்படி அவர்களைக்கொண்டு குற்றேவல் செய்விக்கவாவது, அவர்களை வழிகாட்டிகளாகவும், சுமையெடுப்போராகவும், சாமானியதூதராகவும் உபயோகப்படுத்தவாவது கூடாது.

---

நெம்பர் ருக.

கஅகூ௦ஸு செப்டெம்பமீ உஎவ

கன்ஸ்டேபில்கள் நாட்டில் அங்கங்கே உலாவி வரும்பொழுது சங்கதிகளை ஆய்ந்தறிவதில் தகுதியானமட்டும் சிந்தையாயிருக்கிறதில்லை.

உ. சங்கதிகளை விசாரித்துக் கண்டறியும் வழக்கம் பயிற்றப்படவேண்டும். இதுவிஷயத்தின்பேறில் கற்பனைப்பாடசாலையில் விசேஷமானபோதனைகள் உணர்த்தப் படவேண்டும். அங்கங்கே போய், நடப்பவைகளைக் கண்டு கேட்டறியவும், கண்டயாவையும் திரும்பி வரும்பொழுது எதார்த்தமாய் அறிக்கைசெய்யவும் சேவகர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

௩. கன்ஸ்டேபில்கள் தங்கள் சரகத்தின் எல்லைக்கு உள்ளிட்டிருக்கும் சமஸ்த கிராமங்களுக்கும் போய், அங்குள்ள

கணக்கரையும் முன்சிப்புகளையும் கண்டு பேசுவதுமன்றி, அங்கங்கே உண்டாகும் பிராது சங்கதிகளைக் கேட்டறியவும், கவனிக்கத்தகுந்த மற்றெல்லா விஷயங்களையும் விசாரித்து விவரம் அறியவும் தக்கதாக, தலைமையானகுடிகளுடன் கலந்துபேச வகைபார்க்கவும் வேண்டும், பிரதிதினமும் அப்படிச் செய்வதற்குச் சாத்தியப்படாதிருக்கிறபட்சத்தில், கன்ஸ்டேபில்கள் இத்தனை நாளைக்கு ஒருமுறைபோவதென்று ஒருகிராமம்வைத்து, அந்தக் கிரமம்தவறாமல் சரகத்துக்கு உட்பட்ட கிராமங்களுக்குப் போகவேண்டும்.

ச. ஹெட் கன்ஸ்டேபில்களும் டெப்டி கன்ஸ்டேபில்களும் பிரதி கிராமங்களுக்கும் அவசியம் போகவேண்டும்; அன்றியும் குற்றம் தடுப்பதற்காவது, பரீட்சை செய்வதற்காவது போகும்பொழுது கிராம உத்தியோகஸ்தர்களைக் காணவேண்டும். மேலும் கிராமப்போலீசு சேவகரும் கன்ஸ்ட்டேபில் வகுப்புப் போலீசார்களும் கடமை நிறைவேற்றும் விதம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் குடிகளுக்கும் திர்ப்தி கரமாய் இருப்பது இராததை, ஷெ ஹெட் - டெப்டி கன்ஸ்டேபில்கள் விவரணமாய்க் கண்டறிந்து, அதைச்சுட்டிஸ்டேஷின் சாவடியில் உள்ள தினசரிதை அறிக்கைப் புஸ்தகத்தில் விசேஷக் குறிப்பு எழுதவேண்டும்.

---

நெம்பர் - எஉ.

கஅகூ०ஞு டிசெம்பர்மீ கூஉ

க. தாக்கவருதல், தாக்கவருதலும் காயப்படுத்தல்முதலிய ஊறுபாடுகள் செய்தலும் என்னும் குற்றச்சாட்டுகள் போலீசாரால் ஏற்கப்படுவதைக்குறித்துத் தப்பெண்ணம் உண்டாகி மேலிட்டிருக்கின்றது.

உ. மேற்குறித்த குற்றங்களைச்சாரும் சங்கதிகள் வாஸ்தவமாய்ப் பாரமானவைகளாகவும் மிகவும் கெடுதியானவைகளாவும் இருக்கவேண்டும். அவைகள் மாஜிஸ்திரேட்டுக்கு எதிரிலே பிரியாதுபண்ணப்படும் எவ்வித சங்கதிகளில் அவர் அப்பியந்தமின்றிப் பிரதிவாதியைப்பிடித்து வரும்படி வாரண்டு பிறப்பிப்பாரோ அவ்விதசங்கதி சாட்டப்பட்ட குற்றமுள்ளவைக

ளாயிருக்கவேண்டும். ஜீவனுக்காவது, அவயவத்துக்காவது அபாயம் நேரிடாமல் மூக்கில் இரத்தம் காணுதல், கண்கறுத்தல்முதலாகிய அற்பகாயங்களை வருவிப்பதை "காயப்படுத்தல்" என்னும் குற்றமாக மதிக்கப்படாது. அவைகளைப் பாரமென்று எண்ணிப் போலீசார் தாக்கவருதல் என்னும் குற்றத்தின் ஒப்பந்தமாய் அவைகளில் பிரவேசிக்க வொண்ணாது.

௩. தாக்கவருதல் என்னும் குற்றசம்பந்தமான பிராதுகளைப் போலீசுஉத்தியோகஸ்தர்கள் தங்கள் விசாரணைக்குள்வருகும்படி கருத்துடையவர்களாயிருப்பதைச் சுப்பெரின்டெண்டாண்டுகள் தடுக்கவேண்டும். மேலும் ஒருகுற்றம் எத்தன்மையுள்ளதென்று எளிதில் நிதானிக்கக்கூடாதபடி சந்தேகம் உண்டாகிறபட்சத்தில், அதைக்குறித்த பிராதை மாஜிஸ்திரேட்டினிடத்தில் விடுவதே உத்தமம். அப்படிச்செய்வது தப்பாயிருப்பினும் பெரிதல்ல.

---

## நெம்பர் அஉ.

### ௧அ௬௦ஞு டிசெம்பர்மீ உஅ௳.

௧. ஒரு ரூபாய்க்குக் குறைந்த சிறிய களவுப் பிரியாதுகள், ௧அ௪௬ ஞுத்து ௧௧-வது சட்டத்தின் ௪௦-வதுபிரிவுநிபந்தனைப்படிக்கும்,கிரிமினல்புரொசிடியூரின் ௬௪௨ -வதுபிரிவுநிபந்தனைப்படிக்கும் கிராமத்தலைவர்களால் விசாரிக்கப்படலாகும். இவ்விதப் பிரியாதுகளைப் போலீசார் எப்பொழுதும் கிராமத்தலைவர்களிடத்தில் ஏற்படுத்தவேண்டும். தாலூகா மாஜிஸ்திரேட்டுகளிடத்தில் ஏற்படுத்தவொண்ணாது.

௨. சாத்தியமாகவும் வசதியாகவும் இருக்குமானால் குற்றபத்திரிகையில் விவரம் எழுதவேண்டும்.

---

## நெம்பர் அ௩.

### ௧அ௬௦ஞு டிசெம்பர்மீ உ௯௳.

௧. சகல குற்றசங்கதிகளையும் அவைகள் சம்பவிக்கும்அப்பொழுதே பிரதி அந்தஸ்து மாஜிஸ்திரேட்டுகளுக்கும் கிரம

மாய் எழுதி அறிவிக்கும்படி ஒருதிட்டம் ஏற்படுத்தப்படவேண்டுவது அவசியம்.

௨. குற்றம் நடந்ததென்று சங்கதி தெரியவரும்பொழுது கிராமப்போலீசார் அதைக் கிராம மாஜிஸ்திரேட்டுக்குத் தாமசமின்றித் தெரியப்படுத்தி, அப்புறம், குற்றம் சம்பவித்த ஸ்தானத்திலேயே கிராமப்போலீசு உத்தியோகஸ்தர்கள் குற்றசங்கதிகளை விசாரணை செய்யத்தொடங்கி, அவ்விடத்திற்கு ஸப் - மாஜிஸ்திரேட்டுக்குப் பதிலாகக் கிராம மாஜிஸ்திரேட்டை வரும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்; கிராமமாஜிஸ்திரேட்டு அவர்களுக்குத் துணைநின்று, தெரியாத விஷயங்களைச்சொல்லிக்கொடுத்து, அப்புறம் கன்ஸ்டேபில்களும் கிராமப் போலீசார்களும் நடத்தும் நடவடிக்கைகளில் எல்லாம் அவர்களுடன் ஆஜராயிருக்கவேண்டும். மேலும் கிராம மாஜிஸ்திரேட்டானவர் அந்தக் குற்றத்தின் விவரத்தையும் அதைக்குறித்துத் தாம் கண்டு அறிந்த சங்கதிகள் அனைத்தையும் சுட்டிப் பிரத்தியேகமான அறிக்கை ஒன்று எழுதி, சப்-மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பவேண்டும். முதலில் கிராமப்போலீசார் கிராம மாஜிஸ்திரேட்டுக்கு எழுதும் அறிக்கை மிகவும் சுருக்கமானதாயிருக்கவேண்டும்; அவ்வறிக்கை எழுதப்பட்ட மணிநேரம் இன்னதென்றும், அதன்மேல் கிராம மாஜிஸ்திரேட்டின் நடவடிக்கைகள் இன்னவையென்றும் தவறாமல் கிராம அறிக்கையில் எழுதிவைக்கவேண்டும். கன்ஸ்டேபில்களும்கிராமப் போலீசாரும் குற்றவிசாரணை செய்யும்இடத்தில் யாதொரு கிராம மாஜிஸ்திரேட்டு ஆஜராகாமலும் அவர்களுக்கு உதவி செய்யாமலுமிருந்தால், அதை இன்ஸ்பெக்டர்களும் ஹெட்கன்ஸ்டேபில்களும் ஸப் - மாஜிஸ்திரேட்டுகளுக்கு விசேஷமாய்த்தெரியப்படுத்தவேண்டும்.

குற்றம் நடந்ததென்று முதலில் கிராமமாஜிஸ்திரேட்டுக்குச் செய்தி பிறக்குமானால், அம்மாஜிஸ்திரேட்டு மேற்சொல்லியவாறே காலதாமசம் செய்யாமல் அதைக் கன்ஸ்டேபில்களுக்கும் கிராமப் போலீசாருக்கும் தெரிவித்து அவர்களை உடனே ஆஜராகச்செய்யவேண்டும்.

கிராம அதிகாரிகள் ஐக்கியமாய்ச்சேர்ந்து இசைந்துதொழில் நடத்தும்படி தூண்டி விடப்படவேண்டும். இன்ஸ்பெக்

டர்கள், ஹெட் - கன்ஸ்டேபில்கள், டெப்டி-கன்ஸ்டேபில்கள் போலீசுவகுப்பைச்சேர்ந்த மற்றச் சேவகர் ஆகிய அனைவரும் கிராம மாஜிஸ்திரேட்டையும், அதிகாரிகளையும் முக்கியமாய் உபசரித்து அவர்களிடத்தில் நம்பிக்கைவைத்து நடக்கவேண்டும். அவர்களை அடிக்கடி கண்டுயோசனை சொல்லவும் கேட்கவும்வேண்டும்.

௩. போலீசு ஆக்ட்டின் ரீடிசையில் சொல்லிய நிபந்தனைப்பிரகாரம், நானுதரத்துப் போலீசுவகுப்பார்களும் குற்றம் தடுத்தலும் பிடித்தலுமாகிய அலுவல் செய்வதில் மாஜிஸ்திரேட்டுகளின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்களே. இதை அவர்கள் நினைத்துக்கொள்ளவேண்டும். மாஜிஸ் திரேட்டுக்குரிய அதிகாரங்களில் சிலவற்றைச் செலுத்துகின்ற கிராமமாஜிஸ்திரேட்டுகளும் மாஜிஸ்திரேட்டுகளின் வகுப்பைச்சேர்ந்தவர்களாதலால், அந்தக் கிராம மாஜிஸ்திரேட்டுகளின் அதிகார எல்லைக்குள் அலுவல்செய்யும் நானுதரத்துப் போலீசுவகுப்பார்களும் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள்தாமே. அதனல் போலீசார் ஒரு கிராம மாஜிஸ்திரேட்டின் எல்லைக்குள்ளாவது மற்றிடத்திலாவது குற்றத்தைத் தடுக்கும்பொழுதும் பிடிக்கும்பொழுதும் கிராம மாஜிஸ்திரேட்டு பூரணமாய் அவர்களுக்குத் துணைநின்று உதவிசெய்வது நியாயந்தான். இப்படி இவ்விருதிறத்தாருக்கும் அனுகூலம் உண்டாகும்படி ஏற்பட்டிருக்கின்ற சம்பந்தத்தை அவர்கள் கண்டுணர்ந்து அனுபவப்படுத்திக்கொள்ளத்தக்கதாக அவர்களுக்கு ஜாக்கிரதையாய்க்காண்பிக்கவேண்டும். விசேஷமாய்க் கிராமப் போலீசார் சட்டத்திற்குரிய விஷயங்களில் கிராம மாஜிஸ்திரேட்டின் சொற்கேட்டு நடக்கவேண்டியது.

௪. ஒருகுற்றம் சம்பவித்த சங்கதியைக்குறித்து எதற்குச் செய்தி தெரிவிக்கப்படுகின்றதோ, அந்த ஸ்டேஷன் சாவடியிலிருந்து கிரிமினல் பு. இன் கூ௫-வது பிரிவின்படி அந்தத்தாலூகாவின் அல்லது பிரிவின் ஸப் மாஜிஸ்திரேட்டுக்குத் துறையாய் அறிக்கை அனுப்பப்படவேண்டும்.

இவ்வறிக்கை, "ஏற்கப்பட்ட குற்றபத்திரிகை" மூலமாய் அனுப்பப்படவேண்டும்.

க-வது. குற்றஞ்செய்தவன் பிடிக்கப்படுகிற பட்சத்தில், உச மணி நேரத்துக்குள் அனுப்பப்படவேண்டிய குற்றபத்திரிகைதானே குற்ற அறிக்கைச்சாதனமாகும்.

உ-வது. ஒருவன் பிரியாதுசெய்திருக்க, பிரியாது செய்யப்பட்டவன் பிடிக்கப்படாதிருக்கிற பட்சத்தில், மாமூல்பிரகாரம் குற்றபத்திரிகையில் எழுதவேண்டிய சங்கதிகளை எழுதவேண்டும். "குற்றம் சாட்டப்பட்டவன்பெயர்" என்னும் குறிப்புள்ள கலத்தில், குற்றத்தைக்கண்டு வெளியிடும் விஷயத்தில் செய்யக்கருதிய உபாயங்கள் எவையென்று விவரணமாய் எழுதிக்காட்டவேண்டும்.

ரு-வது. குற்றத்தைக்குறித்து எவனுவது பிரியாது செய்யாமலும், குற்றம்செய்தவன் பிடிக்கப்படாமலும்இருக்க, போலீசார் தங்கள் அனுமானத்தின்பேரில் ஏதாயினும் செய்கிறபட்சத்தில், அதை "பிரியாதுகாரன்பெயர்" என்னும் கலத்தில் குறிப்பிக்கவேண்டும்.

ௐ. குற்றசங்கதி தெரிவிக்கப்பட்டு இருபத்துநாலுமணி நேரத்திற்குள் அதைப்பற்றிய அறிக்கை தவறாமல் எப்பொழுதும் ஸப் மாஜிஸ்திரேட்டின் சமுகத்தில் சேர்க்கப்படவேண்டும். அப்படிச் சேர்ப்பதற்கு இடையூறாக அநிவாரியமான தடைகள் நேர்ந்தால் அவைகளை விவரணமாய் அறிக்கையில்குறிக்கவேண்டும்.

சா. குற்றபத்திரிகை அனுப்பப்பட்டதன்மேல் செய்யப்படும் பிரதிசெய்கைகளையும் "ஏற்கப்பட்ட அனுபந்த குற்றபத்திரிகை" மூலமாய் அறிக்கைசெய்யவேண்டும். (முன்பு அனுப்பிய பத்திரிகையின் இலக்கமே அதற்கும் இலக்கமாம்.) திர்ஷ்டாந்தம்,—வெறுங் குற்றபத்திரிகை அனுப்பப்பட்டதன் மேல் ஒருவன் பிடிக்கப்பட்டால், அவன் அனுபந்த குற்றபத்திரிகையுடன் அனுப்பப்படவேண்டும்.

எ. கூட்டக்கொள்ளை, குரூரமானவழிப்பறி, கொலைமுதலிய பாரமானகுற்றங்கள் சம்பவிக்கும்பொழுது அதைக்குறித்துச் சுப்பெரின்டெண்டாண்டுக்குச் செய்தி தெரியவருகிற தக்ஷணமே சுப்பெரின்டெண்டாண்டு விசேஷ அறிக்கை எழு

தி மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பவேண்டும். கிரமமான அறிக்கையைத் தினசரிதை அறிக்கைப் புஸ்தகத்தில் பதியலாம்.

---

நம்பர். அரு.

கஅகூ௦ ஹு டிசெம்பர்மீ உகூஉ

க. ஒருடிஸ்திரிக்டில் ஒரு களவு நடந்தது. அந்தச் சங்கதியைக்குறித்துப் போலீசார் நாலுநாள்வரையில் கேள்விப்படவில்லை; களவு கொடுத்தவர்கள் பிரியாது பண்ணுவதற்குத் தயாராயிருந்தார்கள்.

உ. "அந்தக் கிராமத்தின் தலையாரி அலுவலின்பேரில் ——இன்ஹேட்கன் ஸ்டேபிலிடத்திற்குப் போயிருந்தான்" என்று அஸிஸ்டாண்டு சுப்பெரிண்டெண்டாண்டு உத்தியோகஸ்தர் அறிக்கை எழுதினர்.

ரு. அந்தத் தலையாரி ஆருடைய கட்டளைப்படிக்கு "அலுவலின்பேரில்" கிராமத்தைவிட்டுப் போயிருந்தானென்று அஸிஸ்டாண்டு சுப்பெரிண்டெண்டாண்டு விவரம் எழுதவில்லை; அவன் அப்படிச்செய்தது தகாதென்று கண்டித்து எழுதுவதாக ஷை அறிக்கையில் காணப்படவுமில்லை. கண்டித்து எழுதுவதல்லவோ கிரமம். அடுத்த தாலூகாவில் பெரிய உற்சவம் நடந்தது; கன்ஸ்டேபில்கள் சாலைகளில் ஜாக்கிரதையாய் உலாவிக் காவல்செய்தார்கள். அவர்கள் தலைமையானபோலீசுஉத்தியோகஸ்தர்கள் அறியக் கிராமப்போலீசு சேவகரைத் தங்களுக்கு உதவியாய் அழைத்துப்போயிருப்பார்களென்று சந்தேகம் உண்டாகின்றது. இருபத்துநாலுமணி நேரமட்டுமாவது இப்படிக்கிராமக்காவற்காரரை அவர்கள் அலுவல்பார்க்குமிடத்தைவிட்டு விலக்குவது தகாதென்று இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களால் அடுத்தடுத்து உறுதியாய்க் கண்டித்து சொல்லப்பட்டது. இப்படிச் செய்வது குடிகளுக்கு அநியாயம்; கட்டளைக்கு அடங்காமை. மேலும் இதனால்வரும் துயரமான கேட்டுக்கு இதுவும் ஒரு திர்ஷ்டாந்தந்தான். இன்னும் பல திர்ஷ்டாந்தங்கள் சம்பவித்திருக்கலாம்.

ச. சுப்பெரிண்டெண்டாண்டுகள் அனைவரும் இதுவிஷயத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டுமென்று மறுபடியும்

வற்புறுத்திச் சொல்லப்படுகின்றது.*கிராமப் போலீசார் தங்கள் அலுவல் ஸ்தானங்களில் நிலைமையாய்த் தங்கவேண்டுமென்றும், பொதுவான சேவகத்தின்பேரில் எந்தமுகாந்தரத்தைக் கொண்டாவது அவர்களை அலுவல் ஸ்தானத்தினின்று விலக்கிக் கொண்டுபோக வொண்ணுதென்றும் கற்பிக்கின்றவிதியைத் திட்டமாய்க் கவனித்துக் காத்து நடக்கும்படி செய்யவேண்டும்.

---

நம்பர். அஎ.

௲அ௱௦ ஹூ டிசெம்பர்மீ உகூ

க. கர்ப்பம் அழித்தல், பிள்ளைப்பேற்றை மறைத்தல் முதலிய குற்றங்கள் செய்யப்பட்டனவென்று அனுமானிக்கப்படும் பிராதுகளை ஒரு மாஜிஸ்திரேட்டு, அல்லது ஸப்-மாஜிஸ்திரேட்டின் உத்திரவின்றிப் போலீசார் கைக்கொள்ள வொண்ணுது.

உ. இப்படிப்பட்ட குற்றம் சம்பவித்ததென்று சமாசாரம் கேட்கும்பொழுது, போலீசார் அதை அறிக்கைசெய்து, கிரமமானபடி வாரண்டு எடுக்கவேண்டும்.

---

நம்பர் அகூ.

௲அ௱௬௧ ஹூ ஜனுவரிமீ உ௨

போலீசார்கையில் அகப்படும் பேவாரிசான சொத்தைச் சட்டப்படி ஒப்படை செய்வதற்கு அவர்கள் சமீபத்தில் இருக்கும் மாஜிஸ்திரேட்டுவசம் ஒப்பிக்கவேண்டும்.

---

நம்பர். கூ௦.

௲அ௱௬௧ ஹூ ஜனுவரிமீ உ௨

க.——ஜில்லா சுப்பெரிண்டெண்டாண்டு கரு-வது இலக்கத்துப்போலீசுக் கட்டளையைச் சுட்டிக் கேட்கிறதாவது.—

* போலீசு விஷயத்தைப்பற்றி சங்கிரகமா எழுதியிருக்கும்பிரிசிஸ்லின் - க௦கூ -வது பாராவையும் - போலீசு கட்டளைகளின் - சச-வது நம்பர் உத்தரவையும்பார்க்க.

"ஒருவனுடைய மரணத்தைச் சார்ந்த சங்கதிகள் அசா "தாரணமான வைகளாயிருக்கிறபட்சத்தில், பிரேத விசாரணை "செய்தவர்கள் அவனுக்குத் தற்செயலாக, அல்லது இயற்கை "யான காரணங்களால் மரணம் நேர்ந்ததென்று காணும்பொ "ழுது, பிரேதத்தை க்ஷேமிக்கும்படி உத்தரவுசெய்வது ஆர் "கடமை?" மேலும், தாலூகா அதிகாரஸ்தர்கள் பிரேத விசா ரணை ஸ்தானத்திற்குப் போவதற்கு அப்பியந்தப் படுவதினால், இன்னின்ன பிரேதங்கள் பலநாள்வரையில் க்ஷேமிக்கப்படாதி ருந்தனவென்று 'அவர் திர்ஷ்டாந்தம் கண்டெழுதுகிறார்.

௨. அப்படிப்பட்ட பிரேதங்களை க்ஷேமிக்கும்படி உத் தரவுசெய்யத்தகும் உத்தியோகஸ்தர் அங்குள்ள மாஜிஸ்திரேட் டேதாமே. கஅகசு(ஹு)த்து கக-வது சட்டத்தின் கரு-வது பி ரிவின்படிக்கும், கிரிமினல் பு. இன் சசஉ-வது பிரிவின் படிக்கும் அவசியமான விசாரணைகள் அனைத்தும் செய்வதற் குப் பொத்தேலுக்கு அதிகாரம் உண்டு. * அன்றியும் பிரேத க்ஷேமத்திற்கு உத்தரவு செய்வதற்கும் சட்டத்தினால் அவருக் கு அதிகாரம் இருக்கலாம். ஆயினும், பிரதி சுப்பெரிண்டெ ண்டாண்டுகளும் சங்கதியை விவரணமாக மாஜிஸ்திரேட்டுக்கு த் தெரியப்படுத்தவேண்டும்; அவர் தமது கீழுத்தியோகஸ்தர் களுக்கு அவசியமானபடி செய்வதற்கு உத்தரவு கொடுப்பார்.

---

நம்பர். கூரு.

கஅசுக(ஹு) ஜனுவரி௴ உகஉ.

க.——ஜில்லாவில் மிஷனரிகள் என்கிற பாதிரிகளும் அ வர்களுடைய உபதேசிகளும் வீதிகளில் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கும்போது, போலீசார் பலமுறையும் அவர்கள் விஷயத்தில் பிரவேசித்து, பிரசங்கம் கேட்டவர்களைக் கலைக்கு ம்படி பிரயத்தனப்பட்டார்கள்.

உ. இவ்வகையாக அப்படிப்பட்டவர்களுடைய மதவிஷ யத்தில் விரோதசாதனையாகவும், தகாதவிதமாகவும் போலீசார்

---

* கஅசுக(ஹு) மேமீ ௬௦ உ கருஎ-நெ- போலீசு கட்டளையை ப் பார்க்க.

பிரவேசிப்பது திட்டமாகவும் தீர்ப்பாகவும் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

---

## நெம்பர் - கூ௮.

### க௮௬க௫ ஜனவரிமீ உ௬வ.

க. துர்மரணசங்கதி விசாரணையில் ஆஜராயிருக்கிற போலீசு உத்தியோகஸ்தர்களும் துர்மரண் விசாரணைப்பஞ்சாயத்தார்கள் கேட்டெழுதிய எல்லாச்சங்கதிகளையும், சாட்சிவாக்கு மூலமுதலியவைகளையும் ஜாக்கிரதையாகத் தொகுத்துச் சுருக்கமான அறிக்கை எழுதி, அதைப் போலீசு ஹேட்குவார்ட்டருக்கு அனுப்பவேண்டியது.

உ. ஸப் மாஜிஸ்திரேட்டு முதலானவர்களுக்கு முன்னே பிரியாதுகொண்டுபோய் நடத்துகிற போலீசு அதிகாரிகள் ஹேட்குவார்ட்டருக்கு அனுப்பும்பொருட்டு அதேபிரகாரம் சாட்சி வாக்குமூலமுதலியவைகளைப்பற்றிக் குறிப்பு எழுதும்படி தூண்டிவிடப்படவேண்டும்.

---

## நெம்பர் க0க.

### க௮௬க௫ பிப்ரவரிமீ ச௨.

க. பெரிய உத்தியோகஸ்தனுக்கு முன்னே தவிர் சர்ச்சுவாரண்டு என்கிறசோதனைவாரண்டுகள் பிரைவேட்டு என்னும் கன்ஸ்டேபில்களால் நிறைவேற்றப்படக்கூடாது; டெப்டிஹேட் கன்ஸ்டேபில்களாலாவது, ஹேட்கன்ஸ்டேபில்களாலாவது, இன்ஸ்பெக்டர்களாலாவது நிறைவேற்றப்படவேண்டும்.

உ. கிராம இன்ஸ்பெக்டர்களால்நிறைவேற்றப்படும்பொழுதெல்லாம் முன்சீப்புகளை ஆஜராகும்படிசெய்யவேண்டும்.

---

## நம்பர் க0உ.

### க௮௬க௫ பிப்ரவரிமீ ச௨.

க. ——ஜில்லாவைச்சேர்ந்த சிலதாலூகாக்களில் முனிஷீப்புகள், ரெட்டிகள் என்கிற கிராம அதிகாரிகளும், தலையாரி

களும், கட்டுகடி சேவகர்களும் அந்தந்த இடங்களிலே நடக்
கும் கூட்டக்கொள்ளைகளையும், பாட்டைக்கொள்ளைகளையும் தா
ங்களே மூட்டிநடப்பிக்காதிருந்தாலும், கண்டும் காணாதவர்க
ள்போல உபேக்ஷை செய்துக்கொண்டிருக்கிறார்களென்று த
குதியாய்ச் சந்தேகிப்பதற்கு இடம் இருக்கிறது. ஜில்லாக்களி
ல் இந்த அக்கிரமம் மிகுதியாய்நடக்கிறது. எல்லாம் வெளிப்
படுகிறதில்லை. பலமுறையும் மேற்படியார் கொள்ளையிடப்ப
ட்டசொத்தில் ஒரு பங்கு பெற்றுக்கொண்டு குற்றத்தை வெ
ளியிடாமல் அமர்த்திப்போடுகிறார்கள்.

௨. இப்படிப்பட்டவழக்கம் இருக்கும் இடங்களில் குற்ற
ம் நடக்காதபடிசெய்வதும், நடக்கிற குற்றங்களைத் திஷ்டாந்
தமாய்க்கண்டறிவதும் அசாத்தியமாயிருக்கிறது. இவ்வழக்கம்
சமஸ்த ஜனங்களையும் சன்மார்க்கலோபிகளாகும்படி செய்கி
ன்றது. ஆயினும் கிராமத்தலைவர்களாவது, பெரியகுடிகளாவ
து, இவ்வித அக்கிரமச்செய்கையில் சம்பந்தப் பட்டிருக்கும்
பொழுது, பெரும்பாலும் சங்கதி விவரமும், அதில் சம்பந்
தப்பட்டவர்களின் பெயர்விவரமும் பரிஷ்காரமாய்த் தெரிய
வருகிறது. ஆதலால் யூரோப்பியன் ஆபீசர்கள் இப்படிப்ப
ட்ட மனுஷர்களைக்குற்றவாளிகளாய் நிரூபிக்காமல் போனாலு
ம், ருஜுவில் அவர்களைக்கண்டு எச்சரிப்பார்களானால், அவர்க
ள் பயப்பட்டு அக்கிரமத்தைவிட்டுக்கிரமமாய் நடப்பார்களெ
ன்று தோன்றுகிறது. அவ்வவ்விடங்களுக்குச்சுப்பெரிண்டெண்
டாண்டுகளாவது, அசிஸ்டெண்டுசுப்பெரிண்டெண்டாண்டுகளா
வதுஅடிக்கடிபோய் அந்த மனுஷர்களோடு அகத்தியமாய்
எதிரிலேபரிச்சயஞ்செய்துகொண்டு இனிவரப்போகிற அபா
யத்தை நன்றாய்த் தெரிவித்து அவர்களுடைய இஷ்டத்தையும்
விசுவாசத்தையும் அடையவேண்டியது.

௩. இன்ஸ்பெக்டர்கள்கூட அப்படிப்பட்டவர்களை வசப்
படுத்திக்கொள்ள வகைசெய்யவேண்டும். இவ்வித அடாதவழக்
கத்தை அனுசரித்திருக்கும் அவர்களில் பெரும்பாலார் பெரு
ந்தகைமையுடையவர்களே தவிர வேறல்ல. ஆதலால் ஏற்றவித
மாய் எச்சரித்து நற்புத்திசொல்லுமிடத்தில், அவர்கள் சீர்ப்
படாமல் போவது அரிது.

நம்பர். ௧௦௩.

௧௮௬௧௵ பிப்ரவரிமீ ௭௨

௧. ——ஜில்லாவில் தஸ்தக்கு முதலானவைகளைக் கட்சிக்காரருக்கு ஒப்பிக்கும்படி தாசில்தார்கள் போலீசாரிடத்துக்கு அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. ஜில்லாச் சேவகரிலும் போலீசு சேவகர்களுக்குக் கட்சிக்காரர் சுலபமாய்க் கீழ்ப்படிகிறார்களென்று அவர்கள் இதற்குச்சமாதானம் சொல்லுகிறார்கள்.

௨. ௧௮௫௯௵த்து ௨௪-வது ஆக்டின் ௫-வது பிரிவின்படி ரெவெனியு சங்கதியில் பொலீசாரைச் சம்பந்தப்படுத்துவது அக்கிரமமாய்க் காணப்படுகிறது.

௩. ஹெட் கன்ஸ்டேபில்களும் பெட்டி கன்ஸ்டேபில்களும் இன்ஸ்பெக்டர்களும் எந்தச் சங்கதியிலாவது இப்படிப்பட்ட தஸ்தக்கு பெற்றுக்கொள்ளக்கூடாதென்று சுப்பெரின்டெண்டாண்டவர்கள் ஆக்கியாபித்துச் சொல்லவேண்டும். இந்தக்கட்டளைப்பிரகாரம் நடப்பிக்காமல் எப்போதாவது தஸ்தக்கு பெற்றுக்கொண்டதாகச் சம்மன் வாரண்டு ரெஜிஸ்டர்புத்தகத்திலேலே காணப்பட்டால், அவர்களைத் தண்டிக்கவேண்டும்.

---

நெம்பர் - ௧௦௭.

௧௮௬௧௵ பிப்ரவரிமீ ௮௨

ஏதாவது ஒரு காரியம் நேரிடும் இடத்திற்குச் சமீபமாயிருக்கிற ஸ்டேஷின்சாவடி வேறு ஒரு தாலூக்காவைச்சேர்ந்ததாயிருக்கிறபட்சத்தில், அந்தக் கிராமத்தார் அதைக்குறித்துச் சங்கதி அனுப்பாமற்போகிறதினாலே போலீசார் குற்ற விசாரணையைச் சீக்கிரமாய் ஆரம்பிக்காமல் விடுகிறார்கள். இதற்கு அடியிலே எழுதியிருக்கிற விளம்பரத்தை ஜில்லா கெஜட்டுகளிலே அடுத்தடுத்து மூன்றுமுறை பிரசித்தப் படுத்தவேண்டும்; அல்லாமலும்சுப்பெரின்டெண்டாண்டுகளும், இன்ஸ்பெக்டர்களும், இதரமான போலீசு உத்தியோகஸ்தர்களும், கிராமவேலைக்காரர்களும் சாக்கிரதையாய்த் தெரிவிக்கவேண்டியது.

௧. குற்றம் நடக்கும் இடத்திற்குச் சமீபமான ஸ்டேஷின் சாவடி எந்தத்தாலூகா இலாக்காவைச் சேர்ந்ததாயிருந்த

"போதிலும், எந்த டிவிஷனுக்கு உட்பட்டதாயிருந்தபோதி
"லும், கிராம உத்தியோகஸ்தர்கள், ரயத்துகள் முதலிய சக
"லரும் அதை ஆலசியமின்றி அந்தச்சாவடிக்கே தெரியப்படு
"த்தவேண்டும். இதை மேற்படியார் திட்டமாய் அறியவே
"ண்டியது.

௨. "கூட்டக்கொள்ளை, பாட்டைக்கொள்ளை முதலியபா
"ரமான குற்றங்கள் நடக்கும்பொழுது, அவைகள் சம்பவிக்
"கும் இடத்தின் சுற்றுப்பக்கங்களிலுள்ள எல்லா ஸ்டேஷன்
"டாணாக்களுக்கும் அந்தக்குற்ற சங்கதிகளைக்குறித்து ஒரும
"ணிநேரமாவது தாமதப்படாமல் அறிக்கை எழுதி அனு
"ப்பவேண்டும்."

---

நெம்பர் - ௧௧௯.

௧௮௬௧ ௵ பிப்ரவரி௴ ௧௪௳

தீர்ப்பினிமித்தம் கிராம முனிசீப்புகளிடத்தில் வருகிற சிவில் வியாச்சியங்களின்மேலே இருவராக்கும் நடந்துகொண்டிருக்கிற மாமூல்பிரகாரம் தலையாரிகள் சகாயமாயிருந்து, சம்மன் வகையராக்கள் பெற்று நிறைவேற்றவேண்டியது.

---

௧௮௬௨ ௵ பிப்ரவரி௴ ௨௮௳

நெம்பர் ௧௨௧.

——இன் சுப்பெரிண்டெண்டாண்டு அடியில்வரும் சங்கதியைக்குறித்து அறிக்கை எழுதித் தெரிவித்ததாவது,——

௧. "கூட்டக்கொள்ளை நடந்ததென்று பிரியாதுவந்ததன்
"பேரில், இன்றுகாலமே —— ஸ்டேஷனுக்குப் போனேன்.
"அறுப்பு அறுத்த மாகுலைக் காவல்காத்த ஒருவன் ௫௦-பெய
"ர் கூட்டக்களவர் வந்து தன்னைத்தாக்கித் தன் கைகளையும் கா
"ல்களையும் கட்டிப்போட்டு, அதிகமான தானியத்தை எடுத்து
"க்கொண்டு போனார்களென்று அறிக்கைசெய்தான். அதைப்ப
"ற்றி விசாரணை செய்தவிடத்து, கூட்டக்களவர் வந்ததாகவா
"வது, அவன்கட்டப்பட்டதாகவாவது தோன்றவில்லை. அவர்க
"ள் வந்தது இன்னமார்க்கம், போனது இன்னமார்க்கமென்பு

"தாக அவன் விவரம் சொல்லமாட்டாதிருந்தான். உதயமான
"பின்பு வெகுநேரமட்டும் அந்தக் களவுசங்கதியை நீ ஏன்தெ
"ரியப்படுத்தவில்லையென்று கேட்டதற்கு, அவன் வைக்கோற்
"புரியால் அவர்கள் என்னைக் கட்டின கட்டுகளை அவிழ்ப்பத
"ற்கு நாலைந்து மணிநேரவரையில் சென்றது என்றான். பின்
"னும் விசாரித்ததன்பேரில், அவன் போனவருஷம் தானியத்
"தைத் திருடினானே திருட்டுப் போவதற்கு இடங்கொடுத்தா
"னேவென்று தானியக்காரன் அவனுக்குச் செலுத்தவேண்டி
"ய சம்பளத்தையோ தானிய பாகத்தையோ கொடுக்கவில்லை
"யென்பதாகத் தெரியவந்தது. அதனால், அந்தச் சம்பளத்தி
"ற்கு ஈடாக அவன்தானே தானியத்தையெடுத்துக்கொண்டுபோ
"னானென்று தானியக்காரன் நிஜப்படச்சொல்லுகிறான்."

உ. இந்தச் சங்கதி ஒன்றேயல்ல; இவ்விதச் சங்கதிகள்அ டுத்தடுத்துத் தேசத்தில் எங்கும் நூற்றுக்கணக்காய்ச் சம்பவி க்கின்றன. அவைகளை நிவர்த்திப்பது மிகவும் வருத்தம். குடி கள் கிராமக் காவற்காரருக்குக் கொடுக்கவேண்டிய கூலி, தா னியபாகமுதலான சம்பளங்களைக் கொடாதிருப்பது அநியாய மும் ஆயாசகரமுமாயிருக்கிறது. அந்தந்தப் புலங்களிலே அ ப்போதப்போது சிறிது தானியம் போகிறதென்பது நிசமா யிருக்கவுங்கூடும்; ஆயினும், பெரும்பாலும் வருந்தி உழை க்கும் கிராமக் காவற்காரர்கள் தங்கள் அலுவலைக் கூடியவரை யில் செவ்வையாய் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள்; சம் பளத்தைக்கொடாமல் பிடித்துக்கொள்ளும்போது, அவர்கள் பட்டினியால் சாகாதபடி திருட்டுத்தொழில்செய்ய நேரிடுகி றது. இப்படி நேரிடுகிற பட்சத்தில், அவர்கள் குற்றத்தைக்க ண்டுபிடிப்பது மெத்தவும் சங்கடமாம். இதில் குற்றம் செய்த வர்களே குற்றத்தைக் கண்டு வெளியிடுவதற்குப் பாத்தியஸ்த ராகிறார்கள். அவர்கள் திருஷ்டிக்கு அது குற்றமாயிருக்கவில்லை. யதார்த்தத்தை யோசித்தால், பரம்பரையாய் வருகிற சங்கதிக ளைப்பற்றியும், மனோபாவத்தைப் பற்றியும் அவர்களுக்கு நியா யமென்று தோன்றுகிற சுவய சம்ரக்ஷணையின் மார்க்கத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சகாயமாய் அவர்களு க்கு விசேஷமான அவகாசங்களும், குற்றஞ்செய்தார்களென்கி ற ருஜு இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாய்த் திருட்டுத்தொ ழில் செய்வதற்கு ஏற்ற அமிதமானசமயங்களும் வாய்க்கின்றன.

௫. இந்தக் குற்றத்தை நிவர்த்திக்கும் வழி இதுதான். நிர்ப்பாக்கியர்களான காவற்காரர்களுக்குக் கிராமத்தார்கள் துரோகம் பண்ணாமல் நியாயப்பிரகாரம் நடக்கும்படி பந்தோபஸ்து பண்ணவேண்டும். அவர்களுக்குச் செல்லவேண்டிய சம்பளம் முதலான வருப்படிகளைத் தவறாமல் கொடுக்கவேண்டும். இவ்விஷயத்தைப் பிரதி போலீசு உத்தியோகஸ்தர்களும் ஊக்கத்துடன் பிரயத்தனம் செய்து ஒழுங்காக்கவேண்டும். அவர்கள் முக்கியமானகுடிகளை ருஜுவிலே கண்டு, நேர்மை நன்னெறியென்றும், சொத்தைக் காக்கும்பொருட்டுக் காவற்காரருக்கு அப்பியந்தமின்றிச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லி உணர்த்தவேண்டும். கிராமத்தாரின் நன்மைக்காகப் போலீசு உத்தியோகஸ்தர்கள் காவற்காரர்களின்கையினாலே வேலைகளை நன்றாய்ச்செய்விக்கவேண்டுவதுந்தவிர, தேசத்தின் சாதாரண சட்டத்தின்படிக்கும், அனாதி சித்தமானவழக்கப்படிக்கும் அவர்களுக்கு அங்கங்கே உண்டாயிருக்கின்ற சுதந்தரங்கள் தவறாமல்கிடைக்கும்படி செய்யவும்வேண்டியது.

---

## நெம்பர் ௬௨.

### ௧௮௯௧௵ மார்ச்சுமீ ௬௨

௧.—டிஸ்திரிக்டைச்சேர்ந்த கிராமத்தில் கூட்டக்கள்வர் இரவில்புகுந்து தானியத்தைத் திருடிக்கொண்டுபோகையில், அந்தக் கிராமத்தார் வெளிப்பட்டு அந்தத்துர்மார்க்கரில் ஐந்து பெயரை வளைதடையினாலும், கோடரியினாலும் கொலைசெய்தார்கள். ஊரையும்சொத்தையும் காக்கும்படி அத்தனை சாமர்த்தியம்செய்த கிராமத்தார்களுக்குக் கவர்ன்மெண்டார் தகுதியான வெகுமதி கொடுத்தார்கள்.

௨. கூட்டக்களவு, வழிப்பறிமுதலிய பலமான குற்றங்கள் நடக்கும் சமயங்களில் குடிகள் தங்கள் ஜீவன், ஜாகை, சொத்து இவைகளைக் காக்கும்பொருட்டு இன்னது செய்யத்தகுமென்பதைக்குறித்துத் தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்களென்று சுப்பெரின்டெண்டாண்டு அறிக்கை எழுதினார். அதற்கு உத்தரமாக, மேன்துரை எழுதிய குற்ற விவரணசட்டம் ௬௦௧-வது பக்கத்தில் நியாயமான கொலை என்னும் விஷய

க்குறிப்புள்ள பிரிவின்கீழ் இருப்பதை அடியில் எடுத்துக்காட்டுகிறோம்;—

"எந்தமனுஷனாவது வேறொருமனுஷனுடைய சரீரத்துக்காயினும், குடியிருக்கும் இடத்திற்காயினும், சொத்துக்காயினும் கெடுதிசெய்யும்படி பலமான குற்றம் நடப்பிக்க முயற்சி பண்ணும்பொழுதெல்லாம், 'சொந்த ரக்ஷணைசெய்வது தகும்: ஆகையால், கொலை, கொள்ளை, கன்னக்கோலிடுதல், பகற்காலத்தில் கதவுகளை உடைத்து வீட்டுக்குள்ளே பிரவேசித்தல், தூராகிர்தப் புணர்ச்சி இவை முதலிய குற்றங்கள்செய்வதற்கு முயற்சி பண்ணுகிறவர்களைக் கொலைசெய்வது நியாயமாயிருக்கும். அபாயத்திற்கு ஆளாயிருப்பவன் மாத்திரமல்ல, அவன் வேலைக்காரர், குடும்பத்தார்களும், அக்காலத்தில் ஆஜராயிருக்கும் அன்னியரும் அப்படிப்பட்ட அக்கிரமம் செய்கிறவனைக் கொல்வது நியாயந்தான். தீங்கு செய்யப்பட்டவர்கள் தமக்குத் தீங்குசெய்தவர்களுக்குப் புறங்காட்டுவதாயினும், தாக்கவந்தவர்கள் அப்புறம் தாக்காமல் விட்டுவிடும்பொழுது அவர்களை எதிர்க்காமல் விடுவதாயினும் அவசியமல்ல. பூரணமாய்த் தன்னைக் காக்கும்பொருட்டாவது,' குற்றவாளியைப் பிடித்து நியாயாதிபதிகளிடத்து ஒப்பிக்கும்பொருட்டாவது அவனைத் தொடர்ந்துபோகலாம். தொடர்ந்துபோகும்பொழுது உண்டாகும் சண்டையில் குற்றவாளி கொலைசெய்யப்பட்டால் அந்தக்கொலையும், எவ்வாறாயினும்பிடித்துக்கொள்வது அசாத்தியமாயிருக்கும்பொழுது அவனைக்கொலைசெய்வதும் நியாயமே"

௩. கூட்டக்கள்வருக்கும், வழிப்பறிகாரருக்கும் குடிகள்தங்களையும், தங்கள் வீடுகளையும், சொத்துகளையும் தங்களுக்குச் சாத்தியமாயிருக்கிற பிரதி சாதனங்களாலும் காத்துக்கொள்ள வேண்டுமென்று சுப்பெரிண்டெண்டாண்டுகள் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

---

நெம்பர் - ௩௩.

௧௮௬௫ளூ மார்ச்சுமீ அ௳

வெளிகளில் அங்கங்கே போலீசாருக்குக் குறித்த இடங்களுக்கு அவர்கள் கிரமமாய்ப் போய் அலுவல் பார்க்காதிரு

க்கும்பொழுது குடிகள் அவர்களைக்குறித்துப் பிரியாதுபண்ணத்தக்கதாக, போலீசு உத்தியோகஸ்தர்கள் அவ்விடங்களின் விவரணத்தை வருந்திப் பிரசித்தப்படுத்தவேண்டும். போலீசார் தங்கள் கடமைகளைத் தவறாமல் செய்யவேண்டுமென்று கிராமத்தார் வற்புறுத்தி நிற்கும்படி அவர்களுக்குச் சகாயஉபாயம்பண்ணவேண்டும். குடிகள் சொல்லும் பிராதுகளை டிஸ்திரிக்ட் உத்தியோகஸ்தர்கள் துறையாய்க் கேட்கவேண்டும்.

---

நம்பர். கருசா.

கஅசாக௵ மார்ச்சு௴ கஅஉ

க. கூட்டக்கள்வரில் பெருப்பான்மையோர் இன்னும்தெண்டனைக்குள்ளாகாமல் தப்பித்துக்கொண்டே வருகிறார்கள்; இது வியசனகரமாயிருக்கின்றது. கூட்டக்கொள்ளை என்னும் குற்றம் மிகவும் சொற்பம்மாத்திரம் தடுக்கப்பட்டிருக்கின்றது. குற்றம் கண்டு வெளியிடுவது முன்னிலும் இப்பொழுது எளிதாயிருக்கவில்லை. மாஜிஸ்திரேட்டுகளுக்குமுன் பிரியாது சங்கதிகளை விசாரணையின்பொருட்டு அனுப்புவது போலீசாருக்கு மிகுந்த வருத்தமாயிருக்கிறது. அனுமானிக்கப்படும் நபர்கள்மேல் கோர்ட்டுகளில் பெருட்பாலும் போலீசார் கொண்டுவருகிற சாக்ஷியங்களைக்கொண்டு குற்றங்களை ருஜுவாக்குவதும் அசாத்தியமாயிருக்கின்றது. சுதேச மாஜிஸ்திரேட்டுகளாவது, போலீசாராவது அதிக பாரமான குற்றங்களைப் பரிஷ்காரமாய்க் கண்டு நிச்சயிக்கமாட்டாதே போகிறார்கள். அவ்விதக் குற்றத்தைப் பரிகரிப்பதற்கு அவர்கள் போந்தமட்டும் ஊக்கமுள்ளவர்களாய் இருக்கவில்லை.

உ. கூட்டக்கொள்ளை என்பது மிகவும் குரூரமான குற்றம். கூட்டக் கொள்ளைநடக்கும் வீடுகளில் சண்டைக்காலத்தில் உண்டாகிற சர்வ அச்சப்பாடான சங்கதிகளும், அர்த்தராத்திரிக்கொலையும், கொள்ளையும், சித்திர இம்சையும் பலாத்காரப்புணர்ச்சியும் சம்பவிக்கின்றன. இப்படிப்பட்ட குற்றங்கள் மிகவும் அநியாயமானவைகள்; தீரமின்றி மிருகத்தன்மையுள்ளபேர்கள் செய்கிறகுற்றங்கள். போலீசாருடைய சாமர்த்தியமின்மைக்கும் சாமர்த்தியத்திற்கும் கூட்டக்கொள்ளை சம்ப

விப்பது சம்பவியாதிருப்பதே உறுதியான சாட்சிப்பிரமாண மாய். ஒரு கூட்டக்கொள்ளையானது தடுக்கப்படாமலுங்கண்டு வெளியிடப்படாமலும் இருக்கிறபட்சத்தில், போலீசார் திற மையுடையவர்களல்லவென்பதற்கு அதுவே பூரணமானசாட் சியாம்: ஆதலால், குற்றங்கள் அனைத்திலும் போலீசார் அவ சியம் அடக்கவேண்டியது கூட்டக்கொள்ளைக் குற்றமே; அ தை அடக்குவது சாத்தியமாகுமேதவிர மற்றப்படியல்ல.

௬. கன்ஸ்டேபில் வகுப்பில் ஏற்பட்டிருக்கின்ற ஒழுங் கும் அவர்களிடத்தில் இருக்கவேண்டிய ஏகநோக்கமும்கூட்ட க்கொள்ளையைத் தடுப்பதற்கும் கண்டு வெளியிடுவதற்கும் அ வர்களிடத்தில் பலமான ஊக்கத்தைப் பிறப்பிக்கவேண்டியது; ஆயினும் இந்தக் குற்றங்களைக் கீழ்த்தரமான சுதேச உத்தி யோகஸ்தரிடத்தில் நிர்வகிக்க விடவொண்ணாது. தீரமாகவும் ப லாத்காரமாகவும் செய்யப்படும் இக்குற்றத்தை அடக்கத்தகும் செல்வாக்கும், வாஸ்தவமான ஊக்கமும், முயற்சியும், நெஞ் சுத் துணிவும், நிர்ணயமுமுடையபெயர் யூரோப்பிய உத்தி யோகஸ்தர்களே. இந்தத் தாற்பரியத்தை விசேஷமாய் யூரோ ப்பிய உத்தியோகஸ்தர்கள் சிந்தையில்கொண்டு சிரத்தையாய் நிறைவேற்றவேண்டும். மேற்குறித்த குற்றத்தை அடக்கும்படி இந்தியாவில் சில இடங்களில் விஸ்தாரமான இலாக்காக்களில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட யூரோப்பியர்கள் மிகவும் சிலராயிருந்தும், தம்மால் கூடிய முயற்சிசெய்து மிகுந்தசித் தியடைந்தார்கள். இந்தச் சென்னைப் பிரதேசத்தில்பிரதி டிஸ் திரிக்டிலும் இரண்டொரு யூரோப்பிய உத்தியோகஸ்தர்களை யும் அவர்கள் விசாரணைக்குள் பலமான போலீசு சேவகர்வகு ப்பையும் ஏற்படுத்தியிருப்பதனால், இனி எவ்விதத்திலும் இந் தக் குற்றம் அதிசீக்கிரம் அடக்கப்படுமென்பதற்கு எவ்வளவும் ஐயம் இல்லை. அசேஷ யூரோப்பிய உத்தியோகஸ்தர்களும் கூ ட்டக்களவுக் குற்றத்தை அடக்கும் உத்தரவாதபாரத்தைத் தங் களில் ஒவ்வொருவரும் பிரத்தியேகமாய் ஒப்புக்கொண்டிருப் பதாக எண்ணவேண்டியது.

௭. ஆனதுபற்றி, அந்தந்த டிஸ்திரிக்டில் இருக்கும்சுப் பெரின்டெண்டாண்டும் யூரோப்பிய உதவி உத்தியோகஸ்தரு ம் அங்கங்கே சம்பவிக்கும் பாரமான சகல கூட்டக்கொள்ளை

களையும் முக்கியமாய்த் தாங்களே கண்டு வெளியிட்டு விசாரணை செய்யவேண்டியது. இது நிபந்தனை. பலமும் வாஸ்தவமுமான ஊக்கம் கன்ஸ்டேபில் வகுப்பாரிடத்திற் பிறக்குமாவும், அவர்களே சங்கதிகளைத் தங்கள் கண்ணால் கண்டு, காதால் கேட்டு, செய்யவேண்டியவைகளனைத்தையும் தங்கள் கைகளாலேயே செய்யவேண்டும்.

௫. போலீசு சுப்பெரின்டெண்டாண்டுகளும், அஸிஸ்டாண்டு சுப்பெரின்டெண்டாண்டுகளும் அவசியமான வேலைகளால்தடுக்கப்பட்டாலன்றி, மற்றப்படி சமஸ்தவேலைகளையும் நிறுத்திவிட்டு, பாரமான கூட்டக்கொள்ளை நடக்கும் இடங்களுக்குப் போய்ப்பார்த்து, அங்கே கூடியிருக்கின்ற கூட்டக்களவரைத் தங்கள் மனுஷர்களோடு தொடர்ந்து போவதுந்தவிர, போலீசார் குற்றத்தைக்கண்டு வெளியிடும் விஷயத்தில் அவர்களுக்கு துணைநின்று, கண்காணித்து, பிரியாதுகளை மாஜிஸ்திரேட்டுகளிடத்திலும் கிரிமினல் கோர்ட்டாரிடத்திலும் கிரமமாய் ஒப்பிக்கும்படி செய்யவும் வேண்டியது. எதாவது சங்கதி நடக்கும்பொழுது ஜில்லாவிலிருக்கும் குற்றம் கண்டு வெளியிடத் திராணியுள்ள உத்தியோகஸ்தர்களை அவ்வேலைக்கு அனுப்பவேண்டியது. அன்றியும் யூரோப்பிய உத்தியோகஸ்தர் தாமே அவ்வித நடக்கைகளைக் கருத்தாகவும் நுணுக்கமாகவும் பார்த்துக்கொள்ளவேண்டியது. குற்றத்தைக் கண்டறிகிறவரையில் அவர்களை மாற்றவேண்டியது, அல்லது அவர்களுடன் கூடப் பின்னும் சிலரைச் சேர்த்தனுப்பவேண்டியது. காரியசித்தியாகும்படி தகுந்த பிரயத்தனங்களை உபேட்சையாய்ச் செய்யவாவது, செய்யாமல் விட்டுவிடவாவது ஒண்ணாது.

௬. கூட்டக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஒருவன் அப்புருவர் ஆகிறபட்சத்தில் மாஜிஸ்திரேட்டினால் அவனுக்குச் சங்கேதமான மன்னிப்புக் கொடுக்கப்படலாகும். இதைப்போலீசு சுப்பெரின்டெண்டுகள் முக்கியமாய்ச் சிந்தையில்வைக்கவேண்டும். இவ்வித சங்கதிகளில் இந்தப் பிரதேசத்தின் இலாக்காவில் அப்புருவர் சொல்லுகிற சாட்சி ஆதாரம்பண்ணி விசாரணைசெய்வதில் அதிக அசட்டை உண்டாயிருக்கின்றது. இதரமான பிரதேசங்களில் தந்தித்திருட்டு, பலர்கூடிக்கொள்ளை அடிப்பது என்னும் குற்றவிஷயங்களில் இந்த அப்புருவரின்

வாக்குமூலத்தைச் சவிஸ்தாரமாய் உபயோகப்படுத்தி மிகுந்த அனுகூலம்பெற்றுவருகிறார்கள்.

எ. பின்னும் இப்படிப்பட்ட சங்கதிகளில் யூரோப்பிய உத்தியோகஸ்தர் முக்கியமாய்க் கண்வைத்துக் கருத்தில்கொள்வது அவசியமாயிருக்கின்றது. சுதேச போலீசு உத்தியோகஸ்தர்களை நம்பி அப்புருவரை அவர்கள் வசப்படுத்தக்கூடாது. அவர்கள் சாட்சியினால் இச்சங்கதியை உறுப்புறுப்பாகத்திடப்படுத்திக்கொள்ளாமல் அப்புருவரின் வாக்குமூலத்தினாலேயே முடிப்பார்கள். இத்தேசத்தில் தீர்க்கவிசாரணையும் சாமர்த்தியமும் இல்லாதவர்களாக, அல்லதுகேட்ட சங்கதிகளையெல்லாம் தட்சணமே நம்பும் தன்மையுள்ளபோலீசு உத்தியோகஸ்தர் கையில் அப்புருவர் என்கிற சாட்சிகள் அதிக கூர்மையும், துரோகமும், அபாயமுமுள்ள ஆயுதங்கள்போல இருக்குமே. இதைச சுப்பெரிண்டெண்டாண்டுகள் தெரிந்து கொள்ளவேண்டியது.

அ. க௮௱எ-வது வருஷத்தின் க௧-வது ஆக்டின்படி, குற்றவாளியென்று நிரூபிக்கப்பட்ட கைதி குற்றத்தில் தன்னுடன் சம்பந்தப்பட்டவர்களைக்குறித்துச் சொல்லும் சாட்சியும் தக்கதென்று ஒப்புக்கொள்ளப்படும்: ஆதலால் அப்படிப்பட்ட கைதி அந்தக்குற்றவிஷயத்தில் பின்னும் ஏதாயினும் சங்கதி வெளியிட எத்தனமாய் இருப்பது இராததைச் சுப்பெரிண்டெண்டாண்டு ஆய்ந்தறியவேண்டும்.

௯. "அறிக்கை யிடுதலையும் அப்புருவர்களையும் பற்றிய குறிப்புகள்" என்று ஜெ. டி. மேன்துரை யவர்கள் செய்த புஸ்தகத்தைப் போலீசு உத்தியோகஸ்தர்கள் அனைவரும் முக்கியமாய்ச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அந்தப் புஸ்தகம் முக்கியமான பாட்புஸ்தகமாக உபயோகிக்கப்படவேண்டும்.

---

## நம்பர். க௪௫.

### க௮௪௯௵ மார்ச்சு௴ உ௬வ.

க. செல்வாக்கும் நயநஷ்டசம்பந்தமுமுள்ள பெயர்களுடைய அந்தரங்கமான ஏவுதலினாலே அனேகமுறை மிகவும்

ப்ரமான கலகங்கள் நடப்பதுண்டு. அவர்கள் அந்தக் கலகத்தில் பிரவேசியாமல், கலகக்காரருக்கு ஆலோசனைசொல்லி ஆதாயம் பெறுகிறார்கள்.

உ. கலகம் உண்டாகுமென்று அஞ்சுவதற்கு நிமித்த மிருக்கும்பொழுது, மாஜிஸ்திரேட்டு மூலமாய் அங்குள்ள குடித்தனக்காரரிடத்தில் சகாயம் பெறும்வகை இன்னதென்று போலீசு சட்டத்தின் கசு - வது பிரிவில் கண்டிருக்கின்றது. அதைப் போலீசு உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். உண்டாகுமென்று தோன்றுகிற கலகத்தை மூட்டிவிடுகிறவர்கள் இன்னாரென்று போலீசு உத்தியோகஸ்தர்கள் உபாயமாய் விசாரித்து அறிந்தபின், அப்படிப்பட்ட கலகத் தலைவர்களை ஜன அமரிக்கையைக் காக்கும்படி உத்தரவாதிகள் ஆக்குவதனால் அவர்கள் சிந்தனைகொண்டு கலகத்தைத் தூண்டி விடுவதில் தங்கள் முயற்சியை விட்டுவிடுவார்களென்று எண்ணுவதற்கு ஏது இருந்தால், போலீசு உத்தியோகஸ்தர்கள்ஜன அமரிக்கையைக் காக்கும்படி அவர்களிடத்தில் உத்தரவாதம்செய்விக்கும்பொருட்டு முக்கியமாய் மாஜிஸ்திரேட்டுகளுக்குச்சங்கதிதெரியப்படுத்தவேண்டும். இதற்குமுன் நடந்திருக்கிறசாதி சம்பந்தமான கலகங்களைத் தூண்டினவர்களுக்குச் சட்டப்படி நடப்பிக்கப்படுமென்று தெரியப்படுத்தின உடனே அந்தக்கலகத்தின் தன்மை கட்டோடே நிவர்த்தியாயிற்று.

---

## நம்பர் கருரு.

கஅசுகவுரு மேமீ சுஉ

க. பிரியாதுகாரர்கள் வெளிடாணுக்களில் சொல்லும் பிரியாதுகளை ஏற்காமல் அவர்களை அந்தந்த இலாக்காவின் ஸ்டேஷின் டாணுக்களுக்கு அனுப்புவதுதான் இப்பொழுது நடந்துவருகின்ற கிரமம்; ஆயினும் குடிகளுடையவசதியின்பொருட்டு, பிரியாதுகளை ஏற்றுக்கொள்வதற்கு, ஸ்தானசம்பந்தவரையறை ஜாபிதாவில் "வெளிடாணுக்கள்" என்று பதிந்திருக்கின்ற டாணுக்களை ஸ்டேஷின் டாணுக்களின் ஒப்பந்தமாய்ப் பாவித்துக்கொள்வதும் ஆகும். டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் மாஜிஸ்திரேட்டுக்கும் தெரியப்படுத்தி அவர்கள் கருத்தை அறிந்துதான் அப்படிச் செய்யவேண்டும்.

௨.—இன்சுப்பெரிண்டெண்டாண்டு "சிறியகளவுகளும்சொற்ப' திருட்டுகளும் கிராம மாஜிஸ்திரேட்டுகளின் அதிகார எல்லைக்குள்' நடக்கும்பொழுது பிரியாதுகாரர்கள் ௰ - ௰௨-மயில் தூரத்திற்கு அப்புறம் இருக்கின்ற ஸ்டேஷின் சாவடிக்குமனப்பூர்வமாய்ப் போவது அசாத்தியம்: ஆதலால் வெளிடாணாவில் இருக்கும் டெப்டி ஹேட் கன்ஸ்டேபில் கிராமமாஜிஸ்திரேட்டின் அதிகார எல்லைக்குள் சம்பவிக்கின்ற சகல குற்றங்களைக்குறித்தும் பிரியாது பெற்றுக்கொண்டு உடனே அதை அவருக்குமுன்னே கொண்டுபோகும்படி இதுவரையில் உத்தரவு கொடுத்திருக்கின்றேன்" என்றுகுறிப்பித்தார்-

௩. இவ்வழக்கம் உத்தமமென்று' அங்கிகரித்துக்கொள்ளப்பட்டது.

௪. குற்றபத்திரிகை ஸ்டேஷின்சாவடி மூலமாய் அனுப்பபடவேண்டும்.

---

நம்பர். ௧௫௬.

௧௮௬௧ ௵ மே ௴ ௧௦ ௳

௧. இதன்கீழ் * குறிக்கப்பட்டிருக்கின்ற மூன்றுபோலீசு மனுஷருடைய புகழ்ச்சிக்குரிய நடக்கையைக் குறித்து நெல்லூர்ஜில்லா ஜாயிண்டு மாஜிஸ்திரேட் அவர்கள் தெரிவிக்கிறதாவது,—அந்த ஜில்லாவிலே மிகவும் பாரமான கூட்டக்கொள்ளை ஒரு வீட்டில் நடந்தது. அவ்வீட்டார் கள்வரோடெதிர்த்து அவர்களில் ஒருவனுக்குப் பிராணபாயமான காயப்படுத்தினார்கள். ஆக்டிங் ஹேட்கன்ஸ்டேபில அல்பன்சோ என்பவனும் மற்றிரண்டு சேவகரும் மறுவேஷந்தரித்து அந்தக் கள்ளரைத்தொடர்ந்துவெகுதூரநதாலுகாவிற்குள்சென்றுகுற்றம் கண்டுவெளியிடும் தங்கள்கடமையை மிகவும் சித்தியாய் நிறைவேற்றினார்கள். அவர்களில் ௧௧ - பெயருக்குத் தண்டனை கிடைத்தது (அவர்களில் ௬ -பெயர் ௧௨-வருஷவரையில்சிறைச்சாலையில் இருக்கவும், ௫-பெயர்டத்திறில் ஜாமீன்வாங்கவும் தீர்ப்புச்செய்யப்பட்டது) அன்றியும் கொல்லப்பட்ட திருடனு

---

* ஆக்டிங் ஹேட் கன்ஸ்ட்டேபில்; அல்பன்சோ; நம் - ௭௯௦-வது கன்ஸ்ட்டேபில் நரசிம்முலு; நம் - ௯௪௭ - வது கன்ஸ்ட் டேபில- கோபாலையா.

டைய பிரேதத்தையும் ஷை போலீசு மனுஷர் கண்டார்கள். "இந்தச்சங்கதியை அனுகூலமாய் நிறைவேற்றியதும் பெயர் பெற்ற கூட்டக்கள்வரைச் சிதறடித்ததுமான புகழ்ச்சிக்குரிய செய்கைக்கு மேற்சொல்லிய ஆக்டிங்ஹேட்கன்ஸ்டேபில் அல்பன்சோவும் அவன்மனுஷரும் ஊக்கத்துடன் செய்த பிரயத்தனம் முக்கியமான காரணமாயிருந்தது" என்று அந்த ஜாயிண்டுமாஜிஸ்திரேட் அவர்கள் அறிக்கை எழுதினர்.

௨. அவர்களுக்கு உத்தியோக அபிவிர்த்தி செய்யவேண்டுமென்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் உடனே கட்டளை பிறப்பித்தார். அவர்களிடத்தில் விசேஷமான லட்சியமும் வைத்திருக்கிறார்.

௩. போலீசைச்சார்ந்த மனுஷர்கள் எல்லாரும் இவர்களுடைய யோக்கியத்தை அனுசரித்துக்கொள்ளும்படி சுப்பெரின்டெண்டாண்டுகள் அவர்களைத் தூண்டிவிடவேண்டியது.

---

நம்பர். கறுஎ.

கஅசுஎகவு மேமீ கo௨

௧. பிரேதங்கள் காணப்படும்பொழுதும், துர்மரண விசாரணைக்குரிய மரணங்கள் சம்பவிக்கும்பொழுதும் அவைகளுக்கு அக்கிரமச்செய்கை நிமித்தமாயிருந்ததென்று சந்தேகிப்பதற்கு எவ்வகையான ஏதுவாயினுமில்லாதிருக்கிற பட்சத்தில் மாத்திரம் கிராமத்தலைவர்கள் விசாரணைசெய்து அந்தப்பிரேதத்தை க்ஷேமிக்கும்படி உத்தரவுசெய்வதற்குச் சில ஜில்லாக்களில் மாஜிஸ்திரேட்டுகளால் அவர்களுக்கு அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறது.

௨. இந்தக்கட்டளையின் தாற்பரியத்தைச் சில சப் மாஜிஸ்திரேட்டுகள் தப்பாய் அர்த்தம் பண்ணிக்கொள்ளுகிறது, அல்லது அக்கிரமச்செய்கை நடந்ததென்று நியாயமானபடி சந்தேகிப்பதற்கு ஏது இருக்கிறபட்சத்தில் சட்டத்தின் பிரகாரம் தாங்களே போய்த் துர்மரணவிசாரணை நடத்தாமல் அந்த முக்கியமான அலுவலைத் தங்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரிடத்தில் பொறுப்பிப்பது திஷ்டாந்தமாய்த் தெரிகின்

றது. அக்கிரமச்செய்கை நடந்ததென்று நியாயமானபடி சந்தேகங்கொண்டு போலீசார் ஸப்மாஜிஸ்திரேட்டுகளை வரவேண்டுமென்று பிரார்த்திக்கும்பொழுது அவர்கள் வராமல் அசட்டைசெய்கிறார்கள். இப்படி அவர்கள் செய்யும் அசட்டையினால், பெரும்பாலும் கொலைச்சங்கதியாய் அறுதியில் காணப்படுகின்ற விசாரணையில் முக்கியமாய்ச் செய்யவேண்டிய முதன்மையான பிரயத்தனங்களை அவிவேகிகளாயாவது, அந்தக்குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களாயாவது இருக்கிற கிராமஉத்தியோகஸ்தர்கள் செய்யும்படி நேரிடுகிறது; அதனால் நீதிதவறிப்போகின்றது.

ரு. மேற்சொல்லிய சங்கதிக்குச் சமானமாகிய சகல சம்பவங்களையும் நிவர்த்திப்பிக்கும்பொருட்டு, சுப்பெரிண்டெண்டாண்டுகள் மாஜிஸ்திரேட்டுக்குத் தெரியப் படுத்துவதுமன்றி, இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களுக்கு அனுப்பப்படும் தினசரிதையிலும் எழுதிக்கொண்டுவரவேண்டியது.

---

நெம்பர் - கசுஎ.

கஅசுக௵ ஜூன்மீ கஉ௳

க. நகரங்களின் வீதிகள் போலீசாரால் போதுமட்டும் சுத்திசெய்விக்கப்படுகிறதுமில்லை; அசங்கியமானவாதைகள் மனோற்சாகமாய் நிவர்த்திக்கப்படுகிறதுமில்லை.

உ. வீதிகள் அசங்கியமாயிருக்கும்படி செய்த மனுஷிர்களை ஸப் - மாஜிஸ்திரேட்டுகளுக்கு முன் கொண்டுபோய் விடும்பொழுது அவர்கள் இப்படி அசங்கியம்செய்ய ஒண்ணாதென்று எச்சரித்து அந்த மனுஷிர்களை விடுதலை பண்ணுகிறார்கள். அல்லது இரண்டு அணா அபராதம் போடுகிறார்கள். அல்லது அவகாசம் கண்டு மேற்சொல்லிய அசங்கியமுதலியவைகளை நீக்கவேண்டுமென்று நல்ல வார்த்தைசொல்லி அனுப்பிவிடுகிறார்கள் என்பதாகச் சுப்பெரிண்டெண்டாண்டுகளும் போலீசு உத்தியோகஸ்தர்களும் தெரியப்படுத்தினார்கள். மேலும் இனிமேல் அப்படிச்செய்யவொண்ணாது என்னும் நல்வார்த்தைகள்முழுதும் அப்ரயோசனமானவைகளென்றும், அந்த

மனுஷர்மேல் பிரியாது கொண்டுவருமுன் பலமுறையும் அவர்களுக்கு எச்சரித்தது உண்டென்றும், அவர்களுக்குச் சில அணு சொற்ப அபராதம் விதிப்பதனுல் அவர்கள் பின்னும் துணிவுடையவர்களாகி மேலுமேலும் முரட்டுக்குணத்தைச்சாதிக்கிருர்களென்றும், நல்வார்த்தை சொல்வதனுல்வீதிகளில்கட்டி இருக்கும் பசுக்களின் கொட்டார்முதலிய இடைஞ்சல்கள் இடித்துப் பெயர்க்கப்படாதென்றும் அவர்கள் உள்ளபடிதெரிவித்தார்கள்.

ங. போலீசு உத்தியோகஸ்தர்கள் சொல்லும் இந்தமுறைப்பாடுகளில் சில எதார்த்தமாயிருப்பதுமன்றி, குற்றபத்திரிகைகளினுல் ஸ்தாபிக்கப்பட்டுமிருக்கின்றன.

ச. ஆனபோதிலும், சுப்பெரிண்டெண்டாண்டுகள் தீரம் கைவிடாமல் பிடிவாதமாயிருந்து மறுபடியும் அதைக்குறித்துப் பிராது கொண்டுவரவேண்டும். யூரோப்பிய மாஜிஸ்திரேட்டுகளுக்குச் சங்கதி தெரிந்தமாத்திரத்தில் சௌக்கிய விர்த்திக்குரிய முயற்சிகள் அவர்கள் போலீசாருக்குச் சகாயம்செய்வார்கள். அதேபிரகாரம் அவர்கள் ஸப்மாஜிஸ்திரேட்டுகளுக்குள்ளும் அதிக அனுகூலமாம்படி செய்யமாட்டுவார்கள். பெரும்பாலும் தெரியாமையினுலேதான் இப்படி அபுத்தி பூர்வமாய்த் தக்கதெண்டனை செய்யாமல் தாக்ஷிணியமாய் விட்டுவிடநேரிடுகின்றது. அசங்கியமாவது இன்னதென்று அறியாமல், குற்றவாளிகளை இவ்விஷயத்தில் தெண்டிக்காமல் மன்னித்துவிடுவது தகுமென்று அடிக்கடி அவர்கள் தப்பாய் நினைக்கிருர்கள்; ஆனுல் அசங்கியமான பழக்கங்கள் இவ்வாறே பெரும்பாலும் அபிவிர்த்தியாவதற்குத் தூண்டுதல் உண்டாகின்றது. இப்படிப்பட்ட பிரியாதுகள் வரும்பொழுது குற்றவாளிகளுக்குக் கண்டிப்பாய்த் தெண்டனைசெய்தால் திரளானபெயர்களுக்குக் கொள்ளைநோய் வராமற்போவதுமன்றி, அநேகரால் பிரியாதுகள் வராமலும், வாதை இல்லாமலும் இருக்க இடம் உண்டாகின்றது.

---

நெம்பர் கஎ0.

கஅசுகளு ஜுன்மீ கசஉ

பேவாரிசான சொத்துக்களை நிர்வகிப்பது இவ்விதமென்று அடியில்வரும் விதிகளைப் பார்த்து அறியவேண்டியது.

க. ஒவ்வொரு எடும் கணக்கிட்டு சுப்பெரிண்டெண்டாண்டவர்களின் முத்திரை வைக்கப்பட்ட பேவாரிசான சொத்தின் ரெஜிஸ்டர் என்னும் ஒருசிறு புஸ்தக ஒவ்வொரும் ஸ்டேஷின் சாவடியிலும் வைக்கவேண்டியது.

உ. பேவாரிசான சொத்து போலீசாரின் சுவாதீனத்தில் வரும்பொழுது அதை அந்த ரெஜிஸ்டரில் தாக்கல்செய்து, பெற்றுக்கொண்ட காலமுதலிய சமஸ்த வரலாறுகளையும் விவரணமாய் எழுதிவைக்கவேண்டும். மேலும் அவ்வஸ்துக்களை ஒப்பித்த சன்ஸ்டேபிலும், அப்பொழுது ஸ்டேஷின் சாவடியில் அலுவல் முகாந்தரமாயிருந்த உத்தியோகஸ்தனும் அதற்குக்கையொப்பம் வைக்கவேண்டியது.

௩. அப்படிப்பட்ட பேவாரிசான சொத்தை ஸப் மாஜிஸ்திரேட்டிடத்திற்கு அனுப்புவதில் கூடியவரையில் எவ்வளவாயினும் ஆலசியம் ஆகவொண்ணாது. இது நிபந்தனை எவ்விதச் சங்கதிகளிலாயினும் அந்தச்சொத்தை ஸ்டேஷின் சாவடியில் இருபத்துநாலுமணிநேரத்திற்கு அதிகம்வைக்கக்கூடாது.

௪. ஸ்டேன் சாவடியில் வசத்தில் இருக்கும் உத்தியோகஸ்தன் ரெஜிஸ்டரைப்பார்த்து எழுதிக் கையொப்பமிடும் நகலுடன் அந்தச்சொத்து ஸப்மாஜிஸ்திரேட்டிடத்தில் ஒப்பிக்கப்படவேண்டும்; ஒப்பிக்கும் போலீசு உத்தியோகஸ்தன் அதைக்குறித்து இரண்டு பிரதிகள் ரசீது வாங்கிக்கொள்ள வேண்டியது. அவற்றுள் ஒன்றை டிஸ்திரிக்டு சுப்பெரிண்டெண்டாண்டின் உத்தியோகசாலைக்கு அனுப்பவேண்டும். மற்றதை ஸ்டேஷின்சாவடியில் வைத்துக்கொள்ளவேண்டும்.

௫. பேவாரிசு சொத்துகளின் விஷயத்தைக்குறித்துபோலீசு உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய்ச் சிந்தனை செய்யவேண்டியது. அவ்விதச்சொத்தைச் சுவாதீனம் ஆக்கிக்கொள்ளும் விருப்பம் அதிகமுண்டு; விரும்பியவாறே அடிக்கடி செய்யப்படுகின்றது.

௬. பேவாரிசான சொத்தைப்போலீசார்வசத்தில் பெரும்பாலும் விட ஒண்ணாது; விவகார சம்பந்தமான சொத்து குற்றபத்திரிகையுடன் ஸப் மாஜிஸ்திரேட்டிடத்திற்கு அனுப்ப

ப்பட்டுவருகின்றது. சவத்தின்மேல் காணப்படும் சொத்து முதலியவைகள் கிராமத் தலைவர் வசத்தில் சேர்கின்றது.

---

நம்பர் கஎச.

கஅகூகவரு ஞுன்மீ கருவ

இராத்திரியில் ரோந்துபோகிறவர்களும், உலாவித்திரிகிற கன்ஸ்டேபில்களும் பறை சாற்றப்படாதென்று உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.

---

நம்பர் கஅகூ.

கஅகூகவரு ஞுன்மீ உ௦வ

இதனடியில் வருகிற பவுஜ்தாரி அதாலத்து கோர்ட்டாரின் சுற்றுவிளம்பரத்தைக்குறித்துப் போலீசு உத்தியோகஸ்தர்கள் லட்சியம்வைக்கவேண்டியது.

சுற்றுவிளம்பரம் நெம்பர் – கச.

கஅகூகவரு ஞுன்மீ உ௦வ.

சதர்கோர்ட்டின் நடபடிக்கைகள்.

தலைச்சேரி செஷன்கோர்ட்டின் பயில், கஅகூகம்வருத்து கஎ - வது கஅ - வது நம்பருள்ள விவகாரங்களின் பட்டிகை படித்தாயிற்று.

தலைச்சேரி ஆக்டிங் ஸெஷின் ஜட்ஜி எழுதின குறிப்புகளின் கசு - வது பிரகரணத்தை அந்தந்தக் கிராம உத்தியோகஸ்தர்கள் அறியும்பொருட்டு விளம்பரம் செய்யவேண்டுமென்று சதர்கோர்ட்டார் கட்டளை இடுகிறார்கள்.

பிரகரணம் - கசு- புதுப்போலீசு எற்பட்டதனால் முன் தங்கள்மேல் பொறுத்திருந்த வேலையில் ஒன்றாவது தங்களைவிட்டு நீங்கவில்லையென்றும், கூடிய விரைவில் குற்றம் நடந்த ஸ்தானத்துக்குப் போய் யாதொருவன்மேல் குற்றம் சாற்றிச் சொல்லப்படும் சங்கதிகளைக்கேட்டு ஆலசியமின்றி அறிக்கை எழுதவேண்டுமென்றும், மாஜிஸ்திரேட்டானவர் தாலூகாமாஜிஸ்

திரேட்டுகளுக்கும், ஸப் மாஜிஸ்திரேட்டுகளுக்கும்; அதிகாரிகளுக்கும் பரிஷ்காரமாய்த் தெரியப்படுத்துவிக்கிறதாக நம்புகிறேன். சாட்சியின் உண்மையை மேலேகாட்டிய முக்கியமான பிரமாணமாகிய அந்தரங்க சமாசாரத்தைக்கொண்டு நிர்ணயிப்பதற்குக் கூடாதிருக்கின்றபட்சத்தில் எதார்த்தமாவது, ஒன்றைத் தீரத்தெளிய விசாரித்தறியும், விவேகமாவது சற்றுமில்லாதிருக்கின்ற இத்தேசஸ்தருக்குள் நீதிசெலுத்துவதுஇப்பொழுது இருப்பதிலும் அதிகபிரயாசமும், சங்கடமும் ஆகுமென்று கோர்ட்டார் காண்பார்கள்.

---

நெம்பர் - ௧௧௯.

௧௮௬௧ ௵ ஜூலை ௴ ௧௭ ௳

௧. சாதாரண வழியிலாவது, பகிரங்கமான கடைமுதலிய ஸ்தானங்களில் விக்கிரயம் செய்வதற்காவது பசுக்களை ஓட்டிக்கொண்டுபோகிற மனுஷர்கள் அவை திருட்டுப்பசுக்களல்லவென்று தெரியும்படி கிராம மணியகாரனிடத்திலாவது, யாதொரு கவரன்மெண்டு உத்தியோகஸ்தனிடத்திலாவது ராதாரிச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் சில டிஸ்திரிக்டுகளில் உண்டு. அப்படிப்பட்டவர்களை நிறுத்தி, கன்ஸ்டேபில்கள் ராதாரிச்சீட்டு காண்பிக்கச்சொல்வதும், அது இல்லாதிருந்தால் அவர்களையும், பசுக்களையும் போகவொட்டாமல் தடுத்துக்கொள்வதும் வழக்கமே.

௨. இந்த வழக்கத்திற்குச் சட்டத்தில் ஆதாரம் ஒன்றுமில்லை. பசுக்களைத் திருடும் கள்வரைப்பிடிக்கும்பொருட்டு அவ்வழக்கத்தை அனுசரித்துக்கொண்டு வருகிறார்கள்; ஆயினும் மற்ற விஷயங்களில் வழங்கும் ராதாரிகளைப்போல இந்த ராதாரிகளும் கருதிய கருமத்திற்குப் பிரயோசனப்படாமல் போலீசாரால் ஒடுக்கப்படுவதற்கும் பொருள் பறிக்கப்படுவதற்கும் எதுவாகின்றன.

௩. இவ்விதச் சங்கதிகளில் கன்ஸ்டேபில்கள் மனுஷரை நிறுத்தி வார்த்தை கேட்கக்கூடாது. மேலும் ராதாரிச்சீட்டுகள் இல்லாதபோது அவர்களை அக்கிரமமாய்அடங்கம்செய்கிற அடாத வழக்கத்தைச் சுத்தமாய் நிறுத்தவேண்டியது. அவ்வ

ழக்கம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் தக்ஷணமேநி றுத்தவேண்டும்.

௬. யாராவது பசுக்களை ஒட்டிக்கொண்டு அல்லது வஸ் துக்களை எடுத்துக்கொண்டு போகும்பொழுது, அவர்கள் அ வைகளைத் திருடினார்களென்று அவர்கள்மேல் பிரியாது சொ ல்லப்பட்டால் அல்லது, அந்த பசுக்களாவது, வஸ்துக்களாவ து திருடப்பட்டவைகளென்று நம்புவதற்குத் தகுதியான கார ணம் இருந்தால், அவர்களை நிறுத்தி வார்த்தைகேட்பதும் தடு த்துக்கொள்வதும் முறைமையாய் இருக்குமே ஒழிய, மற்றப் படி வார்த்தைகேட்பதற்கும், தடுத்துக்கொள்வதற்கும் எந்தப் போலீசு உத்தியோகஸ்தனுக்கும் அதிகாரமில்லை.

---

## நெம்பர் ௧௯௧.

### ௧௮௬௧௵ ஜூலை௴ ௧௭௳

௧—டிஸ்திரிக்டில் பொட்டேலென்னும் கிராமத்து எஜமா ன் தன்னிடத்திற்குவந்த தாக்கல் பிராதைக்குறித்து உத்தரஞ் சொல்வதற்குச் சிலரை ஸம்மன்பண்ணினான்.

௨. அதன்பின்பு அந்தப் பிரியாதைத் தான் கேட்டுத்தீர் ப்புச்செய்வதற்கு அது மிகவும் பாரமானதென்று கண்டு, அ வன் ஸப் மாஜிஸ்திரேட்டாரிடத்திற்கு அனுப்பும் பொருட்டு உபய கட்சியார்களையும், சாக்ஷிக்காரரையும் பாராவோடு ஸ்டே ஷின் சாவடிக்கு அனுப்பினான்.

௩. அங்கிருந்த போலீசு உத்தியோகஸ்தன் அந்தப்பிரி யாதை எற்றுக்கொள்ளவாவது, அந்த ஆசாமிகளைக் கைதியில் வைக்கவாவது உடன்படவில்லை. அது கிரமந்தான்.

---

## நெம்பர் - ௧௯௨.

### ௧௮௬௧௵ ஜூலை௴ ௨௧௳

சர்க்கார் கட்டடமுதலிய வகுப்பின் உத்தியோகஸ்தர்கள் வசத்தில் இருக்கிற பணத்தைப் பத்திரமாய்க்காத்துக்கொண்டு

போகும்பொருட்டு, சீப் இன்ஜினீரவர்கள் விதித்த இதன் அடியில்வருகிற சட்டங்களைப் போலீசு உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குச்சம்பந்தப்பட்டிருக்குமட்டும் நிறைவேற்றவேண்டியது.

க. "இருட்டிப்போனபின்பு ஒருபொழுதும்இரிசால்கொ "ண்டுபோகப்படாது; வழியில் தங்கும்பொழுது அந்தக்கிரா "மத்து முனிஷீப்பின்கச்சேரியிலாவது, காவலுள்ள வேறுகச் "சேரியிலாவது அந்தப்பணத்தைப் பத்திரமாய் வைக்கவேண் "டும். மிகுந்த அவசியம் ஆனபோதொழிய, சாயங்காலம் ச "மணிக்குப்பின் எந்தக் காலத்திலும் தாலுகாக் கஜானாவிலிரு "ந்து பணம்வாங்கக்கூடாது. கண்டிராக்டர்களுக்கும் மேஸ்த் "திரிகளுக்கும் பணம்கொடுப்பதில் கூடியமாத்திரம் உண்டிக "ளாய்க் கொடுக்கவேண்டும். சர்க்கார் வேலை விஷயத்தில்பண "ம்வாங்கிக்கொண்டு போவதை இவ்வாறு நிறுத்தவேண்டியது. "இராத்திரி காலத்தில் எந்தக் கிராமத்தில்யாருடையபணமும் சா "க்கிரதைசெய்யவேண்டியிருக்கிறதோ, அந்தடிபார்ட்டுமெண் "டின்மனுஷன் அனுகூலமாயிருக்கும்பொழுது, கிராமப்போ "லீசார் கொடுக்கும் பாராவுடன் தன்தாலூகாவின் பாராக்கா "ரனையும் கூடவைத்துக்கொள்ள வேண்டியது.

உ. "சர்க்கார் கட்டடமுதலிய வகுப்பின் மனுஷர்கள் சர் "க்கார் பணம் தமதுவசத்தில் வைத்துக்கொள்ளும் பொழுது, "தாலூகாவிலாவது கிராமத்திலாவது போலீசாரால் காப்பா "ற்றவேண்டியது. அப்படிக் காப்பாற்ற வேணுமென்று கிர "மமாய்க் கேட்டபின் போலீசார் அதைச் செய்யாதிருக்கிறப "ட்சத்தில் கெட்டியாய் விசாரணை செய்யவேண்டியது. பணப் "பெட்டிகளை உத்தரவுகேட்டுத் தாலூகா கஜானாயிருக்கிற இட "ங்களில் வைத்து பந்தோபஸ்து செய்யவேண்டும்.

ஙு. "அந்த டிபார்ட்டுமெண்டின் மனுஷர்களுடைய ப "ணப்பெட்டிகளைச் சிலகாலவரையில் பத்திரமாய்வைத்துக்கா "ப்பதற்குப் போலீசுஸ்டேஷன் காவடிகளை உபயோகப்படுத் "தலாம், (வெளிடாணுக்களில் வைக்கப்படாது) ஆயினும் அந் "தப்பெட்டிகளுக்குள் இருக்கும் பணத்தையாவது வேறு வி "லைபெற்ற பொருளையாவது எவராவது கைக்கொள்ளாதபடி "அவைகளுக்குக் கெட்டியாய்ப் பூட்டுப்போட்டு முத்திரை யி "டவேண்டும்.

௪. "பணப்பெட்டிகளோடு போய்வந்துகொண்டிருக்கிற "இன்ஜினீர் உத்தியோகஸ்தர்களுக்கு ஒருதரம் இரண்டுதரம் கி "ரமமாய் ரோந்து போய் மற்றப் பிரயாணிகளைப்போல அந் "த இலாக்காவின் கன்ஸ்டேபில்களைப்பின்பற்றிப்போகிறபோ "லீசு உத்தியோகஸ்தர்களால் சகாயம் பெறவேண்டியது.

௫. "இன்ஜினீர் மனுஷர்கள்போய் வந்துகொண்டிருக்கு "ம்பொழுது கூடாரங்களிலாவது, பத்திரம் இல்லாத மற்றிட "ங்களிலாவது வைக்கப்படுகிற பணப்பெட்டிகளைத் தன்வசத் "தில் வைத்துக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தன்படுக்கையோ "டாவது, கூடாரத்தின் ஸ்தம்பத்தோடாவது சங்கிலிகளாலும், "தாட்பாள்களாலும், அல்லது வேறுவிதங்களாலும் கட்ட வே "ண்டியது."

---

நம்பர். ௧௯௮.

௧௮௬௧ ௵ ஆகஸ்டுமீ ௫௨

௧. மாட்டுமந்தை மேய்க்கிற ஒரு சிறுவனுக்குத் திரவியம் அகப்பட்டதென்று—இன் சுப்பெரிண்டெண்டாண்டு அறிக்கையெழுதினார். போலீசார் அதில் பிரவேசித்து அவனிடத்தினின்று அந்தப்பொருள்களை வாங்கிக்கொண்டார்கள்; மேலும் அவன் எடுத்த திரவியமுழுமையும் கொடுக்கவில்லையென்று சந்தேகமுண்டானதின்பேரில் அவர்கள் வீடுமுதலானவைகளையும் சோதனைபோட்டதாய்க் காணப்படுகின்றது.

௨. போலீசார் செய்தது மிகவும் அக்கிரமம். ௧௮௯௨-ம்ஷூத்து ௧௧-வது சட்டத்தின் நிபந்தனைகளைச்சுப்பெரிண்டெண்டாண்டுகள் கருத்தாய்ப் பார்க்கவேண்டியது. எவனாவது திரவியம் கண்டெடுக்கும்பொழுது அதை ஸிவில்கோர்ட்டுக்குத் தெரியப்படுத்தி அந்தச்சட்டத்தின் நிபந்தனைப்பிரகாரம் நடந்துகொள்வானாகில் அது சிலவாயறைக்குள்அவனதுசொத்தாகிறது. எடுத்த திரவியத்தைக்குறித்து சர்க்காருக்குத்தாவா இருக்கிறபக்ஷத்தில் அதைப்பற்றி மாஜிஸ்திரேட்டல்ல, கலெக்டர்கள் விசாரிக்கிறார்கள். அந்தத்தாவா குறித்த மொத்தத்துக்கு அதிகரித்த தொகையைப் பற்றியதாயிருப்பினும், சட்ட

த்தின் நிபந்தனைகளைக் கடந்து நடந்ததைப்பற்றியதா யிருப்பினும் அது அரசிறைவரும்படி சம்பந்தமாயிருக்கின்றது.

௩. இதில் போலீசாருக்கு எவ்வளவும் சம்பந்தமில்லை. திரவியம் கண்டெடுத்த சங்கதியையாவது, கண்டெடுத்ததாகப் பிறந்த சத்தத்தையாவது சாதாரணமான சங்கதிகளில் எப்படியோ அதேபிரகாரம் டிஸ்திரிக்டுசுப்பெரிண்டெண்டாண்டுக்கு அறிக்கை செய்யவேண்டும். இவ்வளவுதவிர, திரவியம் கண்டெடுத்த மனுஷன் விஷயத்திலாவது, திரவியத்தின் விஷயத்திலாவது, அந்தத் திரவியத்துக்குச் சுதந்தரனாகவாயினும் பங்காளியாகவாயினும் தாவாபண்ணுகிற மனுஷன் விஷயத்திலாவது போலீசார் பிரவேசிக்கப்படாது.

௪. இவ்விஷயங்களில் சர்க்காருக்குரிய சுதந்தரங்களைக்குறித்துச் சிந்திக்கத் தகுதியான பெயர்கள் கிராம முனிஷீப்புகளும் தாசீல்தார்களுமே.

௫. இவ்விஷயங்களைப்பற்றித் தெரியவந்த சமாச்சாரங்களை சுப்பெரிண்டெண்டாண்டு கலெக்டரவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

---

நெம்பர் - ௨௦௪.

௧அ௬௧ வரு ஆகஸ்டுமீ ௩௨

௧. இன்ஸ்பெக்டர்கள் போய்பார்த்துவரும் கிராமங்களின் சங்கதிகளைப்பற்றி வாரந்தோறும் அனுப்புகிற அறிக்கைகளைப் பிரதி டிஸ்திரிக்டிலுள்ள இன்ஸ்பெக்டர்களும் அனுப்பிக்கொண்டிருக்கவேண்டியது. அன்றியும் டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்கள் வேண்டும்பொழுது பார்ப்பதற்கும், பரீட்சிப்பதற்கும் அவ்வறிக்கைகளை மிகவும் ஜாக்கிரதையாய்வைக்கவேண்டியது.

௨. அந்தச்சங்கதிகள் டயெரி என்னும் தினசரிதையில் இருக்கின்றனவென்பது நிசந்தான்; ஆயினும் அவைகளை இன்ஸ்பெக்டர்கள் தங்கள் சரகத்தில்போய்வந்த சங்கதிவேண்டியபோது காலவுற்றரணமின்றிச் சுளுவாய்க் காணும்படி காலக்கிரமம் தவறாமல் சேர்த்துவைக்கவேண்டியது. இப்படிச்செய்

வது பிரத்தியேகமான ஒரு அறிக்கையை ஏற்படுத்துவதனால் மாத்திரம் இசையும். மேற்சொல்லியபடி சுருக்கமான அறிக்கைகளை எழுதுவதற்குப் பிரதிவாரமும் இன்ஸ்பெக்டருக்கு அரைமணிநேரத்திற்கு அதிகம்செல்லவேண்டுவதில்லை.

ரு. இன்ஸ்பெக்டர்கள் தங்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிற கிராமங்களுக்குப் போய்வந்த சங்கதிகள் இந்த அறிக்கைமூலமாய்த் தெரிகிறதினால் இது மிக அவசியமானதாயிருக்கின்றது; டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் அதைச் சாக்கிரதையாய்ச் சிந்தனைசெய்து அந்தந்த இன்ஸ்பெக்டர்ஜெனரல்கள் அதைச் சாக்கிரதையாய்ச் சிந்தனைசெய்து அந்தந்த இன்ஸ்பெக்டர்கள் தங்கள் இலாக்காக்களில் எதார்த்தமாகவும், சாவகாசமாகவும் போய்வருகிறார்களாவென்று பார்த்துக்கொள்ளவேண்டியது.

---

நெம்பர் உ०அ.

கஅசுகளு ஆகஸ்டுமீ கூவ

க. போலீசு சட்டத்தின் சஅ-வது பிரிவு நிபந்தனை நகரங்களுக்குமாத்திரமேயன்றி, நாட்டுக்குஉபயோகிக்கப்படாது.

உ. கிராமங்களில் பரிசுத்தமா யிருக்கச்செய்வது சௌக்கியவிர்த்திக்கு முக்கியமென்று கிராமத்தார்களுக்கு அவர்களின் பொட்டெயில்மூலமாய்ப் போதிக்கவேண்டியது; ஆயினும் இவ்விஷயத்தில் போலீசார் ஜனங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது.

---

நம்பர். உகங.

கஅசுகளு ஆகஸ்டுமீ கருவ

க. ஒருடிஸ்திரிக்டில் போலீசாருக்கும் சர்வஅந்தஸ்திலுமுள்ள மாஜிஸ்திரேட்டுகளுக்கும் உண்டாயிருக்கும் சம்பந்தத்தைக்குறித்து மிகவும் தப்பான அபிப்பிராயம் மேலிட்டிருப்பதாக இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களுக்குத் தெரியவந்தது. அந்த டிஸ்திரிக்டின் சுப்பெரிண்டெண்டாண்டு கிராமமாஜிஸ்திரேட்டைக்குறித்து எழுதியதாவது,—"இன்ஸ்பெக்டர் ஜென

"ரலவர்கள் சிலகாலத்திற்குமுன் அனுப்பிய கட்டளையின் அபி
"ப்பிராயத்தைச்சார்ந்து சட்டத்தைக் கிராம முனிஷீப்புக்கும்
"தலைமையான குடிகளுக்கும் விவரித்து விளங்கச் சொன்னே
"ன், போலீசார் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும் தங்
"கள் தங்கள் சரகத்துகளில் தங்களுக்கு ஏவற்காரரென்றும்
"சொல்வதை நம்புகிறதில்லை. விருத்தனுகிய கிராமமுனிஷீ
"ப்புக்கு அவருடைய உத்தரவாதத்தைக்குறித்தும் உத்தியோக
"த்தின் பெருமையைக்குறித்தும்வேண்டியமட்டும் சொன்னே
"ன். நான் சொன்னதைக்கிராமத்தார்கள் கருத்தாய் உற்றுக்கே
"ட்டார்கள். அன்றியும் அவர்கள் முன்புபோலீசாரும் மாஜிஸ்
"திரேட்டுகளும் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத வெவ்வே
"றுவகுப்பாரென்று நினைத்திருந்தபொழுது போலீசு ஏற்பா
"டுகளைக்குறித்து அவர்களுக்கு உண்டான திர்ப்தியிலும் இப்
"பொழுது அதிக திர்ப்தி உண்டானதுகண்டு ஆச்சரியப்ப
"ட்டேன். கிராமமாஜிஸ்திரேட்டு உத்தியோகஸ்தனே தனது ச
"ரகத்தின் தலைவனென்றும், அங்கேநடக்கும் குற்றங்களைத் த
"டுப்பதற்கும், கண்டு வெளியிடுவதற்கும் அவனே உத்தரவா
"தியென்றும் போலீசுசட்டத்தின் பீடிகையில், எழுதியிருக்கி
"றபடி போலீசார் இதன்பொருட்டாக அவனுக்குக் கீழ்ப்ப
"ட்டு ஏவல்செய்கிறவர்களாயிருக்கிறார்களென்றும், பிரஜைகளு
"க்குத் தெரிந்தால்சந்தேகமின்றி அவர்களுக்குத் திர்ப்தியும் ம
"ன ஆரோக்கியமும்உண்டாகும்; மேலும் ஒத்துநடந்து,சகாய
"ம் செய்வது தகுதியென்று எண்ணிமனப்பூர்வமாய் அப்படி
"ச்செய்வார்கள்."

௨. மேலே எழுதிய சங்கதிகளைப்போலீசு உத்தியோக ஸ்தர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இச்சங்கதியைஜன ங்கள் ஒருமுறை விசிதமாய்த் தெரிந்து கொள்வார்களானல், போலீசார் கிராமத்தாருடனே நட்புப் பொருந்துவதற்கும் அவர்களால் அபிமானிக்கப்படுவதற்கும் எவ்வளவாயினும் வருத்தமிராது.

---

## நம்பர். ௨௧௪.

### ௧௮௬௩ளு ஆகஸ்டுமீ ௨௦௨

௧. "சொத்துக்களை ஜப்திசெய்யுங்காலத்தில் ஆஜராயிருக்கிற போலீசு உத்தியோகஸ்தர்கள் அச்சொத்துகளைத் தங்கள்

வசம் ஏற்கவேண்டுமோ" என்று——இன் சுப்பெரின்டெண்டர்ண்டு கேட்டகேள்விக்கு உத்தரம்.

௨. சொத்து ஜப்திசெய்யப்படுங்காலத்தில் ஜன அமரிக்கை கெடாதிருக்கும்படி தடைசெய்யும் பொருட்டாகவே போலீசு உத்தியோகஸ்தர்கள் ஆஜராயிருக்கவேண்டியது. ஆனால் ரெவெனியு பேதர் செய்யவேண்டிய யாதொரு வேலையைப் போலீசார் செய்யப்படாதென்று சட்டத்தில் நிபந்தனை உண்டாயிருக்கின்றது.

௩. ஜப்திசெய்யப்பட்ட சொத்தைக் காக்கும்பொருட்டுப் போலீசாரைச் சகாயம் கேட்டால் அவர்கள் துணைநிற்கலாமேதவிர, அச்சொத்தை முறைமையாய்க் காக்கவேண்டிய உத்தியோகஸ்தர்கள் அவர்களல்ல. ரெவெனியு உத்தியோகஸ்தர்களே.

---

## நெம்பர் ௨௨௩.

௧௮௬௨ஞூ பிப்ரவரி௴ ௫௨

௧. போலீசு உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களைப் போலீசு சம்பந்தமல்லாத வேறுஉத்தியோகங்களில் பிரவேசிப்பதற்கு விடவேண்டுமென்று சிபாரிசுசெய்ததுண்டு. இதற்கு ஒரு திருஷ்டாந்தம்,—இல்இருக்கும்யூரோப்பியன் கன்ஸ்டேபிலைக்குறித்து அந்த ஸ்டேஷனில் தேவாலய லிகிதன் என்னும் உத்தியோகத்திற்குச் சிபாரிசு செய்யப்பட்டது.

௨. இவ்வழக்கம் உறுதியான நியாயத்திற்கு முழுமையும் விரோதமாயிருக்கின்றது; மேலும் இதற்கு இடங்கொடுப்பது அசந்தர்ப்பமும், தப்பான அபிப்பிராயமும் உண்டாவதற்கு ஏதுவாகும்.

௩. அன்றியும் அது சட்டத்திற்கும் விரோதமே-௧௮௫௯ஞூ ௨௪-வது சட்டத்தின் ௧௧-வது பிரிவில் உள்ளவிதிவிலக்கு கிராமப்போலீசாருக்கு மாத்திரம் சம்பந்தப்படுவதாகவும், அவர்கள் போலீசுசெர்ட்டிபிகேட் பத்திரம் வைத்திருக்கும் காலமுழுவதிலும் சர்க்காராவது குடிகளாவது அவர்களுக்கு ஏவல்கற்பித்துச் சம்பளம் கொடாதிருப்பதனால், பயி

ர்ச்செய்கையிலாயினும், வேறுதொழிலிலாயினும் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு எதுகரமாகவும் எண்ணிச் சித்தஞ்செய்யப்பட்டது. சம்பளம் வாங்கும் கன்ஸ்டேபில்களின் ஸ்திதி அப்படி அல்ல, அவர்கள் அவ்வுத்தியோகம் ஒன்றையே தங்கள் முறைமையான ஜீவனுதாரமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் உத்தியோகம் இடையறாது எப்பொழுதும் சிந்தித்து உழைக்கும்படியான அத்தனை பாரிய உத்தியோகமாயிருக்கின்றது.

௬. "முழுதும் அவசியமின்றி அவர்கள் எவனையாவது "உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளமாட்டார்களென்றும், செ"லவைச் சுருக்குவதற்கு இசையும்பொழுது, கட்டளை வருகிற "வரையில் காத்திராமல் உடனே உத்தியோகங்களை மாற்றுவத"னாலாவது, காலிகளைப் பூர்த்திசெய்யாமல் விடுவதனாலாவது "சுருக்குவார்களென்றும் பூரணமாய் நம்பி, அவர்கள் சுவாதீ"னத்தில்" விசாரணைப் பாரம் பொறுப்பிக்கப்பட்டிருக்கின்றது,—என்பதாகத் தெரிவிக்கின்ற (௧௮௫௬ௌ செப்டம்பர் மீ ௨௬வ யின் கட்டளையில்) கவரன்மெண்டார் வெளியிட்ட கொள்கையை உத்தியோகஸ்தர்கள் தயவாய்ச் சிந்தையில் வைக்கவேண்டும்.

---

நம்பர். ௨௨௬.

௧௮௬௨ௌ பிப்ரவரி மீ ௧0வ

௧. யாதொரு குற்றவாளியைப்பிடித்துக் குற்றம் நிலைநிறுத்தும்படி செய்பவர்களுக்கு மாஜிஸ்திரேட்டுகளால் குறிக்கப்படும் வெகுமதியைப்பற்றிக் குடிகளுக்குப் பிரசித்தஞ்செய்யத்தகும் பெயர்கள் போலீசார்களே.

௨. முயற்சியைத்தூண்டும் சாதனங்களாகிய இவைகளைக் குறித்து அவர்கள் அடுத்தடுத்துக் கிராமத்தலைவர்களுக்கும் கிராமக்காவற்காரருக்கும் ஞாபகத்தில் பூட்டவேண்டும்.

---

நம்பர். ௨௨௭.

௧௮௬௨ௌ பிப்ரவரி மீ ௨௫வ

௧. குடிகளில் எவர்களாவது, கூட்டமான கிராமத்தார்களாவது நிலம் உழுதுவது, விளைந்த தானியம் அறுப்பது, கழ

ணிக்கு நீர்பாச்சுவதுமுதலிய அலுவல்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுது ஜென அமறிக்கைகெடாமல் சுளிர்க்கும்படி பிரவேசிக்கவேண்டுமென்று, அல்லது போலீசாா ஆஜராக உத்தரவுசெய்யவேண்டுமென்று போலீசு உத்தியோகஸ்தர்களை அடிக்கடி கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

௨. இவ்விதமான விஷயங்களை மிகவும் சாவதானமாய்ச் சிந்திக்கவேண்டியதுமன்றி, ஆரம்பத்திலாயினும் நடந்தேறும் காலத்திலாயினும் இப்படிப்பட்ட சங்கதிகளில் ரிவினியூ மாஜிஸ்திரேட்டு உத்தியோகஸ்தர் எப்பொழுதும் பிரவேசிக்கவேண்டியது; ஆதலால் இப்படிப்பட்ட சங்கதிகளில் போலீசார் ஏதும் செய்யத்தொடங்குமுன் அவைகளைக்குறித்து ஒரு மாஜிஸ்திரேட்டுக்குத் தெரியப்படுத்தும்படி போலீசு உத்தியோகஸ்தர்கள் மிகுந்த ஜாக்கிரதை செய்யவேண்டியது. ஏனென்னில் இச்சங்கதிகளில் சற்றுத் தாமசம்நேரிடுவதனால் அத்தனை அபாயம் உண்டாகாது; குடிகள் போலீசு உத்தியோகஸ்தனுக்குச் சங்கதி தெரிவிப்பதுபோல, தாசில்தாருக்காவது, ஸப்மாஜிஸ்திரேட்டுக்காவது, டிஸ்திரிக்ட்டை அல்லது டிவிஷனைத் தமதுவிசாரணையின்வசம் உள்ள யூரோப்பியன் உத்தியோகஸ்தருக்காவது எளிதாகத் தெரிவிக்கலாமே.

௩. ஆதலால் தகுந்தஅதிகாரமுள்ள உத்தியோகஸ்தர் ஒருவரிடத்தினின்று எழுத்துமூலமாய்க் கட்டளை வந்தாலொழிய மற்றப்படி குடிகள் கேட்பதற்குப் போலீசு உத்தியோகஸ்தர்கள் சற்றாவது உடன்படக்கூடாது. இதற்கு இதுவேசட்டமாம். அந்தக்கட்டளையில் போலீசார் இன்னது செய்யவேண்டுமென்று விவரணமாகவும் வெளிப்படையாகவும் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

௪. கலகம் உண்டாகுமென்று மாஜிஸ்திரேட்டுக்காவது ஸப்மாஜிஸ்திரேட்டுக்காவது தோன்றுகிறபட்சத்தில் அவர் தாமாகிலும், பூர்த்தியான சாமார்த்தியமுள்ள தமக்குக் கீழ்ப்பட்ட மற்றொருவராகிலும் அவ்விடத்தில் ஆஜராகவேண்டியது. ஆயினும் மேலேஉதகரித்த சங்கதிகளில் ஜன அமரிக்கைக்குக் கெடுதிநேரிடுவதாகத் தோன்றும்பொழுது மாஜிஸ்திரேட்டா

னவர் போலீசாருக்குக் கட்டளை அனுப்பி, அவர்களுடன்கூடத் தாமும் போவதாகச் சொல்லாதிருந்தால், போலீசார் அந்தக்கட்டளைபிறப்பித்த உத்தியோகஸ்தர் தாமே தங்களுடன் வரவேண்டுமென்றாவது, தமக்குக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தராகிய ஸப்மாஜிஸ்திரேட்டாயினும் (கிராமக்கணக்கனுடன்) கிராமத்தலைவனாயினும் தாங்கள் கட்டளையை நிறைவேற்றும்பொழுது தங்களுடன் அவ்விடத்தில் ஆஜராகும்படி அவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்றாவது தவறாமல் எப்பொழுதும் எழுத்துமூலமாய்க் கேட்டுக்கொள்ளவேண்டியது.

௫. போலீசுஉத்தியோகஸ்தர்கள் தங்களை இன்னதுசெய்யக் கேட்டிருக்கிறதென்றும், தாங்கள் இன்னபடி காரியம் நடத்த நிதானித்திருக்கிறதென்றும் தவறாமல் எப்பொழுதும் உடனே மாஜிஸ்திரேட்டுக்குத் தெரிவிக்கவேண்டும்.

௬. சமஸ்த அந்தஸ்தில் உள்ள போலீசுஉத்தியோகஸ்தர்களும் தேசத்தில்நடக்கும் குற்றங்களைமாத்திரம் கண்டு கவனிப்பதே தங்கள்வேலையென்றும், தாங்கள் ஜனங்களுக்குள் போகவர இருக்கையில் காணும் பாரமான பற்பல அக்கிரமச்செய்கைகளை நிவர்த்தித்துச் செவ்வையாக்கத் துணிவது தங்கள்வேலை அல்லாததனால் தாங்கள் அதில் பிரவேசிக்காதபடி மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று சிந்திக்கவேண்டியது. அனேக அக்கிரமச்செய்கைகளுக்கு இன்னின்ன நிவர்த்தி உண்டென்று சட்டத்தில் கண்டிருக்கின்றது. அந்தநிவர்த்திகளைப் போலீசார் நிறைவேற்றவேண்டுமென்பதாகச் சட்டம் சொல்லவில்லை. இது அனுகூலந்தான், போலீசார் பிரவேசிக்கவேண்டுமென்று சட்டத்தில் கண்டிராதவிஷயங்களில் அவர்கள் பிரவேசிப்பது, ஒரு அக்கிரமச்செய்கையைக் கிரமப்படுத்துவதற்காயினும், நியாயமான பாத்தியதையைக் கிரமத்தாழ்வான விதமாய் ஆதரிப்பதற்காயினும் பிரயத்தனம் செய்யும்பொழுது அவர்கள் கொண்டிருக்கும் தாற்பரியத்தை முழுமையும் பிரதிகூலமாக்காதிருப்பினும், தடையின்றி எப்பொழுதும் தாமசப்படுத்துமென்று போலீசுஉத்தியோகஸ்தர்கள் உறுதியாய் நம்பலாம்.

## நம்பர். ௨௬௬.

### ௧௮௬௨ௐ மார்ச்சுமீ ௬௨

௧.—சரகத்தின் டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் எழுதிய அறிக்கை:—"கூட்டக்கொள்ளைகளையும் பாட்டைக்கொள் "ளைகளையுங்குறித்து அறிக்கைசெய்வதில் இன்னும் மிகுந்த "தாமசம் உண்டாயிருக்கின்றது. அவைகள் நடந்து இரண்டு "மூன்று நாள் செல்லுகிறவரையில் ஸ்டேஷன் உத்தியோகஸ்த "ர்களுக்குச் செய்தி தெரியவருகிறதில்லை; ஐந்து ஆறு நாள்வ "ரையில் சுப்பெரின்டெண்டாண்டுக்காவது, அஸிஸ்டாண்டு "சுப்பெரிண்டாண்டுக்காவது சங்கதிகள் கேள்வியாகிறதில்லை. "அத்தனை நாள்சென்றபின்பு யூரோப்பியன் உத்தியோகஸ்தர் "கொள்ளைநடந்த இடத்திற்குப் போயும் உபயோகம்ஒன்று "மில்லை. இந்த ஸ்திதியினால் உண்டாகும் நஷ்டம் இன்னதெ "ன்று பரிஷ்காரமாய் அறிவேன். இதைத்திருத்திச் சீக்கிரமே "வேண்டும். இன்ஸ்பெக்டர்கள் அங்கங்கே போகிறதுமில்லை; "ஹெட்கன்ஸ்டேபில்கள் தங்கள் ஸ்டேஷின் சாவடிகளை விட் "டுவிலகுகிறதுமில்லை, திரியவேண்டிய கன்ஸ்டேபில்கள் ரோ "ந்துவருகிறதுமில்லை என்பதாக இதனால் தெரிகின்றது. இத "ற்கு அவர்கள் எப்பொழுதும் சொல்லும் சாக்கு கிராமஉத் "தியோகஸ்தர்கள் தங்களுக்குச் செய்திதெரிவிக்கவில்லை என் "பதுதான். இந்தச்சாக்கு நியாயமாகுமா, இதை நான் ஒப்பு "க்கொள்ளேன். தேடிவிசாரித்துச் சங்கதிகளைச் சேர்க்கும் "பொருட்டாகவே நமது கன்ஸ்டேபில்களுக்குச் சம்பளம் "கொடுக்கப்படுகிறதேதவிர, கிராமப்போலீசு உத்தியோகஸ் "தர்கள் இஷ்டப்பட்டு அனுப்புகிற செய்திகளையாவது சமா "சாரத்தையாவது ஏற்றுக்கொள்ளும்படி ஸ்டேஷின் சாவடிக "ளில் இருப்பதற்காகவல்ல. கிராமத்தின் ஸ்திதிக்குக் கிராமத் "தலைவனை உத்தரவாதியாய்க்கொள்ளவும், அங்கே நடக்கும் "சகல குற்றங்களையும் அறிக்கைசெய்யக் கேட்கவும்வேண்டும். "இதற்குச் சந்தேகமில்லை; ஆயினும் நமது போலீசுவகுப் "பாரைக்கொண்டு நாம் செய்விக்கவேண்டிய கடமைகளை மற "க்கவும் ஒண்ணாது. நமது உத்தரவாதங்களைக் கிராமப்போ "லீசார்மேல் பொறுப்பிக்கவும் ஒண்ணாது. இவ்விஷயத்தைச் "சில சுப்பெரின் டெண்டாண்டுகளும் அஸிஸ்டாண்டுகளும் "பூர்த்தியாய்க் கிரகித்து உறுத்திநிற்கவில்லை."

உ. மேற்சொல்லிய டிஸ்திரிக்டில் குற்றத்தைத் தடுப்பதும் கண்டுவெளியிடுவதும் சித்தியாய் நடைபெருததற்கு மேலே தெரிவிக்கப்பட்டசங்கதிகள்தான் காரணமென்று இன்ஸ்பெக்டர் ஜனரலவர்கள் நிதானிக்கிருர்கள்.

ஈ உத்தியோகஸ்தர்கள் அனைவரும் தங்கள் தங்கள் டிஸ்திரிக்ட்டுகளில் இவ்விஷயங்களை முக்கியமாகவும் உறுதியாகவும் சிந்தனைசெய்து, தங்கள்வகுப்பானா விசாரணைசெய்து நடத்துவதில் மேலே டெப்டி இன்ஸ்பெக்டர் ஜனரலவர்கள் வெளியிட்ட உறுதியான அபிப்பிராயங்களை அவைைப்போலப் பூர்த்தியாய் அங்கிகரித்துக்கொள்ளவேண்டுமென்று மனப்பூர்வமாய் வேண்டுகிருர்.

---

நம்பர் உசஈ.

கஅகூஉ௵ ஏப்ரில்மீ உஉ௳

க. போலீசார் சத்திரங்களில் தங்களைத் தொந்தரவுசெய்வதாகப் பிரயாணிகள் முறையிட்டார்கள்.

உ. பிரயாணிகளின் சௌக்கியத்தின்பொருட்டு கட்டப்பட்ட சத்திரங்களில் போலீசார் அடிக்கடி தங்குகிருர்களென்பதும், தாங்கள் படுத்துத் தூங்குகின்ற சத்திரத்தின்சமீபத்தில் தங்கள் வண்டிகளை நிறுத்தவொட்டாமல் தடைசெய்கிருர்களென்பதும், இராத்திரிகாலத்தில் சத்திரத்தில் பிரவேசித்துப் பிரயாணிக்குள்ளே கூச்சலிட்டு உலாவுதல் முதலாகிய நிர்ப்பந்தங்கள் செய்கிருர்களென்பதுமே பிரயாணிகள் சொன்னபிரியாதின் விவரமாம்.

ஈ. போலீசார் குடிகளுக்கும், முக்கியமாய்ப் பிரயாணிகளுக்கும் க்ஷேமமும் சுகசௌக்கியமும் விர்த்தியாகும்படி பிரயத்தனம் செய்யவேண்டியது. சுசிகரமாய் இருக்கும்பொருட்டு சத்திரத்தின் ஓரத்தில் மாடுகளை நிறுத்தவிடாமல் அப்புரப்படுத்துவது அவசியமாளுல் அப்படிச்செய்யலாம்; ஆயினும் பிரயாணிகளுக்குச் சுகமும் அவர்கள் மூட்டைகளுக்குப் பந்தோபஸ்தும் உண்டாக்கத்தக்கதாக வண்டிகளைச் சத்திரத்தின் ஓரத்தில் விடுவதற்கு இடங்கொடுக்கவேண்டும்.

௪. போலீசு காவற்காரர்கள் சத்திரத்தின் புறத்தில் இருக்கவேண்டும் அலுவல் முகாந்தரமாகவும் உதவிசெய்யவதற்கு அழைக்கப்பட்டாலுமேதவிர மற்றப்படி உள்ளே போகக்கூடாது.

---

நம்பர். ௨௪௪.

௧௮௬௨௵ எப்ரில்மீ ௨௬உ

௧.———இன் சுப்பெரிண்டெண்டாண்டு———, ——— தாலூக்காக்களைத் தமது விசாரணைவசத்தில் கொண்டதாக அறிக்கை செய்தார். அவர் அவைகளை மிகவும் சித்தியுண்டாகத்தக்கவிதமாய் ஒப்புக்கொண்டார். தாசில்தார் அவருடன் கூடப்போய் அவருக்குப் பிரதிவாசகராயிருந்து கிராம உத்தியோகஸ்தர்களோடும், குடிகளோடும் உத்தர பிரதிஉத்தரங்கள் செய்தார். அந்தச் சுப்பெரிண்டெண்டாண்டு அங்கங்குள்ள பிரதிஸ்தான்ங்களையும் போய்ப்பார்த்து விசாரணைசெய்வதற்கு அனேகனாள்வாயில் சென்றது. இன்னாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்தலைவனோடும் கணக்கனோடும் அவர் பரிச்சயமானார். அன்றியும், அவர் செல்வாக்குடைய திரளான ஜனங்களைச் சேர்த்துப் போதனைசெய்து, இதுவரையில் அவர்களைக் குரூரமாய் ஒடுக்கின துன்மார்க்கரோடெதிர்த்துத் தங்களைக் காக்கும்படி அவர்களைத் தூண்டிவிட்டார். அந்தச் சுப்பெரிண்டெண்டாண்டு "நாங்கள் இப்பொழுது கொஞ்சக் காலமாய்க் கைக்கொண்டிருக்கின்ற தாலுகாக்களிலும் இவ்வாறே செய்யவேண்டியது; நமது தாலுகாக்களில் சில முறைப்படி ஒருபொழுதும் கைக்கொள்ளப்படவில்லை, இது உள்ளது. இதற்குத் திர்ஷ்டாந்தம்,—தாலூகாவில் அசேஷ ஜனங்களும் போலீசாரை அறியாதவர்கள்போல நடக்கத் தங்களால் ஆனமட்டும் பிரயத்தனம் செய்வதாய்க் காணப்படுகிறார்கள்" என்பதாக எழுதினார். மேற்சொல்லிய சங்கதி வாஸ்தவமே. சுப்பெரிண்டெண்டாண்டும் அவருக்கு உதவி உத்தியோகஸ்தர்களும் அந்த டிஸ்திரிக்ட்டில் தாலூகா உத்தியோகஸ்தர்களுடன் பெரும்பாலும் கூடிப்போகிறதே இல்லை. பின்னும் அந்த சுப்பெரிண்டெண்டாண்டு "காலத்திற்குக்காலம் ஒவ்வொரு தாலூகாவிலும் அதன் தாசில்தாருடனேபோய் அந்தத் தாலூகா நூதனமாக நமது விசாரணைவசத்தில் வந்தால் எப்படியோ அ

ப்படிப் பாவித்து அங்குள்ளவர்களை உற்சாகப்படுத்தும்படி. மாஜிஸ்திரேட்டினிடத்தில் உத்தரவு கேட்பது அவசியமென்று எண்ணுகிறேன்" என்பதாக வெளியிட்டார்.

௨. இந்த யுத்திக்குறிப்பை டிஸ்திரிக்ட்டு உத்தியோகஸ்தர்கள் கருத்தாய்ச் சிந்திக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லப்படுகின்றது. அவர்கள் அடுத்தடுத்து மாஜிஸ்திரேட்டு உத்தியோகஸ்தர்களுடன் கூடிப்போவது அசாத்தியம்; ஆதலால் வேலைநெருக்கமாய் இருப்பதுமுதலிய காரணங்களால் யாதொரு தாலூகா ஆரம்பத்தில் பூரண திருப்திகரமாய்க் கைக்கொள்ளப்படவில்லை என்று நினைக்கும்பொழுதெல்லாம் ஒவ்வொரு சுப்பெரிண்டெண்டாண்டும்————இன் சுப்பெரின்டெண்டாண்டு எழுதிய அறிக்கையில் கண்ட கடைசி வாக்கியத்தில் குறிப்பிக்கப்பட்ட முறைமையை அனுசரித்து நடக்கும்படி இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலவர்கள் முக்கியமாய்க் கோருகிறார்.

---

நம்பர் ௨௬௭.

௧௮௯௨ஆம் ஏப்ரில் ௨௩௨.

௧. விவாகம் நடக்கும்பொழுது ஜன அமரிக்கையைக் காக்கும்படி இரண்டு கன்ஸ்ட்குடபில்களை அனுப்பவேண்டுமென்று தன்முடைய ஒருவன்கேட்டான்.

௨. அவன் சிலநாள்வரையில்மாத்திரம் அவர்களை அனுப்பக்கேட்டான்.

௩. ௧௮௬௧ஆம் ௨௪-வது சட்டத்தின் ௧௩-வது பிரிவின்படி ஷை யானுக்கு அவ்வேளையில் கன்ஸ்டேபில்களை வருவிப்பதற்குச் சுதந்தரம் உண்டா, என்பதாக ஒருகேள்வி பிறந்தது.

௪. வேண்டாமென்று நிறுத்துவதற்கு ஒருமாசத்திற்கு முன் தெரிவிக்கவேண்டுமென்று கண்டிருப்பதனால், ஷை பிரிவு நிபந்தனையின் தாற்பரியம் அதிகமான காலத்தைக் குறித்திருக்கக்கூடும். எவ்வளவாயினும் குறைந்த காலத்திற்குமாத்திரம் போலீசாருடைய உதவியைப் பெற்றுக்கொள்வதற்குக் குடி

களுக்குப் பாத்தியதை உண்டென்பதாகச் சட்டம் வரைய றைசெய்யவில்லை; ஆதலால் தகுந்தமுகாந்தரம் காண்பிக்கும் எவனுக்கும் குறுகிய காலத்திற்குக்கூட அவ்வுதவியைப் பெறுவதற்குச் சுதந்தரமுண்டு. அதற்குவாங்கும் பணம் ஷெகன் ஸ்டேபில்களை உத்தியோகஸ்தானத்தினின்று பிரித்து அனுப்புவதனால் போலீசுவகுப்பில் நேர்ந்த விரயத்திற்கும், சிரமத்திற்கும் தக்கதாக இவ்வளவென்று குறிக்கப்படும்.

ரு. டிஸ்திரிக்ட்டு உத்தியோகஸ்தர்கள் இவ்விதக்கேள்வி கேட்கிறவர்களுக்கு உற்சாகம் உண்டாகும்படி செய்யவேண்டியது. குடிகளுக்கு வசதியும் நிர்விக்கினமும் விர்த்தியாகும்படி எவ்விதத்திலாயினும் ஆட்சேபத்திற்கு இடமின்றிச்செய்வது தகுதிதானே.

சு. மிகவும் குறுகியகாலத்திற்கு இவ்விதச்சகாயம் செய்ய உடன்படுவதனால் அடிக்கடி சங்கடம்நேரிடுகிறது. லண்டன் நகரத்தில் பகல்முழுதும் உத்தியோகம்செய்து இரவில் விடுதலைபெற்றிருக்கும் போலீசுமனுஷனை வேண்டும்பொழுது சங்கீத நடனமுதலிய காலக்ஷேபங்கள் நடக்கும்சாலைகளின் வாசலில் ஜனஅமரிக்கை காக்கும்படி அனுப்பி, அந்தப் பிரத்தியேகமான அலுவலின்பொருட்டு அவர்களுக்கு விடுதலைக்காலத்தில் வேலைசெய்யும் போலீசாருக்காகச் சேர்க்கப்பட்ட ரொக்கத்தினின்று பிரத்தியேகமாய்ச் சம்பளம் கொடுக்கப்படும். இவ்வாறே மேற்குறித்த சங்கடம் நிவர்த்திக்கப்படுகின்றது.

---

## சர்க்கிலர் மிமோராண்டம்.

நம்பர் ௬௬.

௧௮௬௨-ம் - ஹு டிசம்பர்மீ ௧௮௨.

களவு அல்லது சந்தேகப்பட்ட சொத்தில் வித்தியாசம் நேரிடாமல் பாதுகார்க்க வேண்டியதைக்குறித்து போதுமானஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளாம லிருப்பதைப்பற்றி யேற்படுத்தலான இதனடியிற் கண்ட கிரமத்தை கவனிக்க வேண்டும்.

௧. வது. அப்பேற்பட்ட சொத்தை முதலிற்கண்டுபிடித்த போலீசு உத்தியோகஸ்தனுடைய அல்லது அதிகாரப்பெ

ற்ற மற்றொருவனுடைய பாராவிலிருந்து கூடுமானல் ஒரு பேரதும் விலக்கக்கூடாது.

உ-வது. கூடுமானு லவனே அந்தசொத்தை வைத்துக் கொண்டிருக்கலாம் மேலும் அந்தகேசு முடிகிறவரையில் அதை பத்திரப்படுத்தி வருவதற்கும் அதை ஆஜர்ப்படுத்துவதற்கும் அவனே ஜவாபுதாரியாகவு மிருக்கவேணும்.

ஈ-வது. அந்த சொத்தானது கூடுமானல் அவனுடைய சுவாதீனத்திலேயே யிருக்கிறபட்சத்தில் அதைக்குறித்து எந்த கோர்ட்டில் பரிசீலனைசெய்யப்படுமோ அந்தக்கோர்ட்டில் அவன் ஆஜர்ப்படுத்தவேண்டியது.

சு-வது. ஒருவர்கையிலிருந்து ஒருவர்கைக்கு மாற்றுதல் விலக்கக்கூடாமையா யிருந்தால் அதைக் கூடுமான சிலமனிதர்களிடத்திலொப்பிவித்து அவர்களே கடைசீதீர்மானஞ்செய்கிற கோர்ட்டார்முன்பாக தப்பாமல் ஆஜராகச் சித்தப்படுத்திக் கொள்ளவேணும்.

---

## சர்க்கிலர் மிமோராண்டம்.

க௮௬௩-ம்-௵-ஜனவரிமீ ௨௨

க. போலீசு ஆபீசர்களாலே ஜாமீன் வாங்கப்படவேண்டியதைப்பற்றிய சட்டத்தின்விதியை டிஸ்திரிக்ட்டு ஆபீசர்கள் கவனிக்கவேண்டியதாய் இன்ஸ்பெக்ட்டர் ஜனரல் துரையவர்கள் எச்சரிக்கிறார்கள்.

உ. ஜாமீன்வாங்கத்தக்க யாதொருகுற்றம் சாட்டப்பட்டு காவல் படுத்தப்பட்டவன் தகுந்த ஜாமீனாவது முச்சலிக்காயாவது கொடுக்கக்கூடுமானல் அதின்பேரில் அவன் விடப்படுவதற்கு கிரமமாய் பாத்தியதை யுடையவனாயிருக்கிறான்.

ஈ. அந்த மனிதர்களை அவ்வித ஏர்ப்பாடு செய்வதற்கு வேணுமென்ற காலத்தைவிட அதிகமாய்க் காவலில் வைத்துக் கொண்டிருக்கிற வாடிக்கை அக்கிரமமானதாயும் அவசியமில்லாததாயு மிருக்கிறது அது வெகுகண்டிப்பாய் விலக்கப்படவேண்டியது.

---

## போலீசு உத்திரவு - நெ - உஎஉ.

கஅகூரு ௵ - ஜனவரிமீ௴ உகூவ

ஒருஜில்லா சூப்பெரிண்டெண்டாண்டு துரையவர்களிமார்க்கு செய்கிறதாவது.

கிரிமினல் புரொசிடியூர் கோட்டின் கருகூ - வது செக்ஷனைப்பற்றி வழக்கத்தில் சிலவித்தியாசம் நேரிட்டது.

ஒரு கன்னியமான ஸ்திதிவந்தன் ஜாமீன்பேரில் விடத்தக்கக்குற்றஞ் சாட்டப்பட்டு ஸ்ட்டேஷன் அவுசுக்குக் கொண்டுவரப்பட்டான் - அவனுடைய சொந்த முச்சிலிக்கையின்பேரில் போலீசார் விட்டார்கள் - இது தப்பிதமா? அப்படிப்பட்டவர்கள் எப்போதுஞ் சாமீன்கொடுக்க திராணியுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள் ஆகச்சே அவர்களை முச்சிலிக்கையின்பேரிலேயே விடுவது அதிக பந்தோபஸ்தானதென்று நினைக்கப்பட்டிருக்கிறது.

உ. குற்றவாளியை மாஜிஸ்திரேட்டுக்குமுன் ஆஜர் படுத்தத்தகுந்த முயர்ச்சிசெய்ய வேண்டியதுமட்டுந்தான் போலீசார்செய்யவேண்டியது, இந்த யேற்பாடு முச்சிலிக்கையால் நிறைவேறக் கூடியதாயிருந்தால் அவனை வீண்தொந்தரவுக்குள்ளாக்குவதும் ஜாமீன் வாங்குவதினால் - ரு - வது மனுஷனுக்கு இடஞ் சொல்லவேண்டியதும் அவசியமில்லை - இப்படிசெய்த போலீசாபீசர் சரியாய் நடத்தியிருக்கிறார்.

ரு. இந்த தாத்பரியத்தை போலீசார் தங்கள் கீழ்உத்தியோகஸ்தர்களுக்கு அறிவிக்கவேண்டியது.

---

## போலீசு கட்டளை நம்பர் - உஎரு.

கஅகூரு ௵ ஜனவரிமீ௴ உகூவ.

ஜனங்கள் தங்கள் விஷயங்களில் போலீசாபீசர்கள் செய்யும் ஊழியங்களுக்காக சொற்பவெகுமதி தருவதாய் சிலகாலங்களில் விரும்புகிறார்கள்.

உ. அப்பேர்க்கொத்த வெகுமதிகளை அங்கீகரிக்க உத்திரவாகவேணுமென்று இன்ஸ்பெக்ட்டர் ஜனரலவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ரு. எட்கான்ஸ்டேபில்களுக்கும் டிப்படி கான்ஸ்ட்டேபில்களுக்கும் கொடுக்கப்பட்ட வெகுமதிதொகை அவர்களுடைய மொண்டுமீத்துச் சம்பளத்துக்கு அதிகப்படாமலிருந்தால் டிஸ்ட்டிரிக்ட்டு சூப்பிரின்டெண்டெண்டுகளே தங்கள் மூலமாகக் கொடுக்கும்படி உத்தரவுசெய்யலாம்.

சு. அப்படி வெகுமதிசெய்யும் உத்திரவானது டிப்ட்டி இன்ஸ்பெக்ட்டர் ஜனரலவர்களுக்கும், இன்ஸ்பெக்ட்டர் ஜனரலவர்களுக்கும் தெரியும்பொருட்டு டையிரியில் எழுதிக்கொண்டுவரவேண்டியது.

---

சர்க்கியுலர் மிமோராண்டம் – நம்பர் - கo.

கஅகூ௩ வரு பிப்பரவரிமீ கக௳

உப்புகொண்டுபோகிரவர்களை அவர்கள் போகும்வழிகளில் போலீசார்மறித்து றவாணக்களைக் காண்பிக்கச் சொல்லியும், உப்பில் அல்லது எவ்வித பொருளிலாவது சுவல்பப் பிரயோசனம்பெற இச்சித்து அவர்களிடத்திலிருக்கிற உப்பு றவாணவின்படி சரியாயிருக்கிறதா சோதித்துப் பார்க்கிறோமென்றுசெல்லி அவர்களுக்கு பயங்காட்டி நிறுத்திவைக்கிறார்களென்று முறையிடுகிறார்கள்.

இந்தவழக்கம் நடக்கவொட்டாமல் போலீசாமீசர்கள் உடனேநிறுத்திவிட்டு உப்பு கொண்டுபோகிறவர்களை மேற்கண்டவிதமாய் மறித்துத் தொந்தரவுசெய்ய எத்தனப்பட்டவர்களை கண்டிப்பாய் சிட்சிக்கவேண்டியது.

டிஸ்திரிக்ட்டு போலிசாமீசர்கள் இவ்வித வழக்கங்களுக்குக் கொஞ்சமிடங்கொடுத்தால் போலீசார் - காசு பறிக்கிறதற்கு அதே ஆதாரமான வழக்கமாகிவிடுமென்று உறுதியாய்ச் சொல்லப்படுகின்றது.

திருட்டுஉப்பு கொண்டுபோகிறதை தடுக்கிறதற்கு றவாணுவானது அனுபவசித்தியாய் உபயோகமுள்ளதல்ல - மேலும் போலீசார் உப்புகொண்டு போகிறவர்களிடத்தில் பிரவேசிக்கக்கூடாது.

யாதொருசமயத்தில் உப்புகொண்டுபோகிறனைக்குறித்து றவாணுவை பரிசோதித்தால் புரட்டு வெளியாகிவிடுமென்று

முற்றிலும் நம்பத்தகுந்த சமாசாரம் யாதொரு போலீசாருக்குக் கிடைத்தால், உப்புகொண்டுபோகிறவர்களைத் தடுக்காமலும் போலீசார் அதுவிஷயத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறார்களென்று அவர்கள் அறிந்துகொள்ளாமலுமிருக்கும்படியாய் முற்றிலும் அமரிக்கையாய் அவர்களைப்பின்தொடர்ந்து பார்த்துக்கொண்டுபோய், தாசில்தார் - உப்பளம் காரியஸ்தன் அல்லது யூரோப்பியன் கலெக்ட்டர் இருக்கும் கஸ்பா எல்லையண்டை அல்லது அதற்குச்சமீபத்தில் போனஉடனே அதைக்குறித்து அவர்களுக்குத்தெரியப்படுத்தி அதைப்பற்றி ரிவினியூ அதிகாரிகள்தானே வழக்காடும்படி அவர்களிடத்திலேயே ஒப்பித்துவிடவேண்டியது.

உப்புகொண்டுபோகிறவர்கள் எந்தெந்த மார்க்கமாய்போகிறார்களோ அந்தந்தமார்க்கங்களிலெல்லாம் ௬-௲ ரூலை அமலுக்குக் கொண்டுவரவேண்டியது.

---

சர்ர்கியூலர் மிமோராண்டம் - நெம்பர் - ௫௮.

௧௮௬௩௵ ஏப்ரல்௴ ௧௨

௧ - வது - கிராமத்துத்தலைவர்கள் நபர்களை மாமூலாய் வாரண்டில்லாமல் பிடித்து ஸ்ட்டேஷின் அவுசுக்கு அனுப்புவித்துக் கொண்டுவருக்கிறார்கள் - அப்போது அவர்களை போலீசார் தங்கள் பாராவில் வைத்துக்கொள்ளுகிறார்கள்.

௨ - வது - போலீசார் வாரண்டில்லாமல் நபரைப் பிடிக்கக்கூடாத அவ்வித குற்றத்திற்காக கிராமத்தலைவர்களால் பிடிக்கப்பட்ட ஒருநபரை போலீசார் தங்கள் வசம் ஒப்புகொள்ளாமல் மறுத்துவிடும் வழக்கத்தை போலீசார் அநுசரித்துவரவேண்டியதென்று இன்ஸ்பெக்ட்டர் ஜனரலவர்கள் யோசனைசெய்கிறார் -மேலும் - கிரிமினல் புரோசீடியூர் - ௧௦௮ - வது பிரிவுபடிக்கு நடத்தவேண்டியது.

---

சர்க்கியூலர் மிமோராண்டம் நம்பர் - ௧௭௬

௧௮௬௩௵ ஜூலை௴ ௧௫௨

இன்ன டிவீஷனைச்சேர்ந்த இன்ஸ்பெக்ட்டர் - இன்ன சப்ஸ்ட்டேஷனைச்சேர்ந்த - முதல்பீட்டின் கிராமங்களைப் பாரு

ர்வையிட்டபோது அந்த கன்ஸ்டேபில்களில் ஒருவன் அந்த கிராமத் தலைவனிடத்திலிருந்து ஒருமிக்க - ௬ - அல்லது - ௭- தினங்களுக்காக பீட்டு சந்திப்புச்சீட்டுகளை வழக்கமாய்ப் பெற்றுக்கொண்டு வந்ததாகவும், அந்தகிராம தலைவனிடத்திலிருந்து - ௧௯ - ௨௦ - ௨௧ - ௨௨ - இந்ததேதிகளுக்காக பீட்டு சந்திப்புச்சீட்டுகளை ௧௯வ யிலேயே அவன் பெற்றுக்கொண்டிருந்ததையும் கண்டுபிடித்ததாய் தன்னுடைய டையிரியில் ரிபோர்ட்டு செய்திருக்கிறார் - இந்தசூது எங்கும் நடந்துவருகிறது. அதைக் கொடூரமாய்க் கண்டிக்கவேண்டியிருக்கிறது. இப்படி மோசஞ்செய்ய எத்தனித்த கன்ஸ்டேபில் - அதுவரையிலும் சேரவேண்டிய சம்பளத்தை இழந்து போவதுடன் அவனை உடனே பர்தர்ப்பு செய்துவிடும்படிக்கும் உத்தரவு செய்யப்பட்டது. அந்த ஸ்டேஷன் அதிகாரி அவர்வேலையைச் சரியாய்ச் செய்துவந்தால் அவன் இவ்விதமோசஞ்செய்ய இடமிராது ஆகையினாலே ஷை அதிகாரி ஒருமாசம் சஸ்பெண்டு செய்யப்பட்டார் - இப்படி செய்ததனாலே அவர் இனி சாக்கிரதையா யிருக்கக் கற்பிக்கும்.

௨. இந்தச்சூதை எவ்விடத்திலும் சாக்கிரதையாய்க் கண்டுபிடித்து நிறுத்துவதற்கு வகை தேடவேண்டியது. அப்படி தப்புசீட்டு எழுதிக்கொடுக்கும் கிராமத்தலைவர்களைப்பற்றி மேஜிஸ்திரேட்டுகளுக்கு ரிபோர்ட்டு செய்யப்படுமென் றறிவிக்கவும்.

---

சர்க்கியூலர் மிமோராண்டம் - நம்பர் - ௧அ௬

௧அ௬௩ஞு ஜூலைமீ ௧௨வ

போலீசு இலாகாவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் டிவிஷனைச்சேர்ந்த கீழ் உத்தியோகஸ்தர்களிடத்திலாவது கிராமத்தலைவர்களிடத்திலாவது - மற்ற இதரமானவர்களிடத்திலாவது கடன்வாங்கி அவர்களுக்குக் கடனாளியா யிருப்பதனால் தங்கள் அலுவல்களை கண்டிதமாய் நடத்துவார்களென்பது சந்தேகம் - ஆகையால் அப்படி கடன்வாங்குகிறவர்கள் உடனே வேலையிலிருந்து பர்தர்ப்பு செய்யப்படுவார்களென்று அறியவேண்டியது.

---

சர்க்கிலர் மிமோராண்டம் - நம்பர் - ௨௪௯.

௧௮௬௫௵ ஜூலை௴ ௨௮௳

—ஜில்லாவினுடைய போலீசு அசிஸ்டாண்டு சூப்பிரன்டெண்டெண்டு துரையவர்களுடைய டையிரியின் எக்ஸ்திராக்ட்டு.

டிவிஷன் இன்ஸ்பெக்ட்டர் முன்னால் அநேகந்தடவைகளில் தன்னுடைய டிவிஷனிலிருக்கிற தலையாரிகள் குற்றம் நடந்தவுடனே அதையறிவிக்க கூடியசீக்கிரத்தில் வந்து ரிபோர்ட்டுசெய்கிறதில்லையென்று குறை சொல்லிக்கொண்டு வந்தார் குற்றம் நடந்ததை மணியக்காரர்கள் முதலறிந்து அதை விசாரணை செய்கிறவரையில் அதற்குச் சமீபமாயிருக்கிற ஸ்டேஷனவுக்கு தலையாரிகள்போய் ரிபொர்ட்டுசெய்கிறதை ஷை மணியக்காரன் தடுத்துக்கொண்டு வருகிறார்களென்று தலையாரிகள் தெரிவித்ததாகவும் சொல்லுகிறார்; இந்த ஆலசியத்தினாலும், மணியக்காரனுடைய விசாரணையினாலும் அனேககேசுகள் கெட்டுப்போகிறதென்று அந்த இன்ஸ்பெக்ட்டர் சொல்லியிருக்கிறார் - இந்த சமாசாரங்களைத் தெரிந்துக்கொண்டு அறிவிப்பது போலீசாருடைய கடைமையா யிருக்கிறதென்பதை அந்த இன்ஸ்பெக்ட்டர் பார்த்திராதவராய் காணப்படுகிறார். குற்றதைச் சேர்ந்த யெல்லா சங்கதியையும் தெரிந்துக்கொள்ளவேண்டிய முதல்கடமையையுடைய பீட்டு கன்ஸ்டேபில்கள் அவாளுடைய கடமையை அப்படி செய்கிறதில்லையென்றும், அல்லது அவாளுடைய அலுவலை சரியாய் நடத்திவருகிறது மெத்த அரிதாயிருக்கிறதென்றும் பீட்டுகள் மெத்தவும் ஒழுங்கத்ததாயிருக்கிறதென்றும் நம்புகிறதற்குக்காரணம் இதற்குமுன்னமேயே உண்டாயிருந்ததை இத்தருணத்தில் நான்அவருக்கு காட்டினேன்-இந்த டிவிஷனிலிருக்கிற போலீசார்கள் குற்றத்தைச் சேர்ந்த சங்கதிகளைத் தெரிந்துக்கொள்ளவேண்டியகடமை தங்களுதல்லவென்கிற கருத்தைக்கொண்டிருக்கிறதாகவும் அதற்காக மணியக்காரர்களிடத்திலும் தலையாரிகளிடத்திலும் யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதாகவும் காணவருகிறது. இவ்விதமாய் நடக்கவொட்டாமல் தக்ஷணம் தடைசெய்யவேண்டி யிருக்கிறது. இந்த கருத்தைக்கொண்டே இது சங்கதி செம்மையாய் தெரியும்பொருட்டு முன்கட்டளைகளை அனுப்பித்திருக்கிறேன் அதனால் பீட்டுகளெல்லாம் கிரமந்

தோறும் பிரதிதினம் பார்வையிடும்படியாய் பிரயோஜனமுண்டாகுமென்று நம்புகிறேன்— —க்கும்— —இன்னஇடத்திற்குப் போகிறபோது ஸ்டேஷன்களுக்கு நானேபோய் கிருமங்களைப் பார்வையிட்டு யென்னுடைய உத்திரவுகள் பிரகாரம் நடந்துவருகிறதாவென்று பார்வையிடுவேன்.

உ-வது. அசிஸ்டாண்டு சூப்பிரன்டெண்டெண்டு துரையவர்கள் சொல்லுகிறது சரியாயிருக்கிறது - போலீசார் அவாளுடைய சொந்தஅலுவலே கிருமநவுக்கர்களைப் பார்க்கும்படி செய்யவொட்டக்கூடாது - ஆனால் போலீசாருக்கு சம்பவித்தகாரியங்களை அறிவிப்பது கிருமநவுக்கர்களுடைய சரியானகடமையா யிருக்கின்றது அதிலவர்கள் பொருப்பில்லாத கடமையா யிருக்கிறார்களாகையால் அவர்களின் நியாயமான கடமையை அசட்டைசெய்யாமல் நடத்தும்படி தெரியப்படுத்தவேண்டியது. மணியக்காரர்கள் முதலியவர்களுக்கு நபர்களைப்பிடிக்கவும், காவலில்வைக்கவும், அதிகமாய் விசாரணைசெய்யவும், சட்டத்தின லதிகாரமில்லை? அவர்களப்படிசெய்வதினால் லநியாயங்கிடைக்க கொடுமையான தடையுண்டாகிறது ஆகையால் இவ்விதமாய் சட்டத்திற்கு எதிரடையான அக்கிரமங்களை சில இந்த முட்டாளதிகாரிகள் செய்யாமல் தடைசெய்யவேண்டியது.

---

சர்க்கியுலர் மிமோ. நம்பர் - கூ௦ரு.

கஅகூகூ௵ ஆகஸ்டு௴ கூஉ

டிஸ்ட்டிரிக்ட்டு மாஜிஸ்திரேட்டுடனே பேசிக்கொண்டிருக்கும்போது அவர் ஸ்டேஷன்சேவகர் கிரமமாய், ஸ்டேஷன்களின்பேரில் போனபோதிலும் அப்படிப்போவதில் கண்ணைமூடிக்கொண்டுபோகிறார்களென்றுஞ் சொன்னார் - எவ்விடத்திலானாலும் பாட்டையைக்குறுக்கிட்டிருந்தாலும், வாராவதிகள் இடிந்திருந்தாலும் செடிகள் விழுந்திருந்தாலும் இப்படிப்பட்டசங்கதிகளை ஸ்ட்டேஷன்அவுசுக்கு சாதாரணமாய் ரிபோர்ட்டுசெய்கிறதில்லையென்றுஞ் சொன்னார். இப்படிப்பட்டகுறைவுகளைச் சுவைப்படுத்தும்படி டிவிஷன்களிலிருக்கப்பட்ட இன்ஸ்பெக்ட்டர்களுக்கு உத்தரவுஅனுப்பியிருக்கிறேன் - ஸ்டேஷன்கன்ஸ்ட்டேபில்களுக்குத்தெரியும்படி இதைக்குறித்து பெரியஎழுத்தில் ஒரு மிமோராண்டம்எழுதி அதை எல்லா ஸ்ட்டேஷன்களி

லேயும் ஸ்ப்ஸ்ட்டேஷின்களிலேயும் ஒரு பலகையில் ஒட்டித் தொங்கவிடவேண்டியது.

உ. பீட்டுசேவகர் மேஜஸ்திரேட்டுக்கு கண்களும் காதுகளுமாயிருக்கவேண்டியதென்றால், அவர்கள் ஜனங்களுடைய சவுக்கியத்தில் சம்பந்தித்த எந்தசங்கதியையும் தாங்கள் பார்த்ததை ரிபோர்ட்டுசெய்யவேண்டியது.

---

சர்க்கியுலர்மிமோராண்டம் நெ - சஅகூ.

கஅசுரு வூ செப்டம்பர்மீ உ௯

கஅகசுவூ த்திய - கக - வது- சட்டம் க௦ - வது பிரிவு உ - வது உள்பிரிவுபடிக்கும் - கஅஉக வூ த்திய - ச - வது சட்டம் - சு - வது பிரிவு உ - வது உள்பிரிவுபடிக்கும் கிராமமாஜிஸ்திரேட்டுகள் தங்களால் பரிசிலனை செய்யப்பட்ட கேசுகளைக்குறித்து போலீஸாபீசர்களுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியதானதால் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இதை கவனிக்கவெண்டியது.

---

சர்க்கியுலர் மிமோ - நம்பர் - சகூரு.

கஅசுரு வூ அக்டோபர்மீ ௬௨

ஜாயிண்டுமாஜிஸ்திரேட்டு அவர்கள் இன்னகிராமமுனிசிப்பை விசாரணைசெய்து குற்றம்நடந்தசங்கதியைப் போலீசாருக்கு ரிபோர்ட்டுசெய்யாமல் போனதற்காக அவனுக்கு-ரு ரூபாய் அபராதம்விதித்தார்கள் - அப்படி ரிபோர்ட்டுசெய்யாமல்போனதைக்குறித்து இப்போது பலமாய் விசாரணைசெய்து அப்படிப்பட்டநடத்தையை நிறுத்தவேணுமென்று கோரப்படுகின்றது இல்லாவிட்டால் போலீசாருக்கு அது மனஸ்தாபமுண்டாக்கும். அப்படிப்பட்ட நடத்தையாலுண்டாகும் கெட்டபலனை மேஜஸ்திரேட்டுகளும் ஜாயண்டுமாஜிஸ்திரேட்டுகளும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

உ - இது முக்கியமானவிஷயமாயிருக்கிறது.

சர்க்கியூலர் மிமோராண்டம் - நம்பர் - ௬௧௧.

௧அசுஅ௵ ஆகஸ்டுமீ ௬௨

கொலைநடந்த சுமார் - ௧ - மணிக்குப்பின்பு நெய்கிறவனை முதலில் பிடித்துக்கொண்டார்கள். அவனுடையவீட்லைட அப்போதே சோதனை போட்டிருந்தால் சொத்து அகப்பட்டிருக்கலாம். ஆனால் சூரிய அஸ்தமானமுதல் சூரியோதயம்வரையில் வீடு சோதனை போடக்கூடாதென்கிற தப்பு அபிப்பிராயத்தை போலீசார் உடத்தாயிருந்தார்கள் - சப்மாஜிஸ்திரேட்டும் அப்படியே நினைத்திருந்தார் - சட்டத்திலிருக்கிறாப்போலவே நினைக்கும் அப்படிப்பட்ட தப்பான அபிப்பிராயத்தை விட்டுவிடச்சொல்லி ஜில்லாகேஜெட்டில் பிரசித்தப்படுத்துவது யுக்தமாயிருக்கும் - இப்படிப்பட்ட அபிப்பிராயம் எல்லாவிடங்களிலும் பரவிஇருக்கிறதென்று நினைக்கப்படுகின்றது.

டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரல் அவர்களுடைய ரிமார்க்கு.

இது ஒருபழயரூல் - மிகவும் அவசியமா யிருந்தாலொழிய ராக்காலத்தில் வீடு பரிசோதனை செய்யப்படாது - ஏனென்றால் சோர்ட்டாருக்கு சந்தேகமுன்டாக இடமாயிருக்கிறது.

௨ - பகலிலேயே சோதனைபோடவேணுமென்பது இப்போதிய சட்டத்தின் தாத்பரியமல்ல - இதைக்குறித்து போலீசாமீசர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது சரிதான் - மிகவும் ஜாக்கிறதையாய் காவலிருக்கவேண்டி யிருப்பதாகையால் பகற்காலத்தில் சோதிப்பது யுக்தமென்று சொல்லலாம், கேசு பாரியாயிருக்குமேயாகில் வீட்டிலிருக்கிறவர்களை வெளியில் போகச்சொல்லி பொழுது விடிகிறவரையில் பந்தோபஸ்து செய்தபின்பு சோதிக்கலாம்.

---

சர்க்கியுலர் மிமோ - நம்பர் - ௫௧௧.

இன்னஇடத்தில் ஜனங்களை விசாரிப்பதில் இந்தப்பிரதேசங்களில் அநேகதிருட்டுகளும், கன்னக்களவுகளும் நடந்திருப்பதாகவும், அவைகளில் அனேகமாய்ப் போலீசாருக்கு ரிபோர்ட்டுசெய்யப்படவில்லையென்றும் தெரியவருகிறது. ரிபோர்ட்டுசெய்தஉடனே போலீசார்வந்து விசாரிக்கிறதாய் ஜனங்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள்; ஆனால் ரிபோர்ட்டுசெய்யாமல்

போவதற்கு கோர்ட்டுமுதலான இடங்களுக்குப்போய் வழக்கா டுவதைக்காட்டிலும் தங்களுடைய மாடு கன்னுகளையும் அறு ப்புமுதலான பயிர்வேலைகளையும் பார்த்துக்கொண்டு சவுக்கிய மாய் வீட்டிலிருக்கலாமென்று அவர்கள் வழக்கமாய்ச்சொல் லுகிறபரிகாரத்தைச் சொல்லுகிறார்கள் - இப்படிப்பட்ட தாற் பரியத்தைப்போக்கடிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஜனங்களுடைய அசிரத்தையினாலும் சோம்பலினாலும் அனே ககேசுகள் கண்டுபிடிக்கப்படாமலிருக்கின்றது.

உ. குற்றங்கள் நடந்தசங்கதி விசாரிப்பதும் - அவைக ளைக்குறித்து ரிபோர்ட்டுசெய்யாமல் அசிரத்தைசெய்த கிராம முனிசீப்பின்பேரில் ரிபோர்ட்டுசெய்வதும் போலீசாருடைய வேலையாயிருக்கிறது.

---

சர்க்கியூலர் மிமோ - நம்பர் - ருசுரு.

கஅசுரு௵ அக்டோபர்ᏜᏜ கய௨

நாய்க் ஒருவன் தன்னுடைய வீட்டை போலீசார் சோ தனைபோட்டதாய் ஒரு சூப்பிரின்டெண்டெண்டு யிடத்தில் பி ரியாது செய்தான் ஷை சங்கதியை விசாரணை செய்ததின்பே ரில் ஷையூர் அம்பட்டன் கிராமமுனிசீப்பினுடைய உத்தரவி ன்பேரில் அப்படி சோதனைபோட்டதாய் தெரியவந்தபடியி னாலே அதைப்பற்றி மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட்டுசெய்யப் பட்டது.

உ. இப்படிப்பட்ட அக்கிரமங்களைக்குறித்து அடிக்கடி கண்டித்துக்கொண்டு வரவேண்டியது. இப்படிப்பட்ட கேசு களையெல்லாம் மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட்டு செய்துவரவே ணும்.

---

சர்க்கியுலர் மிமோராண்டம் - நம்பர் - சுருசு.

கஅசுரு௵ அக்டோபர்ᏜᏜ ௨சவ

கிராமமுனிசீப்புகளாவது காவல்காரர்களாவது தங்களு டையவேலைகளை இந்த ஜில்லாவில் திருப்திகரமாய்ப் பார்க்கிற தில்லை. அதேனென்றால் இந்த டிஸ்திரிக்ட்டில் மேலேகண்ட சிலஉத்தியோகஸ்தர்கள் போலீசாருடையவேலை இன்னதென் று தெரிந்துகொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். குற்றங்களை தடு

க்கவும் கண்டுபிடிக்கவும் தாங்கள் முழுவதும் யாத்தியப்பட்ட வர்களல்லவென்று தப்பிதமானகருத்துடன் நடக்கிறார்கள். அப்படிப்பட்டவேலைகள் இன்ஸ்பெக்ட்டர்களுக்கும் அவர்களுடைய சபார்டிநேட்டுகளுக்கும் சேர்ந்ததென்றும் குற்றத்தைப்பற்றி கிரமமாய் ரிபோர்ட்டுசெய்யவேண்டியதுமட்டும் தங்களுடைய உத்திரவாதமென்றும் நினைக்கிறார்கள்; அவர்கள் நம்முடன்சேர்ந்து குற்றவாளிகளை நியாயஸ்தலத்துக்குக் கொண்டுவரவேண்டியதற்கு உதவிசெய்ய தயாராயிருக்கவேணுமென்றும் அவர்களுக்கு தெரிவிக்க நான் இவ்விடத்தில் பிரயத்தினப்பட்டேன்; நம்முடைய கிராமபோலீசுகள் தகுந்தவர்களாயிருந்தால் குற்றங்கள் விசேஷமாய் சம்பவிக்கமாட்டாதென்றும் யாதாமொரு குற்றம்நடந்தபட்சத்தில் அதுகள் கண்டுபிடிக்கப்படுகிறவிஷயம் இப்போதிருப்பதைப்பார்க்கிலும் அதிகப்படுமென்றும் நான் உறுதியாய் நினைக்கிறதுந்தவிர அது எப்பவும் என்னுடைய அபிப்பிராயமாயிருக்கிறது.

௨ - கிராமபோலீசானது டிஸ்திரிக்ட்டுபோலீசின் ஒருபாகமாயிருக்கிறது; ஆனாலதற்குண்டான அதிகாரஎல்லையும் அதிகாரமும் கொஞ்சமாயிருக்கிறது கிராமபோலீசுகளுக்கு சம்பளங்கிடைக்கிறவிஷயத்திலும் அவர்கள்பேரில் மேலவிசாரணை செய்யும்விஷயத்திலும் அவர்களை ஆதரிக்கவேண்டிய ஜெனங்களால் கிரமமாய்வைக்கப்பட்டு ஜெனரல்போலீசுகளோடு சரியான சம்மந்தமாயும் கூட்டாயுமிருந்தால் மேஷ இருவகையாரும் சேர்ந்து கிட்டதட்ட எல்லாவிஷயங்களிலும் தவரிப்போகமாட்டார்கள் முக்கியமாய் இன்ஸ்பெக்ட்டர்களும் ஏட்கன்ஸ்டேபில்களும் இவ்விஷயத்தில் ஜெனங்களுக்கிருக்கிற உத்திரவாதத்தையும் நன்மையையும் காட்டவேண்டியதும் அவர்களுடைய சொந்த கிராமயேர்ப்பாடுகளை நல்லஸ்திதியில்வைத்து தங்களுக்கு சகலவிதத்திலும் உதவிசெய்யவேணுமென்று பேசவேண்டியதும் அவர்களுடைய கடமையாயிருக்கிறது. அவர்கள் இந்தசங்கதியை கவனத்தில்வைத்து தாசீல்தாரர்களோடும் சப்மேஜிஸ்திரேட்டுகளோடும் பேசி முயர்ச்சித்துவரவேண்டியது. கிராமபெரியதனக்காரர்கள் கர்ணம்முதலானவர்களைக்கொண்டு கிராமத்தார்கள் தங்களுடைய லோகல்போலீசாரை நல்லஸ்திதியில்வைக்கவும் அதினால் ஜெனரல்போலீசாரோடு சவுக்கியமாய் சேர்ந்துக்கொள்ளும்படி செய்யவேணுமென்றுபே

சுவதினலே இந்தசெல்வாக்கையுடைய உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய ஜனங்களின் நன்மையையும் பத்திரத்தையும் எவ்வளவுக்கு விருத்திசெய்யலாமென்கிறசங்கதியை ஆபீசர்கள் அதிலேசாய்காட்டவேண்டியது.

---

சர்க்கியூலர் மிமோ - நெம்பர் - சுகள.

௧௮௬௩ஹு நவம்பர்மீ ௧௪௨

செடல்குத்தும் திருநாளுக்கு உத்தரவுகொடுக்கவேணுமென்று கிராமத்தார் தன்னைக்கேட்டுக்கொண்டதாய் ஒரு ஸ்டேஷன் ஆபீசர் ரிபோர்ட்டுசெய்தார் - ஆனல் அந்தப்படி தான் உத்திரவு கொடுத்தானே கொடுக்கவில்லையோ அதைத் தெரிவிக்கவில்லை. கவரன்மெண்டாரும் எல்லாஜனங்களும் இந்த உச்சவத்திற்கு அசம்மதமுடையவர்களா யிருக்கிறபடியினலே மேஜிஸ்திரோட்டினுடைய எழுத்துமூலமாய்ப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில்லாமல்போனல் போலீசு இலாகாதாரர்கள் இதில்பிரவேசித்து உற்சவம் நடப்பதை நிறுத்தலாம். இந்தஉற்சவங்கள் நடக்கப்பட்ட இடமும் காலமும் தெரிந்திருக்கிறது.

சூப்பிரின்டெண்டெண்டின் ரிமார்க்குடனே மேஜிஸ்திரோட்டுக்கு அறிக்கைசெய்து அப்படிப்பட்டகாரியம் நடவாமல் தகுந்தஜாக்கிறதை செய்யவேண்டி யிருந்தது.

போலீசாபீசர்கள் ஜனங்களுக்கு முன்னடியே மேஜஸ்திரேட்டினுடைய உத்தரவுபெற்றுக்கொள்ளும்படி பூராவாய் பயங்காட்டி அறிவிக்கவேணும், இப்பேர்ப்பட்ட உச்சவம் வருவதைக்குறித்து உத்தரவு பெற்றுக்கொள்ளப் போதுமானகாலத்தில் அவர்கள் ரிபோர்ட்டுசெய்யவேணும்.

---

சர்க்கியூலர் மிமோராண்டம் - நெம்பர் - எகள.

௧௮௬௩ஹு நவம்பர்மீ ௧௪௨

பிள்ளைபெற்றதை மறைப்பது - கெர்ப்பம் - கரைப்பது முதலான இப்பேற்பட்ட கேசுகள் கிராம உத்தியோகஸ்தர்களுடையவும் போலீசு சப்மேஜஸ்திரோட்டுகளுடையவும் யோசனைக்குறைவினலே புதுசாய் பிள்ளைபெற்ற ஸ்திரீகளை அசவுக்கியத்திற்கு சிலவிசை உட்படுத்தப்படுகிறது அதனல் பிராணத்திற்கு அபாயமில்லாவிட்டாலும் அடிக்கடி யென்றென்

றைக்கும் சவுக்கியத்தைக்குறைத்து விடத்தக்கதா யிருக்கிறது அந்த ஸ்திரிகளை அவர்களுடைய பலயீனமான ஸ்திதியில் வெகுமயல்தூரம் நடத்திக்கொண்டுபோய் சப்மேஜஸ்திரேட்டுமுன்பாகவாவது ஸ்டேஷனுக்காவது ஆஜர் செய்யப்படுகிறது.

உ - இதை பரிஷ்காரமாய்த் தடுக்கவேணும் அந்தஸ்திரி சவுக்கியமாய் நடந்துவர சக்தியுண்டாகிறவளாயில் அவளை வரும்படிகேட்காமல் சாட்சிமுதலானதை சங்கிரகிக்கவேணும்; அப்போது ஒரு காவல்வைத்திருக்கவேணும்; இஃதைச்செய்யக்கூடாமலிருக்கும்போது பிள்ளைபெற்றஸ்திரியை கொண்டுபோவதில் எப்போதும் ஜாக்கிரதையாகக் கொண்டுபோகவேணும் நடந்துவரசக்தியுண்டாயிருக்கும்போது கூட நடத்திக்கொண்டுபோவது மெதுவாயிருக்கவேணும்.

---

சர்க்கியுலர் மிமோ - நம்பர் - அ௨௬.

க௮௬௩ஹு டிசம்பர்மீ ௩௨

ஒருஅசிஸ்டெண்டு சூப்பிரின்டெண்டெண்டு ஒருதினம் காலமே ஒருபாஜாரிலிருக்கும் ஸ்ட்டேஷனைப் போய்ப்பார்க்கும்போது அந்தஸ்ட்டேஷனுக்கு எதிரில் ஒருபசுவைக்கட்டியிருந்து - இதைக்குறித்து விசாரணைசெய்கையில் அவ்விடத்தில்- பட்டிமாடுகளை அடைத்துவைப்பதற்கு இடமில்லாதபடியினாலே பயிர்முதலானவைகளை மேய்ந்தமாடுகளை ஸ்டேஷ்அவுசுக்கு அனுப்புகிறதாகத் தெரியவருகிறது - இப்படிப்பட்ட வழக்கத்தை முற்றிலும் நிறுத்திவிடவேணுமென்று அந்த அசிஸ்டெண்டு சூப்ரின்டெண்டெண்டு சொல்லியிருக்கிறார்.

உ. அவர்சொல்லுகிறபடி இந்த வழக்கத்தை நிறுத்திவிடவேண்டியது - ஸ்ட்டேஷின் அவுசு ஆபீசர்கள் பட்டியாய்த் திரிகிற மாடுகளைத் தங்கள் வசத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது.

---

சர்க்கியூலர் மிமோராண்டம். நம்பர் - அக.

க௮௬௫ஹு பிபரவரிமீ ௪௨

வயித்தியசோதனையைக்குறித்து.

———ரேஞ்சின் டிப்ட்டி இனிஸ்பெக்ட்டர் ஜெனரல் டைரியிலிருந் தெடுத்தெழுதியது.

௯ மயில்தூரமாகிய இன்னஇடத்துக்கு பிரேதத்தை அனுப்பிவித்ததில் அந்தபிரேதம் ஊதி நாற்றமெடுத்துப்போனபடியால் இந்தகொலைக்கேசில் சாதாரண காரணங்களினால் வயித்தியசாட்சியம் யில்லாமல் போய்விட்டது அந்த இறந்த காலத்திலேயே பிரேதத்தை யனுப்பியிருந்தால் சிலமணிக்குள்ளாகபோய் சேர்ந்திருக்கலாம் அந்தகாலத்தில் அந்ததாலூகா தாசில்தாரரும் இன்ஸ்பெக்ட்டரும் அந்த இடத்திலில்லாமல் இரண்டுபேரும் முக்கியமான வேலையாக ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் வெகுதூரத்தில் பிரவேசித்திருந்தபடியாலும் இப்போதுவழங்கிவரும் வழக்கம் இருக்கிறவரையிலும் இம்மாதிரியான திருப்திகரமில்லாததும் பிரயோஜனமில்லாததுமான சாட்சியம் எப்போதும் கிடைத்துக்கொண்டுவரும்; இதைமாற்றவேண்டியது. கிராம அதிகாரிகள் சமீபத்திலிருக்கிற போலீசு ஸ்டேஷனுக்கு ரிபோர்ட்டுசெய்து அந்த ஸ்டேஷனதிகாரி ௨ கானிஸ்டேபில்களுடன் உடனே அந்த இடத்திற்குப்போய் அந்த பிரேதத்தை பரிட்சைசெய்து மணியக்காரரால் மாஜர்முதலாகியதும் வாங்கவும் அந்தமரணம் சம்பவித்தவிஷயத்தில் கொஞ்சம் சந்தேகமுண்டானாலும் அல்லது இறந்துபோனவன் காயக்குறியினால் போய்விட்டானென்றாவது தெரியவந்தாலும் அந்த பிரேதத்தை சமீபத்திலிருக்கும் வயித்திய உத்தியோகஸ்தரிடத்தில் உடனே காலதாமசமில்லாமல் அனுப்பவேண்டியது; அப்படி அந்த பிரேதத்தை அந்த இடத்திலேயே நாற்றமெடுத்துப்போகிறவரையில் வைப்பதில் சப்மேஜஸ்திரேட்டுக்கும் இனிஸ்பெக்ட்டருக்கும் எவ்வளவும் உதவி செய்யாமலிருக்கிறதும்தவிர சாட்சியங்களையும் மறைத்துவிடுகிறது; இப்போது சப்ஸ்டேஷனிலிருக்கப்பட்டவர்கள்கூட நன்றாய் படித்துக்கொண்டவர்களாயும் தெளிவுள்ளவர்களாயு மிருப்பதால் அவர்களுக்கு இந்த அதிகாரங்களைக்கொடுப்பதில் என்ன துன்பமிருக்கிறதோ எனக்குத்தெரியவில்லை, ஆனபோதிலும் இவ்விதமான உத்திரவில்லாமல் கூட நம்முடைய உத்தியோகஸ்தர்கள் அவ்விதமாய் ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். ஒரு வாரத்திற்குமுன்பாக இந்த தாலூகாவில் எட்குவாட்டருக்கு ௬௫ மயில்தூரத்தில்நடந்த கொலையின் முதல் ரிபோர்ட்டானது கொலைநடந்த ௬௪ மணிநேரத்துக்குள்ளாக ஞாயற்றுக்கிழமையதினம் காலமே எட்குவாட்டருக்கு கொலையுண்ட பையனுடைய பிரேதத்துடன் வந்தது

ஸ்டேஷனதிகாரியானவன் அந்த இடத்திற்குப்போய் கொலை நடந்ததாக சந்தேகப்பட்டான். இப்போ ஒரு யூரோப்பிய வயித்திய உத்தியோகஸ்தர் செய்தசோதனையினால் அந்தவைய ன் சரியாய் கொலையுண்டவனென்று தெரியவருகிறது இனிஸ் பெக்ட்டராலும் ஸப்மேஜஸ்திரேட்டாராலும் நடத்தப்பட்டிரு ந்தபோதிலும் அப்பேற்கொற்ற தமிஷீர்களால் அனுப்பப்ப டும் பிரேதசோதனையின் தெளிவில்லாத றிபோர்ட்டைவிட இதுரொம்பமேலாக யிருக்கின்றது நாம் வேறேவிதமான உத் திரவுகளைக் கொடுக்காமலிருந்தால் இவ்வித சங்கதிகளை பரிஷ் காரப்படுத்துவதினுடைய முக்கியத்தை தெளிவுள்ள போலீ சு உத்தியோகஸ்தர்கள் தெரிந்துக்கொண்டு தங்களுடைய ஜவா ப்பின்பேரில் சட்டத்தையனுசரித்து நடத்தவேண்டியது.

உ—இதில் என்னவருத்தமிருக்கிறதோ அது இனிஸ்பெக் ட்டர் ஜெனரலவர்களுக்குத் தெரியயில்லை; கிறிமினல் புரோஸி டியூர் க௬௪ வது செக்ஷனில்கண்டிருக்கிற சட்டம் ஒருஸ்டே ஷன் சார்ஜியிலிருக்கப்பட்ட போலீசு உத்தியோகஸ்தனுக்கு பிரேதத்தை அனுப்பும்கடமையை உண்டாக்குகின்றது அந்த இடத்தில் விசாரணைசெய்யவும் றிபோர்ட்டுசெய்யவும் மேலும் பிரேதவிசாரணைசெய்யவும் கிராமத்தலைவன் யிருக்கிறபடியால் சப்மாஜஸ்திரேட்டும், இனிஸ்பெக்ட்டரும், வருகிறவரையில் கா ர்க்கவேண்டிய அவசியமில்லை, ஆனபடியால் மரணமடைந்த சிலநேரத்திற்குள்ளாக பிரேதத்தை அனுப்பிவரவேணுமென் பதை ஒருஏற்பாடாக யெண்ணிக்கொள்ளலாம்.

௩-வது—சப்மேஜஸ்திரேட்டும், இனிஸ்பெக்ட்டரும், இ ந்த கொலையினுடைய காரணங்களை விசாரிக்கப் போனபோ திலும் ஜில்லாஸர்ஜியனுடைய சாட்சியம் அவர்கள் அபிப்பிரா யத்தைவிட ரொம்ப உபயோகமாயிருக்கிறது.

மேற்சொல்லியிருக்கிறது சரியானமார்க்கமா யிருக்கிறப டியினால் இதையனுசரித்து நடக்கவேண்டியது ஜில்லா ஸ்டே ஷனில் சட்டத்தினால் தேவையாயிருக்கும் பரிட்சையானது சீ வில் சர்ஜனால்மாத்திரமே நடத்திவரும் பரிட்சை சீவில்சர்ஜனி ல்லாமலிருக்கிற யிடங்களில் அந்த சர்ட்டிபிகேட்டில் கையொ ப்பம்பண்ணுமாபீசர் அந்தபரிட்சையை நடத்திவர் போலீசா பீசர்கள் பார்க்கவேண்டியது; அப்படிசெய்வதில் அப்படிப்ப

ட்டபரிட்சையில் தான் சம்பந்தப்படக் கூடாது ஆனால் இத ற்கொப்பாய் இன்னம் இதரமான சாட்சியங்களை சொல்லிவ ரலாம்.

---

கஅ௲௲ஙூ நவம்பர்மீ ௲வயின்
கவரன்மெண்டாருடைய -௧௲௲௬- நம்பர் உத்தரவின் படி பின்னால்வருகிற ஒழுங்குகள் மறுபடியும் பிரசுரஞ் செய்யப்படுகிறது.

---

## தோப்புகள் மரங்கள் வைக்கவேண்டியதைக்குறித்த நிபந்தனைகள்.

---

### லோகபிரயோசனமான தோப்புகள்.

க - வது ஜனங்களுடைய பிரயோஜனத்துக்காகவும் சௌக்கியத்துக்காகவும் தோப்பு உண்டுபண்ண இஷ்டமுடையவர்கள் முன்னாடி அந்தந்த இடத்திலிருக்கப்பட்ட ரிவினியூ அதிகார துரைகளுக்குத் தெரியப்படுத்தி உத்திரவு பெற்றுக்கொள்ளவேணும், அப்படிச் செய்யாதவர்களுடைய தோப்புக்கு சொந்தத்தோப்பைப்போலவே தீர்வை போடப்படும்- மேற்சொல்லியபடி தோப்பு வைக்கவேண்டியத்துக்காக கொடுக்கப்பட்ட அர்ஜிகளுக்கு ரிஜிஸ்தர் வைக்கப்படும்.

உ. முதல்நிபந்தனையிற் சொல்லியிருக்கிற பிரகாரம் முன்னாடி உத்தரவுபெற்றுக்கொண்டு ரோட்டுபக்கத்தில் சத்திரத்துக்குச் சமீபமாயாவது ஜனங்கள் தங்கப்பட்ட மற்ற எவ்விடத்திற்கின் சமீபத்திலாவது எல்லோருடைய சௌக்கியத்துக்கும் அல்லது மற்ற எவ்விதமானகாரியத்துக்கும் கலெக்ட்டர் ஒத்துக்கொள்ளுகிற இடத்தில் பலவிருட்சத் தோப்புகளாவது கட்டடத்துக்கு உதவப்பட்ட மரத்தோப்புகளாவது மற்ற எவ்விதமான மரத்தோப்புகளாவது வைக்கிறவர்கள் தங்களுடைய தொந்தரைக்கும் விரயத்துக்கும் ஈடாக அந்தத்தோப்பில் பலனுண்டாகிறவரையில் நிலத்தை தீர்வையில்லாமல் பயிரிட்டுக் கொள்ளலாம்; அந்த விருட்சங்கள் பலவிருட்சங்களா யிருக்கும்பட்சத்தில் பலன்கொடுக்கும் பருவம்வந்தவுடனே அந்த தோப்புதீர்வை மாப்பானபோது தோப்பென்று கணக்கில் தாக்கல்செய்யப்பட்டு அதிலுண்டாகும் மாகுலை முதல் யோசி

த்தப்பிரகாரம் சத்திர பரிபாலனத்துக்காவது ரோட்டு மராமத்துக்காவது மற்ற எவ்விதமான கிராம பிரயோஜனமான காரியத்திற்காவது உபயோகமாகும்படி தோப்பு வைத்தவன்வசம் விடப்படும்.

௩ - வது. ஜில்லாஅதிகாரஸ்தர்கள் ஒத்துக்கொள்ளுகிறபடி பாட்டைபக்கத்தில் வைக்கப்பட்ட மரங்கள் அல்லது சாலைகளினுடைய மாசூல் வைத்தவர்கள் ஒருவராயிருந்தபோதிலும் கிராம சமுதாயத்தாராயிருந்தபோதிலுந் தீர்வையில்லாமலனுபவிக்கவேண்டியது.

௪ - வது. கரம்புநிலத்தில் தங்கள் சொந்தப்பிரயோஜனத்துக்காக விறகு தோப்புகளுள்பட எவ்விததோப்புகள் வைக்கஇஷ்டமாயிருந்தபோதிலும் அப்படி இஷ்டமுள்ளவர்களுக்கு நிலங்கொடுக்கப்படும்; நிலத்தில் பயிர்செய்தபோதிலும் செய்யாவிட்டாலும் - உ௰ளூ த்துக்கு தீர்வைமாப்புசெய்யப்படும் அதற்குப்பின்பு நிலத்துக்குமாத்திரம் பூராதீர்வை தாக்கல்செய்யப்படும். செய்கால் அதாவது வழக்கமாய் சாகுபடியாகிறநிலத்தில் தோப்புவைத்தால் நிலத்தில் பயிரிட்டபோதிலும் இல்லாவிட்டாலும் மரம்வைத்தது முதற்கொண்டு அந்தநிலத்துக்கு பூராதீர்வை தாக்கல்செய்யப்படும்; அப்படியில்லாமல் சலிசுசெய்யவேண்டியதைக்குறித்து விசேஷகாரணங்களிருந்து கலெக்டர்துரைக்கு இஷ்டமிருந்தால் அவர் அதை தெரிவிக்கலாம்.

௫ - வது. சாகுபடிசெய்யத்தக்க நிலத்தில் இனிமேல் தனிமரங்கள்வைத்தால நிலத்தை பயிரிடுகிறவர்கள் மரங்களின் மாசூலை தீர்வையில்லாமல் அனுபவித்துக்கொள்ள வேண்டியது. நிலத்தை கரம்புபோட்டால்மாத்திரம் மரங்களுக்குத் தீர்வைபோடப்படும்.

௬ - வது. தண்ணியில்லாமலும் மரங்கள்வளருகிறது கஷ்டமாயுமிருக்கப்பட்ட கரும்பூமியைப்போலொத்த இடங்களில் கிணருகட்டவேண்டியதற்காக கலெக்டருடைய விசேஷமான சிபார்சின்பேரில் அந்தந்த பாபத்துக்குத்தக்க உடன்படிக்கையின்பேரில் வாரக்கம் கொடுக்கப்படும்.

௭-வது. மேற்கண்ட நிபந்தனைகளின்பிரகாரம் நிலம்வாங்கிக்கொண்டு தங்களுடைய உடன்படிக்கைபிரகாரம் நடந்துகொள்ளாதவர்கள் தங்கள்கவுலை யிழந்துபோவார்கள்.

* குறிப்பு—மேல்சொன்னநிபந்தனைகள் தென்னை, கமுகு, பனை, பேரீந்துமரங்களுக்கு சம்பந்தப்படாது.

---

### ௧௮௬௮௵ அக்டோபர்௴ ௨௯௳

௨-வது. ரோட்டுசூப்பிரிண்டெண்டானவர் சுட்டிப்பேசுகிற ரூல்களில் இன்னவிதமான சாலைமரங்கள் பயிர்செய்யவேணுமென்கிற விபரமில்லையென்று போர்ட்டாரவர்கள் காணுகிறார்கள். தோப்புகளும் மரங்களும்வைத்து பயிர்செய்வதை ஒழுங்குபடுத்துவதற்காக யேற்பட்டு ஜெனவரி௴ ௧௪௳ கவரன்மெண்டாரால் அங்கீகாரமான நிபந்தனைகளில் "ஜில்லா அதிகாரஸ்தாள் ஒத்துக்கொள்ளுகிறபடி பாட்டைபக்கத்தில் வைக்கப்பட்டமரங்கள் அல்லது சாலைகளினுடைய மாருலை பயிர்செய்தவர்கள் ஒருவராயிருந்தபோதிலும் கிராம சமுதாயத்தாரா யிருந்தபோதிலும் தீர்வையில்லாமல் அனுபவிக்கலா"மென்றுகண்டிருக்கிறது. பின்னும் தென்னமரங்களுக்கு இந்த ரூல்கள் உபயோகப்படாதென்று வியக்த்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் கெட்டன் பெஸ்ட்யென்பவர் தெரியப்படுத்தின சங்கதிகளின்பேரில் பாட்டைப்பக்கத்தில் ஒரேபத்தியாய் ரிவினியூ அல்லது இஞ்சினீர் அதிகாரிகள் ஒத்துக்கொள்ளுகிறபடியே தென்னமரங்கள்வைத்து பயிர்செய்தால் கள்ளிறக்கும்விஷயத்தில் கலால்குத்தகைதாரர்கள்தவிர மற்றவர்களுபயோகத்துக்கு விடுகிறதில்லையென்கிற வழக்கமான உடன்படிக்கையோடு ஷை மரங்களுக்கும் தீர்வை மாப்புசெய்து கொடுக்கவேணுமென்று போர்ட்டார் சிபார்சுசெய்கிறார்கள்.

### கவரன்மெண்டு ஆர்டர்நம்பர் ௧௧௦௫ ரிவினியூ டிபார்ட்டுமெண்டு.

சாலைமரங்களுக்கு தீர்வைமாப்புசெய்வதாய் சென்ற ஜெனவரி௴ ௧௪௳ யேற்படுத்திய விதிகளை சென்ற௴ ௨௪௳

---

* இந்தகுறிப்பின் நிர்ப்பந்தம் ௧௮௯௪௵ செப்டம்பர்௴ ௨௮௳ போர்ட்டு உத்தரவினால் விலக்கப்பட்டது.

௬௮௯ - நம்பர் போர்ட்புரேசிடிங்கில் கடசிபாராவில் போர்ட்டார் பிரஸ்தாபிக்கிற தென்னமரங்களுக்கும் உபயோகப்படுத்தும்படி ஆலோசனைசபையில் மகாகனம்பொருந்திய கவர்னர் அவர்கள் உத்திரவுசெய்கிறார்கள்.

௧௮௫௪ ௵ செப்டம்பர்௴ ௨௮௳

தோப்பு நிபந்தனைகளின் ௭ - வது பாராவோடு சேர்த்திருக்கிற குறிப்பினால் தென்னை கமுகு பனைபேரீந்துமரங்கள் விலக்கப்பட்டிருப்பதினாலே அப்படிப்பட்ட வித்தியாசமினிமேல் கொண்டாடக்கூடாதென்றும் ஷை தோப்பு ரூல்கள் எல்லாவிதமான மரங்களுக்கும் தோப்புகளுக்கும் உபயோகப்படத்தக்கதென்றும் அறிந்துகொள்ள போர்டார்அவர்கள் ஆக்கியாபிக்கிறார்கள்.

---

# ௧௮௫௭ ௵த்து - ௩ - வது ஆக்ட்டு.

---

இந்தியாவின் சட்டநிர்மாண சபையாரால் செய்யப்பட்டு
௧௮௫௭ ௵ ஜனவரி௴ ௩௧௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

---

## ஆடுமாடு முதலானவை அக்கிரமமாய் நுழைவதைக்குறித்துச் செய்யப்பட்ட ஆக்ட்டு.

பீடிகை.

ஆடுமாடு முதலியவைகள் பயிர்களிலும் மற்ற விளைவுகளிலும் நுழைந்து அதுகளை சேதப்படுத்தி அதினாலே குடிகளுக்கு நஷ்டமும் கெடுதியும் உண்டுபண்ணுகிற படியாலும், பாட்டைகளின் ஓரங்களிலும், ஏரிமுதலானவற்றின் கரைகளினுடைய சரிவுகளிலும்போய் சேதப்படுத்துகிறபடியாலும், அப்படிசேதமுண்டாக்குகிற ஆடுமாடுமுதலானதுகளைப் பிடித்து அடைக்கும்படி அதிகாரங் கொடுப்பதும், யாவர்க்கும் பொதுவான இடத்தில் பட்டிடாய்த்திரிகிற

ஆடுமாடுமுதலானதுகளைப் பிடித்து இன்னபடி செய்யவேண்டியதென்று நிபந்தனை ஏற்படுத்துகிறதும் தகுதியாயிருப்பதைப்பற்றி, இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சிலசட்டங்கள் ரத்துசெய்யப்பட்டதென்பது.

௧—வது. பங்காளத்து சட்டபுஸ்தகத்திலே ௧௮௩௦ ௵ ௫-வது சட்டம் - ௪-வது பிரிவும், சென்னபட்டணத்து சட்ட புஸ்தகத்திலே ௧௮௧௬ ௵ ௧௧-வது சட்டம் ௧௨ - வது ௫௨ - வது பிரிவுகளும், பொம்பாய்ச் சட்டபுஸ்தகத்திலே ௧௮௨௭ ௵ - ௰௨ - வது சட்டம் ௧௯ - ௪௫ - ௫௩ - வது பிரிவுகளில் மாஜிஸ்திரேட்டுகளாவது போலீசுசேவகர்களாவது பட்டியாய்த்திரிகிற ஆடுமாடு முதலானதுகளைப்பிடித்து இன்னபடி செய்யவேண்டியதென்று விதித்திருக்கிற அந்தந்த பாகங்களும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

நிலத்தில்சேதமுண்டுபண்ணுகிறஆடுமாடுமுதலியவைகளைப் பிடித்து அடைக்கலாமென்பது.

௨—வது. ஆடுமாடு முதலியவைகள் யாதொருநிலத்தில் பிரவேசித்து, அந்த நிலத்துக்காவது அதிலுண்டாகிற பயிர்முதலிய விளைவுக்காவது சேதமுண்டு பண்ணினால், அதுகளை அந்தநிலத்தில்பயிரிடுகிறவனாவது அதை அனுபவிக்கிறவனாவது பிடித்து, அந்த நிலமிருக்கிறகிராமத்துக்காக ஏற்படுத்தியிருக்கிற பட்டிதொட்டியில் அடைப்பதற்கு ஆலசியஞ்செய்யாமல் கொண்டுபோகலாம், அல்லது பிடித்துக் கொண்டுபோகும்படி செய்யலாம் - அதுகளைப் பிடிக்கிறதற்கு சகாயஞ்செய்யும்படி குடியானவர்கள் அழைத்தால், கிராமத்தலையாரிகளும்போலீசுசேவகர்களும் அப்படியேபோய்சகாயஞ்செய்யவேண்டியது.

இன்ன இடங்களில் பட்டிதொட்டி ஏற்படுத்த வேணுமென்பது.

௩—வது. அந்தந்த தாலூகாவிலிருக்கிற போலீஸ் ட்டாணாக்களினிடத்திலும் அவ்வவ்விடத்து கவரன்மெண்டாருடைய உத்தரவுபெற்றுக்கொண்டு மாஜிஸ் திரேட்டானவர் நிச்சயிக்கிறமற்ற விடங்

களிலும் பட்டிதொட்டி ஏற்படுத்தவேண்டியது. அப்படியேற்படுத்தப்பட்ட தொட்டிகளில் இன்னின்னதொட்டி இன்னின்னகிராமம் அல்லது கிராமங்களைச் சேர்ந்ததென்று மாஜிஸ்திரேட்டானவர் தீர்மானித்து அதைப் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

பட்டி தொட்டிகள் இன்னாருடைய அதிகாரத்துக்குள்ளு ம் விசாரணையிலுமிருக்க வேணுமென்பது.

௪—வது. பட்டிதொட்டிகள் அந்தந்தஜில்லா மாஜிஸ்திரேட்டினுடைய அதிகாரத்துக்குள் இருக்கவேண்டியது. தொட்டிகளைச்சேர்ந்தகாரியங்களை நடத்துவதற்கு ஒவ்வொரு தொட்டிக்கு ஒவ்வொருவனை நேமிக்கவேண்டியது. அவன் அவ்வவ்விடத்து கவரன்மெண்டார்செய்கிற உத்தரவின்படி ரிஜிஸ்தர்வைத்துக் கணக்கனுப்பவேண்டியது. ஆனால், சென்னபட்டணத்தையும் பொம்பாயையுஞ்சேர்ந்த ஜில்லாக்களில் கிராமப்பெரியதனக்காரர்களும்போலீசு பட்டேல்களும் கிராமத்துப் பட்டிதொட்டிகளின் காரியங்களை நடத்தி வரவேண்டியது.

பிடித்துக்கொண்டு வரப்பட்ட ஆடுமாடுமுதலிய வைகளை ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யவேணுமென்பது

௫—வது. ஆடுமாடு முதலியவைகள் பட்டிதொட்டிக்குக்கொண்டுவரப்பட்டால், அந்ததொட்டிக்காரன் அதுகளின் சங்கிலியையும் வகையையும், பிடித்துக் கொண்டுவந்தவனுடையபேரையும் இருப்பிடத்தையும், அதுகளுக்குச்சொந்தக்காரர் இன்னாரென்று தெரிந்தால் அவர்களுடைய பேரையும் இருப்பிடத்தையும் ரிஜிஸ்தரில் தாக்கல் செய்துகொண்டு, பிடித்துக்கொண்டுவந்தவனுக்கு அதற்கு நகலெழுதிக்கொடுக்கவேண்டியது.

தொட்டிக்காரன் அந்தப் பிராணிகளைத் தன்காவலில் வைத்துக்கொண்டு அதுகளுக்குத் தீனிபோடவேணுமென்பது.

அந்தப்பிராணிகளை இதில் பின்னால்சொல்லப்படுகிறவிதமாய்ச் செய்கிறவரையில், தொட்டிக்காரன் தன்காவலில் வைத்துக்கொண்டு அதுகளுக்குத் தீனிபோடவேண்டியது.

௬—வது. மேற்சொல்லியபடி பட்டிதொட்டியில்அடைக்கப்பட்ட ஆடுமாடுமுதலிய வைகளில் ஒவ்வொன்றுக்கு அடியில்கண்டிருககிற திட்டப்படி அபராதம்வசூல்செய்யப்படும். *

அபராதம்.

| | அணா. |
|---|---|
| ஒட்டைஅல்லது எருமைமாட்டுக்கு................ | ௮ |
| குதிரை,தட்டு,ரிஷிப்ம்,எருது, அல்லதுபசுவுக்கு. | ௪ |
| கன்றுகுட்டி அல்லது கழுதைக்கு........................ | ௨ |
| செம்மறிஆடு அல்லது வெள்ளாட்டுக்கு ............. | ௧ |

அடைத்துவைத்த ஆடுமாடு முதலானதுகளில் எதையாவது விட்டுவிடும்படி தகுந்த அதிகாரி உத்திரவுசெய்தாலொழிய,மேஷ அபராதம் வாங்காமல் தொட்டிக்காரன் விடுதலைசெய்யக்கூடாது.

௭—து. சொந்தக்காரன்வந்து அந்த ஆடுமாடு முதலானதுகள் தன்னதென்று சொன்னால், மேற்கண்ட அபராதத்தையும், மாஜிஸ்திரேட்டினால் அப்போதைக்கப்போது நிச்சயிக்கப்படுகிற திட்டப்படிக்கு அதுகளுக்குத் தீனிபோட்ட செலவையும் அவனிடத்தில் தொட்டிக்காரன் வாங்கிக்கொண்டு அதுகளை ஒப்பிக்கவேண்டியது. அதின்பேரில், சொந்தக்காரனானவன் அதுகளை ஒப்பித்துக் கொண்டதற்கு தொட்டிக்காரனிடத்திலிருக்கிற ரிஜிஸ்தர் புஸ்தகத்தில் கையெழுத்து செய்துவிட்டு அதுகளை ஒட்டிக்கொண்டு போகவேண்டியது. அபராதங்களையும் ஆடுமாடு முதலானதுகளுக்குத் தீனிபோட்டசெலவையும் ஜாபிதாவிலெழுதி, அதைப் பட்டிதொட்டியண்டை எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒட்டவேண்டியது.

சொந்தக்காரன்வந்து அந்த ஆடுமாடு முதலானதுகள் தன்னதென்று சொன்னால் இன்னபடி செய்யவேணுமென்பது.

---

* பட்டியாய்த்திரிகிற ஆடுமாடு ஒருவனுடைய நிலத்தையாவது, வரப்பு முதலானவைகளையாவது மிதிபபதனாலே யாதொரு நஷ்டமும் சம்பவிக்கவில்லையென்று மாட்டுக்குடையவன் ருஜுவுபடுத்துகிற பட்சத்தில் அபராதம் வசூல்செய்ய வேண்டுவதில்லை, (௧௮௭௨ ௵ ஆகஸ்ட்டுமீ ௧௩௨ பவு-ம்கா-சர்-உத்தரவு.)

குறிக்கப்பட்டகாலம்வரையில் அந்த ஆடுமாடு முதலானதுகள் பேவாரிசாயிருந்தால், இன்னபடி செய்யவேணுமென்பது.

௮-வது. ஆடுமாடு முதலானதுகள் அடைக்கப்படுகிற தேதிமுதல் எழுநாளைக்குள்ளாக அதுகளைச் சொந்தக்காரன் வந்துகேளாவிட்டால், அந்த சங்கதியைதொட்டிக்காரனானவன் தாரோகா அல்லது தாலூக்காபோலீசு அதிகாரிக்கு அறிக்கைசெய்யவேண்டியது. அந்த அதிகாரி - அடைக்கப்பட்டிருக்கிற ஆடுமாடுமுதலியவைகள் வகைக்கு இத்தனையென்றும் அதுகள் இன்ன இடத்தில்பிடித்து இன்ன இடத்தில் அடைக்கப்பட்டிருக்கிறதென்றும் எழுதி, போலீசுகச்சேரியில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே இஸ்தியார்ஒட்டி அதுகள் பிடிக்கப்பட்ட இடத்துக்குச்சமீபத்திலிருக்கிற கிராமத்திலும் கடைவீதியிலும் தண்டோரா போடுவிக்கவேண்டியது - அப்படி இஸ்தியார் ஒட்டினதேதிமுதல் எழுநாளைக்குள்ளாக சொந்தக்காரன்வந்து கேளாவிட்டால், அந்த ஆடுமாடுமுதலானதுகளை தாரோகா அல்லது தாலூகா போலீசு அதிகாரியாவது அவருடைய கச்சேரியிலிருந்து நேமித்து அனுப்பப்படுகிற வேறேயாதொரு உத்தியோகஸ்தனாவது ஏலத்தில் விற்றுப்போடவேண்டியது.

சொந்தக்காரன் வந்தும், அபராதத்தையும் செலவையும் கொடாவிட்டாலும்கொடுக்கமாட்டேனென்று சொன்னாலும், இன்னபடி செய்யவேணுமென்பது.

௯-வது. சொந்தக்காரன்வந்தும், அபராதத்தையும் செலவையும் கொடாவிட்டாலும், கொடுக்கமாட்டேனென்று சொன்னாலும், அதுகளைவசூல்செய்வதற்கு அந்தக் கால்நடைகளிலெல்லாவற்றையுமாவது எத்தனை விற்கவேண்டியதோ அத்தனையையாவது மேற்படி தாரோகாவாகிலும் வேறே உத்தியோகஸ்தனாகிலும் ஏலத்தில்விற்று எடுத்துக்கொண்டு கால்நடைகளிலும் விற்றபணத்திலும் மிகுதியேதாவதிருந்தால் அதுகளைச் சொந்தக்காரனிடத்தில் ஒப்பித்து, பிடிக்கப்பட்ட கால்நடைகள் இத்தனையென்றும், இத்தனைநாள் அதுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததென்றும், அபராதமும் செலவும் இவ்வளவென்றும், விற்றகால்நடைகள் இத்தனையென்றும், விற்றபணம் இவ்வளவென்றும், அந்தப்பணம் இன்னவழியாச்சுதென்றும் கணக்கெழுதி அவனுக்குக் கொடுக்கவேண்டியது. அந்தச்சொந்தக்காரன்-மேற்படிகண

க்குப்படிக்குக் கால்நடைகளிலும் விற்றபணத்திலும் மிகுதி யேதாவதிருந்து தன்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டால் அதற்கு ரசீது எழுதிக்கொடுக்கவேண்டியது- ஆனால், கால்நடைகளைப் பிடித்து அடைத்தது அக்கிரமமென்று இந்த ஆக்ட்டு - ௰௪ - வது பிரிவின்படி பிரியாது செய்யப்பட்டால், தீர்ப்பாகிறவரையில் அதுகளை விற்கவுங்கூடாது, அந்த தீர்ப்பின்படிக்கல்லாமல் வேறேவிதமாய்ச் செய்யவுங்கூடாது.

விலக்கு.

போலீசு உத்தியோகஸ்தர்களும், தொட்டிக்காரர்களும், ஆடுமாடு முதலானதுகளை இந்தஆக்ட்டின்படிபோடப்பட்ட ஏலத்தில் வாங்கக்கூடாதென்பது.

௰—வது. போலீசு உத்தியோகஸ்தர்களும் தொட்டிக்காரர்களும்ஆடுமாடுமுதலானதுகளை இந்த ஆக்ட்டின்படி போடப்பட்ட ஏலத்தில் நேராயாவது வேறொருவனைக் கொண்டாவது வாங்கக்கூடாது.

விற்ற பணத்தையும் வசூலான அபராதங்களையும்செலவுபணத்தையும் இன்னபடி செய்யவேணுமென்பது.

௰௧—வது. இந்த ஆக்ட்டின்படி ஆடுமாடு முதலியவைகளை விற்றபணத்திலே, அபராதங்களையும் தீனிபோட்ட செலவையும், ஏலம்போடுவதற்கு செலவு ஏதாவது பிடித்தால் அதையும் எடுத்துக் கொள்ளவேண்டியது. இவ்விதமாய் வசூலான அபராதப்பணத்தையும், எ - வது பிரிவின்படிதொட்டிக்காரர்கள் வாங்கின அபராதப்பணத்தையும், தாரோகா அல்லது தாலூகாபோலீசு அதிகாரியானவர் மாஜிஸ்திரேட்டினிடத்துக்கு அனுப்பவேண்டியது - மேற்சொல்லியபடி கால்நடைகளை ஏலத்தில்விற்று வசூலான தீனிச்செலவுபணத்தை தொட்டிக்காரர்களிடத்தில் கொடுக்கவேண்டியது - அவர்கள் அந்தப் பணத்தையும், எ - வது பிரிவின்படி அப்படிப்பட்ட செலவுக்காகத் தாங்கள் வாங்கினபணத்தையும் தாங்கள்போட்ட செலவுக்காக எடுத்துக்கொள்ளவேண்டியது - பேவாரிசான கால்நடைகளை விற்றபணத்திலே அபராதமும் செலவும்போக மிகுதியைமாஜிஸ்திரேட்டினிடத்துக்கு அனுப்பவேண்டியது- அவர் அதை மூன்றுமாசம்வரைக்கும் அமானத்தில் வைத்திருந்து, அந்த கெடுவுக்குள்ளாக யாராகிலும் வந்து தாவாசெய்து அந்தப்பணம் தங்களுக்குச் சேரவேணுமென்று ருசுவுகொடுக்கா

விட்டால், அந்தக்கெடுவானவுடனே அந்தப்பணத்தை இதில் பின்னால் சொல்லப்படுகிறவிதமாய்ச் செய்யவேண்டியது.

அபராதங்களையும், கால்நடைகளை ஏலத்தில் விற்றுவந்து பேவாரிசாயிருக்கிறபணத்தையும், தொட்டிக்காரர்களுக்குச் சம்பளம் முதலான செலவுகளுக்குப் பண்டாகச் சேர்க்கவேணுமென்பது.

௰௨—வசூலான அபராதப் பணத்தையும், பேவாரிசான கால்நடைகளை விற்றுவந்து பேவாரிசாயிருக்கிற பணத்தையும் ஒருபண்டாகச் சேர்த்து, அந்தப்பணத்தை அவ்வவ்விடத்து கவரன்மெண்டாருடைய உத்தரவின்படி தொட்டிக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்துக்காவது, பட்டி தொட்டிகள்கட்டி அதுகளைச் சீர்ப்படுத்திவருவதற்குப் பிடிக்கிற செலவுக்காவது, இந்த ஆக்ட்டின்படி செய்யவேண்டிய வேறே யாதொரு விஷயத்துக்காவது உபயோகப்படுத்த வேண்டியது.

ஆடுமாடு முதலானதுகளை பிடிக்கபோகையில் எவனாவது கூடாதென்றுபலவத்காரமாய்த் தடுத்தாலும், அதுகளை விடுதலைசெய்து விட்டாலும் தெண்டனைகிடைக்குமென்பது.

௰௩—வது. நிலத்துக்காவது நிலத்திலுண்டாகிற பயிர்முதலிய விளைவுக்காவது சேதமுண்டு பண்ணுகிற ஆடுமாடு முதலானதுகளைப் பிடிக்கப்போகையில்-கூடாதென்று எவனாவது பலவத்காரமாய்த்தடுத்தாலும், அதுகளைப்பிடித்து அடைக்கும்படி தொட்டிக்குக் கொண்டுபோகையிலாவது அடைத்தபின்பு தொட்டியிலிருந்தாவது பலவத்காரமாய் அதுகளை விடுதலைசெய்துவிட்டாலும், அதற்காக அவன் - ஆறுமாசத்திற் கதிகப்படாமல் மண்ணுக்குப்போட்டாவது போடாமலாவது காவலில் வைக்கப்படுவான், அல்லது - ௫௱ - ரூபாய்வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டு தெண்டனையும் செய்யப்படுவான்.

சொந்தக்காரனவன் தன்னுடைய ஆடுமாடுமுதலானதுகள் பிடித்துக்கொள்ளப்

௰௪—வது. ஆடுமாடு முதலானதுகள் நிலத்துக்காவது அதிலுண்டாகிற பயிர்முதலிய விளைவுக்காவது சேதமுண்டு பண்ணினதாகப் பிடித்து அடைக்கப்பட்டா

பட்ட தேதிமுதல் பத்துநாளைக்குள்ளாக மாஜிஸ் திரேட் டுமுன்பாக பிரியாது செய்யலாமென்பது.

ல், அதைக்குறித்து - அதுகளுக்குச் சொந்தக்காரனானவன் - அப்படி அடைக்கப்பட்ட தேதிமுதல் பத்துநாளைக்குள்ளாக, மாஜிஸ் திரேட்டு, ஜாயண்டு மாஜிஸ்திரேட்டு, டிபிட்டி மாஜிஸ்திரேட்டு, ஆசிஸ்டாண்டு மாஜிஸ்திரேட்டு இவர்களில் யாரிடத்திலாவது கிரிமினல் அதிகாரமுடையவராய் - விசாரணைக்கு மாஜிஸ்திரேட்டினால் அனுப்பப்படாமலே பிராதுகளைப்பிடித்துவிசாரணைசெய்ய அதிகாரம்பெற்ற வேறே யாதொரு அதிகாரியினிடத்திலாவது பிரியாதுசெய்துகொள்ளலாம். பிரியாதியானவன் - அப்படிப்பட்ட பிரியாதை தானே நேராகவாவது அந்தசங்கதிகளை ருசுவில் தெரிந்துகொண்டிருக்கிற தன் குமஸ்தா மூலமாயாவது வாய்மொழியாகவாகிலும் செய்துகொள்ளலாம், வெற்றுக்கடிதாசியில் எழுதியாகிலும் கொடுக்கலாம். வாய்மொழியாகச்செய்துகொள்ளப்பட்டால், அந்தபிரியாதின் முக்கியசங்கதிகளை மேற்சொல்லிய மாஜிஸ்திரேட்டாவது வேறே அதிகாரியாவது எழுதிக்கொள்ளவேண்டியது - மேற்சொல்லிய மாஜிஸ்திரேட்டாவது வேறே அதிகாரியாவது பிரியாதியையாகிலும் அவனுடைய குமஸ்தாவையாகிலும் விசாரணைசெய்தவின்பேரில் அந்தப்பிரியாதுக்குத் தகுந்த ஆதாரமிருக்குதென்று தனக்குத்தோற்றுகிறபட்சத்தில், பிரதிவாதியைச் சம்மனனுப்பி வரவழைத்துச் சுருக்கவிசாரணைசெய்து, கால்நடைகளைப்பிடித்தது அக்கிரமமென்று தீர்மானித்தால், அப்படி அக்கிரமமாய்ப்பிடித்தது அடைத்து வைத்ததினாலே நேரிட்ட நஷ்டம் அல்லது கெடுதிக்கு - எந்தசங்கதியிலும் நூறுரூபாய்க்கு அதிகப்படாமல் எவ்வளவு யுக்தமாகத்தோற்றுகிறதோ அந்தத்தொகையையும் தன்னுடைய கால்நடைகளைவிடுதலைசெய்துகொள்வதற்கு பிரியாதிக்கு எவ்வளவு செலவுபிடித்ததோ அதையும் அவனுக்குப் பிரதிவாதிகொடுக்கும்படி தீர்ப்

விவகாரநடவடிக்கை.

கால்நடைகளைப்பிடித்தது அக்கிரமமாயிருக்கிற பட்சத்தில், நஷ்டத்துக்குத் தீர்ப்பு கொடுக்கவேணுமென்பது.

புச்செய்யவேண்டியது. அந்த கால்நடைகள் விடுதலையாகாம லிருந்தால், மேற்படி மாஜிஸ்திரேட்டு அல்லது அதிகாரி நஷ்டத்துக்குத் தீர்ப்பு செய்ததுமல்லாமல் அதுகளை விடுதலைசெய்யும்படி உத்தரவுபிறப்பித்து, இந்தஆக்ட்டின்படி வசூல்செய்யவேண்டிய அபராதத்தையும் செலவுபணத்தையும் அந்த கால்நடைகளைப் பிடித்தவன் செலுத்தும்படியாகஉத்தரவுசெய்யவேண்டியது. கிரிமினல் அதிகாரமில்லாதவர்களாய், வியாச்சியங்களை மூலவிசாரணைசெய்கிற முனிசீபுகளும்* மற்ற நியாயாதிபதிகளும், இந்தப்பிரிவின்பிரகாரம் பிரியாதுகளைப் பிடித்து விசாரணைசெய்யும்படி அவர்களுக்கு அவ்வவ்விடத்து கவரன்மெண்டார் விசேஷ அதிகாரங்கொடுக்கலாம்; அவர்கள் அந்த அதிகாரத்தைச் செலுத்துகையில் - மாஜிஸ்திரேட்டுக்குக் கீழ்ப்பட்ட அசிஸ்டாண்டு முதலான அதிகாரிகள் எந்த நிபந்தனைப்படிக்கு நடந்துகொள்ளுகிறார்களோ அந்தநிபந்தனைக்கு உட்பட்டு நடந்துகொள்ளவேண்டியது.

முனிசீபுமுதலானவர்களுக்கு இந்தப்பிரிவின்படி தீர்ப்புசெய்ய அதிகாரங்கொடுக்கலாமென்பது.

௰௫—வது. பாட்டைகளின் ஓரங்களையும் கால்வாய் ஏரி முதலானதுகளினுடைய கரையின் சரிவுகளையும் சேதப்படுத்துகிற ஆடுமாடுமுதலானதுகளை - அந்தபாட்டை முதலானவைகளைப் பத்திரமாய்ப்பார்க்கிறவர்கள் பிடிக்கலாம் அல்லது பிடிப்பிக்கலாம் - அப்படி பிடிக்கப்பட்ட ஆடுமாடுமுதலானவைகளுக்கும் இந்த ஆக்டில் முன்னேசொல்லியிருக்கிற எல்லாநிபந்தனைகளும் உபயோகப்படும்.

பாட்டை ஏரிகரைமுதலானவைகளைச் சேதப்படுத்துகிற ஆடுமாடுமுதலியவைகளை அடைப்பதைக்குறித்து.

௧௬—வது. யாதொருபாட்டை அல்லது யாவர்க்கும்பொதுவான இடத்திலே பட்டியாய்த்திரிகிற ஆடுமாடு முதலானவைகளை - சொந்தக்காரர் இன்னாரென்று தெ

பட்டியாய்த்திரிகிற ஆடுமாடு முதலானவைகளை சொந்தக்காரர் இன்னாரென்றுதெரி

* ௧௮௫௮ வரு ஆகஸ்டு௴ ௧0௳யில் கவரன்மெண்டார் - தாலூகா முனிசிப்புகளுக்கும் இப்படிப்பட்ட பிரியாதைப்பிடிக்க அதிகாரங்கொடுத்திருக்கிறார்கள்.

யாத பட்சத்தில், பிடித்து அடைக்கவேணுமென்பது.

ரியாத பட்சத்தில், பிடித்துக்கொண்டுபோய், இந்த ஆக்ட்டு மூன்றாவது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட பட்டிதொட்டிகளில் அடைக்கவேண்டியது-மேலும் நிலம் முதலானதுகளில் பிரவேசித்து சேதமுண்டு பண்ணுகிற ஆடுமாடு முதலானதுகளைப் பிடித்தடைப்பதைக்குறித்தும், விடுதலைசெய்வதைக்குறித்தும், ஏலத்தில் விற்பதைக்குறித்தும், இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற எல்லா நிபந்தனைகளும் மேற்சொல்லியபடி அடைக்கப்பட்ட ஆடுமாடு முதலானவைகளுக்கும் உபயோகப்படவேண்டியது.

நிலத்திலே ஆடுமாடு முதலானதுகளை ஓட்டி சேதப்படுத்தினால், தெண்டம் விதிக்கப்படுமென்பது.

௧௭—வது. யாதொரு நிலத்திலே ஆடுமாடு முதலானதுகளை எவனாவது ஓட்டி சேதமுண்டு பண்ணினால், இந்த ஆக்ட்டு இரண்டாவது பிரிவின்படி அதுகளைப்பிடிப்பதற்கு அதிகாரம்பெற்ற எவனாவது, அந்த நிலத்தை சாகுபடி செய்து அதிலுண்டாகிற விளைவைத் தனக்குக் கொடுக்கும்படி முன்பணங் கொடுத்திருக்கிறவனாவது பிரியாது செய்துகொண்டதின்பேரில், அந்த குற்றத்துக்காக விதித்திருக்கிற அபராதத்தைக்கொடுக்கும்படி தீர்ப்புசெய்யலாம். அது செலுத்தப்படாவிட்டால், அந்த ஆடுமாடுமுதலானதுகள் நிலத்தில் பிரவேசிக்கையில் பிடிக்கப்பட்டாலும் பிடிக்கப்படாவிட்டாலும், அதுகள் - குற்றஞ்செய்தவனென்று தீர்மானிக்கப்பட்டவனுடைய சொந்தமானாலும், அப்படி பிரவேசித்தபோது அவனுடைய வசத்திலிருந்ததுகளானாலும், அதுகள் எல்லாவற்றையுமாவது சிலவற்றையாவது ஏலத்தில் விற்று வசூல்செய்யலாம்.

நிலத்துக்காவது பயிருக்காவது பன்றிகளினால் உண்டுபண்ணப்பட்ட சேதத்திற்கு அபராதம் விதிக்கப்படுமென்பது.

௰௮—வது. பன்றிகளுக்குச் சொந்தக்காரனாவது அதுகளை மேய்க்கிறவனாவது யாதொரு நிலத்திலாகிலும் பயிர்முதலிய விளைவிலாகிலும் அஜாக்கிரதை முதலியவற்றால் பன்றிகளைப் போகவிட்டு அதினாலே அந்தநிலம் முதலானதுகளுக்குச் சேதமுண்டு பண்ணினாலும், உண்டுபண்ணிவித்தாலும், அதற்காக அவனுக்கு பத்துரூ

பாய்வரையில் அபராதம்போடப்படும். இந்தப் பிரிவின்படிக்கும், இதற்குமுந்திய பிரிவின்படிக்கும் வசூல்செய்யப்பட்ட எல்லாபணத்தையும் முழுமையுமாவது அதில் எவ்வளவாவது- மாஜிஸ்திரேட்டுக்கு திருப்தியாகும்படி ருசுவான நஷ்டத்துக்கு ஈடாகப் பிரியாதிக்குக் கொடுப்பிக்கலாம்.

அபராதத்தை இன்னபடி செய்யலாமென்பது.

௨௫—வது. நிலத்திலே ஆடுமாடு முதலியவை பிரவேசித்து அதிலிருக்கிற பயிர்முதலிய விளைவைச் சேதப்படுத்தினால், அந்தப்பயிருக்குச்சொந்தக்காரன் அந்த நஷ்டத்தை வசூல் செய்வதற்கு யாதொரு தகுந்த கோர்ட்டிலே வியாச்சியம் கொண்டுவரலாம். அப்படி வியாச்சியம் கொண்டுவரக்கூடாதென்று அர்த்தமாகிறதாக இந்த ஆக்ட்டில் எந்தபாகத்தையும் எண்ணக்கூடாது - ஆனால், மேற்படி வியாச்சியக்காரனுக்கு மாஜிஸ்திரேட்டினுடைய உத்தரவின்படி நஷ்டத்துக்கு ஈடாக முன்னதாய் எவ்வளவாவது பணம்கொடுத்திருந்தால் அதை அந்த வியாச்சியத்திலே நஷ்டத்துக்காக அவன் எவ்வளவு தொகைக்கு தாவா செய்கிறானே அல்லது எவ்வளவுக்கு தீர்ப்புசெய்யப்படுகிறதோ அதில் கழித்துப்போட வேண்டியது.

பயிர்முதலியவிளைவில்சேதமடைந்தவர்கள் அதற்காகத் தகுந்தகோர்ட்டில் வியாச்சியம் கொண்டுவரலாமென்பது.

விலக்கு.

௨௬—வது. யாதொருஜில்லா அல்லது தக்குடிக்கு இந்த ஆக்ட்டு உதவாதென்று தோற்றினால், அவ்வவ்விடத்து கவரன்மெண்டார் ஆலோசனைச் சபையில் கவர்னர் ஜெனரல் அவர்களுடைய அனுமதிபெற்றுக்கொண்டு, அந்த ஜில்லா அல்லது தக்குடியில் இந்த ஆக்ட்டு வழங்கக்கூடாதென்று நிச்சயித்து பிரசித்தஞ்செய்யலாம்.

அவ்வவ்விடத்து கவரன்மெண்டார் ஆலோசனைச் சபையில் கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதிபெற்றுக்கொண்டு, யாதொருஜில்லா அல்லது தக்குடியில் இந்த ஆக்ட்டை வழங்கவொட்டாமற் செய்யலாமென்பது.

உக—வது. இந்த ஆக்ட்டுக்கு அர்த்தஞ்செய்கையில், ஒருமையைப் பன்மையாகவுங்கொள்ள வேண்டியது, பன்மையை ஒருமையாகவுங் கொள்ளவேண்டியது. ஆண்பாலைப் பெண்பாலாகவும் கொள்ளவேண்டியது - மாஜிஸ்திரேட்டென்னும் வார்த்தையானது - ஜாய்ண்டு மாஜிஸ்திரேட்டு அல்லது சட்டப்படி மாஜிஸ்திரேட்டினுடைய அதிகாரத்தைச் செலுத்துகிறவனொன்றும் அர்த்தமாகவேண்டியது - தாரோகா அல்லது தாலூகா போலீசு அதிகாரியென்பது - பங்காளத்தைச்சேர்ந்த வடமேற்கு ஜில்லாக்களிலே போலீசு அதிகாரத்தைச் செலுத்துகிற தாசீல்தார் அல்லது நாயபுதாசீல்தாரொன்றும் அர்த்தமாகவேண்டியது.

அர்த்தம்.

---

# கஅகூக௵த்து-உஉ-வது ஆக்ட்டு.

---

இந்தியாவின் சட்டநிர்மாணசபையாரால் செய்யப்பட்டு,
(கஅகூக௵-ஆகஷ்டுமீ உ0உ கவர்னர் ஜனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டது)

---

ஆடுமாடுமுதலானவை அக்கிரமமாய் நுழைவதைக் குறித்துச்செய்யப்பட்ட
கஅ௫ள௵த்து-ரு- வது ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்டு.

ஆடுமாடுமுதலானவை அக்கிரமமாய் நுழைவதைக் குறித்துச் செய்யப்பட்ட கஅ௫ள௵த்திய ரு - வது ஆக்ட்டைத்திருத்துவது தகுதியாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:-

க. யாவனொருவனுக்கு அக்கிரமமான நஷ்டம் அல்லதுசேதமுண்டு பண்ணவேணுமென்கிற எண்ணத்தோடாவது, இன்னதுசெய்தால் அதினாலே அப்படி உண்டுபண்ணலாமென்று தெரிந்தாவது, எவனுகிலும் யாதொரு நிலத்திலாவது நிலத்திலிடப்பட்டிருக்கிற பயிரிலாவது ஆடுமாடுமுதலானவைகளை அக்கிரம

மாய் நுழையும்படிசெய்தால், அவன் மாஜிஸ் திரேட்டினுலே மூன்றுமாசத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது மண்ணுக்குப்போட்டாகிலும் போடாமலாகிலும் காவலில்வைக்கப்படுவான், அல்லது இருநூறு ரூபாய்வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டு தெண்டனைக்கும் உட்படுவான்.

௨. எவனுவது மேற்படிபிரிவில் சொல்லியிருக்கிற குற்றத்தைச்செய்து, அதினுலே ஐம்பது ரூபாய்முதல் அதற்குமேற்பட்ட தொகைபெறுமான நஷ்டத்தை உண்டுபண்ணினுல், அவன் மாஜிஸ்திரேட்டினுலே இரண்டுவருஷத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவுகாலத்திற்காவது மண்ணுக்குப்போட்டாகிலும்போடாமலாகிலும் காவலில்வைக்கப்படுவான், அல்லது இருநூறு ரூபாய்வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டுதெண்டனைக்கும் உட்படுவான்.

௩. மேற்படி பிரிவுகளில் பிரயோகித்திருக்கிற மாஜிஸ்திரேட்டு என்னும் வார்த்தையானது - அப்போதைக்கப்போது வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி யாதொரு குற்றவாளியை ஆறுமாசத்திற்குக் காவலில்வைப்பதற்கும் இருநூறுரூபாய் அபராதம் போடுவதற்கும் அதிகாரமுடைய யாதொரு அதிகாரி என்றும் அர்த்தமாகும்.

௪. இந்த ஆக்ட்டின்படி யாதொரு குற்றஞ்செய்தவனென்று தீர்மானிக்கட்பட்டதின்பேரில் அபராதம் போடப்பட்டால், அந்த அபராதம் முழுமையையுமாவது அதில் எவ்வளவையாவது அந்த குற்றத்தினுலே எவ்வளவு நஷ்டமுண்டானதாகத்தோற்றுகிறதோ அதற்கு அதிகப்படாமல் அந்தநஷ்டமடைந்தவனுக்குச் செலுத்தும்படி மாஜிஸ்திரேட்டானவர் உத்தரவுசெய்யலாம்; அப்படி உத்தரவு செய்யப்படுகிற விஷயத்தில், அபராதம் வசூல்செய்யப்பட்ட பின்பாவது வரப்பற்றிக்கொள்ளப்பட்ட பின்பாவது அந்தப்படியே செலுத்தவேண்டியது. இன்னுனுக்குச் செலுத்தவேண்டியதென்று இந்தப் பிரிவின்படி உத்தரவுசெய்யப்படுகிற தொகையை அந்த உத்தரவின்தேதிமுதல் முப்பதுநாளைக்குள்ளாக அவனுக்குச் செலுத்தக்கூடாது. ஆனுல், அந்தகெடுவிற்குள்ளாக அப்பீல்கோர்ட்டார் அந்த உத்தரவை ஊர்ஜிதப்படுத்துவார்களாகில் உடனே செலுத்தி விடலாம்.

௫. கிரிமினல் விசாரணைகளிலே மேற்சொல்லிய மாஜிஸ்திரேட்டினாலாவது மற்ற அதிகாரியினாலாவது விதிக்கப்பட்ட சிட்சைகள் அல்லது உத்தரவுகள் அப்போதைக்கப்போது வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி அப்பீலுக்குட்பட் டிருப்பது போலவே, இந்த ஆக்ட்டின்படி விசாரிக்கப்பட்ட யாதொரு பிரியாதில் விதிக்கப்படுகிற யாதொரு சிட்சை அல்லது உத்தரவு அப்பீலுக்கு உட்பட்டிருக்கவேண்டியது.

௬. ஆடுமாடுமுதலியவைகள் யாதொருநிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசித்தாலும், அந்த நிலத்துக்காவது அதிலுண்டாகிற பயிர்முதலிய விளைவுக்காவது சேதமுண்டு பண்ணினாலும் அதுகளைப்பிடிப்பதற்காவது பிடிப்பிப்பதற்காவது மேற்சொல்லிய ௧௮௫௭ ௵த்து-௩-வது ஆக்ட்டு ௨-வதுபிரிவினால் கொடுக்கப்படுகிற அதிகாரத்தை - அந்த நிலத்தில் பயிர் முதலியவை சாகுபடிசெய்வதற்குமுன் பணங்கொடுத்திருக்கிறவனாவது அந்த பயிர் முதலானதுகளை எவன் கிரயத்துக்குக்கொண்டாகிலும் கொதுவைவைத்துக்கொண்டாகிலு மிருக்கிறானோ அவனாவது மேற்படி ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக் குட்பட்டுச் செலுத்தலாம்.

---

# ௧௮௫௮ ௵த்து - ௧-வது ஆக்ட்டு.

---

இந்தியாவின் சட்டநிர்மாண சபையாரால் செய்யப்பட்டு,
(௧௮௫௮ ௵ ஜனவரி ௴ ௨௰௨ கவர்னர்ஜனரலவர்களால் அங்கிகரிக்கப்பட்டது)

---

சென்னபட்டணத்தைச் சேர்ந்த ராச்சியத்திலே வெள்ளத்தினால் கெடுதிநேரிடவொட்டாமற் செய்யும்பொருட்டு ஆள்களிடத்தில் கட்டாயம்பண்ணி வேலைவாங்கலாமென்பதற்காகவும், நீர்ப்பாய்ச்சுவதைச்சேர்ந்த சில வழக்கமானவேலைகளை செய்விப்பதற்காகவும் உண்டாகிய ஆக்ட்டு.

---

ஏரி - ஆறு - கால்வாய்களின் கரைகளும் அணைக்கட்டுமுதலானதுகளும் உடைந்து வெள்ளம்வந்து, ஜனங்களுக்கும் சொத்துக்கும் சேதமுண்டாவதினாலே, அப்படி நேரிடவொட்

டாமல் கரைகளை பந்தோபஸ்து செய்வதற்காவது, உடனே அதுகளை மராமத்து செய்வதற்காவது ஆள்களெல்லாரும் வேண்டியபோது வந்து தேசக்ஷேமத்திற்காக வேலைசெய்யவேண்டியது அகத்தியமானபடியினாலும், தண்ணீர் பாய்கிறதற்காகவும் வடிகிறதற்காகவும் செய்யவேண்டிய சிலவேலைகளை ஊர் வழக்கப்படி கிராமத்திலுள்ளவர்களைக்கொண்டு செய்விப்பதற்காக நிபந்தனை எற்படுத்துவதுதகுதியாயிருக்கிறபடியினாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

௧—வது. யாதொரு ஏரி - ஆறு - கால்வாய்களின் கரையாவது, அணைக்கட்டு முதலானதுகளாவது உடைத்துக்கொண்டு வெள்ளம்வந்துகெட்ட அபாயம் நேரிடும்போ லிருக்குமாகில், தட்சணமே ஆள்களைச்சேர்த்து அந்த கரைமுதலானதுகளை பந்தோபஸ்துசெய்தால் அபாயம் நேரிடாதென்று அந்த ஏரி முதலானதுகளின் விசாரணை அதிகாரிக்குத் தோற்றுகிறபட்சத்திலும்; அந்தக்கரை முதலானதுகள் உடைத்துக்கொண்டால், அதுகளைத் தட்சணமே ஆள்களைச்சேர்த்து மராமத்துசெய்வித்து வெள்ளத்தை நிறுத்திப்போடலாமென்று தோற்றுகிற பட்சத்திலும், அந்த அதிகாரியானவர் - மேற்சொல்லிய அவசியமான வேலைகளைச் செய்வதற்காக அந்த கிராமத்திலுள்ள ஆண் மக்களாகிய திடமான ஆள்களெல்லாரையுமாத்திரம் சேர்க்கும் படியாவது, சுற்றுப்பக்கத்து கிராமங்களிலுள்ள அப்படிப்பட்ட ஆள்களையும் சேர்க்கும்படியாவது, அந்தந்த கிராமபெரியதனக்காரருக்கு உத்தரவுசெய்யலாம்; அந்த அதிகாரியானவர் அவ்விடத்தி லில்லாவிட்டால், அவருக்குபதிலாக அந்த தாலூகா தாசில்தாரரானவர் அப்படி ஆள்களைச் சேர்க்கும்படி உத்தரவுசெய்யலாம்; அவரும் அவ்விடத்தி லில்லாதிருந்து, மிகவும் அவசரமான தருணமாயும் ஆபத்தாயுமிருக்கிறபட்சத்தில், எவ்விடத்திலே கரைமுதலானவை உடைந்துபோவது போலாவது உடைந்துபோயாவது இருக்கிறதோ அந்த கிராமத்துப் பெரியதனக்காரரானவர் - தன்புத்தியாய், மேற்சொல்லியபடி தன் கிராமத்திலுள்ள ஆள்களைச் சேர்க்கலாம், அவசியமானால், சுற்றுப்பக்கத்து கிராமங்களிலுள்ள ஆள்களையும் அந்தந்த கிராமப்பெரியதனக்காரர்களைச் சேர்க்கச்சொல்லலாம்.

௨—வது. மேற்சொல்லியபடி வேலைசெய்ய கிராமப்பெரியதனக்காரன் தன்கிராமத்து ஆள்களைக் கிரமமாய் அழைப்பி

க்கையில், அவர்களில் எவனாவது தகுந்த முகாந்திர மில்லாமல் வரமாட்டேனென்றுசொன்னாலும், வராமற்போனாலும், அப்படிப்பட்டவன்-மாஜிஸ்திரேட்டினாலாவது மாஜிஸ்திரேட்டுக்குண்டான சாதாரண அதிகாரத்தைச் செலுத்துகிற அதிகாரியினாலாவது குற்றவாளியென்று தீர்மானிக்கப் பட்டதின்பேரில், நூறு ரூபாய்வரையில் அபராதமாவது போடப்படுவான், ஒருமாசவரையில் காவலிலாவது வைக்கப்படுவான்; அல்லது இரண்டுதெண்டனையுஞ் செய்யப்படுவான்.

௩—வது. மேற்சொல்லியபடி அழைப்பிக்கப்பட்டு அவ்விதமாய் வேலைசெய்கிற ஆள்களில் ஒவ்வொருவனுக்கு - அக்கம்பக்கத்தில் அப்படிப்பட்ட வேலைக்கு எவ்வளவுஉயர்ந்த கூலிகொடுக்கப்படுகிறதோ அந்த விழுக்காடு பகற்காலத்தில் செய்கிற வேலைக்கும், அப்படிப்பட்ட வேலை ராக்காலத்தில் செய்யவேண்டியிருந்து செய்தால், அதற்கு இரட்டிப்பாகவுங் கூலி கொடுக்கப்படும்.

௪—வது. சர்க்கார் கஜானாவிலிருந்து ஆள்களுக்குக் கூலி கொடுக்கப்படும்; ஒருவனுடைய சொந்தவேலையாயிருந்து, அந்தவேலையை (அவசரத்தைப்பற்றி) ஊராள்களைக்கொண்டு செய்வித்திருந்தால், அதற்காகக் கஜானாவிலிருந்து கொடுக்கப்பட்ட பணமானது - சட்டப்படி சர்க்கார் கிஸ்திபாக்கி வசூல்செய்யப்படுகிறதுபோலவே அவனிடத்தில் வசூல் செய்யப்படும்.

௫—வது. கிராமப் பெரியதனக்காரர்கள் - ஷெ. ஏரிமுதலானதுகளின் விசாரணை அதிகாரியினுடைய உத்தரவின்பேரிலாவது; அவரில்லாதகாலத்தில் தாசீல்தாருடைய உத்தரவின்பேரிலாவது, அவரும் அவ்விடத்தி லில்லாதிருந்து, அவசரமானதருவாயா யிருக்கிறபட்சத்தில், தாங்களேயாவது - ஏரி ஆறு கால்வாய்களின்கரைகள் உடைத்துக்கொள்வதை அடைப்பதற்கு வேண்டியமரம் - ஓலை - மூங்கில் வைக்கல் முதலான சாமான்களை தங்கள் கிராமக்குடிகளை சர்பரா செய்யச் சொல்லலாம்; அப்படிப்பட்ட சாமான்கள் எங்கெங்கே யிருக்கிறதோ அங்கங்கே போய் அதுகளை யெடுத்துக்கொள்ளலாம்; அவசியமானால் வெட்டிக்கொள்ளத்தக்கதுகளை வெட்டிக்கொள்ளலாம்; இவ்விதமாய் சேகரிக்கிற சாமான்களுக்கெல்லாம் ரசீது எழுதிக்கொடுக்கவேண்டியது. அந்த சாமான்களுக்குக் கிரயம் - அக்கம் பக்கத்

தில் விற்கிற உயர்ந்த விலைப்படிக்கு சர்க்கார் கஜானாவிலிருந்து கொடுக்கப்படும். ஷை சாமான்களில் எதையாவது வெட்டிக் கொள்வதினாலே எவனுக்காகிலும் நஷ்டம் நேரிட்டால், அந்த நஷ்டத்துக்குப் பணங்கொடுக்கவேண்டியது - அந்த நஷ்டப்பணம் இவ்வளவென்பதைக்குறித்து விவாதமுண்டானால், அது - ௬ வது பிரிவின்படி செலுத்தவேண்டிய பணத்தைக் குறித்துச் சொல்லியிருப்பதுபோலவே தீர்மானிக்கப்படும், எந்தவேலைக்கு ஷை சாமான்கள் போடப்பட்டதோ அது ஒருவனுடைய சொந்தவேலையாயிருக்குமானால், அந்த சாமான்களுக்காக கஜானாவிலிருந்து கொடுக்கப்பட்ட பணத்தை சர்க்கார் கிஸ்திபாக்கியைப்போலவே அவனிடத்தில் வசூல்செய்யலாகும்.

௬—வது. தண்ணீர்ப்பாய்கிறதற்காகவும் வடிகிறதற்காகவும் செய்யவேண்டிய வேலையையாவது அதைச்சேர்ந்த வேறேயாதொரு வேலையையாவது ஊர்வழக்கப்படி கிராமப்பொதுவில் செய்கையில், ஊரொப்புரவாகவந்து அந்த வேலையைச் செய்யவேண்டிய எவனையாவது - தாசீல்தார் அல்லது வேறேயாதொரு மேலான ரிவினியூ அதிகாரியினுடைய உத்தரவின்படி கிராமப்பெரியதனக்காரன் அந்த வேலைக்கு அழைப்பிக்கும்போது, அவன் தகுந்த முகாந்திரமில்லாமல் வராவிட்டாலும், வரமாட்டேனென்றாலும், அவன் செய்யவேண்டிய வேலைக்கு இரட்டிப்புக்கூலி அவன் கொடுக்கவேண்டியது, அப்படி அவன் செலுத்தவேண்டிய பணம் இவ்வளவென்பதைக் குறித்து விவாதமுண்டானால், அது - ௧௮௧௬ ௵ ௫ - வது ௭ - வது சட்டங்களில் பஞ்சாயத்தாரைக் கூட்டுவதற்குச் சொல்லியிருக்கிற நிபந்தனைகள் பிரகாரம், கலெக்டருடைய உத்தரவின்பேரில், கிராமமுனிசீபினால் கூட்டப்படுகிற கிராமபஞ்சாயத்தாராலாகிலும், தாலூகாமுனிசீபினால் கூட்டப்படுகிற தாலூகா பஞ்சாயத்தாராலாகிலும், சுருக்கவிசாரணைசெய்து தீர்மானிக்கப்படும். கேட்டவுடனே அந்தப் பணத்தை அவன் செலுத்தவேண்டியது; செலுத்தாவிட்டால் சர்க்கார் கிஸ்திபாக்கியைப் போல வசூல்செய்யலாகும். இந்தப்பிரிவின்படி வசூலாகிற பணமெல்லாம் - மேற்சொல்லியபடி வேலை செய்யாதவர்களில் அவரவர்களிருக்கிற அந்தந்த கிராமத்துக்கு உபயோகமாகத் தண்ணீர்பாய்கிறதற்கும் வடிகிறதற்கும் செய்யப்பட்ட வேலைக்கு செலவிடப்படும்.

---

# ௧௮௫௯-௵த்து -௧௪- வது ஆக்ட்டு.

இந்தியாவின் சட்டநிர்மாண சபையாரால் செய்யப்பட்டு,
(௧௮௫௯-மேயீ ௫௳ கவர்னர் ஜனரலவர்களால்
அங்கீகரிக்கப் பட்டது.)

---

## வியாச்சியங்களை இவ்வளவுகாலத்திற்குள்ளாகக்கோர்ட்டுக்குக் கொண்டுவரவேணுமென்பதைக்குறித்து உண்டாகிய காலநிர்ணயச்சட்டம்.

---

வியாச்சியங்களை இவ்வளவுகாலத்திற்குள்ளாகக் கோர்ட்டுக்குக் கொண்டுவரவேணுமென்பதைக்குறித்த காலநிர்ணய சட்டங்களைத்திருத்தி ஒன்றாய்ச்சேர்ப்பது தகுதியாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

௧—வது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ்ராச்சியங்களில் இந்த ஆக்ட்டுவழங்கிவரும்எந்தபாகத்திற்குள்ளாவதிருக்கிறயாதொருகோர்ட்டிலே யாதொருவியாச்சியத்தைக்குறித்து இதில் பின்னால்சொல்லியிருக்கிற காலநிர்ணயத்துக்குள்ளாக அவ்வித வியாச்சியங்கொண்டுவரப்படாவிட்டால், யாதொருஆக்ட்டு அல்லது சட்டத்துக்கு விரோதமாயிருந்தபோதிலும், அதுபிடிக்கப்படாது -எந்தெந்த வியாச்சியங்களுக்கு எவ்வளவெவ்வளவு காலநிர்ணயம் ஏற்படுத்தியிருக்கிறதோ அந்தந்த வியாச்சியங்களும்அந்தந்த காலநிர்ணயங்களும் அடியில் கண்டிருக்கின்றன- அவைகளென்னவென்றால்:—

முதலாம் உட்பிரிவு. விற்கப்படுகிற யாதொருபொருளை நியாயப்படிக்காவது, சாதாரணமான வழக்கப்படிக்காவது, பிரத்தியேகமான உடன்படிக்கையின்படிக்காவது, முந்திகிரயத்துக்குக்கொள்ளச் சுதந்தரமுடையவனிருக்க, அதை வேறொருவன்கொண்டால், மேற்படி சுதந்தரமுடையவன் தன்னுடைய சுதந்தரம் செல்லும்படி செய்யவேணுமென்று விசாச்சியங் கொண்டுவர விரும்புகிறபட்சத்தில், அந்தப்பொருளைக்கொண்டவன் அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுகிற காலமுதல் ஒருவருஷத்திற் குள்ளாக அப்படி வியாச்சியங் கொண்டுவரவேண்டியது.

இரண்டாம் உட்பிரிவு. யாதொரு சட்டத்துக்கு விரோதமாய் நடந்ததைப்பற்றி விதிக்கப்பட்ட அபராதத்தைக் குறித்தாவது, செய்யப்பட்ட பதிமுதலைக் குறித்தாவது, ஒருவனுடைய சரீரத்துக்காகிலும் அசையும் பொருளுக்காகிலும் மேன்மைக்காகிலும் கெடுதி செய்யப்பட்டதினால் நேரிடுகிற நஷ்டத்தைக்குறித்தாவது, யாதொரு சிரந்தத்தி லுண்டாயிருக்கிற காபிரைட் என்னும் சுதந்தரத்துக்காகிலும் வேறேயாதொரு உரித்தான சுதந்தரத்துக்காகிலும் கெடுதிசெய்யப்பட்டதினால் நேரிடுகிற நஷ்டத்தைக்குறித்தாவது, வேலைக்காரர்கள் -கொல்லர் தச்சர்முதலிய தொழிலாளிகள் - ஆள்கள்- இவர்களுடைய கூலியையாகிலும், மதுபான பாக்கிப்பணத்தையாகிலும், விடுதிகுடிக்கூலி பாக்கிப்பணத்தையாகிலும், விடுதிவிட்டு சாப்பாடுபோடுகிற பாக்கிப்பணத்தையாகிலும் வரப்பற்றுவதைக்குறித்தாவது தொடரும்படியான வியாச்சியங்களையும், சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள கஅ௨௨ஹ ரு - வது சட்டப்படிக்கு ரிவினியூ அதிகாரிகளால் சுருக்கவிசாரணை செய்யப்படத்தக்க வியாச்சியங்களையும், வியாச்சியமூலம் பிறந்த காலமுதல் ஒருவருஷத்திற்குள்ளாகக்கொண்டுவரவேண்டியது.

மூன்றும் உட்பிரிவு. ராயல்ச்சார்ட்டர்என்னும் சட்டப்படிக்கு ஸ்தாபிக்கப்பட்ட தல்லாத வேறே யாதொரு சீவில் விவகாரவிசாரணைக் கோர்ட்டுடிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு விற்கப்பட்ட யாதொரு ஸ்தாவரஜங்கமசொத்தின்விற்பனையை ரத்துசெய்யும்படி தொடரப்படுகிற வியாச்சியங்கள் பிடிக்கத்தக்கதானால் அதுகளையும், சர்க்கார்கிஸ்தி பாக்கிக்காகவாவது அந்த பாக்கியைப்போல வசூல்செய்யத்தக்க வேறேயாதொரு பாக்கிக்காகவாவது விற்கப்பட்ட யாதொருஸ்தாவர ஜங்கம சொத்தின்விற்பனையை ரத்துசெய்யும்படி தொடரவேண்டிய வியாச்சியங்களையும், ஜமீன்தாருக்குள்ளாக அனுபவிக்கப்பட்டு, நடக்கிறவருஷத்து தீர்வைபாக்கிக்காக விற்கத்தக்க க்ஷேத்து பூமிக்குரியவனாவது - அவனை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற வேறொருவனாவது - அந்த பூமியின் விற்கிரயத்தை ரத்துசெய்யும்படி தொடரவேண்டிய வியாச்சியங்களையும், கலெக்ட்டராவது வேறொரு ரிவினியூ அதிகாரியாவது செய்கிறயாதொரு டிக்ரியின்படிக்காகிலும் உத்தரவின்படிக்காகிலும் விற்கப்பட்டயாதொரு ஸ்தாவர ஜங்கமசொத்தின் விற்கிரயத்தை

த்துசெய்யும்படி தொடரவேண்டிய வியாச்சியங்களையும், அந்தவிற்கிரயம் உறுதிசெய்யப்பட்ட தேதி முதற்கொண்டாவது, அப்படி வியாச்சியங்கொண்டுவரப்படாதிருந்தால் அந்தவிற்கிரயம் எந்தகாலத்தில் அறுதியாகுமோ அந்த தேதிமுதற்கொண்டாவது ஒரு வருஷித்திற்குள்ளாகக்கொண்டுவரவேண்டியது.

நான்காம் உட்பிரிவு. சர்க்கார் கிஸ்தியாச்கிக்காக யாதொரு பூமியையாகிலும் அதிலுள்ள சுதந்தரத்தையாகிலும் ரிவினியூ அதிகாரிகள் செய்கிறஜப்தியையாவது ஒப்படைப்பை யாவது, கொடுக்கிற குத்தகையையாவது ரத்து செய்யும்படிக்காகிலும், சர்க்கார்கிஸ்தி பாக்கியினிமித்தமாவது அந்தகிஸ்தியாக்கியைப்போல வசூலாகத்தக்க வேறே பாக்கியினிமித்தமாவது சேரவேணுமென்று ரிவினியூ அதிகாரிகள் கேட்டபணத்தைக் குறித்து ஆட்சேபமிருக்கிறதென்று சொல்லி செலுத்தியஎவ்வளவுபணத்தையாவது மறுபடி வரப்பற்றும்படிக் காகிலும் தொடரவேண்டிய வியாச்சியங்களை - எந்ததேதியில் அப்படி ஜப்தியாவது ஒப்படைப்பாவது செய்யப்பட்டதோ, குத்தகை விடப்பட்டதோ, அல்லது பாக்கி செலுத்தப்பட்டதோ அந்த தேதிமுதல் ஒருவருஷித்திற்குள்ளாகக்கொண்டுவரவேண்டியது.

ஐந்தாம் உட்பிரிவு. ராயல்சார்ட்டர் என்னும்சட்டப்படிக்கு ஸ்தாபிக்கப்பட்டதல்லாத மற்ற சிவில்விவகார விசாரணைக்கோர்ட்டுகளில் எந்த கோர்ட்டாராவது சுருக்க விசாரணையின்பேரில் செய்கிறதீர்ப்புகளையும் உத்தரவுகளையும் மாற்றும்படிக்காவது ரத்துபண்ணும்படிக்காவது தொடரப்படுகிற வியாச்சியங்கள் பிடிக்கப்படத்தக்கதானால், அதுகளை - அந்த பரிஷ்காரமான தீர்ப்பு - தீர்மானம் அல்லது உத்தரவுசெய்யப்பட்ட தேதிமுதல் ஒருவருஷித்திற்குள்ளாகக் கொண்டு வரவேண்டியது.

ஆரும் உட்பிரிவு. பங்காளத்து சட்டபுஸ்தகத்திலுள்ள ௧௮௨௨ஹூ ௭ - வது சட்டப்படிக்கும் ௧௮௨௫ஹூ ௯ - வது சட்டப்படிக்கும், ௧௮௩௩ஹூ ௯ - வது சட்டப்படிக்கும் செய்யப்படுகிற தீர்மானம் சரியானதல்லவென்று ஆட்சேபிக்கும்படிக்காவது, அந்த தீர்மானத்தில் கண்டிருக்கிற யாதொரு சொத்தை வரப்பற்றும்படிக்காவது, எவனுகிலும் வியாச்சியந்

தொடரவேணுமானால், அதை அந்தபரிஷ்காரமான தீர்மானம் அல்லது உத்தரவுசெய்யப்பட்ட தேதிமுதல் மூன்றுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

ஏழாம் உட்பிரிவு. சொத்தின் ஸ்வாதீனத்தைக் குறித்து ௧௮௩௯-ஆம் வருஷத்து - ௧௫ - வது ஆக்ட்டு ௧ - வது பிரிவு - ௨ - வது உட்பிரிவுபடிக்காகிலும் - ௧௮௪௰-ஆம் வருஷத்து - ௪ - வது ஆக்ட்டின்படிக்காகிலும் செய்யப்பட்ட யாதொரு உத்தரவுக்கு உட்பட்ட எந்தகட்சிக்காரனாவது அவனைமுன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற வேறேயெவனாவது அந்த உத்தரவில்கண்டிருக்கிற சொத்தை வரப்பற்றும்படி தொடரவேண்டிய வியாச்சியத்தை அந்தமுடிவான உத்தரவுபிறந்த தேதிமுதல் மூன்றுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

எட்டாம் உட்பிரிவு. மாடு - குதிரைமுதலியபிராணிகள் - வண்டிமுதலிய வாகனங்கள் - படகுகள்-தட்டு முட்டு மேஜை நாற்காலி முதலிய வீட்டுச்சாமான்கள் - இவைகளின் வாடகையையாவது, சில்லறையில் விற்கப்பட்ட வஸ்துக்களின் பாக்கிப்பணத்தையாவது வசூல்செல்வதற்குத் தொடரவேண்டிய வியாச்சியங்களையும், சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள - ௧௮௨௨-ஆம் வருஷத்து - ௫ - வது சட்டப்படிக்கு ரிவினியூ அதிகாரிகளால் சுருக்கவிசாரணை செய்யப்படுகிற வியாச்சியங்கள்தவிர, யாதொருகட்டடம் அல்லது நிலத்தின் வாடகையைக்குறித்துத் தொடரவேண்டிய மற்றெல்லா வியாச்சியங்களையும்; வியாச்சியமூலம் பிறந்தகாலமுதல் மூன்றுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

ஒன்பதாம் உட்பிரிவு. கடன்கொடுக்கப்பட்ட பணத்தையாவது வட்டியையாவது வசூல்செய்வதற்காகவாகிலும், யாதொருகுத்தகையை நிறைவேற்றுமைக்காகவாகிலும் தொடரவேண்டியவியாச்சியங்களை - கடன்வாங்கினபணம் அல்லதுவட்டியைச்செலுத்துகிறதாகவாவது, குத்தகையை நிறைவேற்றுகிற தாகவாவது உடன்படுகிறவனாகிலும் அவனுடைய கிரமமானவகாலத்துபெற்ற ஏஜெண்டாகிலும் பணத்தைச் செலுத்துவதற்கு பத்திரமும் குத்தகையை நிறைவேற்றுகிறதற்கு உடன்படிக்கையும் எழுதி கையெழுத்துப்போட்டு கொடாதிருக்கிறபட்சத்தில், அந்தகடனுக்கு எப்போதுகெடுவாய்விடுகிறதோ, அந்

த குத்தகைக்கு முதலில் எப்போது தவறுதல்உண்டாகிறதோ அந்தகாலமுதற்கொண்டு மூன்றுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

பத்தாம் உட்பிரிவு. பத்திரமாவது உடன்படிக்கையாவது எழுதப்பட்டிருந்து, அது எவ்விடத்தில் எந்தகாலத்தில் எழுதப்பட்டதோ அந்த இடத்திலே அந்தகாலத்தில் வழங்கிவருகிற யாதொருசட்டப்படிக்கு அதை ரிஜிஸ்தர் செய்வித்திருக்கவேண்டிய விஷயங்களில் – அது எழுதப்பட்டதேதிமுதல் ஆறுமாசத்திற்குள்ளாக ரிஜிஸ்தர்செய்திராதபட்சத்தில்,கடன்கொடுத்திருக்கிறபணம் அல்லது வட்டியை வசூல்செய்வதற்காகவாவது குத்தகையை நிறைவேற்றுமைக்காகவாவது தொடரவேண்டிய வியாச்சியங்களை – அந்தகடனுக்கு எப்போதுகெடுவாய்விடுகிறதோ, அந்தகுத்தகைக்கு முதலில் எப்போது தவறுதலுண்டாகிறதோ அந்தகாலமுதற்கொண்டு மூன்றுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

பதினோராம் உட்பிரிவு. இங்கிலீஷ்லாட்படிக்கு நடத்தப்படுகிற விஷயங்களில் கோர்ட்டுகிரந்தத்தின்படிக்குச் செலுத்தவேண்டிய சகலகடன்களைக்குறித்தும் சாசனங்களைக்குறித்தும் தொடரவேண்டிய வியாச்சியங்களையும், யாதொருமரணசாதன ஆஸ்தியை வரப்பற்றுவதைக்குறித்து தொடரவேண்டிய வியாச்சியங்களையும், வியாச்சியமூலம்பிறந்த பன்னிரண்டு வருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

பன்னிரண்டாம் உட்பிரிவு. இந்தஆக்ட்டிலுள்ள வேறே யாதொருநிபந்தனை சம்பந்தப்படாத அசையாப்பொருளையாவது அதிலுண்டாகிற வரும்படியையாவது வரப்பற்றுவதற்காகத் தொடரவேண்டிய வியாச்சியங்களை – வியாச்சியமூலம் பிறந்தபன்னிரண்டுவருஷத்திற்குள்ளாகக்கொண்டுவரவேண்டியது

பதின்மூன்றாம் உட்பிரிவு. குடும்பசமுதாய சொத்தாயிருக்கிறதென்கிற ஏதுவினபேரில் யாதொருஸ்தாவரஜங்கமசொத்தில் பாகம்பெறுவதற்காகத் தொடரவேண்டிய வியாச்சியங்களையும், பிறரால் சுதந்தரிக்கப்படும் யாதொரு ஆஸ்தியில் ஜீவனாம்சம் பெறுவதற்கு பாத்தியதையிருந்து அதைக்குறித்து டாருகிற வியாச்சியங்களையும், சமுதாயமென்கிற சொத்து

யாரிடத்திலிருந்து வந்ததாக சொல்லப்படுகிறதோ அவர்களாவது, யாருடைய ஆஸ்தியிலிருந்து ஜீவனும்சம் கிடைக்கவேணுமென்று சொல்லப்படுகிறதோ அவர்களாவது இறந்துபோனதுமுதற்கொண்டாகிலும், ஷெ சொத்து அல்லது ஆஸ்தியை தன் ஸ்வாதீனத்திலாவது விசாரணையிலாவது வைத்துக்கொண்டிருப்பவன் - மேற்படி பாகத்தின் பொருட்டாகிலும் ஜீவனும்சத்தின் பொருட்டாகிலும் வாதிக்காவது எவனை முன்னிட்டுக்கொண்டு அவன் தாவாசெய்கிறானோ அவனுக்காவது கடைசியாய்ச்செலுத்தியிருக்கிற தேதிமுதற்கொண்டாகிலும், பன்னிரண்டுவருஷத்துக்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

பதினான்காம் உட்பிரிவு. தீர்வையில்லாத லாக்ராஜ்பூமியை மறுபடி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்காகவாவது அதின் தீர்வைக்காகவாவது பூமிக்குடையவனாகிலும் அவனை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற வேறேயெவனாகிலும் தொடரவேண்டிய வியாச்சியங்களை - அப்படிப்பட்ட பூமிகளை மறுபடி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளவும் அதுகளுக்குத் தீர்வையேற்படுத்தவும் சுதந்தரமுடையவனுக்காவது எவன்மூலமாய் அவன் சுதந்தரங்கொண்டாடுகிறானோ அவனுக்காவது முதலில் அப்படிப்பட்ட பாத்தியமுண்டானகாலமுதற்கொண்டு பன்னிரண்டுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது. ஆனால், சாஸ்வித பேரீஜு ஏற்படுத்தப்பட்ட பூஸ்திதிகளில் - முதலில் அப்படிப்பட்டவனுக்கு பாத்தியமுண்டான காலமுதற்கொண்டு பன்னிரண்டு வருஷத்துக்குள்ளாக அப்படிவியாச்சியங் கொண்டுவரப்பட்டபோதிலும், சாஸ்விதபேரீஜு ஏற்பட்டகாலமுதற்கொண்டு தீர்வையில்லாமல் பூமி அனுபவிக்கப்படுகிறதென்று ருசுவானால், அந்தவியாச்சியத்தைப் பிடிக்கக்கூடாது.

பதினைந்தாம்உட்பிரிவு. யாதொரு அசையும்பொருளையாவது அசையாப்பொருளையாவது மீட்கும்பொருட்டு, அதை அனுமத்தாகவாகிலும், அடகாகவாகிலும், கொதுவையாகவாகிலும் வைத்துக்கொண் டிருப்பவன்பேரில் தொடரவேண்டிய வியாச்சியங்களை - அப்படி அனுமத்து - அடகு - அல்லது கொதுவை வைக்கப்பட்ட காலமுதற்கொண்டாவது, அப்படி வைத்தவனுடைய பாத்தியதையையாகிலும் அந்தப்பொருளை மீட்டுக்கொள்ள - அவனுக்குண்டாகிய சுதந்தரத்தையாகிலும்,

அப்படி வைத்துக்கொண்டிருப்பவனுவது, அவனை முன்னிட்டுக்கொண்டு சுதந்தரங்கொண்டாடுகிறவனுவது ஒப்புக்கொண்டு சீட்டுஎழுதி கையெழுத்துப்போட்டுக்கொடுத்திருந்தால், அப்படி எழுதிக்கொடுத்திருக்கிற தேதிமுதற்கொண்டாவது, அசையும்பொருளானல் மூப்பதுவருஷத்திற்குள்ளாகவும், அசையாப்பொருளானல் அறுபதுவருஷத்திற்குள்ளாகவுங் கொண்டுவரவேண்டியது.

பதினைரும் உட்பிரிவு. இந்தஆக்ட்டிலே வெளிப்படையாய் காலநிர்ணயம் ஏற்படுத்தியிராத வியாச்சியங்களையெல்லாம், வியாச்சியமூலம்பிறந்த ஆறுவருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டியது.

உ—வது. திரஸ்டியானவன் ஜீவித்திருக்கையில் அவன்பேரிலும் அவனிறந்தபின்பு அவனுக்குப்பிரதிநிதிகளாயிருந்து அவனிடத்தில் நம்பி ஒப்பிக்கப்பட்டிருந்தசொத்தை தங்கள் ஸ்வாதீனஞ்செய்துகொள்ளுகிறவர்கள்பேரிலும் தொடரவேண்டிய வியாச்சியங்களுக்குக் காலநிர்ணயதோஷம் கிடையாது; ஆனால், நம்பிக்கைத்துரோகத்தினலே நேரிட்ட நஷ்டத்தை இறந்துபோன திரஸ்டியினுடைய சொந்தஆஸ்தியிலிருந்து வரப்பற்றும்படி வியாச்சியந் தொடரவேணுமானல், அதை - இதற்குமுந்தியபிரிவின்படிக்கு அந்ததிரஸ்டி இறந்துபோனது முதல் தகுந்தகாலத்திற்குள்ளாகக் கொண்டுவராதபட்சத்தில் ஷெ. கோர்ட்டுகளிலெதிலாகிலும் அது பிடிக்கப்படாது: ஆயினும், அந்ததிரஸ்டியோடுகூட வேறொரு திரஸ்டியாயிருப்பவன் - ஷெ நஷ்டத்துக்காக இறந்துபோன திரஸ்டியினுடைய ஆஸ்தியிலிருந்து பங்குவரவேணுமென்று தாவாசெய்தால், அந்ததாவா பிறந்தபின்பு ஆறுவருஷத்திற்குள்ளாக அதைக்குறித்து அவன் வியாச்சியங்கொண்டுவருகிறபட்சத்தில், இந்த ஆக்ட்டிற் சொல்லியிருக்கிற எந்தநிபந்தனையினலும் அதற்குத்தடங்கலொன்றுமுண்டாகமாட்டாது.

ரு—வது. இந்தஆக்ட்டில் நிர்ணயித்திருக்கிற காலத்தைவிட குறைந்தகாலத்திற்குள்ளாக இன்னவியாச்சியத்தைக்கொண்டுவரவேணுமென்று இப்போது வழங்கிவருகிற யாதொரு சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தாலும் இனிவழங்குஞ் சட்டத்

தில் விதிக்கப்பட்டாலும், அந்த குறைந்தகாலமானது - இந்தஆக்ட்டுக்கு விரோதமாயிருந்தபோதிலும் உபயோகமாகும்

௪—வது. யாதொரு மரணசாதன ஆஸ்தி அல்லது கடனைக்குறித்து - காலநிர்ணயச்சட்டநிமித்தமில்லாமல், அதைச் செலுத்தவேண்டியவனாயிருப்பவன் ; அந்தக்கடன் அல்லது மரணசாதன ஆஸ்தியையாவது அதில் எவ்வளவையாவது தான் கொடுக்கவேண்டியதுதானென்று, ஒப்புக்கொண்டு அதைக்குறித்து சீட்டெழுதி கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறபக்ஷத்தில், ஆதிபாக்கி யிப்படிப்பட்டதென்று யோசித்து அதற்குத்தக்கபடி அப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட தேதி முதல் புதுகெடுவுக்கு நாள்எண்ணவேண்டியது. ஆனால், அதைச் செலுத்தவேண்டியவர்கள் ஒருவனல்லாமல் பலராயிருந்தால் அவர்களில் ஒருவன் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கிற சீட்டைமாத்திரங்கொண்டு அவர்களில் யார்பேரிலும் தாவா செய்யக்கூடாது.

௫—வது. திரஸ்டியினிடத்திலிருந்தாவது அனுமத்துதாரனிடத்திலிருந்தாவது, அடகுவைத்துககொண்டவனிடத்திலிருந்தாவது - கொதுவை வைத்துக்கொண்டவனிடத்திலிருந்தாவது தகுந்தகிரயங்கொடுத்து வாஸ்தவமாய் வாங்கப்பட்ட யாதொருசொத்தை கிரயக்காரனிடத்திலிருந்தாகிலும் அவனை முன்னிட்டுக்கொண்டு சுதந்தரிக்கிறவனிடத்தி லிருந்தாகிலும் மறுபடி வரப்பற்றுவதற்காகத் தொடரப்படுகிற வியாச்சியங்களிலே, வியாச்சியமூலமானது - கிரயத்துக்குக்கொள்ளப்பட்ட தேதியில் பிறந்ததாக எண்ணப்படும். ஆனால், அனுமத்துதாரனிடத்தி லிருந்தாவது அடகுவைத்துக்கொண்டவனிடத்தி லிருந்தாவது, கொதுவை வைத்துக்கொண்டவனிடத்தி லிருந்தாவது கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவிஷயத்தில், ௧ - வது பிரிவு - ௧௫ - வது உட்பிரிவில் கண்டிருக்கிறகெடுவுக்குள்ளாக அப்படி வியாச்சியங்கொண்டுவராதபக்ஷத்தில் அது பிடிக்கப்படாது.

௬—வது. ஈடுகாட்டப்பட்ட அசையாப்பொருளை ஈடு வைத்தவனிடத்திலிருந்து வரப்பற்றுவதற்காக ஈடுவாங்கினவன் ராயல்சார்ட்டர்என்னும் சட்டப்படிக்கு ஸ்தாபிக்கப்பட்டகோர்ட்டுகளில் தொடருகிற வியாச்சியங்களிலே, வியாச்சிய மூலமானது - அந்தக்கடனைக்குறித்து அசல்பணத்திலாகிலும் வட்

டியிலாகிலும் எவ்வளவாவது கடைசியாய்ச் செலுத்தப்பட்ட தேதியில் பிறந்ததாக எண்ணப்படும்.

எ—வது. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக விற்கப்படுவதினாலே மற்றகடன்களினின்றும் உள்குத்தகைகளினின்றும் நிவர்த்தியாவதாகிய யாதொரு பூஸ்திதியாகிலும் விற்கத்தக்க வேறேயாதொரு ஷிரத்து பூமியாகிலும் சர்க்கார்தீர்வைபாக்கிக்காக விற்கப்பட்டால், அதுகளின்பேரிலிருக்கிற மற்றக்கடன்களையும் உள்குத்தகைகளையும் நிவர்த்திசெய்வதற்காகத் தொடரப்படுகிற வியாச்சியங்களில் அந்தபூஸ்திதி - அல்லது ஷிரத்துபூமியின் விக்கிரயம் எப்போது அறுதியாகிறதோ அந்த காலத்தில் வியாச்சியமூலம் பிறந்ததாக எண்ணப்படும்.

அ—வது. லேவாதேவி செய்துகொண்டிருக்கிற வர்த்தகர்களுக்குள்ளும் வியாபாரிகளுக்குள்ளும் வரவுபற்று கணக்குகளிலுள்ள நிலுவைபாக்கிக்காக தொடரப்படுகிற வியாச்சியங்களில் ஷெ லேவாதேவியைச்சேர்ந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டாவது ருசுவுசெய்யப்பட்டாவதிருக்கிற கடைசியாயத்தானது எந்தவருஷத்திய கணக்கிலிருக்கிறதோ அந்தவருஷ அந்தியத்தில் வியாச்சியமூலம் பிறந்ததாக எண்ணப்பட்டு, அது முதல் கெடுவுக்கு நாள் எண்ணப்படும்; கணக்கில் எந்தசகவருஷம் கண்டிருக்கிறதோ அந்த சகத்திலேயே கெடுவுக்கு நாள் எண்ணவேண்டியது.

கூ—வது. வியாச்சியந்தொடரச் சுதந்தரமுடையவனெவனுக்காகிலும், அப்படிப்பட்ட சுதந்தரம் அவனுக்குண்டென்றுவது அந்தவியாச்சியத்திற்கு ஆதாரமாயிருக்கிற பாத்தியமின்னதென்றுவது மோசவகையாய்த் தெரியவொட்டாமல் மறைக்கப்பட்டிருந்தாலும், அப்படிப்பட்ட சுதந்தரத்தை ஸ்தாபிப்பதற்கு அவசியமான யாதொரு தஸ்தாவேஜு மோசடியாய் மறைக்கப்பட்டிருந்தாலும், அப்படி மோசஞ்செய்தவன்பேரிலாவது, அதற்கு உடந்தையாயிருந்தவன் பேரிலாவது, உண்மையாய் கிரமமான ஜவேஜுகொடாமல் சூதாய் அவனை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற வேறே எவன்பேரிலாவது வியாச்சியந்தொடருவதற்காக ஏற்படுத்தப்பட்ட கெடுவுக்கு நாள்கள் - அநியாயமடைந்தவனுக்கு அந்தமோசம் எப்போது முதலில்தெரியவந்ததோ அந்த காலமுதற்கொண்

டாகிலும், மறைக்கப்பட்ட தஸ்தாவேஜைக்கொண்டுவந்து காட்டவாவது காட்டும்படிச்செய்யவாவது முதலில் அவனுக்கு எப்போது வகைஏற்பட்டதோ அந்தகாலமுதற்கொண்டாகிலும் எண்ணப்படும்.

௧௦—வது. வியாச்சியமூலமானது மோசத்தைப்பற்றியதாயிருக்கிற வியாச்சியங்களிலே - அந்தமோசம் அபிப்பிராயமடைந்தவனுக்கு முதலில் எப்போது தெரியவருகிறதோ அந்தகாலத்தில் வியாச்சியமூலம் பிறந்ததாக எண்ணப்படும்.

௧௧—வது. வியாச்சியந்தொடருவதற்கு முதலில் சுதந்தரமுண்டாகிறகாலத்தில், எவனுக்கு அப்படி சுதந்தரமுண்டாகிறதோ அவன் சாஸ்திரப்படி அசமர்த்தனாயிருந்தால் அவனாவது - அவனுக்குப் பிரதிநிதியாயிருப்பவனாவது - அசமர்த்ததையுண்டாகாதிருந்தால் மூன்றுவருஷகாலத்திற்கு மேற்படாதவிஷயங்களில் வியாச்சியமூலம் பிறந்ததுமுதல் எவ்வளவுகாலத்திற்குள்ளாக வியாச்சியங் கொண்டுவரத்தக்கதோ அந்தகாலத்தை - அசமர்த்ததை நீங்கினதுமுதல் கெடுவாகக்கொண்டு அதற்குள்ளாக வியாச்சியங் கொண்டுவரவேண்டியது. மூன்றுவருஷ காலத்திற்கு மேற்பட்ட விஷயங்களில் அசமர்த்ததை நீங்கினகாலமுதல் மூன்றுவருஷத்திற்குள்ளாக வியாச்சியந்தொடரவேண்டியது - ஆனால், வியாச்சியமூலம் பிறந்தகாலத்தில் அந்தவியாச்சியத்திற்குடையவனுக்கு சாஸ்திரப்படி அசமர்த்ததை யில்லாதபட்சத்தில், பின்பு அவனுக்குண்டானாலும், அவனைமுன்னிட்டுக்கொண்டுதாவாசெய்கிறவனுக்கு சாஸ்திரப்படி அசமர்த்ததையுண்டானாலும், அதைப்பற்றி காலம் ஒத்துக்கொடுப்பதில்லை.

௧௨—வது. மைனர்களும் - உன்மத்தர்களும் - பயித்தியக்காரர்களும் - இங்கிலீஷ்லாப்படி தீர்மானிக்கவேண்டிய விஷயங்களிலே விவாகமான ஸ்திரீகளும் - ஆகிய இவர்கள் இதற்குமுந்திய கடைசிபிரிவின் தாற்பரியப்பிரகாரம் சாஸ்திரப்படி அசமர்த்தர்களென்று எண்ணப்படுவார்கள்.

௧௩—வது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ்ராச்சியங்களுக்கப்பால் பிரதிவாதிபோயிருந்தால், வியாச்சியத்தில் அவன் ஆஜராகி உத்தரவுசொல்லும்படி பிறப்பிக்கப்படுகிற சம்மனானது சட்டத்தில்சொல்லியிருக்கிற எவ்விதமாகவாகிலும் அவனு

க்கு சேர்ப்பிக்கப்படாத பட்சத்தில், இந்த ஆக்ட்டில் கண்டிருக்கிற கெடுவுகாலத்திற்கு நாள் எண்ணுகையில் அவன் அப்படி ஆஜரில்லாதகாலத்தைத் தள்ளி எண்ணவேண்டியது.

௧௪—வது. தாவாதாரனாவது எவனை முன்னிட்டுக்கொண்டு அவன் தாவாசெய்கிறானோ அவனாவது யாதொருகோர்ட்டிலே அதே வியாச்சிய மூலத்தைக்குறித்து அதேபிரதிவாதியின்பேரிலாகிலும், அவனுக்குப் பிரதிநிதியாயிருக்கிற வேறொருவன்பேரிலாகிலும் வாஸ்தவமாய் தகுந்த ஜாக்கிரதையோடு வியாச்சியந்தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்து, அந்த கோர்ட்டார் அந்தவியாச்சியத்தை விசாரிக்கத் தங்களுக்கு போதுமான அதிகாரமில்லாததைப் பற்றியாவது வேறே யாதொருகாரணத்தைப்பற்றியாவது அந்த வியாச்சியத்தைக் குறித்துத் தீர்மானஞ்செய்யமாட்டாதவர்களாயிருந்தால், அப்படிவியாச்சியம் நடத்திக்கொண்டிருப்பதற்காகப் பிடித்தகாலத்தையும், அந்த்கோர்ட்டார் தீர்மானஞ்செய்திருந்தும் - அப்பீல்செய்யப்படுவதின்பேரில் அந்ததீர்மானம் அவ்விதகாரணத்தைப்பற்றி ரத்துசெய்யப்பட்டால், அந்த அப்பீல் நடந்துகொண்டிருந்த காலத்தையும் இந்தஆக்ட்டில் கண்டிருக்கிற கெடுவுகாலத்திற்கு நாள் எண்ணுகையில் தள்ளி எண்ணவேண்டியது.

௧௫—வது. யாதொரு அசையாப்பொருளை சட்டப்படிக்கு நடத்தப்பட்ட நடவடிக்கையினாலல்லாமல் வேறேவிதமாய் எவனிடத்திலிருந்தாகிலும் அவனுடைய அநுமதியின்றி எடுத்துக்கொள்ளப்பட்டால், அவனாகிலும், அவனைமுன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற வேறே எவனாகிலும் - அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டகாலமுதல் ஆறுமாசத்திற்குள்ளாக அந்தப்பொருளை மறுபடி ஸ்வர்தீனப்படுத்திக்கொள்ள வியாச்சியங்கொண்டு வருகிறபட்சத்தில், அந்தவியாச்சியத்தில் வேறே யாதொருபாத்தியதை காட்டப்பட்டபோதிலும் அந்தப்பொருளை மறுபடி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளத்தக்கவனாவான் - ஆனால், எவனிடத்திலிருந்து அவ்விதமாய் மறுபடி அந்தப்பொருள் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளப்படுகிறதோ அவனாகிலும் வேறேயெவனாகிலும் அந்தப்பொருளில் தனக்குள்ளபாத்தியதையை ஸ்தாபித்து அதைமறுபடி கைப்பற்றும்படியாக இந்தஆக்ட்டில்குறித்த கெடுவுக்குள் வியாச்சியங்கொண்டு வருவதற்கு இந்தப்பிரிவானது எவ்வளவுந் தடங்கலாகமாட்டாது.

௧௬—வது இந்தஆக்ட்டின்படி வியாச்சியங்கொண்டுவர வாதிக்குச் சுதந்தரமிருந்தபோதிலும் யாதொரு ஏற்பாட்டுக்கு அவன் சம்மதித்திருக்கிற எதுவைப்பற்றியாவது வேறேயெந்த எதுவைப்பற்றியாவது விசாரணைசெய்ய மாட்டோமென்று சொல்லுவதற்கு ராயல்சார்ட்டர்என்னும்சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட எந்தகோர்ட்டாருக்காகிலும் உண்டாகிற அதிகாரத்துக்காவது கோர்ட்டுவழக்கத்துக்காவது இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற எந்தநிபந்தனையும் தடங்கலாகமாட்டாது.

௧௭—வது. யாதொரு சர்க்கார்சொத்துக்காவது, சுதந்தரத்துக்காவது, சர்க்கார் கிஸ்தியையாகிலும் சர்க்காருக்குச்சேரவேண்டிய மேவரேஎனதையாகிலும் வரப்பற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களுக்காவது இந்தஆக்ட்டு சம்பந்தப்படமாட்டாது; ஆனால் அப்படிப்பட்டவியாச்சியங்கள் இப்போது வழங்கிவருகிற காலநிர்ணயச் சட்டங்களையாகிலும் விதிகளையாகிலும் அனுசரித்து நடந்துவரவேண்டியது.

௧௮—வது. இப்போது நடந்துகொண்டிருக்கிற சகலவியாச்சியங்களையும், இந்தஆக்ட்டு செய்யப்பட்டதேதிமுதல் இரண்டுவருஷத்திற்குள்ளாகத் தொடரப்படுகிற சகலவியாச்சியங்களையும், இந்தஆக்ட்டு செய்யப்படாதிருந்தாற்போலவே விசாரித்துத் தீர்மானிக்கவேண்டியது - ஆனால் மேற்சொல்லிய இரண்டுவருஷத்திற்குப்பின்பு தொடரப்படுகிற வியாச்சியங்களில் எதுகளுக்கு இந்தஆக்ட்டிலுள்ள நிபந்தனைகள் சம்பந்தப்படுகிறதோ அந்தவியாச்சியங்களெல்லாம் இந்தஆக்ட்டுக்கு உள்ளாகவேண்டியதேயல்லாமல், இப்போது வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு ஸ்டாட்டியூட்டிலாவது ஆக்ட்டிலாவது சட்டத்திலாவது காலநிர்ணயத்தைக்குறித்து என்னசொல்லியிருந்தபோதிலும் அதுகளுக்கு உள்ளாகக்கூடாது.

௧௯—வது. தீர்ப்புப்பொருளைப் பெற்றுக்கொள்ளச் சுதந்தரமுடையவர்களுக்கு - ராயல்சார்ட்டர் என்னும் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொருகோர்ட்டுத்தீர்ப்பு - டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவிக்கும்படியான பாத்தியதை எப்போது முதலில் உண்டாகிறதோ அதுமுதல் பன்னிரண்டுவருஷத்திற்குள்ளாக அந்த தீர்ப்புமுதலானதுகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை நடத்தவேணுமேயல்லா

மல், அதற்குமேற்பட்டு நடத்தக்கூடாது. மேலும் இடையிலே அந்த தீர்ப்பாவது டிக்ரியாவது உத்தரவாவது கிரமமாய் புது ப்பிக்கப்பட்டிருந்தாலும், அந்த தீர்ப்புமுதலானதுகளால் தீ ர்மானமாயிருக்கிற அசல்பணத்தி லெவ்வளவாவது வட்டி எவ் வளவாவது செலுத்தப்பட்டிருந்தாலும், அதைச்செலுத்தவே ண்டியவனுவது அவனுடைய ஏஜெண்டாவது அது இன்னுனு க்குச் சேரவேணுமென்பதை ஒப்புக்கொண்டு, அப்படி சேர வேண்டியவனுக்காவது அவனுடைய ஏஜெண்டுக்காவது சீட் டெழுதி கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருந்தாலும், அ ப்படி செய்யப்பட்டதுமுதற்கொண்டாவது, அவ்வாறு பல தரஞ்செய்திருந்தால் அதுகளில் கடைசியாய்ச் செய்ததுமுத ற்கொண்டாவது பன்னிரண்டுவருஷத்திற்குள்ளாக ஷை தீர்ப் புமுதலானவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை நடத்தவேணுமேயல்லாமல், அதற்குமேற்பட்டு நடத்தக்கூடா து. ஆனல், இந்த ஆக்ட்டுசெய்யப்பட்ட தேதியில் செலுத் தும்படியானதாயிருக்கிற எல்லாதீர்ப்புகளும், டிக்ரிகளும், உ த்தரவுகளும் - இப்போதுவழங்கிவருகிறசட்டத்தில் என்னசொ ல்லியிருந்தபோதிலும் நிமித்தமில்லாமல், இந்த ஆக்ட்டுசெய் யப்பட்டதுமுதல் மூன்றுவருஷவரையிலே இப்போது வழ ங்கிவருகிற சட்டத்திற்குள்ளா யிருக்கவேண்டியது.

௨௦—வது. ராயல்சார்ட்டர் என்னும் சட்டப்படிக்கு ஸ்தாபிக்கப்பட்டதல்லாத வேறே யாதொரு கோர்ட்டுத்தீர்ப் பையாவது, டிக்ரியையாவது உத்தரவையாவது நிறைவேற்று வதற்காகவாகிலும், பின்னும் செல்லும்படி செய்வதற்காகவா கிலும், அதைநிறைவேற்றும்படி மனுவுசெய்துகொள்ளுகிற காலத்திற்குமுந்திய மூன்றுவருஷத்திற்குள் யாதொருநடவடி க்கை நடத்தப்பட்டிராவிட்டால், பின்பு அந்தக்கோர்ட்டார் அ ந்தத்தீர்ப்புமுதலானதுகளை நிறைவேற்றுவதற்காக யாதொரு உத்தரவும் பிறப்பிக்கக்கூடாது.

௨௧—வது. இந்தஆக்ட்டு செய்யப்பட்டகாலத்தில் செல் லும்படியான யாதொருதீர்ப்புக்காகிலும் டிக்ரிக்காகிலும் உத் தரவுக்காகிலும் இதற்குமுந்தியபிரிவானது எவ்வளவும் சம்பந் தப்படமாட்டாது; ஆனல், தீர்ப்புமுதலானவைகளை நிறைவே ற்றும்படி கட்டளை பிறப்பிப்பதற்காக இப்போது சட்டத்தில் விதிக்கப்பட்டு வழங்கிவருகிற கெடுவுக்குள்ளாகவாவது, இந்த

ஆக்ட்டு செய்யப்பட்டபின்பு மூன்றுவருஷத்திற்குள்ளாகவாவது அப்படி கட்டளைபிறப்பிக்கலாம். இந்த இரண்டுகெடுவுகளில் முந்தி யெதுசென்றுபோகிறதோ அதை வைத்துக்கொள்ளவேண்டியது.

௨௨—வது. ராயல்ச்சார்ட்டர் என்னும் சட்டப்படிக்கு ஸ்தாபிக்கப்பட்டதல்லாத மற்ற சிவில்விவகார விசாரணைக்கோர்ட்டுகளில் எந்தக் கோர்ட்டாராவது யாதொருரிவினியூ அதிகாரியாவது சுருக்கவிசாரணையின்பேரில் செய்திருக்கிற தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காகவாகிலும், பின்னும் செல்லும்படி செய்வதற்காகவாகிலும், அதைநிறைவேற்றும்படி மனுவுசெய்கிறகாலத்திற்கு முந்திய ஒருவருஷத்திற்குள் யாதொருநடவடிக்கை நடத்தப்பட்டிராவிட்டால், பின்பு அந்ததீர்மானத்தை நிறைவேற்றும்படியாக யாதொரு உத்தரவும் பிறப்பிக்கப்படாது.

௨௩—வது. சுருக்கவிசாரணையின்பேரில் செய்யப்பட்டு, இந்தஆக்ட்டு பிறந்தகாலத்தில் செல்லும்படியானதாயிருக்கிற யாதொரு தீர்மானத்திற்கு - இதற்குமுந்திய பிரிவானது எவ்வளவும் சம்பந்தப்படமாட்டாது. ஆனால், தீர்மானத்தைநிறைவேற்றும்படி கட்டளை பிறப்பிப்பதற்காக இப்போது சட்டத்தில் விதிக்கப்பட்டு வழங்கிவருகிற கெடுவுக்குள்ளாவது, இந்தஆக்ட்டு செய்யப்பட்டபின்பு இரண்டுவருஷத்திற்குள்ளாவது அப்படி கட்டளை பிறப்பிக்கலாம், இந்த இரண்டுகெடுவுகளில் முந்தி எதுசென்றுபோகிறதோ அதை வைத்துக்கொள்ளவேண்டியது.

௨௪—வது. பங்காளம் - சென்னபட்டணம் - பொம்பாய் - என்னும் ராச்சியங்களிலும், அதுகளைச்சேர்ந்த ராஜதானிகளிலும், ஸ்திரெயிட்ஸ் செட்டில்மெண்டு என்னும் நாட்டிலும், இந்த ஆக்ட்டு வழங்கி வரவேணுமேயல்லாமல், யாதொருசட்டமும் வழங்காதநாட்டிலாவது பிரதேசத்திலாவது, ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்களாகிலும், அந்தநாடு அல்லது பிரதேசமானது எவ்விடத்திய கவரன்மெண்டுக்கு உட்பட்டிருக்கிறதோ அந்த கவரன்மெண்டாராகிலும் விளம்பர மூலமாய் அறிக்கைசெய்து, இந்தஆக்ட்டை வியாபிக்கச்செய்கிறவரையில், அவ்விடங்களில் இது வழங்கிவரக்கூடாது. அவ்விடங்களிலே மேற்சொல்லியபடி இந்தஆக்ட்டு வியாபிக்கச்செய்யப்பட்டால், அந்தநாடு அல்லது பிரதேசத்தில் ஷை விளம்பரத்தின் தேதியில் நடந்துகொண்டிருக்கிற சகலவியாச்சியங்களையும், அந்ததேதிமுதல் இரண்டுவருஷத்திற்குள்ளாகத் தொடரப்படுகிற சகலவியாச்சியங்களையும், இந்தஆக்ட்டு செய்யப்படா திருந்தாற்போலவே விசாரித்துத் தீர்

மானிக்கவேண்டியது. ஆனால், ஷெ கெடுவுகழிந்தபின்பு, அந்நாடு அல்லது பிரதேசத்தில் தொடரப்படுகிற வியாச்சியங்களில் எதுகளுக்கு இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகள் சம்பந்தப்படுகிறதொ அந்தவியாச்சியங்களெல்லாம் இந்தஆக்ட்டுக்கு உள்ளாகவேண்டியதேயல்லாமல், இப்போது வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு ஸ்டாட்டியூட்டிலாவது ஆக்ட்டிலாவது சட்டத்திலாவது கால நிர்ணயத்தைககுறித்து என்னசொல்லி யிருந்தபோதிலும் அதுகளுக்கு உள்ளாகக்கூடாது.

---

சென்னபட்டணம்.

# க அகூசஞூத்து - உ - வது ஆக்ட்டு.

ஆலோசனைசபையிலுள்ள சென்னபட்டணத்து கவர்னரவர்களால் செய்யப்பட்டு, (கஅகூசஞூ மேமீ ருவ கவர்னரவர்களாலும், கஅகூசஞூ சூன்மீ உ0வ [கவர்னர் ஜனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.)

---

## சென்னபட்டணத்தைச்சேர்ந்த ராச்சியத்தில் சர்க்கார்தீர்வை பாக்கியை வசூல்செய்வதற்காக உண்டாயிருக்கிறசட்டங்களை ஒன்றாய்ச்சேர்ப்பதற்கான ஆக்ட்டு.

சர்க்கார்தீர்வையை வசூல்செய்வதைக்குறித்த சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்றாய்ச்சேர்ப்பது தகுதியாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

க. இந்தஆக்ட்டில் பிரயோகமாயிருக்கிற பூமிக்குடையவனென்னும்வார்த்தையானது எப்படிப்பட்டவனென்று அர்த்தஞ்செய்து கொள்ளப்படுமென்றால்:—

மில்கியிஸ்திமிரார்சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும், மற்றெல்லா ஜமீன்தார்களும், சுரோத்திரியம்தார்களும் ஜாகிர்தார்களும், இனம்தார்களும், சர்க்காரிடத்தில் பூமியேரிஜகுத்தகைசெய்துகொள்ளுகிற சகலமானவர்களுமென்றும்; ரயித்துவாரி திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய்த்தீர்வைசெலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிற எல்லோருமென்றும் அர்த்தமாகும். நிலத்தின்பேரில் பாக்கியாயிருக்கிற சர்க்கார்தீர்வைஎன்பது - இந்தஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு, பாய்ச்சலுக்காக சேகரிக்கப்பட்ட தண்ணீரைக்குறித்து செலுத்தப்படத்தக்க வரி இறை முதலானதுகளென்றும் அர்த்தமாகும்.

௨. நிலமும், அதின்பேரிலிருக்கிற கட்டடங்களும், அதிலுண்டாகிற மாசூலும் சர்க்கார்தீர்வைக்கு ஈடாகஎண்ணப்படும.

௩. பூமிக்குடையவனாகிய பிரதிமனிதனும் தன்னிலத்துக்கு பாக்கியாயிருக்கிற தீர்வையை கிஸ்துபந்திப்பிரகாரமாவது வேறேயாதொரு உடன்படிக்கைப்பிரகாரமாவது வாயிதா ஆய்விடுகிறதேதியிலாகிலும் அதற்குமுன்னிட்டாகிலும் கலெக்ட்டரிடத்திலாவது அதை வாங்கிக்கொள்ளும்படி அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாவது செலுத்தவேண்டியது; அப்படி தேதி நிஷ்கரிஷைசெய்யப்படாதிருந்தால், ஊர்வழக்கப்படிக்கு அந்தத்தீர்வையைச் செலுத்தவேண்டியவாயிதா ஆய்ப்போவதற்குள் செலுத்தவேண்டியது; ஆனால் மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறேயாதொரு சாசனத்தின்படிக்காவது பூமி யனுபவிக்கப்படுகிற விஷயத்தில்தவிர மற்றவிஷயங்களிலே - அந்தந்த கிஸ்தி அல்லது வாயிதாத்தொகையையும, அந்தந்ததொகை செலுத்தப்படவேண்டிய தேதிகளையும் டிஸ்திரிக்ட்டுகேஜட்டிலும் பிரசித்தஞ்செய்வித்து அப்பேர்கைக்கப்போது நிச்சயிக்கவும்மாற்றவும் ரிவினியூபோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

௪. யாதொரு கிஸ்திமுழுமையையுமாவது அதில் எவ்வளவாவது மேற்சொல்லியபடி செலுத்தப்படாதிருந்தால் அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது தீர்வைபாக்கியென்று எண்ணப்படும்.

௫. சர்க்கார்தீர்வை பாக்கியிருந்தால், அந்த பாக்கிதாரனுடைய ஸ்தாவரஜங்கம சொத்துகளை ஏலத்தில்விற்றாவது, இதிலபின்னால் சொல்லியிருக்கிறபடி பாக்கிதாரனைக் காவலிலவைத்தாவது, அந்தபாக்கியையும் அதற்கு வட்டியையும் நடவடிக்கை நடத்துவதற்குண்டானசெலவுகளையும் வசூல்செய்யத்தொடங்குகிறதற்கு கலெக்ட்டருக்காகிலும், வசூல்செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறேயாதொரு அதிகாரிக்காகிலும் அதிகாரமுண்டு.

௬. பாக்கிதாரன் மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறேயாதொரு சாசனத்தின்படிக்காவது அனுபவித்துக்கொண்டிருந்தால், அந்த சன்னதிலுள்ள ஷரத்துகளின்படி பாக்கியை வசூல்செய்யலாகும். மற்றபாக்கிதாரர்களின் விஷயத்தில் கலெக்ட்டராவது - பாக்கியை வசூல்செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறேயாதொரு அதிகாரியாவது - தனக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த பாகிதாரனு

டைய அசையும்பொருளையாகிலும் அசையாப்பொருளையாகிலும் அவ்விரண்டையுமாகிலும் ஏலத்தில்விற்று அந்தபாக்கியை வசூல் செய்யத்தொடங்கலாம்.

௭. சர்க்கார் தீர்வைபாக்கிக்கு - வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு வட்டிபோடப்படும்.

௮. சர்க்கார்தீர்வைக்காக அசையும்பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கிறபட்சத்தில், அடியில்கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி நடப்பிக்கவேண்டும்.

முதலாவது. கலெக்ட்டராவது, தண்டல்பத்திரிகை கொடுக்கும்படி கலெக்ட்டரால் நேமிக்கப்படுகிற வேறேயாதொரு அதிகாரியாவது தண்டல்பத்திரிகையெழுதி, அதில் பாக்கிதாரனுடையபேரையும், எதற்காக ஜப்திக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமோ, அந்த பாக்கித்தொகையையும் அந்தபாக்கிக்கு வாயிதா ஆய்விட்ட தேதியையுங்கண்டு, தன்னுடையபேரால் கையெழுத்துப்போட்டு, ஜப்திசெய்யப்போகிற மனிதனுக்குக் கொடுக்கவேண்டியது, ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல்பத்திரிகையைககாட்டி, ௫௨ - வது பிரிவின்படி அந்தபாக்கியும் தனக்குச்சேரவேண்டிய படிச்செலவும் உடனே செலுத்தப்படாவிட்டால். அந்தப்பத்திரிகையை ஜப்திசெய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக்கொண்டு, சொத்தை ஜப்திசெய்கிறதேதியில அந்த பத்திரிகைக்கு நகலெழுதி; அந்த நகலின்மேல் ஜப்திசெய்யப்படுகிற சொத்தின் விவரத்தையும, அந்தசொத்து வைத்துவைக்கப்படுகிற இடத்தையும் கண்டெழுதி அந்த பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது.

இரண்டாவது. அந்த பாக்கிதொகையும் அதற்குவட்டியும் படிச்செலவும் ஜப்திசெலவும் ஏலத்திற்குமுன்னமே செலுத்தப்படாவிட்டால், ஜப்திசெய்யப்படடசொத்து உடனே ஏலத்தில் விற்கப்படுமென்றும் அந்தபத்திரிகையில் எழுதவேண்டியது.

மூன்றாவது. பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால், அந்தபத்திரிகையின் நகலை - அதின்மேலெழுதபபட்ட ஜப்திசொத்தின் ஜாபிதாவகைரா சகிதமாய், ஜப்திசெய்ததேதிமுதல் மூன்றுநாளைக்குள்ளாக, அந்தபாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்துஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது ஒட்டவேண்டியது, அல்லது கொடுத்துவிட்டு வரவேண்டியது.

௯. தண்டல்பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்ட்டருக்காவது அவரால்

நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், சேரவேண்டியபாககித்தொகை - அதற்குவட்டி - படிச்செலவு ஜப்திசெலவு - இதுகளுக்காக ஜப்திசொத்தை ஏலத்தில்விற்கும பொருட்டு, அந்தசொத்தின் ஜாபிதாவை - ௧௮௬௪ஹூத்து - ௨-வது ஆக்ட்டின்படி ஜப்திசொத்தை விற்பதற்கு அதிகாரம்பெற்று சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு ஜப்திதாரன் அனுப்பவேண்டியது.

௪௦. பாக்கிதாரனானவன் தன்னுடையசொத்து ஜப்திசெய்யப்பட்டபின்பு ஏலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக, பாக்கிப்பணத்தையும்வட்டியையும் படிச்செலவையும ஜப்திக்குப்பிடித்த அவசியமானசெலவுகளையும் கட்டுகிறதாகப் பணங்கொண்டுவந்தால உடனே அந்தப்பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு, தட்சணம் ஜப்தி விடுதலைசெய்யவேண்டியது.

௧௧. ஜப்திதாரனானவன் பாக்கிதாரனுடைய நிலத்திலுண்டாகிய பயிர்களையாவது பறிக்காமலிருக்கிற பலன்களையாவது ஜப்தி செய்தால், அறுக்கத்தகுந்த அல்லது பறிக்கத்தகுந்தகாலத்தில் அதுகளை அவன் விற்பனைசெய்விக்கலாம்; அல்லது தனக்குயுக்தமாகத்தோற்றினால், தகுந்தகாலத்தில் அதுகளை அறுத்து அல்லது பறித்து, விற்பனையாகிறவரையில் தகுந்தஇடத்தில் சேர்ப்பிக்கலாம். இவ்விதமாக அறுத்துப்பறித்துச் சேர்த்துவைத்தால, அதற்காகப் பிடிக்கிறசெலவை - சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிற பட்சத்தில், அவன்கொடுக்கவேண்டியது; அந்த சொத்து விற்பனைசெய்யப்படுகிற பட்சத்தில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும்; யாதொரு ரயித்தினுடைய பயிராவது பலனாவது விற்பனைசெய்யப்பட்டால், அவன் அந்தப் பயிர் அல்லது பலனுக்குண்டாகிய கிரயத்தை - அது உற்பத்தியான நிலத்திற்காக அப்போதாகிலும் பின்பாகிலும் தான்கொடுக்கவேண்டிய குத்தகைத்தொகையிலே கழித்துக்கொள்ளலாம். மேலும் சர்க்கார்தீர்வை பாக்கிக்காக யாதொரு ரயித்தினுடைய மாகூல் ஜப்திசெய்யப்பட்டால், அவன் அந்தபாக்கியைச் செலுத்திவிட்டு, அந்தப்பணத்தை அப்போதாகிலும் பின்பாகிலும் தான்கொடுக்கவேண்டிய குத்தகைத்தொகையிலே மேற்சொல்லியவிதமாய்க் கழித்துக்கொள்ளலாம்.

௧௨. ஜப்திதாரனானவன் - ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய பிராணிகளிடத்தில் வேலைவாங்கவுங்கூடாது, ஜப்திசெய்யப்பட்ட சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவுங்கூடாது; ஜப்தி

தாரன் ஆடுமாடுமுதலிய பிராணிகளுக்கு வேண்டியதீனிபோட வேண்டியது, அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில் அவன்கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிறபட்சத்தில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும்.

கங. ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது வேண்டிய முன்ஜாக்கிறதையோடு தகுந்தபத்திரஞ் செய்யப்படாமையினாலாவது, அதினிடத்தில் அக்கிரமமாய் வேலைவாங்கினதினாலாவது, அதை உபயோகப்படுத்தினதினாலாவது களவுபோனாலும், போக்கடிந்தாலும் சேதமானாலும், யாருடையஅஜாக்கிரதை அல்லது செய்கையினாலே அப்படி நேரிட்டதோ அந்தஉத்தியோகஸ்தனிடத்திலே கலெக்ட்டரானவர் சுருக்கமான நடவடிக்கையினாலே அந்தநஷ்டம் அல்லது சேதத்தொகையை வசூல்செய்யலாகும்; அப்படி வசூலாகிறதொகையை நஷ்டமடைந்தவனுக்குக் கொடுக்கவேண்டும்.

கச. ஜப்திசெய்யப்படுகிற சொத்தானது பாக்கிதொகைக்கு அதிகப்படாமல், கூடியவரையிலே சுமாராக பாக்கித்தொகை எவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டியது.

கரு. சூரியஉதயத்திற்குப்பின்பு சூரியஅஸ்தமானத்திற்குள் ஜப்திசெய்யவேணுமேயல்லாமல், வேறெ எந்தகாலத்திலாவது ஜப்திசெய்யக்கூடாது.

கசு. பாக்கிக்காகச்செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக்கொண்டுபோய்விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியன்பினல்கோடின் உஉச வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

கஎ. பாக்கிதாரனாகவாவது அவனுக்கு உத்தரவாதியாகவாவதிராத வேறேஎவனாகிலும் ஜப்திசெய்யப்பட்டசொத்துக்கு தாவாசெய்தும், ஜப்திதாரன் அந்தசொத்தை விற்பனைசெய்வித்தால், எதற்காக அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிறதோ அந்த சர்க்கார்பாக்கிக்காக அந்தசொத்து பொறுப்பானதென்று ஜப்திதாரன் ருஜுவுசெய்யமாட்டாமல், தகுந்தஅதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டில் மேற்படிதாவா ருஜுவாவதின்பேரில், அந்தந்த சங்கதிக்குத்தக்கபடி தாவாதாரன் அந்தசொத்தின் பூராவிலையை வட்டி ௸ செலவு - நஷ்டம் இதுகளுடனே ஜப்திதாரனிடத்தில்

வ்சூல்செய்துகொள்ளலாம். ஆனால், பாக்கிதாரனுடைய ஸ்வாதீனத்திலுள்ள நிலத்திலிருக்கிற பயிராவது பறிக்கப்பட்ட பலன்களாவது ஜப்திசெய்யப்பட்டால்; அதுகள் விற்பனையாவது கொதுவையாவது பின்னை எதுவாவது முன்னமேதானே செய்யப்பட்டிருக்கிறதென்கிற ஆதாரத்தின்பேரில் அதுகளைக்குறித்து வேறே தாவாசெய்யப்பட்டபோதிலும், அந்ததாவா - அந்த பயிர் அல்லது பலன் எந்தநிலத்தில் உற்பத்தியாச்சுதோ அந்தநிலத்திற்காக பாக்கியாயிருக்கிற சர்க்கார்தீர்வை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்கலாகமாட்டாது.

௧அ. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனாகிலும் எடுத்துக்கொண்டுபோய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சீவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அந்தகோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யலாம். மேலும் அப்படி குற்றஞ்செய்தவன் இந்தியன்பினல்கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

௧௯. யாதொருலாயம், மாட்டுக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு, வெளிப்புறத்துவீடு முதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்புவீட்டில் நுழையவும் ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு; மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்த குடியிருப்புவீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிதவிர, அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள்வாசஞ்செய்வதற்கு உரித்தான அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத்திறப்பதாவது நுழைவதாவது தகாது.

௨0. வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொரு குடியிருப்புவீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தாகவிடப்பட்டு தேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் ஜப்திதாரனுக்கு நினைக்க மூகாந்தரமிருந்தால், அந்ஜப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீசு ட்டாணாவின் தலைவனுக்கு அந்தசங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல் அந்த ட்டாணாதலைவன் ஒரு போலீசுசேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஜப்திதாரன் அவனைக்கூட்டிவைத்துக்கொண்டு, அந்தவீட்டிலுள் அந்தப்புரம்தவிர வேறே

யாதொரு அறையின்கதவைத்திறப்பதுபோலவே அந்தவீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறக்கலாம், மேலும் ஜப்திகாரன் அந்தபோலீசுசேவகனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தப்புரத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம்போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பயிரங்கத்தில் வரக்கூடாத மேலானஸ்திரீகளாயிருந்தால்,) அவர்கள் தகுந்தபடி அப்புறம்போவதற்கு என்னவகைசெய்யவேணுமோ அதைச்செய்தபின்பு, அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு அந்தஅறைகளுக்குள் நுழையலாம்; ஆனால் அவ்விடத்திலே பாக்கிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியிலெடுத்துக்கொண்டு வந்துவிட்டு, அந்தஅறைகளை அந்தஅந்தப்புரத்து ஸ்திரீகளுக்குப் பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

௨௧. மனிதர்கள், இந்தஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைகளுக்குள் நுழைந்தாலும், குடியிருப்புவீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறந்தாலும், அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்குமுன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் - ௫00- ரூபாய்வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவார்கள்.

௨௨. ஜப்திசெய்யப்பட்டசொத்தை ஏலம்போடுவதற்கு- ௧௮௬௪ - ௵த்து - எ - வது ஆக்ட்டின்படி அதிகாரம்பெற்ற சர்க்கார்உத்தியோகஸ்தரானவர் - விற்கப்படும்சொத்துக்கு ஒரு ஜாபிதாஎழுதி அதையும், ஜப்திசெய்யப்பட்டசொத்து இன்னஇடத்தில இன்னதேதியில இத்தனைமணிக்கு ஏலம்போடப்படுமென்று ஒரு இஸ்தியார்நாமாவையும், பாக்கிதாரனுடைய வீட்டு வெளிக்கதவில ஒட்டுவிக்கவேண்டியதுமல்லாமல, எந்தநிலத்திற்காக பாக்கியேற்பட்டதோ அந்த நிலமிருக்கிற கிராமத்திலும், மற்ற எங்கெங்கஇடத்தில் அந்தஏலத்தைக்குறித்துத் தகுந்தபடி பிரசித்தஞ் செய்யவேணுமென்று கலெக்டராவது அதற்காக அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது நினைக்கிறாரோ அவ்விடங்களிலும் தண்டோராபோடுவிக்கவும்வேண்டியது. மேற்சொல்லியபடி இஸ்தியார்நாமா ஒட்டப்பட்டதேதிமுதல் பதினைந்துநாள் சென்றபின்பேயல்லாமல அதற்குள்ளாக ஏலம்போடப்படாது.

௨௩. நேமிக்கப்பட்டகாலத்திலே மேற்படி உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி சொத்தானது ஒரேகூறாகவாவது

பலகூறுகளாகப் பிரிக்கப்பட்டாவது, ஏலத்தில் கடைசியாய் உயர்ந்தவிலேக்குக்கேட்கிறவனுக்கு விற்றுப்போடப்படும். அந்த சொத்து, பாக்கிப்பணத்துக்கு ஜாஸ்தியாய் விற்பனேயானல், அந்தஜாஸ்திபணத்திலே ஜப்தி - ஏலம் - முதலானதுகளுக்குப் பிடித்தசெலவுகளேயும் வட்டியையும் தள்ளிக்கொண்டு மிகுதியை அந்தபாக்கிதாரனுக்குக் கொடுத்துவிடவேண்டியது.

உச. சொத்து விற்பனேசெய்யப்பட்டகாலத்திலாவது, விற்பனேசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நியமிக்கிறகாலத்திற்குள்ளாவது, அந்தசொத்தை வாங்கினவன் ரொக்கப்பணஞ்செலுத்தவேண்டியது; அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்தசொத்தில் எவ்வளவையாவது அவனே எடுத்துக்கொண்டு போகவொட்டக்கூடாது. விலேக்குவாங்கினவன் கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டால், அந்தசொத்து மறுபடி ஏலம்போடப்படும்; அப்படிச்செய்வதினலே ஏதாவது நஷ்டமுண்டானல் அதுவும், மறுபடி ஏலம்போடுவதற்குப் பிடிக்கிறசெலவும், முன்னே ஏலத்திலெடுத்துப் பணங்கட்டாமற்போனவனிடத்தில் வசூல்செய்யப்படும். அந்தசொத்து முதல்ஏலத்தைவிட இரண்டாவதுஏலத்தில் அதிகவிலேக்குவிற்றால், அந்த அதிகப்பணமானது எவன் பொருட்டு மேற்படி முதல்ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது.

உரு. கலெக்ட்டராவது, ஜப்திபண்ணும்படி அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது, பாக்கிதாரனுடைய நிலத்தையாகிலும் அதின்பேரிலிருக்கிற கட்டடத்தையாகிலும் ஜப்திசெய்யத்தொடங்குவதற்குமுன்னமே, அவர் தண்டல்பத்திரிகை தயார்செய்து, அதில் பாக்கிதொகையையும், எதற்காகபாக்கி சேரவேண்டியிருக்கிறதோ அந்த பூஸ்திதி அல்லது நிலத்தையும், பாக்கிதாரனுடையபேரையும், தண்டல்பத்திரிகையைக் கொண்டுபோய்க்கொடுக்கிறவனுக்குச் சேரவேண்டிய படிச்செலவையும், எதின்பேரில் பாக்கியிருக்கிறதோ அந்தநிலத்துக்குப் பணம்செலுத்தப்படவேண்டிய இடத்திற்குமிருக்கிற தூரத்தையோசித்து அதற்குத்தக்கபடி பணஞ்செலுத்துவதற்காக நிச்சயிக்கப்படுகிறகாலத்தையும் கண்டெழுதி, அதை பாக்கிதாரனுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது. அந்த தண்டல்பத்திரிகையைச் சேர்ப்பிக்கிறவித மெப்படிக்கென்றால், அந்த பாக்கிதாரனிடத்திலாவது, அவன்வழக்கமாய் வாசஞ்செய்கிறஇடத்தில் அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த யாதொருவயதுவந்த ஆண்பிள்ளேயினிடத்திலாவது, அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலா

வது ஒருபிரதியை ஒப்பிக்கவேண்டியது, அல்லது அவன்கடைசியில் வாசஞ்செய்ததாகத் தெரியவருகிற இடத்திலாவது ஜப்திசெய்யப்போகிற நிலமிருக்கிற இடத்திலாவது, எல்லாருக்குந்தெரியும்படி ஒருநகலை ஒட்டவேண்டியது.

௨௬. தண்டல்பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்டருக்காவது அவரால நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், அவர் - பாக்கிதாரனுடையநிலத்தை அடியில்கண்டிருக்கிற விதமாய் ஜப்திசெய்து ஏலத்தில்விற்று அந்தபாக்கியை வசூல்செய்யத்தொடங்கவேண்டியது.

௨௭. நிலமிருக்கிற இடத்திலே எல்லாருக்குந்தெரியும்படி, இஸ்தியார்ஒட்டி ஜப்திசெய்யவேண்டியது. பாக்கியும் அதற்குவட்டியும் செலவுகளும் இன்னதேதிக்குள் செலுத்தப்படாவிட்டால அந்தநிலமானது சட்டப்படி ஏலத்தில் விற்றுப்போடப்படுமென்று அந்த இஸ்தியாரில் கண்டெழுதவேண்டியது. ஜப்தியை நிலத்தினிடத்தில் பிரசித்தஞ்செய்யவேண்டியதுமல்லாமல் ஜில்லா கெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

௨௮. பாக்கிதாரனுடைய நிலத்தை ஜப்திசெய்கையிலாகிலும், அது ஜப்தியிலிருக்கையி லெப்போதாகிலும், அந்த நிலத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவர கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படிசெய்கிறபட்சத்தில், அவர் அப்படி நடத்திவருவதற்காக தகுந்த சிப்பந்திகள் சகிதமாய் ஒருஏஜெண்டை நேமித்து, இன்னபடி நடந்துகொள்ள வேண்டியதென்று கண்டெழுதி தன்னுடையமுத்திரையுங் கையெழுத்தும்போட்டு அந்தஏஜெண்டுக்கு ஒரு நேமனபத்திரிகை கொடுக்கவேண்டியது; அப்படி காரியம நடத்திவருவதற்காகப், பிடிக்கிறசெலவுகள் அந்தசொத்தின் வரும்படியிலிருந்து செலவழிக்கப்படும்; ஆனால் சொத்தானது மிகவும் சொற்பமாயிருந்து, அதின் வரும்படியிலிருந்து ஏஜெண்டுக்கு சம்பளம் கொடுக்கக்கூடாமையாயிருந்தால், கலெக்டர்நேமிக்கிற ரிவினியூ உத்தியோகஸ்தன்வசத்தில் அது ஒப்பிக்கப்படும், அந்த உத்தியோகஸ்தன் ஏஜெண்டுகளைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற எல்லாநிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டியது.

௨௯. அப்படி அந்தசொத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவரப் போகிறதைக்குறித்து பாக்கிதாரனுக்கு ௨௫ - வதுபிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் உடனே நோட்டீசு கொடுக்கவே

ண்டியாதுமல்லாமல்; அதை அந்த நிலத்தினிடத்தில் பிரசித்தஞ் செய்து, ஜில்லாகேஜட்டிலும் பிரசித்தஞ்செய்யவேண்டியது.

௫௦. ௨௮ - வதுபிரிவின்படி ஏஜெண்டானவர் காரியங்களை நடத்திவருகையில், அந்தபாக்கிதாரனுக்கும் அவனிடத்தில் குத்தகைசெய்துகொண்டிருக்கிறவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கைகளின்பிரகாரமாவது, அப்படி உடன்படிக்கைகளேற்பட்டிராவிட்டால் நடந்துவருகிற வழக்கப்படிக்காவது அந்தசொத்தைக்குறித்து அதுவரையில் பாக்கியாயும் இனிவரவேண்டியதாயுமிருக்கிற குத்தகைத்தொகைகளையும் வரும்படிகளையும் அந்தஏஜெண்டு வசூல்செய்து, வரவுசெலவுகளுக்குக் கணக்கெழுதி, அந்தக்கணக்கையும் மீதிப்பணத்தையும் கலெக்ட்டரிடத்திற்காவது கலெக்ட்டரால்நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவது மாதாந்தரமாகிலும் கேட்கப்படும்போதாகிலும் அனுப்பிவிடவேண்டியது. மேற்படி பாக்கிதாரன் தகுந்தகாலங்களிலே அந்தக் கணக்குகளைப்பார்வையிடலாம். சட்டணம் ஒன்றுங்கொடாமலே தன்னுடையசொந்தசெலவில் அதுகளுக்கு நகல்களெழுதிக்கொள்ளலாம்.

௫௧. மேற்படி பாக்கிதாரனுக்காவது அவனுடையசொத்துக்காவது கெடுதியுண்டாகும்படி ஏஜெண்டினல் சட்டத்துக்குவிரோதமாய் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து அந்தஏஜெண்டின்பேரில் அந்தபாக்கிதாரன் வியாச்சியமாவது தொடரலாம். பிரியாதாவதுசெய்யலாம்; உட்கடைபாத்தியத்திலே அனுபவிக்கிற ரயித்துகள் முதலானவர்களெல்லோரும் பாக்கிதாரனல் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து நியாயந்தேடிக்கொள்ளுவதுபோலவே ஏஜெண்டினல்செய்யப்படுகிற அநியாயத்திற்கும் நியாயந்தேடிக்கொள்ளலாம்.

௫௨. பூமிக்குடையவனுக்கும் அவனுடைய ரயித்துகளுக்கும் பிறந்திருக்கிற உடன்படிக்கைகளிலே இதில்பின்னல் கண்டிருப்பவைகள்தவிர மற்றெல்லா உடன்படிக்கைகளின்படிக்கும் கலெக்ட்டரானவர் ஜப்திகாலத்தில் நடத்திவரவேண்டியது; ஆனல், ஜப்தியை பிரயோஜனப்படவொட்டாமல் கெடுக்கவேணுமென்றாவது ஆலசியப்படுத்தவேணுமென்றாவது கெட்டஎண்ணத்தோடுசேர்ந்துசெய்யப்பட்ட அவ்விதமான சகலஉடன்படிக்கைகளும், தொழிற்சாலைகள் அல்லது கட்டடங்கள் கட்டும்பொருட்டாவது காம்புநிலத்தை சாகுபடிபண்ணும்பொருட்டாவது விடப்படாமல், வழக்கமான தீர்வையைப்பார்க்கிலும் குறைந்தவீதத்திற்குவிடப்பட்டிருக்கிற நிலத்தின் குத்தகைச்சீட்டுகளும், ஜப்திக்குப்பின்

பு செய்யப்பட்ட சகலஉடன்படிக்கைகளும் ரத்தாகுமென்று கலெக்டர் பிரசித்தஞ்செய்வாராகில், அப்படிப்பட்டதுகள் அவர்பேரில்தொடருவதற்குச் சம்பந்தமற்று ரத்தாய்விடும்; ஆயினும் அப்படிப்பட்ட உடன்படிக்கையில் சம்பந்தமுள்ளவர்கள் தங்களுடையசுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ளுவதற்கு சாதாரணமான நியாஸ்தலங்களிலே கலெக்டர்பேரில் வியாச்சியங்கொண்டுவர பாத்தியமுடையவர்களாவார்கள்; அப்படிப்பட்டநிலத்தின்பேரில் கொறுவைமுதலிய எவ்விதமான செலவுகளிருந்தபோதிலும் அதுகளையெல்லாம் நிறுத்திப்போட்டு முன்னமே சர்க்கார்தீர்வை செலுத்தப்படும்.

௩௩. செலுத்தவேண்டிய கெடுவாய்ப்போயிருக்கிற குத்தகைத்தொகையைக்குறித்தாவது வரும்படியைக்குறித்தாவது பூமிக்குடையவனிடத்திலாகிலும் அவனுக்காகவாகிலும், அவனுடைய குத்தகைதாரன் - சொத்தைச்சேர்ந்தகாரியங்கள் நடத்திவரப்படுமென்று மேற்சொல்லியபடி பிரசித்தஞ்செய்யப்படுவதற்கு முன்னமே பணஞ்செலுத்தியிருந்தால், அதை கலெக்டர் ஒப்புக்கொள்ளவேண்டியது; அப்படி பிரசித்தஞ்செய்யப்பட்டபின்பாவது செலுத்தவேண்டிய கெடுவாவதற்குமுன்னமேயாவது செலுத்தப்பட்டபணமானது கலெக்டரால் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதல்லாமையினாலே, முன்னமே அதை யார்செலுத்தினார்களோ அவர்களுக்கு இஷ்டமிருந்தால், சாதாரணமானகோர்ட்டுகளிலே பாக்கிதாரன்பேரில் வியாச்சியந்தொடரலாமென்று உத்தரவுசெய்துவிட்டு, அவர்களிடத்திலிருந்து தொகைமுழுமையையும் குத்தகைத்தொகை பாக்கியைப்போலவே வசூல்செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

௩௪. ஜப்திசொத்திலிருந்துவந்தபணத்திலே ஜப்திசெலவும் சொத்துவிசாரணைசெலவும் செலுத்தப்பட்டபின்பு, மற்றதை தீர்வைபாக்கிக்கும், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு அதின்பேரில் கூடுகிறவட்டிக்கும் செல்லாக பாக்கிதாரன்பேரால் வரவுவைத்துக்கொண்டேவந்து, இவ்விதமாய் தீர்வைபாக்கிமுழுமையும் வட்டியும் ஜப்திசெலவும் சொத்துவிசாரணைசெலவும் தீர்ந்துபோனவுடனே ஜப்திவிடுதலைசெய்யப்பட்டு, ஜப்தியிலிருந்தவரையிலுண்டான சகல வரவுசெலவுகளுக்கும் பூர்த்தியாய்க் கணக்குக்கொடுக்கப்படும்.

௩௫. ஜப்திசெய்யப்பட்டாவது ஜப்திசெய்யப்படப்போகிறதாகவாவதிருக்கிறநிலத்தில் பாத்தியமுடையவனெவனாகிலும் தீர்வைபாக்கியையும் வட்டியையும் மற்றுமுண்டான செலவுகளையும்

செலுத்தி அந்தநிலத்தை ஜப்தியிலிருந்து நிவர்த்திசெய்துகொள்ளலாம்; அப்படி நிவர்த்திசெய்துகொள்ளுவதற்காக யாதொருவரயித்து பணஞ்செலுத்தினால் அந்தப்பணத்தை அவன் பாக்கிதாரனுக்கு அப்போதாகிலும பின்பாகிலுங் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத்தகைத்தொகையிலே கழித்துக்கொள்ளலாம்; அந்தசொத்தின்பேரில் கொதுவையாகவாவதுவேறே எவ்விதமாகவாவது பணங்கொடுத்திருக்கிறவன் மேற்படி தொகையைச்செலுத்தினால் அது அவனுக்கு மேற்படிபாக்கிதாரன் அந்தநிலத்தின்பேரில் கொடுக்கவேண்டிய கடனாகும்; அப்படியானபோதிலும், மற்றகடன்களைப்போலவே பணஞ்செலுத்தப்பட்ட தேதிவரிசைப்படி அவனுக்குச் செலுத்தப்படும்.

௩௫. இந்தஆக்ட்டின்படி அசையாப்பொருளை விற்கையில் அனுசரிக்கவேண்டிய விதிகளென்னவென்றால்:—

முதலாவது. பகிரங்கமானஏலத்தில் உயர்ந்தவிலைக்குக் கேட்கிறவனுக்கு விற்கப்படும். அந்தசொத்துஇருக்கிற ஜில்லாவின் கலெக்ட்டராவது அவரால்நேமிக்கப்பட்ட வேறேயதிகாரியாவது ஏலத்திற்கு காலத்தையும் இடத்தையும் நிச்சயிக்கவேண்டியது. அந்தக்காலமானது பசலிவருஷம் முடிவதற்குமுன்னிட்டாவது பின்னிட்டாவதிருக்கலாம்.

இரண்டாவது. ஏலம்போடுவதற்குமுன்னமே கலெக்ட்டராவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது - பாக்கிதாரனுடையபேரையும், நிலத்தின் இருப்பிடத்தையும் அளவையும், அதின்பேரில்கட்டியிருக்கிற அவனுடையகட்டடங்களின் நிலமையையும் விஸ்தீர்ணத்தையும்; அந்த நிலமொத்தத்திற்காவது துண்டுதுண்டாகவாவது போடப்பட்டிருக்கிற தீர்வைத்தொகையையும், நடக்கிற பசலியின்மீதிகாலத்திற்கு சர்க்கார்தீர்வைபாக்கி இவ்வளவென்பதையும், இன்னகாலத்தில் இன்ன இடத்திலே இன்னஷரத்துகளின்படி ஏலம்போடப்படுமென்பதையும் கண்டெழுதி இங்கிலீஷிலும் அந்தஜில்லாவில் வழங்கிவருகிறபாஷையிலும இஸ்தியார்பிறப்பித்து, அதை - ஏலம்போடுவதற்கு அதாவ ஒருமாசத்திற்குமுன்னமே கலெக்ட்டர் கச்சேரியிலும் தாலூக்காகச்சேரியிலும் சமீபத்திலிருக்கிற ட்டாணாவிலும் அந்தநிலத்தில் எல்லாருக்குந்தெரியும்படியான இடத்திலும் ஒட்டவேண்டியது.

மூன்றாவது. நிலங்களை ஏலத்திலெடுக்கிறவன் அந்தக் கிரயத்தொகையில் நூற்றுக்கு பதினைந்துவிழுக்காடு கலெக்ட்டரிடத்தி

லாகிலும் அவரால்நேமிக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் ஏலத்திலெடுக்குங்காலத்தில் டிபாசிட் கட்டவேண்டியது. கிரயத்தொகையில் மற்றபணத்தை முப்பதுநாளைக்குள் அவன் செலுத்தாவிட்டால், அந்த டிபாசிட்பணத்தை இழந்துவிடுவான்.

நாலாவது ஏலத்திலெடுக்கிறவன் மேற்சொல்லியபடி டிபாசிட்கட்டாவிட்டாலும கட்டமாட்டேனென்றாலும், டிபாசிட்கட்டினபோதிலும் மற்றகிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டாலும், அந்தசொத்தை மறுபடி ஏலமபோட்டு, அதினாலுண்டாகிற செலவையும் நஷ்டத்தையும் சர்க்கார் தீர்வைபாக்கியை வசூல்செய்கிறவிதமாகவே முன்னே ஏலத்தில எடுத்தவனிடத்தில் வசூல்செய்யலாகும். அந்தவிலம் முதல் ஏலத்தைவிட இரண்டாவதுஏலத்தில் அதிகவிலைக்குவிற்றால அந்த அதிகபணமானது எவன்பொருட்டு மேற்படி முதல்ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது.

ஐந்தாவது. ஏலத்தில் விலைகேட்கிறவர்களெல்லோரையும் தங்கள் சொந்தத்திற்கு விலைகேட்கிறார்களோ அல்லது ஏஜெண்டுகளாக விலைகேட்கிறார்களோ அதைச் சொல்லுமபடிகேட்டு, ஏஜெண்டுகளாயிருந்தால் முதலாளிகளுடைய கையெழுத்துப்பட அதிகாரபத்திரத்தைக்கொண்டுவந்து கொடுக்கச்சொலலலாம். கேட்கப்பட்டபடி அவர்கள்செய்யாவிட்டால், அவர்கள் ஏலத்தில் விலைகேட்பது தள்ளுகடைசெய்யப்படும்.

கன. பாக்கிதாரனாவது, அவனுக்காகக் காரியங்களைநடத்துகிற எவனாவது, நிலத்தில் பாத்தியமுடையவனெவனாவது, தீர்வைபாக்கி முழுமையையும் அதற்குவட்டியையும, பாக்கியைத்தண்டல்செய்வதற்கும சொத்தை ஜப்திசெய்வதற்கும் அதை விசாரணைசெய்வதற்கும் ஏலம்போடுவதற்குவேண்டிய பிரயத்தனங்களைச்செய்வதற்கும் பிடிக்கிற சகலசெலவுகளையும் கொண்டுவந்துகட்டினால் ஏலமபோடுவது நிறுத்திவிடப்படும்: ஆனால் அப்படி பணங்கட்டுகிறவர்கள் ஏலத்திற்கு நிச்சயித்திருக்கிற தினத்திற்குமுன்னாள் சூரிய அஸ்தமானத்திற்குள்கட்டவேணும். அப்படியாதொரு ரயித்தாவது அந்த சொத்தின்பேரில் கொதுவையாகிலும் வேறே எவ்விதமாகவாகிலும் பணங்கொடுத்திருக்கிறவனாவது கட்டினால், அந்தத்தொகையை கடு - வதுபிரிவில சொல்லியிருக்கிறவிதமாய் வசூல்செய்துகொள்ளலாம்.

கஅ. எவன்பெயரால்நிலங்கள் ஏலத்தில்எடுக்கப்படுகிறதோ அவன்பெயருக்கு அதுகளை ரிஜிஸ்தர்செய்து, கலெக்டருடைய

கையெழுத்தும் முத்திரையும்போட்டு அவனுக்கு ஏலவிக்கிரயச்சீட்டு கொடுக்கப்படும்; அந்த சீட்டானது அந்தவிக்கிரயத்தை எந்தக்கோர்ட்டில ஸ்தாபிக்கவேணுமோ அந்தக்கோர்ட்டுகளிலும் நிதிஸ்தலங்களிலும் அப்படி ஏலத்தில்கொண்டது உண்மை யென்பதற்கு உறுதியானசாட்சியாகும்; அந்த ஏலவிக்கிரயச்சீட்டு யாரிடத்தில்கொண்டுவந்து காட்டப்படுகிறதோ அந்த அதிகாரியானவர் அதிலுள்ள கலெக்ட்டர் கையெழுத்தாவது முத்திரையாவது உண்மையானதோ அல்லவோவென்று அனுமானித்தாலொழிய, அதைக்குறித்து ருஜுசெய்விக்கப்படவேணுமென்பதில்லை.

௩௯. நிலங்கள் ஏலத்தில்கொள்ளப்பட்டால், கலெக்ட்டராவது கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது கிரயத்துக்குக் கொண்டவனுடைய பெயரையும், கொண்டதேதியையும், மேற்படிநிலங்களில் உடையவனுக்கு முன்னமே உண்டாயிருந்த சகலசுதந்தரங்களும் பாத்தியதையும் சட்டப்படி ஏலக்கிரயக்காரனுக்குக் குண்டென்பதையும், ஏலம்போடப்பட்ட நிலங்களிருக்கிற கிராமங்களிலும், தாலூகாகச்சேரியிலும், அந்த ஜில்லா உஜூர்கச்சேரியிலும், ஜில்லாகேஜட்டிலும் பிரசித்தஞ்செய்யவேண்டியது.

௪0. அப்படி பிரசித்தஞ்செய்யப்பட்டிருந்தும், நிலத்தைநியாயமாய் ஏலத்தில்கொண்டவன் அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளவொட்டாமல் தடுக்கப்படுவானாகில் தகுந்த அதிகாரமுடைய யாதொருகோர்ட்டாரிடத்தில் மனுவுசெய்துகொண்டு, ௩௮-வது பிரிவில்சொல்லியிருக்கிற ஏலவிக்கிரயச்சீட்டைக் காட்டுவதின்பேரில், அந்தக்கோர்ட்டார் அந்தநிலம் கிரயக்காரனுக்கு சித்திக்கும்படி கோர்ட்டுதீர்ப்பாயிருந்தாலெப்படியோ அவ்விதமாகவே அவனுக்கு அதை ஸ்வாதீனப்படுத்தும்பொருட்டு தகுந்தகட்டளை பிறப்பிக்கவேண்டியது.

௪௧. பாக்கிதாரன் தன்னுடைய ரயித்துகளிடத்தில் செய்துகொண்டிருக்கிற சகலஉடன்படிக்கைகளையும், அவர்கள் அவனுக்குச் செலுத்தியிருக்கிற சகலதொகைகளையும், அப்படிப்பட்டதை என்னதிட்டங்களின்படி எவ்வளவுமட்டில் ஒப்புக்கொள்ளவேணுமென்று இந்தஆக்ட்டு - ௩௨ - வது - ௩௩ - வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறதோ அந்தப்படியே ஏலக்கிரயக்காரன் ஒப்புக்கொள்ளவேண்டியது.

௪௨. சர்க்கார் தீர்வைபாக்கிக்காகஏலம்போடும்படியான நிலங்களின்மேரில் தொகுவை முதலியசிக்குகள் என்ன இருந்தபோ

திலும் நிமித்தமில்லாமல் அறுகள் ஏலத்தில்விற்கப்படும்; விற்ற பணத்திலே - தீர்வைபாக்கியும் வட்டியும் ஜப்திசெலவும் ஏலச்செலவும் அந்தபாக்கியைக் குறித்துண்டான மற்றசெலவுகளும் செலுத்தப்பட்டபின்பு மிகுதியேதாவதிருந்தால் அதைபாக்கிதாரனுக்குக் கொடுக்கக்கூடாதென்று தகுந்த அதிகாரமுடைய யாதொருகோர்ட்டுகட்டளையினால் தடுக்கப்பட்டாலொழிய அவனுக்குக் கொடுத்துவிடலாகும்.

௪௩. ஏலம்போடப்படுமாகில், அன்றையவரையில் பாக்கிதாரனுக்கு அவனுடையரயித்துகள் கொடுக்கவேண்டியதா யிருக்கிற குத்தகைத்தொகைபாக்கியை அவன் மேற்படி ஏலத்திற்கு முன்னமே வசூல்பண்ணுவதற்குச் செய்யும்படியான வகைகளில் ஜப்தி தவிர வேறேயாதொரு நடவடிக்கையை அந்த ஏலத்திற்குப்பின்புநடத்தி வசூல்செய்துகொள்ளலாம்.

௪௪. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக பாக்கிதாரனுடைய நிலமுழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் விற்பதற்குக லெக்ட்டருக்காவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு, ஆனால் அந்த நிலத்திலே - தீர்வைபாக்கியையும் அதற்குவட்டியையும் ஜப்திசெலவையும் விசாரணைசெய்வதற்கும் ஏலம்போடுவதற்குமுண்டான செலவுகளையும் செலுத்துவதற்கு எவ்வளவுபோதுமோ அதைவிட அதிகமாக சாத்தியமானமட்டில் விற்கக்கூடாது.

௪௫. மில்கதில்ஸ்திமிராார் சன்னதின்படிக்காவது மொத்தமாக தீர்வை செலுத்திக்கொண்டாவது அனுபவிக்கப்படுகிற யாதொரு பூஸ்திதியின் ஓர்பாகமாத்திரம் ஏலத்தில்விற்கப்பட்டால், அந்தபாகத்திற்குத்தீர்வை இவ்வளவென்று கலெக்ட்டரானவர்ஏலத்திற்கு முன்னமே நிச்சயிக்கவேண்டியது; எப்படிக்கென்றால்:—

பூஸ்திதி முழுமைக்குமுண்டான சர்க்கார் தீர்வைமொத்தத்தை அந்தஸ்திதிமுழுமையும் என்னவிலையாயிருக்கிறதோ அதற்குத்தீர்வைவீதமாக வைத்துக்கொண்டு, அந்தவீதப்படிக்கு அந்தபூஸ்திதி பிரிக்கப்படுகிற அந்தந்தபாகத்திற்கு ஏற்படுகிறகிரயத்தின் பேரில் அந்தந்தபாகத்திற்கு சர்க்கார்தீர்வை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டியது.

மேற்சொல்லியபடி நிச்சயிக்கும்பொருட்டு கலெக்ட்டரானவர் - பாகிக்கவேண்டிய அந்தநிலங்களில் உற்பத்தியான உடைவாரம் கண்டுமுதலையும் அந்தநிலங்களைச்சேர்ந்த காரியங்களைநடத்துவதற்குண்டான செலவுகளையுங்குறித்த கணக்குகளைக்கொடுத்

ரும்படி பூமிக்குடையவர்களுக்கும் கிராமகணக்கப்பிள்ளைகளு க்கும் உத்தரவுசெய்ய அதிகாரமுடையவராவார். அப்படிகேட் கும்போது அந்தபூமிக்குடையவர்களும் கணக்கப்பிள்ளைகளும் அப்போது நடக்கிறவருஷத்திற்கு முன்னிட்ட மூன்றுவருஷ ங்களின் கணக்குகளுக்குக் குறையாமல் அந்தக் கணக்குகளைக் கொடுக்கவேண்டியது. பாகிக்கப்பட்டநிலங்களுக்குத் தீர்வை நிச்சயிக்கவொட்டாமல் தடுக்கும்பொருட்டு பூமிக்குடையவன் கணக்கு கொடுக்கமாட்டேனென்றாலும் அக்கிரமமாய் ஆலசி யஞ்செய்தாலும், கலெக்ட்டரானவர் அந்தபூஸ்திதி முழுமை யையும் ஏலம்போட்டுவிடலாம்.

௪௬. பில்கதிஸ்தி மீரார் சன்னதின்படிக்காவது வேறே ஈதின்படிக்காவது அனுபவிக்கப்பட்டு, மொத்தமாகத்தீர்வை செலுத்தப்படுகிற பூஸ்திதியைப்பிரித்த பாகங்களின்பேரில் க லெக்ட்டரால்போடப்படுகிற சாஸ்விதமான தீர்வைத்தொகை யானது ரிவினியூபோர்டாரால் எழுத்துமூலமாய்ப் பிறப்பிக் கப்படுகிற உத்தரவினாலே ஊர்ஜிதஞ்செய்யப்படுகிறவரையில் ஸ்திரமாகமாட்டாது.

௪௭. பாக்கிதாரன் ஜாமீன்கொடுக்கிறதாயிருந்தால், கலெ க்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ் தராவது அதை வாங்கிக்கொண்டு, தான் நிச்சயிக்கிறகாலவரை யிலே தான் ஏற்படுத்துகிற திட்டங்களின்படி பாக்கிதாரனு டைய சொத்தை ஏலம்போடாமல் நிறுத்திவைக்கலாம்; அந்த திட்டங்களின்படி நடக்கத் தவறிப்போனால், அந்த கலெக்ட்ட ராவது உத்தியோகஸ்தராவது சொத்தை ஏலம்போட்டு, அந்த பாக்கிதாரன்பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலா வது இருவர்பேரிலுமாவது தொடரலாம்.

௪அ. மேற்சொல்லியபடி வட்டியுள்பட சர்க்கார்தீர்வை பாக்கிக்கும் மற்றசெலவுகளுக்கும் பாக்கிதாரன் அல்லது அவ னுடைய ஜாமீன்தாரன்சொத்தை விற்றபணம் போதாமலிரு ந்து, பாக்கிதாரனாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனாகிலும்வே ணுமென்று பாக்கியைக் கட்டாமலிருக்கிறதாகவாவது, பணங் கட்டாமல் மோசஞ்செய்யும்பொருட்டு யாதொரு சூதானகாரி யஞ் செய்ததாகவாவது நம்புவதற்கு கலெக்ட்டருக்குத்தகுந்த் முகாந்தரமிருந்தால், அவர் இதில் பின்னால் சொல்லியிருக்கி

றபடி ஸ்திரிஜாதிதவிர புருஷனாயிருக்கிற பாக்கிதாரனையாகிலும் ஜாமீன்தாரனையாகிலும் பிடித்து சிறைச்சாலையில் வைப்பிக்கலாம்; ஆனால் சர்க்கார் தீர்வைபாக்கிக்காக இரண்டுவருஷத்திற்கதிகமாய் ஒருவனையும் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது; அந்தபாக்கி ௫௦௦ - ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ஆறுமாசத்திற்கதிகமாயும், ௫௦ - ரூபாய்க்கு மேற்படாவிட்டால், மூன்றுமாசத்திற்கதிகமாயும் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது. மேலும் மேற்சொல்லிய கிரமப்படி காவலில் வைத்தபோதிலும் அந்த பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியபாக்கிசெத்துப்போகமாட்டாது.

௪௯. ஸ்திரீகள்தவிர, புருஷனாகிய பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்வதற்கு கலெக்ட்டர் வாரண்டுபிறப்பித்து, அதில்அப்படி பிடிக்கப்படவேண்டியவர்களுடைய பேர்களையும், சர்க்கார்தீர்வை பாக்கித்தொகையையும், செலுத்தவேண்டிய கெடுவானதேதியையும்கண்டெழுதி, தன்கையெழுத்தும் முத்திரையும்போடவேண்டியது. பின்பு அந்தவாரண்டை நிறைவேற்றும்படி அது யாரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்து, டிஸ்திரிக்ட்டுஜெயிலுக்கு இட்டுக்கொண்டுபோய், அந்தவாரண்டை ஜெயிலரிடத்தில் ஒப்பிக்கவேண்டியது; அப்படிப்பட்ட கைதிகளை ஜெயிலில்வைத்துக்கொள்ள அந்தஜெயிலருக்கு அதிகாரமுண்டாக்குவதற்கு அந்தவாரண்டேபோதும். அந்தஜெயிலர் அந்த வாரண்டுக்கு நகலை தன்னிடத்தில்வைத்துக்கொண்டுஅசலை அந்தஜெயில் விசாரணை அதிகாரியினிடத்திற்கு உடனே அனுப்பிவிடவேண்டும்.

௫௦. சர்க்கார்தீர்வை பாக்கிதாரர்கள் விஷயமாய் இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற சகலநடவடிக்கைகளையும் அவர்களுடைய ஜாமீன்தாரர்கள் பேரில் நடத்தலாம்; அப்படிப்பட்ட நடவடிக்கைகளை முதலாளியின்பேரில் நடத்துகிற காலத்தில்தானேயாவது அதற்குமுன்னிட்டாவது பின்னிட்டாவது ஜாமீன்தாரன்பேரில் நடத்துவதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு. ஆயினும் பாக்கித்தொகை வட்டிமுதலான செல

வுகளும் சேர்ந்தமொத்தத்தைவிட அதிகமாக இருவரிடத்திலும் வசூல்செய்யக்கூடாது.

௫௩. தானியமாக சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்தப்படத்தக்கதா யிருந்தால், கலெக்ட்டருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி பூமிக்குடையவன் தகுந்த ஜாமீன்கொடாதபட்சத்தில், தானியத்தைப்பங்கிட்டு சர்க்காருக்குச்சேரவேண்டியபாகத்தைப் பிரத்தியேகமாய் வைக்கிறவரையில் நிலத்திலிருந்து மாசூலையெடுத்துக்கொண்டு போகவொட்டாமல் தடுப்பதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு.

௫௨. சர்க்காருக்குச்சேரவேண்டிய நிலத்தீர்வைதவிர மற்ற சகலதீர்வைபாக்கிகளையும் சாகுபடி அல்லது தீர்வைசம்பந்தமான காரியங்களுக்காக சர்க்காரால் கொடுக்கப்பட்ட சகல தக்காவிகளையும், ரிவினியூ அல்லது போலீசு அலுவல்களிலிருக்கிற கிராம ஊழியக்காரர்களுக்கு அல்லது அவர்களுக்காக எவனாவது கொடுக்கவேண்டிய மேரை முதலானதுகளையும், சட்டப்படி நிலத்துக்குப்போட்டிருக்கிற சகல வரிஇறைகளையும், வேறேவிதமாம் வசூல்செய்யும்படி இதுவரையிலாவது இனிமேலாவது பிரத்தியேகமாய் நிபந்தனை யேற்பட்டிராதபட்சத்தில், இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி நிலத்தீர்வைபாக்கியைப்போலவே வசூல்செய்யலாம்.

௫௩. இந்த ஆக்ட்டின்படி நோட்டீசு வாரண்டு முதலானதுகளைக்கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு கவரன்மெண்டாருடைய அனுமதியின்பேரில் ரிவினியூ போர்ட்டாரால் அப்போதைக்கப்போது நிச்சயிக்கப்பட்டு டிஸ்திரிக்ட்டுகேஜட்டில் பிரசித்தஞ்செய்யப்படுகிற வீதப்பிரகாரம் படிகொடுக்கப்படும்.

௫௪. மேற்படி பிரிவில்கண்டிருக்கிற படிச்செலவும்இந்தஆக்ட்டின்படி ஏற்படுகிற வட்டிமுதலிய சகலசெலவுகளும் தீர்வை பாக்கியைப்போலவே பாக்கிதாரனிடத்திலும் அவனுடைய ஜாமீன்தார்களிடத்திலும் வசூல்செய்யத்தக்கதாகும்.

௫௫. ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை ஏலம்போடும்படி முன்னே உத்தரவு செய்யப்பட்டிரு

ந்து, அந்தவலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்ததும் அல்லது கைப்பற்றினதைக்குறித்து நேரிட்டசெலவுகளை அந்தவலம் நிறைவேறியிருந்தாற்போலவே அந்தசொத்துக்குடையவன் செலுத்தவேண்டும்; அவனதை செலுத்தாவிட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி தீர்வைபாக்கி வசூல்செய்யப்படுமோ அவ்விதமாகவே அது வசூல்செய்யப்படத்தக்கதாகும்.

௫௬. சர்க்கார்தீர்வைசெலுத்துகிற பிரதிமனிதனும், அதற்காக கலெக்டரினாலாவது அவரால் நேமிக்கப்பட்டவேறே உத்தியோகஸ்தனாலாவது கையெழுத்து செய்து கொடுக்கப்படுகிற ரசீதை பெற்றுக்கொள்ளத்தக்கவனாவான்; அந்த ரசீதிலே அப்படி செலுத்துகிறவனுடையபேரையும், அது இன்னதுக்காகச் செலுத்தப்பட்டதென்பதையும் கண்டெழுதவேண்டும்; நிலத்தீர்வைவிஷயத்தில் எந்தநிலத்திற்குத் தீர்வைசெலுத்தப்படுகிறதோ அந்தநிலத்தின் விவரத்தையும் அந்தநிலத்தைக்குறித்து ஜமாபந்திகணக்கில் தாக்கலாயிருக்கிறவர்களுடைய பேர்களையும் கண்டெழுதவேண்டியது.

௫௭. பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது எந்தடிஸ்திரிக்ட்டுக்குள் அவன் தீர்வை செலுத்தவேண்டியதோ அந்த டிஸ்திரிக்ட்டில் செலுத்தாமல் பாக்கி வைத்துக்கொண்டு அதற்குவெளியில் வாசஞ்செய்தாலும், அவ்விடத்திலே அவனுக்கு சொத்துஇருந்தாலும், அப்படி எந்த டிஸ்திரிக்ட்டில்பாக்கியாயிருக்கிறதோ அவ்விடத்தியகலெக்டர் மனுவு எழுதிக்கொள்ளுவதின்பேரில், மேற்படியான் எவ்விடத்தில் வாசஞ்செய்கிறானோ அல்லது அவனுக்கு சொத்து இருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட்டின் கலெக்டரானவர் தன்னுடைய டிஸ்திரிக்ட்டில் அப்படி பாக்கிவைத்துக்கொள்ளப்பட்டாற்போலவே சகலவிஷயங்களிலும் அந்த பாக்கிதாரன் பேரிலும் அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலும் அவர்களுடைய சொத்தின்பேரிலும் நடவடிக்கைநடத்தலாம். கலெக்டரானவர் அப்படிதான்எழுதுகிற பிரதிமனுவிலும் கையெழுத்துசெய்து முத்திரைபோடவேணும்; அந்தமனுவை அனுசரித்து நடத்துகிற கலெக்டர்பேரிலாவது, அவருடைய அதிகாரத்துக்குள்ளாக நடத்துகிற யாவரொருவர்பேரிலாவது நடத்தப்படுகிற சகலவிவகாரங்களிலும் அந்த பாக்கித்தொகையைக்குறித்தும் பாக்கிதாரன்

இன்னுமென்பதைக்குறித்தும் அந்தமனுவே போதுமான ருஜுவாகக்கொள்ளப்படும்; அந்த மனுவெழுதிக்கொள்ளுகிற கலெக்ட்டருடைய முத்திரையாவது கையெழுத்தாவது உத்தியோகப்பெயராவது எதார்த்தமானதாயிருக்கமாட்டாதென்று அனுமானிப்பதற்கு கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தாலொழிய, அதுகள் எதார்த்தமானதென்பதைக்குறித்து ருஜுவேண்டுவதில்லை; ஆனால் யாவனொருவன் அந்த மனுவெழுதிக்கொண்ட கலெக்ட்டர்பேரில் தன்னுடைய சுயஜில்லாவிலே வியாச்சியந் தொடருவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலொன்றுமில்லை.

௫௮. சர்க்காருக்குச் செலுத்தப்படத்தக்க பூமிதீர்வை விகிதத்தைக்குறித்தாவது பிரிக்கப்பட்ட பூஸ்திதியின் பாகங்களின்பேரில் இதுவரையில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இனி நிஷ்கரிஷைசெய்யப்படும் தீர்வைத்தொகையைக்குறித்தாவது உண்டாகிற யாதொரு ஆட்சேபத்தை யோசனைசெய்யவாகிலும் தீர்மானிக்கவாகிலும் எந்த சீவில் கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை.

௫௯. இந்தஆக்ட்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினாலே அநியாயமடைந்தவர்கள் இதில் முன்னமே சொல்லியிருக்கிறபடிக்குத்தவிர சீவில்கோர்ட்டுகளில், நியாயந்தேடிக்கொள்ளுவதற்கு இந்தஆக்ட்டிலுள்ள எந்தநிபந்தனையினாலும் தடங்கலுண்டாகமாட்டாது; ஆனால் அவர்கள் அந்தவியாச்சியமூலம் பிறந்தகாலமுதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அதைக்குறித்து வியாச்சியந் தொடரவேணுமேயல்லாமல், அந்தகெடுவிற்கு மேற்பட்டுத்தொடர்ந்தால் அப்படிப்பட்டவியாச்சியத்தை சீவில்கோர்ட்டார் பிடிக்கக்கூடாது.

௬௦. இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட அல்லது செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொருகாரியத்தினாலே அநியாயமடைந்தவன் யாதொரு கலெக்ட்டர்பேரில் கொண்டுவருகிற வியாச்சியமானது-அந்த கலெக்ட்டர் டிஸ்திரிக்ட்டை விட்டுப்போய்விட்டதினாலே அற்றுப்போகமாட்டாது; ஆனால் அவருக்குப்பின்வருகிறவர்பேரில் அந்த வியாச்சியந் தொடரப்பட்டாற்போலவே அந்தப்பின்வருகிறவர்பேரிலே அந்தவியாச்சியம் நடத்தப்படும். முன்னிருந்த கலெக்ட்டரினாலே இந்தஆக்ட்

டின்படி செய்யப்பட்ட அல்லது அவர்செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொருகாரியத்தைக்குறித்து உத்தியோக முறைமையிலே அவருக்குப்பின்வருகிற கலெக்ட்டர்பேரில் இதற்குமுந்தியபிரிவில் கண்டிருக்கிற வாயிதாவிற்குள் வியாச்சியங் கொண்டுவரலாம்; ஆனால் அவர் தனக்குமுன்னிருந்தவரால் உத்தியோகமுறைமையிலே செய்யப்பட்ட யாதொருகாரியத்திற்கு அவரோ உத்தரவாதஞ் செய்யவேணுமென்பதில்லை.

௬௧. இந்த ஆக்ட்டின்படி சொத்தை ஏலத்தில் விற்பதற்கு - ௧௮௨௨௵த்து - ௫ வது சட்டம் சம்பந்தப்பட மாட்டாது.

௬௨. இந்தஆக்ட்டின்படி வசூல்செய்யப்படத்தக்க சர்க்கார்தீர்வை பாக்கியைக்குறித்து - ௧௮௦௨௵த்து - ௨௮-வது சட்டமும், ௧௮௦௩௵த்து - ௧ - வது ௨ - வது சட்டங்களும் செல்லமாட்டாது.

௬௩. மைனர்கள்முதலான அசமர்த்தாளாகிய பூமிக்குடையவர்களின் நிலங்களை ஏலத்தில்விற்பதைக்குறித்து-௧௮௦௪௵த்து - ௫ - வது சட்டத்திலும், ௧௮௩௧௵த்து - ௧௦ - வது சட்டத்திலுமுள்ள நிபந்தனைகள் சென்றுவருவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்தநிபந்தனையினாலும் தடங்கலொன்றுமில்லை.

௬௪. சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள ௧௮௦௨௵த்து - ௨ - வது சட்டம் - ௧௨ - வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்னபட்டணத்து ராஜதானியின் சரகத்துக்குள் நிலத்திற்குசர்க்கார்தீர்வையை வசூல்செய்வதற்கு இந்தஆக்ட்டிலுள்ள எந்தநிபந்தனையும் சம்பந்தப்படமாட்டாது.

௬௫. அடியில்கண்டிருக்கிற சட்டங்கள் வேறே ஆக்ட்டுகளையும் சட்டங்களையுமாவது வேறே ஆக்ட்டுகளின் பாகங்களையும் சட்டங்களின் பாகங்களையுமாவது ரத்துசெய்கிறமட்டிலும், இந்தஆக்ட்டு வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே நடந்திருக்கிற நடவடிக்கைகள் அல்லது சங்கதிகளுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலுந்தவிர இதனால் ரத்துசெய்யப்படுகின்றது:—

௧௮௦௨௵த்து - ௨௫ - வது சட்டம்—பீடிகையும்- ௨- வது - ௫ - வது பிரிவுகளும் தவிர முழுவதும்.

௧௮௦௨௵த்து - ௨௭ - வது - சட்டம்.

௧௮௩௦௵த்து - ௩ - வது - சட்டம்.

௧௮௩௨௵த்து - ௯ - வது - சட்டம்.

௧௮௫௮௵த்து - ௩௬ - வது - ஆக்ட்டு.

௯௯. இந்த ஆக்ட்டானது இவ்விடத்திய கவரன்மெண்டார் நிச்சயித்து சர்க்கார்கேஜட்டில் பிரசித்தஞ் செய்விக்கிற தேதிமுதற்கொண்டு வழங்கிவரவேண்டியது.

---

கிராமமேரைத் தீர்வைஆக்ட்டு.

---

சென்னபட்டணம்.

## ௧௮௬௪௵த்து - ௪ - வது ஆக்ட்டு.

---

கிராம ஊழியமேரைக்குவதிலாய் மேரைத்தீர்வை வாங்கும்படி செய்வதற்கான ஆக்ட்டு.

ரிவினியூ இலாகாவிலும் போலீசு இலாகாவிலு மிருக்கிற கிராமஉத்தியோகங்களை நடத்திவருவதற்காக அநாதியானதேச வழக்கப்படி குடிகள் பணமாகவும் தான்னியமாகவும் சிலமேரைகள் கொடுத்துவருகிற படியால், அந்த உத்தியோகங்களிலிருக்கிறவர்கள் தங்களுக்குச்சேரவேண்டிய அந்தமேரைகளை வரப்பற்றுவது அடிக்கடி பிரயாசையாகவும் ஆட்சேபணைக்கிடமுள்ளதாகவு மிருப்பதைப்பற்றி, அந்தமேரை வாங்குவதைத் தள்ளிப்போட்டு, அதற்குவதிலாக பணமாய் மேரைத்தீர்வை வாங்குவது ஆவசியகமாயிருப்பதால், இத்னல் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

௧. இதின்பின்னல் - ௧௧ - வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாக இந்தஆக்ட்டானது எல்லா ஜில்லாக்களுக்குமாவது அதுகளில் சிலபாகங்களுக்காவது வியாபிக்கச் செய்யப்பட்டால், அவ்விடங்களிலே ரிவினியூ அலுவல்களிலும் போலீசு அலுவல்களிலுமிருக்கிற கிராமஉத்தியோகஸ்தர்களால் தங்களுடைய ஜீவனத்திற்காக சம்பளத்துக்கீடாய் இதுவரையிலே வழக்கமாய் வாங்கப்பட்டாவது கேட்கத்தக்கதாயாவதிருக்கிற சகலமேரா

களும் கட்டணங்களும் எப்படிப்பட்ட பெயருள்ளதாயிருந்தபோதிலும், சுத்தமாய் எடுபட்டுப்போகவேண்டியது. அப்படி எடுபட்டுப்போவது சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள - கஅருக - ௵த்து - கா - வது சட்டத்தின் யாதொரு நிபந்தனைக்கு விரோதமாயிருந்தபோதிலும் நிமித்தமில்லை.

உ. இந்தஆக்ட்டு வியாபிக்கச்செய்யப்படுகிற எந்த ஜில்லாக்களிலாகிலும், ஜில்லாக்களின் பாகங்களிலாகிலும்மேற்சொல்லிய மேனாமுதலான கட்டணங்களுக்கு வதிலாய் பூமியை அனுபவிக்கிறவர்களெல்லோருக்கும் பணமாய் மேனாத்தீர்வை ஏற்படுத்த இவ்விடத்திய கவரன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு-அப்படி மேனாத்தீர்வையாய் வசூலாகிறபணமானது அந்தத் தீர்வைபோடப்படுகிற அந்தந்த கிராமத்திலாகிலும் சிலகிராமங்களை ஒன்றாய்ச்சேர்த்து அவ்விடங்களிலாகிலும் பேட்டையிலாகிலும் ரிவினியூ அலுவல்களையும் போலீசு அலுவல்களையும் நடத்துகிறகிராம உத்தியோகஸ்தர்களுக்குக்கொடுக்க உபயோகிக்கப்படும்.

ங. அந்த மேனாத்தீர்வை வீதம் இவ்வளவென்று அப்போதைக்கப்போது இவ்விடத்திய கவரன்மெண்டாரால் நிச்சயிக்கப்படும். ஆனால், அந்தவீதமானது பூமியை அனுபவிக்கிற அவனவன் சர்க்காருக்குச் செலுத்தத்தக்க நிலத்தீர்வைக்கும் தண்ணீர்வரிக்குமுண்டான தொகையின்பேரில் எந்தவிஷயத்திலும் ரூபாயொன்றுக்கு ஒருஅணாவுக்கு மேற்படக்கூடாது-இனாம் நிலங்களைக்குறித்தும், முழுதுமாவது கொஞ்சமாவது தீர்வைதள்ளிக்கொடுக்கப்பட்டிருக்கிறநிலங்களைக்குறித்தும், செய்யவேண்டிய தென்னவென்றால், அதுகள் இனாம் நிலங்களல்லாவிட்டால் அதுகளுக்கு பூராநிலத்தீர்வையும் தண்ணீர்வரியும் எவ்வளவுஉண்டோ அந்தத் தொகையின்பேரில் மேனாத்தீர்வை வசூல்செய்யப்படும். அந்தப்பூர்த்தியானநிலத்தீர்வையும் தண்ணீர்வரியும் இவ்வளவென்று தெரிந்துகொள்ளும்படி முன்னதாகவே ஏற்பாடாயிராவிட்டால், அது இவ்வளவென்று அந்தஜில்லா கலெக்ட்டரானவர் ரிவினியூ போர்ட்டாருடைய பொதுவான உத்தரவின்பேரில் நிச்சயிக்கவேண்டியது.

ச. பூமியை அனுபவிக்கிறவனாகிய அவனவன் செலுத்தத்தக்க அந்தமேனாத் தீர்வைத்தொகையை அவனுடையபட்டா

யில்பதிந்து, சென்னபட்டணத்து ராச்சியத்தில் நிலத்தீர்வைபாக்கியை வசூல்செய்வதற்கு விதித்திருக்கிறவிதமாக அதைவசூல்செய்யவேண்டியது.

௫. வசூல்செய்யும்படி இந்தஆக்ட்டினாலே உத்தரவுசெய்யப்படுகிற மேனாத்தீர்வையில் வசூலாகிறபணமானது - அந்தத்தீர்வைபோடப்படுகிற அந்தந்தகிராமத்திலாகிலும் சிலகிராமங்களை ஒன்றாய்ச்சேர்த்து அவ்விடங்களிலாகிலும் பேட்டையிலாகிலும் ரிவினியூ அலுவல்களையும் போலீசு அலுவல்களையும் நடத்துகிற கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள்செய்யுந் தொழிலுக்கு ஈவாகக்கொடுக்கப்படும்.

௬. யாதொரு ஜில்லாவுக்காவது அதில் யாதொரு பாகத்திற்காவது இந்தஆக்ட்டு வியாபிக்கச்செய்யப்பட்டபின்பு, அவ்விடத்திலே இந்தஆக்ட்டினால் பரிஷ்காரமாய் விதிக்கப்பட்டு உத்தரவுசெய்யப்பட்டிருக்கிற படிக்கேயல்லாமல் வேறேவிதமாய் எவனாகிலும் ரிவினியூ அல்லது போலீசு அலுவல்களிலிருக்கிறகிராம உத்தியோகஸ்தர்களுடைய ஜீவனத்திற்காக வழக்கப்படிச் சேரவேண்டியதென்கிறதாய் மேனா முதலானகட்டணத்தை யாதொரு சாக்கிட்டுக்கொண்டு கேட்கவுங்கூடாது, வசூல்செய்யவுங்கூடாது, பெற்றுக்கொள்ளவுங்கூடாது. மோசஞ்செய்தாவது மெரட்டியாவது அநியாயமாய் மேனாமுதலான யாதொரு கட்டணத்தை வசூல்செய்தாலும் பெற்றுக்கொண்டாலும், அப்படிச்செய்தவன் அந்தகுற்றத்திற்காக மோசஞ்செய்வது அல்லது மெரட்டிவாங்குவதென்னும் குற்றத்தைக்குறித்து இந்தியன்பினல்கோடில் சொல்லியிருக்கிற பிரிவுகளின்பிரகாரம் சங்கதிக்குத்தக்கபடி தெண்டனைக் குள்ளாவான். அப்படிக்கல்லாமல் வேறே எந்தவகையிலாவது மேனாமுதலான கட்டணத்தை அநியாயமாய்க்கேட்டாலும், வசூல்செய்தாலும், பெற்றுக்கொண்டாலும், அப்படிச்செய்தவன் மாஜிஸ்திரேட்டுக்குமுன்பாகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதின்பேரில் நூறுரூபாய்க்கு அதிகப்படாமல் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவான், அந்த அபராதம் அவனுடைய சாமான்களைக்கைப்பற்றி விற்று வசூல்செய்யப்படத்தக்கதாகும்; அது செலுத்தப்படாவிட்டால் நாலுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவான்.

௭. என்ன உத்தியோகப்பெயரினலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களா யிருந்தபோதிலும் ரிவினியூ அலுவல்களிலும் போலீசு அலுவல்களிலுமிருக்கிற ஏழுவகையான கிராமஊழியக்காரர்களுக்குமாத்திரம் இந்தஆக்ட்டு சம்பந்தப்படும், அவர்கள் யாராரென்ருல்:—

௧. பொட்டேல், மணியக்காரன் அல்லது பெத்தகாபு என்று வழக்கமாய்ச்சொல்லப்படுகிறபெரியதனக்காரன்.
௨. முனிசிபு.
௩. கர்னம் (கணக்கப்பிள்ளை.)
௪. சராப்பு, அல்லது நோட்டக்காரன்.
௫. வெட்டியான், தோட்டி, தண்டல்காரன்.
௬. தண்ணீர்ப் பாய்ச்சுகிறவன்.
௭. காவற்காரன் அல்லது தலையாரி.

ஆனல் அம்பட்டன் - வண்ணன் - ஜோசியன் இப்படிப்பட்ட கிராம ஊழியக்காரர்களுக்காவது, குசவன் - கருமான் முதலான கிராமக் கைத்தொழிலாளர்க்காவது இந்த ஆக்ட்டுஎவ்வளவேனும் சம்பந்தப்பட மாட்டாது. சந்தேகமுண்டானல், ரிவினியூ அலுவல்களிலும் போலீசு அலுவல்களிலுமிருக்கிற கிராம ஊழியக்காரர்களாகிய இன்னின்னருக்கு இந்தஆக்ட்டு சம்பந்தப்படுமென்றும், மேற்படி ஊழியக்காரர்களாகாத இன்னின்னருக்கு இந்தஆக்ட்டு சம்பந்தப்படாதென்றும் அந்த ஜில்லா கலெக்ட்டரானவர் ரிவினியூபோர்டாருடைய உத்தரவுக்குட்பட்டு தீர்மானிக்கவேண்டியது.

௮. இந்த ஆக்ட்டினலே விதிக்கப்பட்ட மேனத்தீர்வையில் எவ்வளவாவது தனக்குச் சேரவேணுமென்று எவனுவது செய்கிறதாவாவையும், அந்தத்தீர்வையைச் செலுத்தவேண்டியதைக்குறித்தாவது அந்தத்தீர்வைவீதத்தைக் குறித்தாவது உண்டாகிற ஆட்சேபனையையும் சிவில்கோர்ட்டார் விசாரிக்கக்கூடாது; ஆனல் அந்ததாவா அல்லது ஆட்சேபம் எவ்விடத்திலுண்டாச்சுதோ அந்தஜில்லா கலெக்ட்டராவது அந்தகலெக்ட்டருக்குள்ள அதிகாரத்தைச்செலுத்துகிற அதிகாரிகளாவது அதை விசாரித்துத் தீர்மானிக்கவேண்டியது. ஆயினும் அப்படிப்பட்டதாவா அல்லது ஆட்சேபம் எவ்விடத்தி லுண்டாச்சுதோ

அந்த தாலூகாதாசில்தார் அதைவிசாரித்துத் தீர்மானிக்கும்படி அவரிடத்திற்கு அந்தசங்கதியை அனுப்ப கலெக்ட்டருக்காவது மேற்படி அதிகாரிக்காவது அதிகாரமுண்டு.

௯. இந்தஆக்ட்டின்படி யாதொரு கலெக்ட்டராவது கலெக்ட்டருக்குண்டான அதிகாரங்களைச்செலுத்துகிற அதிகாரியாவது செய்கிற பிரதிதீர்மானத்தின்பேரிலும், செய்கையின்பேரிலும், உத்தரவின்பேரிலும் ரிவினியூ போர்ட்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்ளலாம். ஆனால் அந்ததீர்ப்பு முதலானது பிறந்ததேதிமுதல் மூன்றுமாசத்திற்குள் அப்படி அப்பீல் செய்யப்படாவிட்டால் அதுபிடிக்கப்படாது.

௧௦. இதற்குமுந்தியபிரிவின்படி செய்யப்படுகிற சகல அப்பீல்களின்பேரிலும் ரிவினியூ போர்ட்டார்செய்கிற தீர்மானமே முடிவானதாகும்.

௧௧. சென்னபட்டணத்து ராச்சியத்திலே எந்தெந்த ஜில்லாக்களில் அல்லது ஜில்லாக்களின் பாகங்களில் இந்தஆக்ட்டு வழங்கிவரும்படி இவ்விடத்திய கவரன்மெண்டார் போர்ட்டு செய்ண்டுஜார்ஜ் கேஜட்டில் பிரசித்தஞ்செய்வித்து உத்தரவுசெய்கிறார்களோ அவ்வவ்விடங்களிலேமாத்திரம் அந்த கவரன்மெண்டார் நிச்சயிக்கிற அந்தந்த தேதிமுதற்கொண்டு இந்த ஆக்ட்டு வழங்கிவரவேண்டியது.

---

## ௧௮௫௨ஹு த்து - ௧௧-வது சட்டம்.

நிக்ஷேப மகப்படும்போது அதைக்குறித்து கவரன்மெண்டாருக்கும் ஜனங்களுக்குமுள்ள சுதந்தரத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டும், அப்படிப்பட்ட நிக்ஷேபம்கண்டெடுக்கப்படும்போது நடந்துகொள்ளவேண்டிய ஏற்பாட்டைக்குறித்தும் செய்யப்பட்ட சட்டம். இது - சாலீவாகன சகம் ௧௭௭௪-யில் நிகழும் நந்தனஹு புரட்டாசிமீ ௩௨-க்குச் சரியான கிருஸ்த்து ௧௮௫௨ஹு செப்டெம்பர்மீ ௧௭௨ சென்னபட்டணம் கோட்டை ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்பட்டது.

௧. நிட்க்ஷேபமகப்படும்போது அதைக்குறித்து-மகம்மதியன்லாவும், ஹிந்துலாவும் ஒத்திராமையினலும், புதையல் கண்டெடுக்கிறவர்கள் நடந்துகொள்ள வேண்டியதற்காக ஒருமைப்பாடான ஒருநிபந்தனை யேர்ப்படுத்தவேண்டியதும் அவசியமாயிருக்கிறபடியினலே இதனடியில் கண்டிருக்கிறநிபந்தனைகள் யேர்ப்படுத்தப்பட்டன. இவைகள்-பிரசுரஞ்செய்யப்படுகிறதுமுதல் சென்னப்பட்டணத்து ராஜதானியிலுள்ள எல்லாவிடங்களிலும் ஊர்ஜிதமாய் அனுசரித்து வரவேண்டியது.

௨. பொன் நாணயங்களாவது வெள்ளிநாணயங்களாவது-பொன்வெள்ளிப் பாளங்களாவது, ரத்தினங்களாவது, மற்றும் விலைபெறுமான யாதொரு பொருளாவது இந்தராஜதானியிலாகாவைச்சேர்ந்த எவ்விடத்திலாவது பூமியில் புதைத்துவைத்திருந்ததாவது ஒளித்துவைத்திருந்ததாவது, கண்டெடுக்கப்படும்போது அப்படி கண்டெடுக்கப்பட்டதைக்குறித்து கிரமப்படி விளம்பரஞ் செய்யப்பட்டபின்பு - அந்தபுதையலுக்கு சுதந்தரக்காரர்கள் ஒருவருமில்லாமலும், அப்படி கண்டெடுக்கப்பட்டசொத்தின்மதிப்பு சென்னபட்டணம் லட்சரூபாய்க்கு மேற்ப்படாமலுமிருக்கிற பட்சத்தில், அப்படி கண்டெடுத்தவர்கள் இந்த சட்டத்தின் நிபந்தனைகளின்படி நடந்துகொண்டிருந்தால், கண்டெடுக்கப்பட்டசொத்து அப்படி கண்டெடுத்தவர்களுடைய சொந்தசொத்தாகின்றது.

௩. மேலேகண்டிருக்கிற பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற நிட்சேபம் யாருக்காவது அகப்படும்போது அவன் - அது யாருடைய அதிகாரஎல்லைக்குள் அகப்பட்டதோ அந்த ஜில்லா ஜட்ஜிக்காவது, ஆக் ஜிலியரிகோர்ட்டு அசிஸ்டெண்டு ஜட்ஜிக்காவது * அந்தசங்கதியை உடனேதெரியப்படுத்தி - அப்படி அகப்பட்ட நிட்க்ஷேபத்தை சரியான ஜாபிதாவோடு கோர்ட்டில் ஒப்புவிக்கவேண்டியது.

௪. மேலேசொல்லியபடி சொத்தை தாக்கல்செய்துகொண்ட ஜட்ஜியாவது, அசிஸ்டெண்டு ஜட்ஜியாவது அந்தசொத்து ஜாபிதாப்படி சரியாயிருக்கிறதாவென்று பார்வையிட்டு அதற்கு ரசீது எழுதிக்கொடுத்து கோர்ட்டில் அமானத்தில் வைத்

* ௧௮௨௭ ஹஸ்த்து - ௧௨ - வது ஆக்ட்டினலே பிரான்சிபல் சதரமீன்கள் ஏர்ப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திருக்கிற சொத்தைக்குறித்து யாராருக்கு சுதந்தர மிருக்கிற தோ அவர்கள்—விளம்பரஞ்செய்யப்பட்ட தேதிமுதல் ஆறு மாசத்திற்குள்ளாக ருஜுவிலாவது, அல்லது வகீல் மூலமாயா வது, ஆஜராய் தங்களுக்குள்ள சுதந்தரங்களை ருஜுப்படுத்தவே ண்டியதென்று அவ்வவ்விடங்களில் வழங்கிவருகிற தேச பா ஷையில் விளம்பரம்தயார்செய்து, அது எல்லாருக்குந்தெரியும் படி பிரசித்தஞ்செய்வித்து, அதை தன் கோர்ட்டிலும், அந்த ஜில்லா கலெக்டர் கச்சேரியிலும் ஒட்டவேண்டியது.

௫. மேல்படி நிட்சேபத்தைக்குறித்து கவரன்மெண்டாரு க்கு ஏதாவதுசுதந்தரமுண்டாயிருக்குமென்று தோன்றுகிறபட் சத்தில் நிலவரிவசூல்செய்யும் கலெக்டர்கள் ரிவினியூ போர் ட்டாருடைய உத்தரவுபடிக்கு ஷை நிபந்தனைகளைஅனுசரித்து அதைக்குறித்து தாவாசெய்து அதை பலப்படுத்தவேண்டியது. மேலேகண்டிருக்கிற விளம்பரப்படி கவரன்மெண்டார் பட்ச த்திலாவது, ஜனங்கள்பட்சத்திலாவது தாவா செய்யப்பட்டால் அப்படி தாக்கல்செய்யப்பட்ட தாவாவை ஜட்ஜிஅவர்கள் சுரு க்கவிசாரணைசெய்கிற பட்சத்தில் மேற்படி சொத்துமுழுமை யைக்குறித்தாவது அல்லது ஒருபங்கைக்குறித்தாவது, கவரன் மெண்டாருக்காவது, ஜனங்களுக்காவது சுதந்தர முண்டாயிரு க்கிறதாய் பூராவாய் ருஜுவானால் அப்படி ருஜுவானதைக்கு றித்து தீர்ப்பு செய்யவேண்டியது. பிரதி விஷயத்திலும், அந்தபுதையல் கண்டெடுத்தவனுக்குப் பிடித்த செல்வுகளும், அதைக் கண்டெடுத்ததற்காக எவ்வளவு ஐவேஜு கைம்மாறுகக் கொடுப்பது நியாயமாயும் யுக்த்தமாயும்தோற்றுகிறதோ அவ்வ ளவு ஐவேஜும் கண்டெடுக்கப்பட்ட அந்தசொத்திலிருந்து வா ங்கிக்கொடுக்கவேண்டியது.

௬. இந்தசட்டத்தின் - ௪- வது பிரிவின்படிசெய்யப்பட் ட விளம்பரத்தில் கண்டகெடுவுக்குள் கவரன்மெண்டாராலாவது மற்ற எவர்களாலாவது தாவாசெய்யப்படாமலாவது, தாவாசெ ய்யப்பட்டும்,அது சுருக்கவிசாரணைசெய்ததின்பேரில் ருஜுவா காமலாவதுபோனால், ஒரேகாலத்திலாவது, ஒரேயிடத்திலாவது அகப்பட்டபுதையலில் லட்சம் சென்னப்பட்ட ரூபாய்க்குமே ல்படாமல் மதிப்புள்ள ரொக்கமாவது, விலையுள்ளபொருளாவ து - அந்த நிட்க்ஷேபத்தைக்கண்டெடுத்தவனுக்காவது, கண்டெ

டுத்தவர்களுக் காவது, ஜில்லா ஜட்ஜியாவது அசிஸ்ட்டெண்டு ஜட்ஜியாவது கொடுக்கவேண்டியது. இந்தசட்டத்தின்படி நடத்தவேண்டிய காரியங்களுக்காகச்சென்றசெலவை அந்த நிக்ஷேபத்திலிருந்து கொடுக்கவேண்டியது.

௭. ஒரேகாலத்திலாவது ஒரேயிடத்திலாவது அகப்பட்ட நிட்க்ஷேபத்தின்தொகை லட்சம் சென்னபட்டண ரூபாய்க்கு மேற்பட்டிருந்து அதைக்குறித்து யாதொரு தாவாவுமில்லாமலிருந்தால் யாருக்கு அந்த நிட்க்ஷேபம் அகப்பட்டு கோர்ட்டில்கொண்டுவந்து ஒப்புவித்தாரோ அப்படிப்பட்டவருக்கு மேலே கண்டிருக்கிற பிரிவின்படி லட்சம்ரூபாய் கொடுக்கும்படி தீர்ப்புசெய்யவேண்டியது. அதற்குமேற்பட்டிருக்கிற பொருள் கவரன்மெண்டாரைச்சேரவேண்டியது.

௮. இந்த சட்டத்தின்-௨-வது பிரிவில் கண்டிருக்கிறநிக்ஷேபம்யாருக்ககப்படுகிறதோ அவன் தனக்கு அந்தநிக்ஷேபம் அகப்பட்ட ஒருமாசத்துக்குள்ளாக-௪-வது பிரிவின்படி ஜில்லா ஜட்ஜிக்காவது ஆக்ஜிலியரீகோர்ட்டு அசிஸ்டெண்டு ஜட்ஜிக்காவது அந்தசங்கதியைத் தெரிவிக்காமலும்-அதில்கண்டபடி அந்த நிக்ஷேபத்தை அமானத்தில் வைக்காமலும் போகிற பட்சத்தில் அதைக்குறித்து அவனுக்குள்ள சுதந்தரமும் தாவாவும் செல்லாமல் போவதோடு இந்தசட்டத்தின் நிபந்தனையின்படி சென்றசெலவுக்காகவும், கைம்மாராகவுங் கொடுக்கவேண்டிய தொகையைப் பற்றியதாவாவையும் இழந்துபோனவனாக எண்ணப்படுவான். பயிரங்கமாய் விசாரணைக்குவரவொட்டாமல் ரகசியமாய் எடுத்துக்கொள்ளப்பட்ட நிக்ஷேபத்தைக்குறித்து சுதந்தரமுள்ளவர்கள் யாராவது பின்பு தாவாசெய்துசம்மேரியாய் விசாரணைசெய்ததின்பேரில் அப்படி கொண்டுவரப்பட்ட தாவாருஜுவானால், அதைநியாயமான பாத்தியஸ்தனுக்கு வட்டியோடும் சகல செலவுகளோடும் கொடுப்பிக்க வேண்டியது. ஜனங்களுடைய தாவாஒன்றும் ருஜுவாகாவிட்டால் ரிவினியுபோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் கவரன்மெண்டுவகில் மனுவர்ஜி கொடுத்துக்கொண்டதின்பேரில் அந்த நிட்க்ஷேபத்தை கவரன்மெண்டார்பரஞ் செய்யவேண்டியது.

௯. இந்தசட்டப்படி ஜில்லாஜட்ஜியாலாவது ஆக்ஜிலியரீ கோர்ட்டு அசிஸ்டெண்டு ஜட்ஜியாலாவதுசெய்யப்படும் சம்மே

ரீ தீர்ப்பின்பேரில், சம்மேரீ அபீலைக்குறித்துசாதாரண நிபந்தனைகளின்பிரகாரம் சம்மேரீ அப்பீல்செய்து கொள்ளலாம்.

ய. அப்படிப்பட்ட அப்பீல்களைக்குறித்து பிராவின்ஷியால் * கோர்ட்டிலிருக்கும் இரண்டு அல்லது மேற்பட்ட ஜட்ஜிகள் செய்ததீர்ப்புமுடிவானதாயிருக்கவேண்டியது. ஆனால்சதரதாலத்துக்கோர்ட்டார் தீர்ப்பைப்பார்வையிட்டபின்பாவது, அதோடு அனுப்புவித்த தஸ்தவேஜுகளைப்பரிசீலனைசெய்தபின்பாவது - அந்தக்கோர்ட்டில் இரண்டாம் சம்மேரீ அப்பீல்தாக்கல்செய்து கொள்ளுவதற்குத்தக்க நியாயமான காரணங்கள் அந்தகோர்ட்டாருக்குத் தென்படுகிறபட்சத்தில் அப்படிப்பட்ட சங்கதிகளில் மாத்திரமே அந்த அப்பீலை அங்கீகரித்து சம்மேரி அப்பீலைக்குறித்து ஊர்ஜிதமாயிருக்கும் சாதாரணமான நிபந்தனைகளின்படி நடத்தவேண்டியது.

---

விளம்பரம்.

சென்னபட்டணம் ௧௮௪௪ஹு டிசம்பர்மீ ௩௨

௧௮௪௪ஹுத்து ௧௯ - வது ஆக்ட்டானது ௧௮௪௫ஹு ஜனவரிமீ ௧௨முதற்கொண்டு சென்னபட்டணத்துராச்சிய முழுவதும் வழங்கிவருமாகையால், முக்கியமாய் மிகவுந் தூரத்திலிருக்கிற வெளிஜில்லாக்களிலுள்ள அநேகருக்கு இந்தப் புதுச்சட்டத்தினுடைய உத்தேசமின்னதென்றும் அவர்களுக்குஅது இன்னவிதமாய்ச் சம்பந்தப்படுகிறதென்றும் தெரியாமலிருக்குமென்பதைப்பற்றி, இந்த விஷயங்களைக்குறித்து அடியில்வரும் சங்கதிகளை ஜில்லா கேஜட்டுகளிலெல்லாம் பிரசித்தஞ்செய்வது யுக்தமாகத்தோற்றுகிறது.

௨. இந்தியா முழுவதும் சிவில் வியாச்சியங்கள் சம்பந்தமாகப் பொய்ச்சத்தியமும் சிருஷ்டிணையும் வெகுசாய் நடந்துவருவதைப்பற்றி, அதுகளைத்தடுப்பதற்காகவே இந்த புது ஏற்பாடுசெய்யப்படுகிறது. நூறுரூபாய்முதல் அதிகதொகைபெறுமான அசையாப்பொருளைக்குறித்த தஸ்தாவேஜுகள்ரிஜிஸ்தர்செய்யப்படாதிருந்தால் ருஜுவாக ஏற்றுக்கொள்ளப்படாதாகையினாலே, முக்கியமான சகல அசையாப் பொருள்களையு.

---

* இப்போது பிராவின்ஷியல்கோர்ட்டுகள் எடுபட்டுப்போச்சுது.

ங்குறித்து பொய்யான தாவாமுடைந்து, பொய்சாட்சிகளையும் சிருஷ்டனை தஸ்தாவேஜுகளையும் ஆதாரமாகக்கொண்டு வியாச்சியந்தொடருவது இனிமிகவும் அசாத்தியமாய்விடும்; அதுபோலவே, அந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகள் வழங்கிவருமாகில் சகலவிதசொத்துகளையுங்குறித்து அப்படிவியாச்சியந்தொடருவதும் அரிதாய்விடும்.

௩. இந்த ஏற்பாட்டினுடைய இரண்டாவது உத்தேசமென்னவென்றால்—கடனைச் சுலபமாய் வரப்பற்றுவதுதான். விசேஷரிஜிஸ்தர் செய்யப்படுகிற சகலபத்திரங்களையும்-பத்திரத்தொகையை வரப்பற்றுவதற்கு கிரமவியாச்சியந்தொடராமலே சுருக்கவகையாய் நிறைவேற்றிக்கொள்ளலாகும். இந்தசுருக்கவகையினாலே வியாச்சியக்காரர்களுக்கு அதிககாலமும் பணமும்செல்லாமலிருப்பதுந்தவிர, சீவில்கோர்ட்டுகளிலே வேலையுங்குறைந்துபோம்.

௪. மூன்றும் உத்தேசமாவது—சொத்தில் இன்னானுக்கு இன்னபாத்திய முண்டென்பதற்கு தஸ்தாவேஜுகள் இருக்கிறதோ இல்லையோவென்று அசையாப்பொருளைக் கிரயத்துக்குக் கொள்ளுகிறவர்கள் தெரிந்துகொள்ளவகையுண்டாகும். அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகள் ரிஜிஸ்தர்புஸ்தகங்களிலே பதிவுசெய்திருக்கும்; அதுகளைவேண்டியவர்கள் எப்போதாகிலும் பார்வையிடலாம்: ரிஜிஸ்தரான தஸ்தாவேஜு செல்லாதென்றுவது சிருஷ்டனையென்றுவது ஓர்காலத்தில் தீர்மானிக்கப்பட்டாலும், அசையாப்பொருளைக்குறித்து டிக்ரி செய்யப்பட்டாலும், அந்த சங்கதிகள் புஸ்தகங்களிலே எப்போதும் அகப்படும்.

௫. நான்காம் உத்தேசமாவது—மரண சாசனங்களையும் அதுகளைச்சேர்ந்த உபசாசனங்களையும் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளும்படி எழுதிக்கொடுக்கப்பட்ட அதிகாரபத்திரங்களையும் பத்திரமாய் வைத்துவைப்பதற்காக சுலபமான மார்க்கமேற்படுத்துவதேயாம், அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளை உறையில் போட்டு முத்திரைசெய்திருக்கிறபடியே வாங்கிக்கொண்டு தீப்பட்டாலும், வேகாதபெட்டிகளில் வைத்திருக்கலாகும். அதுகளைக்கொண்டுவந்து கட்டிவைத்திருப்பவர் இறந்துபோனபின்பு, அப்ப்டிப்பட்ட தஸ்தாவேஜை உறையைத்திறந்தெடுத்து புஸ்தகத்தில் பதிவுசெய்யலாகும்; தஸ்தாவேஜுகளைக்கொண்டு

வந்து கட்டிவைத்தவன் தன்னுடைய ஜீவிதகாலத்தில் அதுகளைமறுபடி வாங்கிக்கொண்டு போகாமலிருந்தாலும், அவன் இறந்துபோனபின்பு அதுகளை கோர்ட்டில் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டிய தில்லாவிட்டாலும், அந்த அசல்தஸ்தாவேஜுகள் அந்தப்பெட்டியிலேயே எப்போதுமிருக்கும்.

௬. தாசில்தார்களும் சப் மாஜிஸ்திரேட்டுகளும் சாதாரணமாய் இந்த ஆக்ட்டின்படி டிபிட்டி ரிஜிஸ்தரார்களாக ஏற்படுத்தப்படுவார்கள். சிலவிடங்களிலே சர்க்கார் உத்தியோகத்திலிராதவர்களாயிருந்தாலும் தாலூகாவில் பழமையாய் வாசஞ்செய்கிறவர்கள் டிபிட்டி ரிஜிஸ்தரார்களாக நேமிக்கப்படுவார்கள். இவ்விதமான ஏற்பாடுசெய்வதினாலே யாதொருதஸ்தாவேஜை ரிஜிஸ்தர் செய்விப்பதற்கு ஒருவரும் சில மயல்தூரந்தவிர அதிகதூரம் போகவேண்டியதிராது; ரிஜிஸ்தர்செய்கிற உத்தியோகஸ்தரும் எல்லாருக்கும் செவ்வையாய்த் தெரிந்தவராயும் முழு நம்பிக்கையுள்ளவராயு மிருப்பார்.

௭. ஆயினும், டிபிட்டி ரிஜிஸ்தரார்கள் நடத்துகிற நடவடிக்கைகள் யாருக்காவது சமாதானமில்லாவிட்டால், அவர் டிஸ்திரிக்ட்டு ரிஜிஸ்தரரிடத்திலே பிரியாதுசெய்துகொள்ளலாம்; சாதாரணமாய் கஜானா தன்வசமாயிருக்கிற டிபிட்டி கலெக்ட்டராவது, சில இடங்களிலே ஹேட் அசிஸ்ட்டாண்டு கலெக்ட்டராவது, சப்கலெக்ட்டராவது டிஸ்திரிக்ட்டு ரிஜிஸ்தரரா யிருப்பார். ரிஜிஸ்தர் செய்விக்கும்படி பலவந்தஞ்செய்யப்படுகிற விஷயத்தில் சீவில்கோர்ட்டிலே பிரியாது செய்துகொள்ளலாம்.

௮. இந்த டிஸ்திரிக்ட்டு ரிஜிஸ்தரார்களுக்கும் டிபிட்டிரிஜிஸ்தரர்களுக்கும் இதனாலுண்டாகும் வேலைக்காக சம்பளங்கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. மேலும் சென்னபட்டணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஜனரல் ரிஜிஸ்தர் ஆபீசுக்காகவும் எல்லா ரிஜிஸ்தராபீசுகளுக்கும் வேண்டியிருக்கிற புஸ்தகங்களுக்காகவும் செலவுபிடிக்கும்; இந்த செலவுகளுக்காக பிரதிபதிவுக்கும் கொஞ்சங் கட்டணம்வாங்கப்படும்; ஆனால், அந்த கட்டணத்தைக்கொண்டு இந்த இலாகா செலவு நடப்பித்துவருவதற்குப் போதுமானதைவிட அதிககட்டணம் ஏற்படுத்தவேணுமென்கிற எண்ணம் கவர்ன்மெண்டாருக்கு இல்லவே இல்லை - இதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டணங்களின் ஜாபி

து* அந்தந்த ரிஜிஸ்தராபீசில் எல்லாரும் பார்க்கும்படி கட்டி வைக்கப்படும்.

கூ. மேற்படி ஆக்ட்டிலுள்ள பலநிபந்தனைகளையும் கவனமாய்ச் சிந்திப்பதினாலேயே சுலபமாய்த்தெரிந்துகொள்ளலாம், அதற்காகவே எல்லாரும் வாசிக்கும்படி தேசபாஷைகளிலே அந்த ஆக்ட்டின்பிரதிகளை பல இடங்களுக்கும் விஸ்தாரம் அனுப்பியிருக்கிறது. இவ்விடத்தில் குறிக்கவேண்டிய தென்னவென்றால்—கஅசாரு௵ ஜனவரீ௴ கவ க்குப்பின்பு நூறுரூபாய்முதல் அதிகதொகைபெறுமான அசையாப்பொருளைப்பற்றிய சகலதஸ்தாவேஜுகளையும் ரிஜிஸ்தர்செய்விக்கவேண்டும்; மேற்படி ஆக்ட்டு கரு - வது பிரிவில் கண்டிருக்கிற பலவகையான மற்ற தஸ்தாவேஜுகளையெல்லாம் அதுகளை எழுதிக்கொடுக்கிறவர்களுக்கும் எழுதி வாங்கிக்கொள்ளுகிறவர்களுக்கும் இஷ்டமிருந்தால் ரிஜிஸ்தர்செய்விக்கலாம், இல்லாவிட்டால் வேண்டியதில்லை; கஅசாரு௵ ஜனவரீ௴ கவக்குமுன்னிட்டு எழுதியிருக்கப்பட்ட தஸ்தாவேஜுகளில் மரணசாசனங்கள் - அதுகளைச்சேர்ந்த உபசாசனங்கள் - ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுவதற்கான அதிகாரபத்திரங்கள்தவிர மற்றவைகளை கஅசாரு௵ டிசம்பர்௴ ஙகவக்குப்பின்பு ரிஜிஸ்தர்செய்வதில்லை - கஅசாரு௵ ஜனவரீ௴ கவக்குப்பின்பு எழுதப்பட்ட தஸ்தாவேஜுகள் நூறுரூபாய்முதல் அதிகதொகைபெறுமான அசையாப்பொருளைப்பற்றினதுகளா யிருந்தால், அதுகளெழுதப்பட்டதேதிமுதல் நாலுமாசத்திற்குள் ரிஜிஸ்தர்செய்விக்கவேண்டும், இதரமான சொத்துகளைப்பற்றியதுகளா யிருந்தால் அதுகளெழுதப்பட்டதேதிமுதல் இரண்டுமாசத்திற்குள் ரிஜிஸ்தர்செய்விக்கவேண்டும்.

கo. ரிஜிஸ்தர்செய்கிற ஏற்பாடானது அயோத்தியிலும் பாஞ்சாலத்திலும் அனேகவருஷமாய் பலிதமாகவே நடந்தேறிவருகிறது. சென்னபட்டணத்தைச்சேர்ந்த ராச்சியத்திலும் ரிஜிஸ்தர்செய்கிற இந்த ஏற்பாடானது நூதனமல்ல; இவ்விடத்தில் கஅ0உ - ௵த்து கஎ - வது சட்டப்படி அறுபதுவருஷத்திற்கு* முன்னமேதானே அந்தஏற்பாடு உண்டாயிருக்கிறது. ஆனால் எல்லாவிஷயங்களிலும் இஷ்டமிருந்தால் ரிஜிஸ்தர் செய்வித்துக்கொள்ளலாமென்றிருந்ததினாலும், ரிஜிஸ்தர்செய்

* கசுக - வது பக்கத்தைப்பார்க்க.

வதற்குண்டான வகைகள் கஷ்டமுள்ளதாயிருந்ததினாலும், பழையசட்டம் பலிதமாகாமற்போயிற்று. இப்போது ஏற்பட்டிருக்கிற புதுசட்டத்தினாலே இந்தக்குறைவுகள் நீங்கி ரிஜிஸ்தர் செய்விப்பதற்கு இனி சகலசுலபமுண்டாகும்.

---

### சென்னபட்டணம் கஅசுரு௵ ஜூலைமீ கஉ.

தஸ்தாவேஜுகளைப் பதிவுசெய்வதற்காகவும், பதிவுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவும், பதிவுசெய்தபின்பாவது தேடிக் கண்டுபிடித்தபின்பாவது பதிவுகளுக்கும் சுருக்கங்களுக்கும் தஸ்தாவேஜுகளுக்கும் நகலெழுதுவதற்காகவும்; நகல் கொடுப்பதற்காகவும், கஅசுச௵த்து கசு-வது ஆக்ட்டின்படி சென்னபட்டணத்து ராச்சியத்திலே செலுத்தத்தக்க கட்டணங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அடியில்வரும் ஜாபிதாவானது ஆலோசனைசபையிலுள்ள சிறப்புற்றோங்கிய கவர்னர் ஜனரல்வர்களுடைய அனுமதியின்பேரில் ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்களால் ஜாரிசெய்யப்பட்டது.

க. பிரதி டிஸ்திரிக்ட்டு ரிஜிஸ்தராபீசிலும் செலுத்தத்தக்க கட்டணங்கள் என்னவென்றால்.

| | |
|---|---|
| க00 ரூபாய்க்குமேற்படாத ஒவ்வொருதஸ்தாவேஜைப் பதிவுசெய்வதற்கு........... | எட்டுஅணா. |
| க00 ரூபாய்க்குமேல் ரு00 ரூபாய்வரையிலுள்ள ஒவ்வொரு தஸ்தாவேஜைப் பதிவுசெய்வதற்கு........................ | ஒருரூபாய். |
| ரு00 ரூபாய்க்குமேல் க000 ரூபாய்வரையிலுள்ள ஒவ்வொரு தஸ்தாவேஜைப் பதிவுசெய்வதற்கு.............................. | இரண்டுரூபாய். |
| க000 ரூபாய்க்குமேல் ரு000 ரூபாய்வரையிலுள்ள ஒவ்வொரு தஸ்தாவேஜைப் பதிவுசெய்வதற்கு................................ | மூன்றுரூபாய். |
| ஐயாயிரம் ரூபாய்க்குமேல் பிரதிஆயிரம் ரூபாய்க்காகிலும், ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த சில்லறைக்காகிலும்............ | எட்டுஅணா. |

| | |
|---|---|
| ௰௧-வது பிரிவின்படி விசேஷபதிவுசெய்வதற்கு.—சாதாரணமான பதிவுக்குச் சொல்லியிருக்கிற தொகையோடு கூட பின்னும் அவ்வளவுதொகை............ | |
| ஒவ்வொரு பதிவைத் தேடியெடுப்பதற்கு. | ஒருரூபாய். |
| சர்ட்டிபைசெய்யப்பட்ட ஒவ்வொரு நகலுக்காவது, ஏகஸ்திராக்ட்டுக்காவது, உறையில்போட்டு சீல்செய்து ஒப்பித்திருக்கிற தஸ்தாவேஜிலுள்ள சங்கதியை - புத்திரசுவீகாரஞ் செய்துகொள்ளும்படி அதிகாரங்கொடுக்கப்பட்ட பத்திரம், மரணசாசனம், அதைச்சேர்ந்த உபசாசனம் அல்லது தஸ்தாவேஜின் ரிஜிஸ்தரில் பதிவுசெய்வதற்காவது.............. ......... | நூறு நூறு வார்த்தைகளுக்காகிலும், நூறு வார்த்தைகளுக்குக் குறைந்தசில்லறை வார்த்தைகளுக்காகிலும் நாலு அணா. |
| மரணசாசனத்தையாவது, அதைச்சேர்ந்த உபசாசனத்தையாவது, ஸ்வீகாரஞ்செய்வதற்கான அதிகாரபத்திரத்தையாவது உள்ளே போட்டிருப்பதற்காகக் கண்டிருக்கிற முத்திரைசெய்த யாதொரு உறையைப் பதிவுசெய்து பத்திரமாய் வைத்திருப்பதற்காக.. ....... ... ................ | ஐந்துரூபாய். |
| ஸ்பெஷியல் பவரவ் அட்டர்னீஎன்னும் - விசேஷவகாலத்து நாமாவில் கையெழுத்து செய்வதற்கு.............................. | எட்டுஅணா. |
| ஜனரல் பவரவ் அட்டர்னீஎன்னும் சாதாரணமான வகாலத்துநாமாவில் கையெழுத்து செய்வதற்கு......................... | ஒருரூபாய். |

௨. நஜரானு அல்லது மேல்வாசிசெலுத்தாத ஐந்துவருஷத்திற்குக் குறைந்த குத்தகை அல்லது வாடகைவிஷயத்தில், அது எவ்வளவுகாலத்திற்கோ அந்தக் காலமுழுமைக்கும் செலுத்தத்தக்க குத்தகை அல்லது வாடகைத்தொகை மொத்தத்திற்கு கட்டணம் வாங்கப்படும்.

௩. நஜரானு அல்லது மேல்வாசிசெலுத்தாமல், ஐந்துவருஷிமுதலாக அதிக வருஷிங்களுக்கு ஏற்றுக்கொள்ளுகிற குத்தகை அல்லது வாடகைவிஷயத்தில், ஐந்துவருஷித்திய குத்தகை அல்லது வாடகைத்தொகை எவ்வளவோ அந்த மொத்தத்திற்கு கட்டணம் வாங்கப்படும்.

௪. உடன்படிக்கைசெய்யப்பட்ட குத்தகை அல்லது வாடகைத்தொகையோடுகூடவாவது அது இல்லாமலாவது நஜரானு செலுத்தத்தக்கதானல், அந்த நஜரானும் குத்தகை அல்லது வாடகைத்தொகை எவ்வளவாவதிருந்தால் அதுவுஞ்சேர்ந்தமொத்தத்திற்கு மேற்சொல்லிய நிபந்தனைபடி கட்டணம்வாங்கப்படும்.

௫. கெடுவுகண்டிராத குத்தகைச்சீட்டு விஷயத்தில் ஒருவருஷித்திய குத்தகைத்தொகையை மொத்தமாக்கிக்கொண்டு அதன்பேரில் கட்டணம் வாங்கப்படும்.

௬. சொத்து சுதந்தரமுதலியவற்றை பிறராதீனம்செய்யும்படியான தஸ்தாவேஜு கடன்பத்திரம், உடம்படிக்கைப் பத்திரம், பாரீகத்துவிஷியத்தில், தொகைகண்டிராவிட்டாலும், கண்டிருந்தும் அது பூர்த்தியாய் விளங்காவிட்டாலும், அப்படிப்பட்ட தஸ்தாவேஜ யெழுதியிருக்கிற முத்திரைக்கடுதாசியின்கிரயம் உயர்ந்தது எவ்வளவுதொகைக்குப் போதுமானதோ அந்தத்தொகைக்கு கட்டணம் வாங்கப்படும்.

௭. தொகைகண்டிராமலும் பிரத்தியேகமாய் நிபந்தனை சொல்லியிராமலுமிருக்கிற விஷியங்களிலெல்லாம், ஒவ்வொரு தஸ்தாவேஜைப் பதிவுசெய்வதற்கு ௫ ரூபாய் கட்டணம் வாங்கப்படும்.

ரிஜிஸ்தரார்ஜனரலாபீசில் செலுத்தத்தக்க கட்டணங்கள்.

௮. ரிஜிஸ்தரார்ஜனரலாபீசில் பிரதி பதிவுக்காகவும், தேடிக்கண்டுபிடிப்பதற்காகவும், யாதொரு பதிவு - சுருக்கம் - அல்லது தஸ்தாவேஜுக்கு நகலெழுதுவதற்காகவும், யாதொரு டிஸ்திரிக்ட்டு அல்லது டிபிட்டி ரிஜிஸ்தரராபீசில் மேற்படி பதிவுமுதலான அந்தந்த காரியஞ்செய்வதற்காக மேலே விதித்திருக்கிற கட்டணத்திற்கு இரட்டிப்புத்தொகை செலுத்தவேண்டும். ஆனல், ஏ - வது

நிபந்தனையில் கண்டிருக்கிற வகையைச்சேர்ந்த யாதொரு தஸ்வேஜை பதிவுசெய்வதற்காக ரிஜிஸ்தரர் ஜனராலுக்கு ரு ரூபாயைவிட அதிக கட்டணங் கொடுக்கவேண்டியதில்லை.

கூ. உஅ - வது பிரிவுபடிக்கு இத்தேசத்துமேன்மையுள்ள ஸ்திரீகளை பரீட்சித்துப்பார்க்கும்படியாவது, உஅ - வது-கூரு - வது பிரிவுகளின்படிக்கு வகாலத்துநாமாவகைரா தஸ்தாவேஜுகள் எழுதிக்கொடுக்கும்படியாவது, மரணசாசனம், அதைச்சேர்ந்த உபசாசனம், அல்லது புத்திரசுவீகாரபத்திரம் இதுகளைப் பொதுக்கட்டி வைக்கும்படியாவது, டிஸ்திரிக்ட்டு ரிஜிஸ்தரார் - டிப்ட்டி ரிஜிஸ்தரார் அல்லது அப்படிப்பட்ட மற்ற எவராயாவது தாங்கள் வாசஞ்செய்யும் இடத்துக்குவரும்படி கேட்டுக்கொள்ளுகிற இத்தேசத்து மேன்மையுள்ள ஸ்திரீகள் அல்லது மற்றவர்கள் அப்படி அவர்கள் வருவதற்காக - க0 - ரூபாய் கட்டணமும் வண்டிசெலவும் கொடுக்கவேண்டியது - ரிஜிஸ்தரர்கள்வந்ததூரத்தை அனுசரித்து அவர்கள் சர்க்கார் அலுவலின்பேரில் போனால் என்னவிதம் சவாரிசெலவுக்குக் கணக்குசெய்யப்படுமோ அந்தவிதமே இந்த விஷயத்திலும் கணக்கு செய்யவேண்டியது.

க0. கூரு - வது பிரிவுமுதல் கூச - வது பிரிவுவரையில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி சம்மன்களைச் சேர்ப்பிக்கும்விஷயத்தில் - அந்த டிஸ்திரிக்ட்டு அல்லது ஸப்டிஸ்திரிக்ட்டைச்சேர்ந்த பிரதான சிவில்கோர்ட்டில் ஷை விஷயத்திற்கு என்னகட்டணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த கட்டணத்தை வாங்கவேண்டியது.

---

கஅசுஉ ஸ்த்திய க0 - வது ஆக்ட்டின் - A - குறிப்பு-

ஜாபிதாவின் எக்ஸ்திராக்ட்டு.

---

உடம்படிக்கை.

ச—முன்பணம் கொடுக்கப்பட்டதினிமித்தம் யாதொரு வஸ்துவை டாயிரிடுகிறதாகவாவது உண்டுபண்ணுகிறதாகவாவது சேக

ரிக்கிறதாகவாவது ஒப்பிக்கிறதாகவாவது எழுதப்பட்ட உடன்படிக்கைக்கு.

| | ரூபாய். | அணா. |
|---|---|---|
| கொடுக்கப்பட்டமுன்பணம் - ௫0 - ரூபாய் வரைக்குமானால். | ,, | ௧ |
| ௫0 ரூபாக்குமேல் - ௧00 - ரூபாய்வரைக்குமானால். | ,, | ௨ |
| ௧00 ரூபாய்க்குமேல் - ௨00 - ரூபாய்வரைக்குமானால். | ,, | ௪ |
| ௨00 ரூபாய்க்குமேல் - ௫00 - ரூபாய்வரைக்குமானால். | ,, | ௮ |
| ௫00 ரூபாய்க்குமேல் - எவ்வளவானாலும். | ௧ | ,, |

௭—ஒருமாசத்திற்காவது அதற்கு மேற்பட்டகாலத்திற்காவது ஊழியஞ்செய்வதற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட உடன்படிக்கைக்கு:—

| | |
|---|---|
| அந்த உடன்படிக்கையின்படி மாசாந்தர சம்பளம் அல்லது கூலியானது ௫ - ரூபாய்க்கு மேற்படாவிட்டால்.................. | ஒருஅணா. |
| ௫ - ரூபாய்க்குமேல் - ௨0 - ரூபாய்வரைக்குமானால். | நாலுஅணா. |
| ௨0 - ரூபாய்க்குமேல் - ௫0 - ரூபாய்வரைக்குமானால். | எட்டுஅணா. |
| ௫0 - ரூபாய்க்குமேற்பட்ட எவ்வளவுதொகைக்காவது.... | ஒரு ரூபாய். |

விலக்கு.

ஒருமாசத்திற்குக் குறைந்தகாலத்திற்கு ஊழியஞ்செய்வதாக எழுதிக்கொடுக்கப்பட்ட உடன்படிக்கைக்கு முத்திரைத்தீர்வை இல்லை.

உண்டி - செக்கு - பிராமிசொரிநோட் - அசையும் பொருளின் கொதுவை பத்திரம்.

௧0—ஒன்றல்லது பலசாட்சி கையெழுத்துப்போட்டிருக்கிற கடன்பத்திரம்முதலிய ஆதாரவுகள்தவிர பணஞ்செலுத்துவதற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட பலவகைஉண்டிகள், பிராமிசொரிநோட் என்னும் கடன்சீட்டுகள், செக்குகள், முதலான சீட்டுகளில் எதுவாவது,—

எழுதினதேதிபோட்டிருந்து, கேட்டவுடனே பணஞ்செலுத்தும்படியானதா யிருந்தால், செலுத்தவேண்டியதொகை - ௨0 - ரூபாய்க்கு மேற்படுகிறபட்சத்தில்...... ...... ... ஒருஅணா.

௪௭—அசையும்பொருளை வைத்துக் கொண்டு கொடுக்கப்பட்ட கடனுக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட கொதுவைபத்திரம் - அவதிக்கிரயசாசனம் - ஒப்படைப்புச்சீட்டு - அல்லது இவைகளைப்போல எழுதிக்கொடுக்கப்பட்ட ரசீதுக்கு... ... ... ஒருஅணா.

பாண்டு - கடன்பத்திரம் - கொதுவை பத்திரம்.

௪௮—அறுதியாகவாவது அவதியாகவாவது இவ்வளவுபணஞ் செலுத்துகிறதாக எழுதிக்கொடுக்கப்பட்ட பாண்டென்னும் கடன்பத்திர முதலிய ஆதாரவுகளிலே எவைகளுக்கு இந்தஜாபிதாவிலே வேறேதீர்வை விதிக்கப்படாமலும் முத்திரைத்தீர்வை செலுத்தவேண்டியதில்லையென்று பரிஷ்காரமாய் விலக்கப்படாமலுமிருக்கிறதோ அவைகளுக்கெல்லாம்—

௪௯—கடன் தொகைக்காக யாதொரு அசையாப்பொருளை ஈடுகாட்டியாவது அடமானம்வைத்தாவது அசையும்பொருளை ஈடுகாட்டியாவது எழுதிக்கொடுக்கப்பட்ட கொதுவைபத்திரத்துக்கும், அவதிக்கிரய சாசனத்துக்கும், ஒப்படைப்புச்சீட்டுக்கும், கொதுவை அல்லது அவதிக்கிரய சாசனத்தைப்போல எழுதிக்கொடுக்கப்பட்ட ரசீதுக்கும், கடன்தொகைக்கு யாதொருசொத்தின் மூலாதாரச்சீட்டுகளை ஈடாகவைத்து எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொருசாசனம் அல்லது உடன்படிக்கைக்கும்.... ...... ......

| | ரூபாய். | அணா. |
|---|---|---|
| ௨௫ ரூபாய்வரைக்குமானால்............... | ,, | ௨ |
| ௨௫ ரூபாய்க்குமேல் ௫0 ரூபாய்வரைக்குமானால். | ,, | ௪ |
| ௫0 ,, ௧00 ,, | ,, | ௮ |
| ௧00 ,, ௨00 ,, | ௧ | ,, |
| ௨00 ,, ௩00 ,, | ௨ | ,, |
| ௩00 ,, ௫00 ,, | ௩ | ,, |
| ௫00 ,, ௭00 ,, | ௫ | ,, |

| | | | | ரூபாய். | அணா. |
|---|---|---|---|---|---|
| ௭00 | ,, | ௧000 | ,, | ௬ | ,, |
| ௧000 | ,, | ௨000 | ,, | ௧0 | ,, |
| ௨000 | ,, | ௩000 | ,, | ௧௫ | ,, |
| ௩000 | ,, | ௫000 | ,, | ௨௫ | ,, |
| ௫000 | ,, | ௧0000 | ,, | ௩௫ | ,, |
| ௧0000 | ,, | ௨0000 | ,, | ௬0 | ,, |
| ௨0000 | ,, | ௪0000 | ,, | ௧00 | ,, |
| ௪0000 | ,, | ௬0000 | ,, | ௧௨௫ | ,, |
| ௬0000 | ,, | ௮0000 | ,, | ௧௫0 | ,, |
| ௮0000 | ,, | ௧00000 | ,, | ௨00 | ,, |
| மேலே லக்ஷம் ரூபாய்க்குக் குறைந்ததொகைக்கு...... | | | | ௧00 | ,, |
| மேலே ஒவ்வொரு லக்ஷம்ரூபாய்க்கு... | | | | ௨00 | ,, |

விக்கிரயபத்திரம் - தானசாஸனம் - சீதனபத்திரம் பரிவர்த்தனை நிரந்தரமான குத்தகைச்சீட்டு.

௨௩—ஐவேஜு பெற்றுக்கொண்டு, வீடு - நிலம் - வாடகை - வருஷவாரிவரும்படி முதலிய ஸ்தாவரஜங்கமசொத்தையாவது, அவைகளிலுள்ள சுதந்தரம் - பாத்தியதை அல்லது சம்பந்தத்தை யாவது கொள்பவனுக்காகிலும் அவனுடைய உத்தரவுபெற்றவனுக்காகிலும் சித்திக்கும்படியாய்த் தாய்ச்சீட்டுடனே அதுகளை விற்கவாவது ஒப்படைப்புச்செய்யவாவது எழுதிக்கொடுக்கப்படுகிற சாசனமுதலிய எவ்வகை ஆதரவுக்கும்... ... ...

௩௫—உடனேயாகிலும், குறித்தாவது குறிக்காமலாவதிருக்கிற பின்னை எந்தகாலத்திலாகிலும் பிரயோஜனப்படத்தக்கதாகிய தானசாசனம் அல்லது சீதனசாசனத்திற்கும்...

௩௮—யாதொரு அசையாப்பொருளை வேறொருபொருளுக்குப் பரிவர்த்தனைசெய்து எழுதிக்கொடுக்கிற சாசனம் அல்லது ஆதாரவுக்கும்... ... ... ...

௩௯—குத்தகைப்பணம் செலுத்தவேண்டியதில்லாமல் மேல்வாசியாகவாவது நஜரானவாகவாவது மற்றும் அவ்வகைப்பட்டதாகவாவது செலுத்தப்பட்டதொகைக்கு சாஸ்விதமாகவாகிலும்,

சிலவருஷத்திற்காகிலும் ஒன்று அல்லது பலதலைமுறைகளோடு முடிகிற காலவரையிலாகிலும், நிர்ணயமில்லாத காலத்திற்காகிலும எழுதிக்கொடுக்கப்பட்ட குத்தகைச்சீட்டுக்கும ... ... ...

| | |
|---|---|
| அதுகளில்கண்டிருக்கிற கிரயத்தொகை அல்லது ஐம்வஜானது நூறுரூபாய் வரைக்குமானல்... ... ... ... | ரூபாய். ௧. |

| | | | | |
|---|---|---|---|---|
| ௧00 ரூபாய்க்குமேல் | | ௨00 ரூபாய்வரைக்குமானல்... | | ௨. |
| ௨00 | ,, | ௪00 | ,, | ௪ |
| ௪00 | ,, | ௮00 | ,, | ௮ |
| ௮00 | ,, | ௧௨00 | ,, | ௧௨ |
| ௧௨00 | ,, | ௨000 | ,, | ௨0 |
| ௨000 | ,, | ௩000 | ,, | ௩0 |
| ௩000 | ,, | ௪000 | ,, | ௪0 |
| ௪000 | ,, | ௫000 | ,, | ௫0 |
| ௫000 | ,, | ௭௫00 | ,, | ௭௫ |
| ௭௫00 | ,, | ௧0000 | ,, | ௧00 |
| ௧0000 | ,, | ௨0000 | ,, | ௧௫0 |
| ௨0000 | ,, | ௪0000 | ,, | ௨00 |
| ௪0000 | ,, | ௬0000 | ,, | ௩00 |
| ௬0000 | ,, | ௮0000 | ,, | ௪00 |
| ௮0000 | ,, | ௧00000 | ,, | ௫00 |
| மேலே ஐம்பதைம்பதினாயிரம் ரூபாய்க்கு... | | | | ௨00 |
| மேலே ஐம்பதினாயிரம்ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு... | | | | ௧00 |

கூட்டுவியாபாரம்.

| | |
|---|---|
| ௨௭—கூட்டுவியாபார சாசனமுதலிய ஆதாரவுக்கு... ... ... | எட்டுரூபாய். |

குத்தகை அல்லது வாடகைச்சீட்டு – அதற்கு எதிரிடை.

௩௩—யாதொரு குத்தகைச்சீட்டின் எதிரிடை முச்சிலிக்காவுக்கு... ... ... ...

விலக்கு.

குடித்தனக்காரன் அல்லது நிலத்தை உண்மையாய்ச் சாகுபடிசெய்கிறவன் எழுதிக்கொடுக்கிற எதிரிடை முச்சிலிக்காவுக்கு;

நஜரானாவாவது மேல்வாரியாவது அந்தவிஷயத்தில் செலுத்தப் படாவிட்டால், முத்திரைக்கடுதாசிவேண்டியதில்லை.

(சென்னபட்டணத்திற்கு.)

சென்னபட்டணத்தைச்சேர்ந்த ராச்சியத்திலே சர்க்காருக்குக் கிஸ்திசெலுத்துகிற பூமிகளைக்குறித்து பூமிக்குடையவனுக்கும் குத்தகைதாரனுக்கும் பிறக்கிற எதிரிடைமுச்சிலிக்காவுக்கு முத்திரைக்கடுதாசி வேண்டியதில்லை.

கபூலேத்து வகைராவையும் குத்தகைச்சீட்டின் எதிரிடைமுச்சிலிக்காவாகக் கொள்ளவேண்டியது.

| | ஒருவருஷத்திற்கு மேற்படாத குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு. | ஒருவருஷத்திற்கு மேற்பட்ட குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு. |
|---|---|---|
| ச0—மேல்வாரியாகவாகிலும் நஜரானாவாக வாகிலும் எவ்வளவாவது பணஞ்செலுத்தாமல், பூமி - வீடு - முதலான யாதொரு அசையாப்பொருளை குத்தகை அல்லது வாடகைக்கு ஏற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கிற குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு. | | |
| | ரூ. அ. | ரூ. அ. |
| ஒருவருஷத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குத்தகை அல்லது வாடகைத்தொகை - உச - ரூபாய்வரையிலிருந்தால். | ,, ச | ,, அ |
| உச ரூபாய்க்குமேல் ரு0 ரூபாய்வரையிலிருந்தால்... | ,, அ | ,, கஉ |
| ரு0 ,, ௧00 ,, | ,, கஉ | க ,, |
| ௧00 ,, உரு0 ,, | க ,, | உ ,, |
| உரு0 ,, ரு00 ,, | உ ,, | ச ,, |
| ரு00 ,, ௧000 ,, | ச ,, | அ ,, |
| ௧000 ,, உ000 ,, | அ ,, | க௬ ,, |
| உ000 ,, ச000 ,, | க௬ ,, | ௩உ ,, |
| ச000 ,, ௬000 ,, | உச ,, | சஅ ,, |
| ௬000 ,, ௧0000 ,, | ச0 ,, | அ0 ,, |
| ௧0000 ,, உரு000 ,, | ௧00 ,, | உ00 ,, |
| உரு000 ,, ரு0000 ,, | உ00 ,, | ச00 ,, |
| மேலே பிரதி உரு000 ரூபாய்க்கும் அதற்குக் குறைந்ததொகைக்கும். | ௧00 ,, | உ00 ,, |

| | |
|---|---|
| ௬௧—இவ்வளவுகாலத்திற்கென்று குறிக்காமலும், மேல்வாசியாகவாவது நஜாராணுவாகவாவது பணஞ்செலுத்தாமலும், பூமி விடு முதலிய அசையாப்பொருளை குத்தகை அல்லது வாடகைக்கு ஏற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கிற குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு... ... ... | ஒருவருஷத்திற்கு மேற்பட்ட குத்தகைச் சீட்டோ டப்பந்தம் முத்திரைக்கடுதாசி வேண்டியது. |

விலக்கு.

குடித்தனக்காரன், அல்லது நிலத்தைஉண்மையாய்ச் சாகுபடிசெய்கிறவனுக்கு எழுதிக்கொடுக்கிற குத்தகைச்சீட்டுக்கு நஜராணுவாவது மேல்வாசியாவது அந்த குத்தகையைச்சேர்ந்ததாய் செலுத்தப்படாவிட்டால் முத்திரைக்கடுதாசி வேண்டியதில்லை.

(சென்னபட்டணத்திற்கு.)

சென்னபட்டணத்தைச்சேர்ந்த ராச்சியத்திலே சர்க்காருக்கு கிஸ்திசெலுத்துகிற பூமிகளைக்குறித்து பூமிக்குடையவனுக்கும குத்தகைதாரனுக்கும் பிறக்கிற குத்தகைசசீட்டு பட்டாமுதலானதற்கு முத்திரைக்கடுதாசி வேண்டியதில்லை.

பாரீகத்து.

௫௬—மனிதர்கள் தாங்களேயாவது அதிகாரிகள் மூலமாயாவது ஸ்தாவரஜங்கமசொத்தைப் பங்கிட்டுக்கொள்ளும்போதும, இந்துக்களில் அண்ணன்தம்பிகள், பாகஞ்செய்துகொள்ளும்போதும் பிறக்கிற பாரிகத்துப் பிரதி ஒன்றுக்கு—

| அந்தந்த பாகஸ்தனுடைய பங்கு— | | | | ரூபாய் | அணா. |
|---|---|---|---|---|---|
| ௧00 ரூபாய் வரையிலிருந்தால்... | | | | ,, | அ |
| ௧00 ரூபாய்க்குமேல் உ00 ரூபாய்வரையிலிருந்தால். | | | | ௧ | ,, |
| உ00 | ,, | ௬00 | ,, | உ | ,, |
| ௬00 | ,, | ௬00 | ,, | ௬ | ,, |
| ௬00 | ,, | அ00 | ,, | ௬ | ,, |
| அ00 | ,, | ௧000 | ,, | அ | ,, |
| மேலே பிரதி நானூறுரூபாய்க்கும் அதற்குக் குறைந்த சில்லறைக்கும்... ... | | | | உ | ,, |

ரசீது.

௬௧—பணம் செலுத்தப்பட்டதற்காகவாவது, ரொக்கமாக அல்லது வேறே விதமாக

கடன் செல்லாய்விட்டதென்றாவது எழுதிக் கொடுக்கப்பட்ட ரசீது முதலிய பற்றுச்சீட்டுக்கு— பற்றிக்கொள்ளப்பட்ட தென்றாவது தீர்த்துவிடப்பட்டதென்றாவது சொல்லப்பட்டதொகை இருபதுரூபாய்க்கு மேற்பட்டால். ஒரு அணா.

## (B) குறிப்பு ஜாபிதா எக்ஸ்திராக்ட்டு.

### முக்த்தியார்நாமா வகாலத்துநாமா.

அ—யாதொரு நீதிபரிபாலனைக் கோர்ட்டிலாவது யாதொரு ரிவினியூஅதிகாரிக்கு முன்பாகவாவது யாதொருவியாச்சியத்தை நடத்துவதற்காக தாக்கல்செய்யப்பட்ட முக்த்தியார்நாமா - வகாலத்துநாமா முதலான அதிகாரபத்திரங்கள்—

| | ரூ | அணா. |
|---|---|---|
| சதர்க்கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்டால். | உ | ,, |
| ரிவினியூபோர்ட்டுக்காவது, மேலதிகாரமுடைய வேறே பிரதான ரிவினியூ அதிகாரிக்காவது கொடுக்கப்பட்டால்... ... | உ | ,, |
| மேலதிகாரமுடைய பிரதான ரிவினியூ அதிகாரிதவிர வேறேயாதொரு ரிவினியூ கமீஷனருக்காவது கஸ்டம் கமீஷனருக்காவது கொடுக்கப்பட்டால்... ... ... | க | ,, |
| சதர்க்கோர்ட்டுதவிர வேறே யாதொரு சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டுக்காவது, கலெக்டருக்காவது, வேறேயாதொரு ரிவினியூ அதிகாரிக்காவது கொடுக்கப்பட்டால். | ,, | அ |

### விலக்கு.

ராணுவத்தைச்சேர்ந்த ஆபீசர்களும் படைச்சேவகர்களும் எழுதிக்கொடுக்கிற முக்தியாநாமாக்களும்;

யாதொரு கைதியின்பட்சத்தில் முக்த்தியார்நாமா இல்லாமல் ஆஜராகும்படி எந்த சங்கதியிலாகிலும் கிரிமினல்கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகில் விஷயத்திலும் முத்திரைத்தீர்வையில்லை.

ஜில்லா தாலூகா கிராமமுனிசீப்பினுல் தீர்மானிக்கப்பட்ட

சிவில்வியாச்சியங்களின் - ஜாபிதா.

| நம்பர். | வாதிப் பிரதிவாதிகளின் பெயர். | வியாச்சியத்தின் சங்கிரகம். | பிராது கொடுத்த ௳தேதி | தருமகர்த்தராகவிருந்த வாதிப்ரதிவாதிகள் கொடுத்த முச்சிலிக்கா. | தீர்ப்பு. | தீர்ப்பு செய்த ௳தேதி | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | | | | | | |

கிராமமேஜஸ்திரேட்டுகளால் விசாரணைசெய்யப்பட்ட நம்பர்களின் கர்லெண்டருக்கு நமூனா.

ஜில்லா　　　தாலூகா　　　கஅசு　　　வரு　　　மீ　　　உ

| வியாச்சிய நம்பர். | குற்றஞ்சாட்டப்பட்டவனுடையபேர். | சார்ஜின் நகல் அல்லது பிரியாதுக்கு மஜுமூம் என்றால் சங்கிரகம். | பிரியாதியின் பேர். | பிரியாதி சாட்சிகளின் பேர். | எதிரிசாட்சிகளின் பேர். | ருஜுவுசெய்யப்பட்ட அல்லது குற்றவாளியின்மேலே ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளின் சங்கிரகம். | தீர்ப்பு விவரம். | குற்றம் நடந்த தேதி. | பிரியாது செய்த தேதி. | குற்றவாளி பிடிக்கப்பட்ட தேதி அல்லது ஆஜரான தேதி. | விசாரணை ஆரம்பித்த தேதி. | தீர்ப்புசொன்ன தேதி. | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| | | | | | | | | | | | | | |